
விகடன்
பிரசுரம்
சுந்தர காண்டம்
இந்திரா செளந்தர்ராஜன்
ஓவியங்கள்: ம.செ.


விகடன்
பிரசுரம்
சுந்தர காண்டம்
இந்திரா செளந்தர்ராஜன்

Title : SUNDARA KAANDAM
© INDRA SOUNDARRAJAN

ISBN : 81-89780-69-7

விகடன் பிரசுரம்: 65

நூல் தலைப்பு: சுந்தர காண்டம்

நூல் ஆசிரியர்:
© இந்திரா செளந்தர்ராஜன்

ஓவியங்கள்: மணியம் செல்வன்

நூல் வடிவமைப்பு: பிரபு, க.இளங்கோவன்

முதற்பதிப்பு : ஏப்ரல், 2005
எட்டாம் பதிப்பு : செப்டம்பர், 2012

விலை : ₹ 130

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

ஆசிரியர்:
இரா.சரவணன்

முதன்மை உதவி ஆசிரியர்:
அ.அன்பழகன்

தலைமை உதவி ஆசிரியர்கள்:
எம்.நாகமணி, கே.பாசுமணி, சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: pubonline@vikatan.com

தமிழ்நேசன் மின்நூலகம்

www.tamilnesan1981.blogspot.in

# மனோபலமும் தெய்வபலமும்

**ரா**மாயணமும் மகாபாரதமும் மக்களோடு ஒன்றிப் போய்விட்ட வாழ்க்கைக் காவியங்கள். எப்போதும் எந்தச் சூழ்நிலையில் படித்தாலும் மனம் அவற்றில் லயிக்க ஆரம்பித்துவிடும். காரணம், கதையில் வரும் சம்பவங்கள் நம் சொந்தக் கதையோடு ஒன்றிப் போவதுதான்.

வாழ்க்கையில் கஷ்டம் வரும்போதெல்லாம் 'ராமன் பதினான்கு ஆண்டுகள் படாத கஷ்டமா நாம் பட்டுவிட்டோம்' என்று மனதை தேற்றிக்கொள்கிறோம். அப்படிப்பட்ட அசாத்திய கஷ்டம் ராமனுக்கு நிவர்த்தியாகத் தொடங்கியது 'சுந்தர காண்ட'த்தில்தான்.

'ராமனின் அனுக்ரஹம் பெற்ற பராக்கிரமசாலி அனுமன், 'கண்டேன் சீதை'யை என்ற உயிர்ச்சொல்லால் ராமனுக்குள் சிலிர்ப்பை ஏற்படுத்த, அவன் பட்ட கஷ்டங்களையும், அவற்றை எதிர்கொண்டு, எதிர்ப்பு சக்திகளைத் தூள்தூளாக்கி அதன்பின் அடைந்த வெற்றிகளையும் தெரிந்துகொள்ளுங்கள்' என்று மனோதிடம் கூறும் பகுதிதான் சுந்தர காண்டம்.

'அவள் விகடன்'-ல், 'சுந்தர காண்ட'த்தை இந்திரா சௌந்தர்ராஜன் சிந்தனைச் சிறப்போடு எழுதி வந்ததை வாசகர்கள் படித்து பெரிதும் மகிழ்ந்தார்கள்.

வாழ்க்கையே இன்று ஒரு தேடல்தான், யுத்தம்தான், வலி மிகுந்த பயணம்தான். சோதனைகளை சுகமாக சமாளிக்க மனோபலமும் தெய்வபலமும் அவசியமாகிறது.

மனித வாழ்வின் மனத்துயரங்களை ஆற்றும் மகத்தான சக்திவாய்ந்த 'சுந்தர காண்டம்' படியுங்கள்... பரவசமடையுங்கள்... மனவலிமை பெறுங்கள்.

**- பதிப்பாளர்**

# முன்னுரை



சுந்தர காண்டம்!

இந்து சமுதாயத்தின் இதயத்தில் காவியச் சுவையோடும் பக்தி ரசத்தோடும் மிளிரும் ஒரு இதிகாசத்தின் துண்டுப் பகுதி இது.

உலகில் எவ்வளவோ அமர காவியங்கள் உருவாகியுள்ளன. ஆனால், நம்முடைய பாரத இதிகாசங்களான ராமாயணம், மகாபாரதம் போல மானுட வாழ்வின் ஒட்டுமொத்த செறிவுகளைப் பிரதிபலிக்கும் ஒரு இயக்கம் வேறு எங்கும் இல்லை.

'மண்ணாசையால் விளைந்தது மகாபாரதம்,
பெண்ணாசையால் விளைந்தது ராமாயணம்!'

என்று இந்த இதிகாசங்களின் கருப்பொருளை இரண்டு வரிகளில் கூறுவார்கள்.

ஒரு வகையில் மண் வேறு பெண் வேறு அல்ல. இரண்டுக்கும் ஏராளமான ஒற்றுமைகள் உண்டு. இரண்டுமே உயிர்களைத் தன்னுள்ளிருந்து எடுத்துத் தருபவை. இரண்டுமே பொறுமையாக இருந்து தாங்கிக் கொள்ளும் திறன் படைத்தவை. இரண்டின் அம்சமும் பொதுவான சக்தியும் ஒன்றேதான்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்து முடிந்த சம்பவங்கள் இன்றும்... என்றும் பொருந்தும் விதமாக அதன் உணர்ச்சிக் களன் அமைந்திருப்பது, இன்றைய ஹைடெக் விஞ்ஞானத்தின் உன்னதமான ஒரு கண்டுபிடிப்புக்கூட தரமுடியாத ஆச்சரியமாகும்.

இதில் சுந்தர காண்டம், படிக்கப்படுவதோடு பாராயணம் போல துதிக்கவும்படுவதுதான் இதன் சிறப்பு அம்சம்.

ராமாயண நாயகன் ராமனையும் மகாபாரத நாயகன் கண்ணனையும் போலவே, விலங்கினமான வானர இனத்துப் பிரதிநிதியான அனுமன், இந்த இரு இதிகாசங்களிலும் விஞ்சி நின்று தனித்துத் தெரிகிறான்.

இதுவும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒரு சிறப்பு அம்சம். விலங்குகளுக்கு பாவபுண்ணியங்கள் இல்லை. ஏனென்றால், அவை மனதால் வாழ்பவை அல்ல. உடல் ரீதியான ரசாயன மாற்றங்களும் சுற்றுப்புறச் சூழலின் தாக்கங்களும் இன்ப துன்பங்களாகி அவற்றின் வாழ்வைத் தீர்மானிக்கின்றன.

மனிதனே மனத்தால் வாழ்பவன்! மனம் என்று வந்தவுடனேயே நேற்று - இன்று - நாளை என்று மூன்று காலங்கள் வந்துவிடுகின்றன. நேற்றைய நிகழ்வுகள் இன்றைய தாக்கமாகி, இன்றைய தாக்கமே நாளைய வாழ்வுக்கு அடிப்படையாகி, ஒரு வட்டச்சுழற்சி ஏற்பட்டு விடுகிறது. இது முடிவில்லாத வாழ்க்கைப் பயணம்.

ஒருவர், துன்பம் என்றால் என்னவென்றே தெரியாதபடி, ஒரு அரசனுக்கு மகனாகப் பிறந்து தங்கத் தொட்டிலில் தூங்கிட, இன்னொருவர், வயற்காட்டில் ஒரு தினக்கூலிக்கு மகனாகப் பிறந்து மரத்து தூளியில் தூங்குகிறார். இந்த மாறுபாடுகளுக்கெல்லாம் அந்த கர்மக் கணக்குதான் காரணம்.

எப்படி இருப்பினும் மானுடப் பிறப்பு எனபதே மிக அரிதானது...

அதே அளவுக்கு, அது ஆபத்தானதும்கூட! சிலந்தி வலையில் விழுந்த பூச்சியும் வாழ்க்கையில் விழுந்த மனிதனும் ஒன்று... மீளுதல் - பதற்றம் இல்லாத, பொறுமை

மிக்க தவத்தால் மட்டுமே சாத்தியம்.

அதற்காக எல்லோரும் கமண்டலத்துடன் வீட்டை விட்டுப் போய்விட முடியுமா? பிள்ளைக் குட்டிகள் என்கிற பந்தபாசம் விட்டு விடுமா..?

வாழ்வும் வேண்டும் – அதே சமயம் மீளவும் வேண்டும்.

எதுதான் வழி? இந்தக் கேள்விக்கு எவ்வளவோ விடைகள்! அதில் ஒன்றுதான் 'சுந்தர காண்டம்.'

தாவும் குணம் கொண்ட இனத்தவனும் மனத்தவனுமான வானரன் ஒருவன், அந்த குணத்தைவென்று தர்மத்தின் தூதுவனாக, பக்தியின் இருப்பிடமாகத் திகழ்ந்ததால் அவன் அழகனானான் அதாவது சுந்தரனானான்!

மானுட மனமும் அவன்போல நெறிப்பட்டால் அழகாகும் – அழகு வந்தாலே அமைதி வந்துவிடும் என்பதை உளவியல் பூர்வமாக உணர்த்துவதுதான் சுந்தர காண்டம்.

சுந்தர காண்டத்தைப் பாராயணம் செய்யும்போது மனதில் இதற்கான காட்சிகள் விரியும். அவை உருவாக்கும் தாக்கங்களில்தான் நமக்கான நல்ல மாற்றங்கள் அடங்கிக் கிடக்கின்றன.

சுந்தர காண்டம் வாசிப்பது என்பதும் ஒரு அற்புத ஆன்மிக முயல்வு... ஒரு முறை வாசித்ததைத்தான் தினம் தினம் வாசிக்கிறோம். ஆனால், பாருங்கள்... தினம் ஒரு புதிய கோணமும் பொருளும் அது நமக்குத் தரும். தினம் தினம் புதிது போல தோன்றி நம்மை வியப்பில் ஆழ்த்தும்.

நமது செயல்பாடுகளில் நாமே அறியாத வண்ணம் ஒரு நேர்த்தி... நமது முயற்சிகளிலும் ஒரு முழு ஈடுபாடு என்று இந்த சுந்தர காண்டம் நமக்குள் ஏற்படுத்தும்

நன்மைகளுக்கு ஒரு அளவில்லை.

எங்கே சுந்தர காண்டம் படிக்கப்படுகிறதோ அங்கே அனுமன் வந்துவிடுகிறான். அவன் வந்து விட்டபின் அங்கே துன்பத்துக்கும் மாயைக்கும் ஏது இடம்?

இறைவனை எளிதாக நெருங்க ஒரு இனிய வழி சுந்தர காண்டம். இதை உணர்ந்தே, நானறிந்த தமிழில் ஒரு புதிய உரைநடையின் வழி இதற்காக முயன்றேன்.

இந்த முயற்சியில் பல ஆன்மிக சிந்தனைகளைக் கலந்து, பிறர் சொல்லியிராத சில சம்பவங்களையும் சேர்த்து, நான் விரும்பும் ஒரு பரிபூரணச் சுவைக்கு முயன்றேன்.

அவள் விகடன் அதற்கு இடமளித்து தொடராக வெளியிட்டது.

வாசக உலகமும் ஆன்மிக உள்ளங்களும் இருகரம் நீட்டி வரவேற்றன. அனைத்துக்கும் மேலாக என் நற்கருமம் ஒன்றுதான் இந்த நல்ல முயற்சியை நான் செய்ய துணை நின்றது.

அனுமனும் ஆட்கொண்டான்! அழகுத் தமிழில் என் பேனா வழியாக பெருகி வழிந்தான். இதனால் நான் கணியனானேன். இது போதும் எனக்கு?

இதோ... இதை எழுதும் இப்பொழுதும் அருகிருந்து, புன்னகையோடு பார்த்து, என் சிரம் கோதி, உச்சிமோந்து ஆசீர்வதிக்கிறான் அனுமன்.

அனும...

நின் ஆசியை எனக்கு மட்டுமில்லை ஐயனே...

இதை வாசிக்கும் அத்தனை பேருக்கும் வாரி வழங்கு.

பணிவன்புடன்,

**இந்திரா சௌந்தர்ராஜன்**

அனுமன் சீதையைத் தேடி இலங்கை நோக்கிப் பறப்பதில்தான் தொடங்குகிறது சுந்தர காண்டம். ஆனால், அதற்கு முன்பாக அனுமன் ராமனையும் லட்சுமணனையும் தரிசனம் செய்யும் கட்டத்தில் இருந்தே தொடங்கிவிடுகிறது என்பதுதான் உண்மை.

ராம லட்சுமணர்களை முதன் முதலாக அனுமன் கண்டது என்பது ரிஷியமுகப் பர்வதத்தில்தான்!

அப்பொழுது அனுமன் ஓர் அமைச்சன்! கிஷ்கிந்தையின் அரசனான சுக்ரீவனுக்கு அமைச்சன். சுக்ரீவனோ வாலிக்கு பயந்துகொண்டு ரிஷியமுகப் பர்வதத்தில் ஒரு குகையில் ஒளிந்து கொண்டிருக்கிறான்! சுக்ரீவனின் மனைவி ரூமியோ, வாலியால்




தூக்கிச் செல்லப்பட்டுவிட்டாள்.

வாலி தனது தம்பியின் மனைவியைக் கவர்ந்து சென்றதுகூடப் பெரிதில்லை, தன் வலிமையால் சுக்ரீவனையும் அவன் சகாக்களையும் பாடாய்ப்படுத்தி வைத்திருந்தான். காரணம்? வாலிக்கு என உள்ள விசேஷ சக்திதான்! எதிரி எப்பேர்ப்பட்டவராக இருந்தாலும் சரி.. வாலியைப் பார்த்த மாத்திரத்தில் எதிரியின் பலத்தில் சரிபாதி வாலியிடம் போய்ச் சேர்ந்துவிடும். அப்படி ஒரு வரத்தை வாலிக்கு இந்திரன் வழங்கியிருக்கிறான்.

ஏற்கெனவே வலியவன் வாலி! அவனுக்கு இப்படி ஒரு வரம் வேறு.. எனவே, விவேகமுள்ள ஒருவரும் வாலியின் எதிரே சென்று நிற்கவே அஞ்சிக் கிடந்தனர். இதுதான் அன்று நிலைப்பாடு! சுக்ரீவனின் அமைச்சனாக விளங்கிய அனுமனுக்கு இயல்பிலேயே பணிவும் விவேகமும் அதிகம்.



பால அனுமனாக விளங்கிய நாளில் விஷமத்தனங்கள் செய்தது உண்டுதான். அந்த விஷமத்தனங்களே அனுமனுக்கு பணிவுக்கும் விவேகத்துக்கும் பாதை போட்டுக் கொடுத்தது என்பதுதான் அதிலுள்ள முக்கிய விஷயம். அது எப்படி என்பதை ஜாம்பவான் என்னும் பாத்திரத்தின் வாயிலாகக் கேட்கப் போகும்போதுதான் நமக்கு அனுமனின் சிறப்பு புரியவரும்.

இப்போதைக்கு விவேகியான அனுமன், வாலியின் வரசித்தியை உணர்ந்திருந்ததாலும் சுக்ரீவனின் சகோதரன் என்பதாலும் அவனையும் ஒரு மதிப்புக்குரிய இடத்திலே வைத்துப் பார்த்ததாலும் அவனோடு மோதுவது பற்றியோ, அவனை அடக்கியாளும் வழிமுறை பற்றியோ துளிகூட சிந்திக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

அனைத்துக்கும் மேலாக பால அனுமனாக விளங்கிய நாளில் மலை வனம் ஒன்றில் மரங்களைப் பெயர்த்தும் பாறைகளை உருட்டியும் பாயும் அருவி நீரைத் தடுத்து வேகமாகப் பாயச் செய்தும் பலவித



சேட்டைகள் செய்யப்போய் அதனால் பாதிக்கப்பட்ட வனத்து தவசிகளில் ஒருவர், 'உனக்கு உன் சக்தி இன்னதென்று பிறர் கூறினாலன்றி உனக்குத் தெரியாமலேபோகும்' என்று சபித்து விட்டமையால் சுக்ரீவனின் அமைச்சனான அனுமனுக்கு நிகரற்ற தனது பலம் எத்தகையதென்று தெரிந்திருக்கவில்லை. அதனாலும்கூட அனுமன் வாலியோடு மோதுவது பற்றி சிந்திக்கவில்லை. அதே சமயம், வாலியை அழித்தோ அல்லது திருத்தியோ தனது அரசனான சுக்ரீவனை பெரிதும் மகிழ்விக்க வேண்டும் என்பதெல்லாம் அனுமனுக்கு விருப்பமாக இருந்தது.

விருப்பம்தான் இருந்ததே அன்றி வழிமுறை தெரியவில்லை. சுக்ரீவனிடம் ஒரு பெரிய வானரசேனையே இருந்தது. அவர்களில் ஒருவருக்கும் சுக்ரீவனின் துன்பம் நீக்கும் வழிமுறை தெரியவில்லை.

இடை இடையே சுக்ரீவனின் படை வீரர்களில் பலரை வாலி கைது செய்து அடித்து நொறுக்கி ஒரு வாழைப்பழத் தோலைப் போல வீசியெறியும் அநியாயங்களும் நடக்கத்தான் செய்தன. சுக்ரீவனைக் கொல்லவும் துடித்தான்.

இதனாலோ என்னவோ ரிஷியமுகப் பர்வதத்தில் ஒரு குகைக்குள் போய் தன்னைப் பதுக்கிக் கொண்டுவிட்டான் சுக்ரீவன்.

நாட்டு நடப்பை கண்காணித்து வழி நடத்துவது அனுமனின் கடமை என்றாகிவிட்டது. அப்பொழுதுதான் சீதையைத் தேடிக்கொண்டு வரும் ராம லட்சுமணர்களின் முகதரிசனம் அனுமனுக்கு ரிஷயமுகப் பர்வதத்திலே கிட்டுகிறது.

மரவுரி தரித்த ராமனும் லட்சுமணனும் தோளில் அம்பராத்தூளி சகிதம் கையில் வில்லுடனும் கண்ணில் தேடலுடனும் வந்த வண்ணம் இருக்க, அவர்கள் இருவரையும் தூரத்தில் இருந்தே கண்ணுற்ற வேறு சில வானர மனிதர்கள் ராம லட்சுமணர்களைத் தவறாகவே புரிந்து கொள்கின்றனர்.

'யாரோ இரு மானிடர்கள்... அநேகமாக வாலியால் அனுப்பப்பட்ட மாயாவிகளாகக்கூட இருக்கலாம். அவர்கள் நோக்கம் பர்வதத்தின் குகைக்குள் ஒளிந்தபடி, இதயம் நடுங்க வாழந்தபடி இருக்கும் சுக்ரீவனை தேடிப் பிடித்துக் கொல்வதுதான்' என்று தங்கள் விருப்பத்துக்கு புரிந்துகொண்டு

**“வாலி ஒரு மூர்க்கன்... இந்திரனைத் தந்தையாகக் கொண்டவன். இந்திரன் எத்தனை காமக்கனல் உடையவன் என்பதை அவனது வரலாற்றைப் பார்ப்பவர்களுக்குத் தெரியும். எனவே, அப்பன் புத்தி பிள்ளைக்கு என்று அது அப்படியே வாலியிடம் தொற்றிக்கொண்டு வந்துவிட்டது. கூடவே, யாரையும் நம்பாத குணம், செருக்கு என்று பல அழுக்குகளும் வாலியைத் தொற்றிக்கொண்டு வந்துவிட்டன.”**

அதை சுக்ரீவன் பதுங்கி இருக்கும் குகைக்கும் சென்று கூறுகின்றனர். யாராக இருந்தாலும் அப்போதைய நிலையில் அப்படி எண்ணுவதை தவிர்க்கவும் முடியாது. ஆனால், அனுமன் மட்டும் துளியும் ராம லட்சுமணர்களைத் தவறாகக் கருதவில்லை என்பதுதான் ஆச்சரியம். கருதவும் அவனால் முடியவில்லை.

‘வாலி ஒரு மூர்க்கன். இந்திரனைத் தந்தையாகக் கொண்டவன். இந்திரன் எத்தனை காமக்கனல் உடையவன் என்பதை அவனது வரலாற்றைப் பார்ப்பவர்களுக்குத் தெரியும். எனவே, அப்பன் புத்தி பிள்ளைக்கு என்று அது அப்படியே வாலியிடம் தொற்றிக்கொண்டு வந்துவிட்டது. கூடவே யாரையும் நம்பாத குணம், செருக்கு என்று பல அழுக்குகளும் வாலியைத் தொற்றிக்கொண்டு வந்துவிட்டன. அந்த அழுக்குகளில் தலையான ஒன்று மானிடர்களை நம்பாத தன்மை. எனவே, வாலி இப்படி இரு வாலிபர்களை நம்பி இவர்களை நிச்சயமாக சுக்ரீவனைக் கொல்ல அனுப்பியிருக்கமாட்டான்...’ என்பது அனுமனின் முதல் யூகம்.



அனுமனுக்கு, ராம லட்சுமணர்களின் தரிசனம்
ஒரு புதுவித அமைதியை அளிக்க...
'நிச்சயம் இவர்கள் மனிதர்களல்ல...
மனித உருவில் வரும் தேவர்கள்...
அதற்கும் மேலானவர்களாக இருக்கக்கூடும்'
என்று எண்ணி அதன் எதிரொலியாக
அனுமனின் கண்கள்கூடப்
பனிக்கத் தொடங்கிவிடுகின்றன.



**மூர்க்கம், ஆத்திரம், வஞ்சனை, பழிப்பு, இல்லாவிட்டால் பாதிப்புக்கு ஏற்ப வலியோடு அஞ்சிக் கிடத்தல் என்றுதான் வானர இனம் இருக்கவும் முடியும். அதுதான் அதன் இயற்கை குணநலம். சுக்ரீவனும் அப்படித்தான் அஞ்சி இருந்தான்.**

அடுத்து ராம லட்சுமணர்களின் தேஜஸ்!

நிலம் அதிராதபடி பூப்போல நடந்துவரும் பாங்கு... அதேசமயம், நடந்து வரும் வழித்தடத்தில் காலில் முள் தைத்த நிலையில் தவித்தபடி கிடந்த அரிமாவைப் பார்த்து பரிதாபம் கொண்டு அதன் அருகே சென்று முள்ளை எடுத்து அதன் பிடரியை வருடிக்கொடுத்த அந்த கருணை மிகுந்த வீரம்.. என்று ராம லட்சுமணர் இருவரிடமும் தென்பட்ட சகல குணநல வெளிப்பாடுகளையும் கவனித்துவிட்டு இவர்கள் இருவரும் சாமனிய மனிதர்களே இல்லை என்கிற முடிவுக்கு வந்தான் அனுமன். அவர்கள் குறித்து மேலும் சிந்திக்கும்போது மனதுக்குள்ளேயேும் இனம் புரியாத ஓர் அமைதி சூழ்வதை அனுமனால் உணர முடிந்தது.

சுக்ரீவன் நிலையை எண்ணிய கலக்கம், வாலியைப் பற்றிய கோபம், சக வானர வீரர்களுக்கு அன்றாடம் வாலியால் நேரிடும் துன்பங்கள் குறித்த விசனம் என்று அமைதியற்ற மனநிலையிலேயே இருந்து வந்த அனுமனுக்கு, ராம லட்சுமணர்களின் தரிசனம் ஒரு புதுவித அமைதியை அளிக்க... 'நிச்சயம் இவர்கள் மனிதர்களல்ல... மனித உருவில் வரும் தேவர்கள்... அதற்கும் மேலானவர்களாக இருக்கக்கூடும்' என்று எண்ணி அதன் எதிரொலியாக அனுமனின் கண்கள்கூடப் பனிக்கத் தொடங்கிவிடுகின்றன.

மனிதர்களின் மனதைத்தான் குரங்கோடு ஒப்பிடுவார்கள், தாவித் திரிவது எப்படி குரங்கின் இயல்போ அப்படியே மனமும் கணத்துக்குக் கணம் தாவிக்கொண்டு இருப்பதால்!

அப்படிப்பட்ட குரங்கினக் கலப்போடு வானர மனிதர்களாக

இருப்பவர்களின் மனங்களைப் பற்றியோ கற்பனையே செய்து பார்க்க முடியாது. அப்படிப்பட்டவர்களின் மன ஓட்டத்தை யாராலாவது கணிக்க இயலுமா? மூர்க்கம், ஆத்திரம், வஞ்சனை, பழிப்பு, இல்லாவிட்டால் பாதிப்புக்கு ஏற்ப வலியோடு அஞ்சிக் கிடத்தல் என்றுதான் வானர இனம் இருக்கவும் முடியும். அதுதான் அதன் இயற்கை குணநலம். சுக்ரீவனும் அப்படித்தான் அஞ்சி இருந்தான்.

மனித இனம் ஒன்றுக்குத்தான் கண்ணீர்விட்டு அழுதிடும் தன்மை உரியது. ஆயிரம் வார்த்தைகளில் விளங்க வைக்க முடியாததை ஒரு சொட்டுக் கண்ணீர் உணர்த்திவிடும். அம்மட்டில் ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும், லட்சம் கோடி விஷயங்களைக் கூறிடும் புத்தகங்களுக்கும் மேலானவை.

கண்ணீரில்தான் இதயம் தெரிகிறது.

இந்த இதயம் பற்றியோ, குணநலன்கள் குறித்தெல்லாமோ வானர இனம் அறிந்திருக்க வாய்ப்பே இல்லை. இயற்கையில் அதற்கு இடமும் இல்லை.

ஆயினும் இயற்கைக்கு மாறாக, ராம லட்சுமணர்களின் சமீபமே அனுமனை சிலிர்க்க வைப்பதோடு, இவர்கள் மனித உருவில் வரும் தேவர்கள்... அதற்கும் மேலானவர்கள் என்று எண்ண வைத்து, மனதுக்குள் இனம்புரியாத அமைதியை உருவாக்கி அவனது கண்ணிரண்டையும்கூடப் பனிக்க வைக்கிறது!

அதன் எதிரொலியோ என்னவோ அவர்கள் இருவர் முன் கைகளைக் கூப்பிக்கொண்டு குருவை எதிர்கொள்ளும் சிஷ்யன் எவ்வாறு அடக்க ஒடுக்கமாக வந்தனம் கூறி சாஷ்டாங்கமாக காலில் விழுந்து நமஸ்கரிப்பானோ அப்படி ஒரு பணிவான செயல்பாட்டை அனுமனும் புரிய, நீல நயனங்களைக் கொண்ட ராமனுக்கும் கன்னிமலைத் தோளினை உடைய லட்சுமணனுக்கும் ஆச்சரியமான ஆச்சரியம்.

'வானரமா... இது சுந்தரமா?'' என்றும் அவர்கள் சோகமனத்திடையே ஒரு கேள்வி. அனுமனை சுந்தரனாக வால்மீகி முதன்முதலில் உணரக் காரணமான இந்தக் கட்டம் அனுமன் வரையில் அவன் கீர்த்தியை விளங்க வைக்க வந்த ஒரு ஆரம்ப கட்டமும் கூட... உண்மையில் சுந்தர காண்டம் இங்கிருந்தே தொடங்குகிறது!

‘காரணமில்லாமல் ஒரு காரியமும் இந்த உலகில் இல்லை’ என்பது சான்றோர் வாக்கு.

நமக்கு இருக்கும் புத்தியைக் கொண்டு உற்றுநோக்கிச் சிந்தித்துப் பார்த்தால், இது எவ்வளவு உண்மை என்பது விளங்கிவிடும்.

மனிதனுக்கு மனிதன் சந்தித்துக் கொள்வது என்பது ஒரு சாதாரண விஷயம்போல் தோன்றினாலும், சில சந்திப்புகள் வாழ்க்கைப் பாதையையே மாற்றிவிடக்கூடியவை என்பதையும் நாம் அறிவோம்.




இப்போது இந்தக் காரண காரியச் சிந்தனையுடன் அனுமன்- ராம லட்சுமணர்கள் சந்திப்புக்கு வருவோம். இது என்ன சாதாரண சந்திப்பா?

‘ராம நாமம் ஒலிக்கும் இடமெல்லாம் அனுமன் வந்து விடுகிறான். அவனை மகிழ்விக்க, அவன் அருளைப் பெற்றிட தனியே அவனைத் துதிக்கத் தேவையே இல்லை. ராமா என்று உள்ளன்போடு கூறினாலே போதும். அனுமன் அப்படிக் கூறியவருக்கே அடியவனாகி சேவை செய்யத் தொடங்கிவிடுகிறான்’ என்கிறார் துளசிதாஸர்.

அந்த அளவுக்கு ராமன் மீது பக்தி, பற்றுதல், பிரேமை, காதல் என்று உணர்வுபூர்வமாக ஓர் இணைப்பு அனுமனுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றால், அனுமனை அந்த அண்ணல் எந்த அளவு கவர்ந்திருக்க வேண்டும்? அதற்கெல்லாம் காரணமான, அந்த முதல் சந்திப்பும் சாதாரணமான ஒன்றாக இருந்திருக்க



முடியாதே..?

அனுமனுக்கு - அஞ்சனை மைந்தனுக்கு - வாயு புத்திரனுக்கு - சிவ அனுக்ரக மூர்த்திக்கு அண்ணல் ராமனின் நெருக்கம் ஒரு பரவச உணர்வை ஏற்படுத்தி, பார்த்த மாத்திரத்திலேயே கண்களில் பனிப்பையும் ஏற்படுத்தியது. அப்படி ஒரு பரவசத்தில் சற்றே நெக்குருகி ஜலபாஷ்ப விழிகளுடன் நின்ற அனுமனும்கூட, ராமனை அதே அளவுக்குப் பாதித்ததையும் என்னவென்று சொல்வது?

அவ்வேளையில்தான் 'இது வானரமா... இல்லை சுந்தரமா?' என்கிற வினாவும் ராமன் உள்ளத்தில் எழும்பியது.

'அயோத்தியை, அதன்கண் வாழும் மக்களை, பெற்ற தாயை, உற்ற சகோதரன் பரதனை' என்று அன்புக்குரிய பலரைப் பிரிந்து ஆரண்யம் ஏகி நிற்க, அருமை மனைவி சீதையையும் ராணவன் கவர்ந்து சென்றுவிட்ட நிலையில், பிரிவுக்குமேல் பிரிவாய் ராமனை மாயவினைகள் வளைத்துக் கட்டி நிற்கையில், பிரியாது சேர்வதற்கு



வந்த ஒரு ஜீவனாக அனுமன் எதிர்நிற்கிறான்.

ராமனும் அதை ஒருவிதப் பரவசத்துடன் உணர்ந்து சிலிர்த்திட, அங்கே பலப்பல நொடிகள் இருதரப்பிலுமே ஓர் அர்த்தமுள்ள மௌனம் விளையத் தொடங்கியது.

ஊடே லட்சுமணனுக்குள் மட்டும் 'இவன் யாராக இருக்கும்? சுக்ரீவனின் கூட்டத்தைச் சேர்ந்தவனோ.. இல்லை, வேறு எவனோ?' என்கிற கேள்விகளின் விளைச்சல். அதை அங்கு நிலவிய மௌனத்தைக் கீறிப் பிளந்து கேட்கவும் செய்கிறான்.

"வானரப் புருஷனே.. யார் நீ? ஏன் உன் கண்கள் பனிக்கின்றன?"



அனுமனும் பரவசம் விலகாமல் பதில் கூறுகிறான்.. "ஐயன்மீர், என் பெயர் அனுமன். அஞ்சனை மைந்தனாகிய நான் வாயுபுத்திரனும்கூட.."

"அஞ்சனை புதல்வனா நீ..! அத்துடன் நீயும் நானும் இம்மண்ணில் ஜீவிக்கக் காரணமாக உள்ள பஞ்ச பூதங்களில் ஒன்றான வாயுவின் மைந்தன் நீ என்பதை எண்ணும்போது வியப்பாக இருக்கிறது..!"

"என்னை அறிந்தீர்.. நன்று! தங்களை நான் அறியலாமா?"

"இவர் என் உற்ற சகோதரர் ராமர். அடியவன், இவரின் இளையவன் லட்சுமணன். நாங்கள் அயோத்தியரசர் தசரத சக்கரவர்த்தியின் புதல்வர்கள். தாய் தந்தையர் விருப்பத்துக்கு ஏற்ப பதினான்கு ஆண்டுகள் ஆரண்ய வாசம் புரிய வந்திருப்பவர்கள். தற்போது கிஷ்கிந்தைக்கு அரசரான வானரங்களின் தலைவன் சுக்ரீவனைத் தேடி, இந்த ரிஷ்யமுகப் பர்வதத்துக்கு வந்திருக்கிறோம்."– லட்சுமணனின் விளக்கம் அனுமனிடம் சிலிர்ப்பைக் கூட்டிற்று. அதுவரை பணிவாகக் கைகட்டி நின்று செவி மடுத்தவன், அடுத்த நொடியே மண்டியிட்டான். பனித்த கண்ணிரண்டும் பொலபொல என

அருவி போல நீரை உதிர்க்கலாயிற்று.

"செம்மல்களே... தாங்களோ ராம லட்சுமணர்? ஆஹா... என்ன ஒரு பாக்கியம்! அயோத்தி குறித்தும் தசரத மகாராஜா குறித்தும் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். அவருடைய புதல்வர்களான நீங்கள் நாட்டை ஆளவேண்டிய வேளையில் காட்டில் கிடந்து திரிவதை என்னென்பது? நான், தாங்கள் தேடி வந்திருக்கும் வானர அரசன் சுக்ரீவனின் அமைச்சனும்கூட. எங்கள் ராஜா, இந்தப் பர்வதத்தின் குகையொன்றில்தான் பதுங்கியிருக்கிறார். உங்களைக்கூட எதிரியாக எண்ணவேண்டிய அளவுக்கு ஒரு அச்சமுள்ள சூழல் அவருக்கு. உண்மை அறியவே நான் வந்தேன். ஏனோ தெரியவில்லை, தங்கள் சமீபமே என்னைத் தீயிடை வெண்ணெயாக உருக்குகிறது. என் மனதும் லேசாகக் காற்றில் பறப்பதுபோல மிதக்கிறது. நான் என் வாழ்நாளில் இப்படி ஒரு மனநிலையை அடைந்ததே இல்லை. காரணமும் விளங்கவில்லை.." என்று அனுமன் இலக்கிய ரசமுடன் பேசியதைக் கேட்ட, அதுவரை மௌனமாக இருந்த, செவியினை மட்டும் கொடுத்துவிட்டு நின்ற ராமனின் முகத்தில் மெல்லிய புன்னகை ஒன்று படிந்து நெளிந்தது.

அந்தப் புன்னகைக்கு எப்படி வேண்டுமானாலும் பொருள் கொள்ளலாம். அதற்கான பொருளை விளங்கிக் கொள்ளுமுன் அனுமனைப் பார்த்து, "அறிஞனே... அனுமனே... உன் அரசனை நாங்கள் காண வழிவகுப்பாயா?" என்றான் ராமன். அனுமனின் சிலிர்ப்பு பன்மடங்காயிற்று.

'அறிஞனா... நானா?' என்றோர். கேள்வியுடன் கூடிய வியப்பு அது. அத்துடன், ராமன் கேட்ட தொனியில், வேண்டல் என்பதும் விருப்பம் என்பதும் ஒருவனிடம் இருந்து எப்படி வெளிப்பட வேண்டும் என்பதற்கான இலக்கணம் இருப்பதுபோலவும் தோன்றிற்று. அதைத் தனக்குள் சுகித்தபடியே, "செம்மல்களே.. சுக்ரீவனை சந்திப்பதற்கான காரணத்தை நான் அறியலாமா?" என்று கேட்டான் அனுமன்.

லட்சுமணனும் ராமனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, சீதையைத் தொலைத்த சம்பவத்தைக் கூறி, "என் அன்னையைப் போன்ற அண்ணியைத் தேடும் முயற்சிக்கு சுக்ரீவ ராஜா உதவக்கூடும்.." என்று கூறிய லட்சுமணனை அடுத்த நொடி அனுமன் பார்த்த விதமே அலாதியானது. அதே சமயம், உள்மனதில் 'எனது அரசனின் நிலையும் இன்று இதுதானே?'

"தாங்களோ ராம லட்சுமணர்?
ஆஹா... என்ன ஒரு பாக்கியம்..!
தங்கள் சமீபமே என்னைத் தீயிடை
வெண்ணெயாக உருக்குகிறது. என் மனதும்
காற்றில் பறப்பது போல மிதக்கிறது.
நான் என் வாழ்நாளில் இப்படி ஒரு
மனநிலையை அடைந்ததே இல்லை.
காரணமும் விளங்கவில்லை.."





என்கிற வருத்தம். 'இந்நிலையில், யாருக்கு யார் உதவிக் கொள்வது?' அனுமனின் உள்ளம் அலைபாய்ந்தது. ஆனால், திரும்பத்திரும்ப ராம லட்சுமணர்களின் தேஜஸில் அப்படியே மனமானது வழுக்கிவழுக்கி விழுந்தது. ஒருவாறு அதிலிருந்து மீண்டவனாக, "பிரபுக்களே... சற்றே காத்திருங்கள். இதோ, ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்.." என்று அங்கிருந்து அசுரவேகத்தில் புறப்பட்டான்.

அனுமன் அகன்ற நொடி, லட்சுமணன் பார்வை ராமனை நோக்கித்தான் திரும்பியது.

"அண்ணா..."

"சொல் லட்சுமணா..."

"இந்த வானர மனிதனின் பேச்சு, தோற்றம் எல்லாமே என்னை உலுக்குகிறது..!"

"உண்மைதான்! மனிதப் பிறப்பெடுத்து ஒருவர் தன் கல்வி ஞானத்தால், பின் அறச்செயல்களால், அதன் அனுபவங்களால் வாழ்வின் மாயம் தெளிந்து, பண்போடும் அன்போடும் நடந்துகொள்வது ஒரு விஷயமே இல்லை. இங்கே ஒரு வானர மனிதன், அதனினும் மேலாக நடந்துகொண்டிருக்கிறான் என்றால், இவன் அதிவிசேஷமானவனாக இருத்தல் வேண்டும்.."

"உண்மைதான் அண்ணா.. நாம் ஆரண்யம் ஏகியதில் இருந்து இன்றுதான் நான் வியப்புக்குள்ளாகி இருக்கிறேன். இந்த அதிவிசேஷனின் சிறப்புகளை அறிந்துகொள்ளவும் ஆவலாக இருக்கிறது..."– லட்சுமணனின் விருப்பத்தைக் கேட்டு, ராமன் முகத்தில் மீண்டும் ஓர் புன்னகை. அந்தப் புன்னகையைப் பிளந்தால், அதில் நூறு நூறு சூட்சுமங்கள் ஒளிந்திருப்பதைக் காணலாம்.

'காக்கும் கடப்பாடுடைய விஷ்ணுவாகிய நான், ராவண வதத்துக்காகவும் சதி பதி இலக்கணங்களை மனிதர்களுக்கு உருவாக்கி அளிப்பதற்காகவும் ராம ஜென்மம் கண்டிருக்கிறேன். என்னைப் பிரியாது தொடர்ந்து வந்து, அழிக்க வேண்டியதை அழிக்க வந்த சிவமூர்த்தியல்லவா இந்த அனுமன்? சிவமாகிய இவனது விசேஷம் சாதாரணமானதா என்ன?' என்று அதில் நுட்பமாகப் பொதிந்து கிடக்கும் உட்பொருளை அவ்வேளையில் லட்சுமணன் அறிந்திருக்க வாய்ப்பில்லைதான்!

பாற்கடலில் பரந்தாமனைத் தாங்கும் ஆதிசேஷனுக்கு, லட்சுமணப் பிறப்பெடுத்துவிட்ட நிலையில், அந்தப் பிறப்புக்குண்டான எண்ணங்கள் இருந்ததேயன்றி, தன் பின்புலனையே அவன் அந்த நொடியில் உணர்ந்திருக்க வில்லை. உணரவும் கூடாது என்பதல்லவா பரந்தாமன் விருப்பம்!

"அண்ணா..."

"என்ன லட்சுமணா... இவனது அதிவிசேஷம் எதுவாக இருக்கும் என்று என்னை வினவப் போகிறாயா?"



"இல்லையண்ணா... ஆமண்ணா..."

"என்ன இது தடுமாற்றம்?"

"ஆம்.. சந்தோஷத் தடுமாற்றம்!"

"உன்னிடமா சந்தோஷத் தடுமாற்றம்?"

"ஆமண்ணா... எனக்கென்னவோ இந்த அனுமனைப் பார்த்தது முதலே பெரிய அளவில் ஒரு நம்பிக்கை என்னுள் பிறந்துவிட்டது!"

"அப்படியானால், அனுமனைப் பார்ப்பவருக்கு எல்லாம் நம்பிக்கை பிறக்கும் என்று சொல்..." – ராமனின் பதில் லட்சுமணனுக்குச் சொன்னதுபோல் இல்லை. உலகுக்கே சொன்னதுபோல் இருந்தது.

"அண்ணா, நிச்சயம் நமக்கு இனி நல்லது நடக்கப் போகிறது. நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்.."– லட்சுமணன் பரவசத்தில் ஒரு பரிதியாகவே ஆகி விட்டான்.

அதேசமயம், அனுமனும் விரைந்து திரும்பி வந்தான். முதிய மகரிஷி ஒருவர் கனிந்த பார்வையுடன் பூமியையே பூக்களாகக் கருதி, அந்தப் பூக்களுக்கு நோகுமே என்று மெள்ள நடந்து வந்தால், பார்ப்பதற்கு எப்படி இருக்கும்? அப்படி இருந்தது

அனுமனை உபாசித்து துதிக்க வகை செய்யும் சிறிய அளவிலான ஸ்துதிகள் ஒவ்வொரு அத்தியாயத்திலும் இடம்பெறப் போகின்றன. இந்த மந்திர ஸ்துதிகளை மனதுக்குள் எப்போது பாராயணம் செய்தாலும் மனம் நெகிழும். ஏனென்றால், மனித மனமும் அனுமனை போன்றதே... தாவித் திரியக்கூடியது. அதேசமயம், அளவில்லாத சக்தியைக் கொண்டது. ஆனால், எவரும் தம் சக்தியை உணர்ந்து செயல்படுவது இல்லை. இந்த மந்திரங்கள் நமது மனதுக்குள், மனமாகிய அனுமன் விசுவரூபமெடுக்கத் துணை செய்யும். நம்பிக்கையோடு துதியுங்கள். திரும்பத் திரும்பக் கூறுங்கள். போகப் போகப் பாருங்கள்.. உங்களுக்குள் நேரிடும் மாற்றங்களை..!

இந்த ஸ்துதி, காஞ்சி மகாபெரியவருக்கும் மிகவும் பிடித்தமானது...



"அதுலித பலதாமம் ஸ்வர்ணசைலாப தேஹம்
தநுஜவன க்ருசானும் ஞானானாம் அக்ரகண்யம்
ஸகல குண நிதரஸம் வான ராணா மதீசம்
ரகுபதி வர தூதம் வாதஜாதம் நமாமி"

*அனுமனின் நடை. சாதாரணமாக நிலத்தில் ஊற்றுக்கண் பீறிடும் அளவு துவம்சித்து நடக்கும் அனுமனால், ஏனோ ராம லட்சுமணர்கள் முன் அப்படியெல்லாம் நடக்கவே முடியவில்லை.*

*நெருங்கிய அனுமன், பணிவினை கைவிடாமல், "பிரபுக்களே.. வாருங்கள், எங்கள் அரசர் தங்களைச் சந்திக்கச் சித்தமாகி விட்டார்!" எனும்போதே, அங்கே சுக்ரீவனின் கூட்டத்தைச் சேர்ந்த ஜாம்பவானும் அங்கதனும் ராம லட்சுமணர்களைக் காண ஓடோடி வந்தனர். ராம லட்சுமணர்களின் அருமை பெருமைகளை அங்கதன் அறிந்திருக்கவில்லை. ஆயினும், ஜாம்பவான் அறிந்திருந்ததால், ரிஷ்யமுகப் பர்வதத்துக்கு விடிவுகாலமே வந்துவிட்டதாகத்தான் அவர் கருதினார்.*

**“அனும... இனி நீ வானர மனிதனோ, இந்த மண்ணின் அமைச்சனோ மட்டுமன்று. ஒட்டுமொத்த தேவ சக்திகளின் தொகுப்பான நீ ஒரு பூட்டு என்றால், உன்னைத் திறக்க வந்த சாவிகள் இந்த இருவர்”**

ராம லட்சுமணர்களைப் பணிந்தவர் அனுமனையும் கண்டார். அனுமனின் அந்தப் பணிவும் கனிவும் அவருக்குள் பலப்பல எண்ணங்களைத் தோற்றுவித்தன.

‘அனும... இனி நீ வானர மனிதனோ, இந்த மண்ணின் அமைச்சனோ மட்டுமன்று. ஒட்டுமொத்த தேவ சக்திகளின் தொகுப்பான நீ ஒரு பூட்டு என்றால், உன்னைத் திறக்க வந்த சாவிகள் இந்த இருவர்’ என்பதுபோலப் பார்த்த ஜாம்பவான், அப்படியே காலத்தை எண்ணியும் வியந்தார்.

‘நில்லாது விரையும் காலகதியே.. இந்த நொடி முதல் இனி வருங்காலங்களில் ஜனிக்கப் போகும் உயிர்க் கூட்டம் அத்தனைக்கும் அதன் மாய வாழ்க்கைக்கு நடுவிலும் நீ கருணை புரிய சித்தமாகி விட்டாய். அந்தக் கருணைக்கு வித்து அதோ ராமனாக... அதன் விளைவு, இதோ அனுமனாக..! இனி நடக்கப்போகும் ஒவ்வொரு சம்பவமுமே அசாதாரணமானது, அற்புதமானது! மொத்தத்தில், மானுட வாழ்க்கைக்கு விமோசனம் அளிக்க எது தேவையோ, அதை ஒருமுறை நீ நடத்திப் பார்க்கப் போகிறாய். நானும் அதில் இருக்க புண்ணியம் செய்திருக்கிறேன். நன்றி காலமே.. நன்றி!’

– ஜாம்பவான் த்ரிகால ஞானி. அதனால்தான், பின்னால் வரப்போகும் காலங்களுக்கும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து அவரால் அப்போது எண்ணிப் பார்க்க முடிந்தது.

அந்த அசாதாரணமான, அற்புதமான சம்பவங்களும் அடுத்தடுத்து நடக்கத் தொடங்கின.

ரிஷ்யமுக பர்வதம் என்கிற அந்த மலைக்காட்டில் இடைவெளியே இல்லாதபடி எங்கு பார்த்தாலும் மரங்கள்... ஆங்காங்கே பாறைத் திண்டுகள்... புதிதாக யாராவது வந்தால் தடம் தெரியாமல் மலைத்துப் போய்த்தான் நிற்கவேண்டும்.

சீரான வழித்தடம் தங்களுக்குத் தேவையில்லை என்கிறாற் போல வானர மனிதர்கள் அங்குள்ள பாறைகளில் தாவிக்குதித்து மேலேறிச் செல்ல... அந்த வானரங்களின் குணநலன்கள் ஏதுமின்றி அடர்த்தியான வழித்தடம் ஒன்றில் செடி கொடிகளை எல்லாம் விலக்கி, ஒரு பாதையை உருவாக்கி, அதன் வழியே ராம, லட்சுமணரை அழைத்துச் சென்று கொண்டிருந்தான் அனுமன். ஆச்சரியமூட்டும் அணுகுமுறை!

விடலைப் பிராயத்தில் அவன் துவம்சம் செய்த தாவரங்களுக்கு

# விசித்திரனல்ல... விசித்தன்!



ஓர் அளவே கிடையாது. வழிமறித்து நிற்பது எதுவாக இருந்தாலும் சரி, அதைப் பெயர்த்து எறிவது என்று எப்போதும் ஒரு வேகத்தோடு குறும்புகள் செய்த அனுமனா இது? என்று ஜாம்பவான்கூட வியந்துபோனார். அதை அங்கதனிடமும் கூறினார். "அங்கதா.. அனுமனை கவனித்தாயா? எத்தனை கருணையோடு நடந்து கொள்கிறான் பார்..!"

அங்கதன் பார்த்தபோது, பாதையில் படர்ந்து கிடந்த பூங்கொடி ஒன்றைப் பட்டுத் துணியைத் தொட்டுத் தூக்குவது போலத் தூக்கிப் பக்குவமாக ஓரத்தில் போட்ட அனுமன், அதன் சுருளான நுனிப் பகுதியை அருகிலிருந்த ஒரு மரத்தண்டுடன் சேர்த்து, 'இனி நீ இந்த மரத்தைப் பற்றி வளர்ந்து கொள்' என்பதுபோல விட்டுவிட்டுப் பணிவாகத் திரும்பி ராம லட்சுமணர்களைப் பார்த்தான்.



பதிலுக்கு ராமன் முகத்தில் பாராட்டும் விதமான பாவம் அடங்கிய மெல்லிய புன்னகை வெளிப்பட்டது.

"ஜாம்பவான் அவர்களே.. எனக்கே வியப்பாகத்தான் இருக்கிறது! எதனால் அனுமன் இப்படி நடந்து கொள்கிறான்?"

அங்கதன் கேட்ட கேள்விக்கு விடையாக ஜாம்பவான் ஒரு ஆழமான பார்வை பார்த்தார். பின் அங்கதனுக்கு மட்டும் கேட்கும்விதமாகப் பேச ஆரம்பித்தார். "அங்கதா... வானில் சூரியன் வந்துவிட்டால் எப்பேர்ப்பட்ட இருளும் ஓடி ஒளிந்துவிடுவதில்லையா... அப்படித்தான் இதுவும்..." என்றார்.

"என்ன கூறுகிறீர்கள்.. இவர்கள் வருகைக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?"

"ஏன்... உன்னால் யூகிக்க முடியவில்லையா?"

"முடியவில்லை. அனுமன் செய்கை எனக்குப் புரிய மறுக்கிறது. ஒரு முறை, கடம்ப மரம் ஒன்று தனது கிளையால் அனுமன் உடலை உரசிக்



காயப்படுத்தி விட்டது. பதிலுக்கு அந்தக் கடம்ப மரத்தை அப்படியே பிடுங்கி கடலில் எறிந்தவன்தான் இந்த அனுமன். இன்று இந்தச் செடி, கொடிகளிடம் எல்லாம் இவன் காட்டும் அன்பு என்வரையில் சிரிப்பைத்தான் வரவழைக்கிறது."

"அங்கதா.. உனக்கு சிரிப்பைத் தரும் விஷயம் எனக்குப் பூரிப்பைத் தருகிறது. அதேசமயம் அவன் எதனால் அமைச்சனானான், நீ ஏன் இப்படி இருக்கிறாய் என்றும் எண்ணிப் பார்க்கிறேன்.."

"ஜாம்பவானே.. என்ன இது? மனதில் பட்டதைக் கேட்டால் என்னையே மட்டம் தட்டுகிறீர்களே?"

**"இவர்கள் மரவுரி தரித்து ரிஷிகளைப் போல் வாழ்ந்த கானகத்தில் ஏராளமான அரக்கர்கள் உண்டு. அவர்களுக்கெல்லாம் இவர்கள் துளியும் அஞ்சவில்லை. அவ்வளவு ஏன்? 'காட்டுக்குப் போ' என்று இவர்கள் தந்தையான தசரத சக்ரவர்த்தி பணித்தபோது, நாடுதான் பெரிது என்று இவர்களில் மூத்தவரான அந்த ஸ்ரீராமர் கூறி, நாட்டிலேயே தங்கியிருக்கலாம். ஆனால், 'தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை' என்று மறுமொழி பேசாமல், காட்டில் பதினான்கு ஆண்டுகள் வாழ்ந்திடத் துணிந்தவர் ஸ்ரீராமர். இந்தத் துணிவும் திடமும் ஒரு சாமான்ய மனிதனுக்கு வருமா?"**

"நீ மட்டமாகவே இருப்பதால்தான் இப்படி எல்லாம் கேட்கிறாய். உன்னுள் வானரங்களுக்கு உரிய புத்திசாலித்தனம்தான் இருக்கிறது. ஆனால், அனுமன் இப்பொழுது கருணை மிகுந்த தேவகுணமும் நுண்ணறிவும் வாய்ந்தவனாகிவிட்டான். அவனால் நமது வானர இனமே மாறப்போகிறது பார். காலம் நமது கூட்டத்தைக் கை எடுத்துக் கும்பிடப் போகிறது. ஒன்றை மட்டும் புரிந்துகொள். இனி இந்த கிஷ்கிந்தை, விலங்குகளின் நகரமல்ல.. நாமும்கூட வடிவத்தால்தான் விலங்குகள். இனி நாமும் சரி, இந்த நாடும் சரி தேவகுணங்களுக்கு



மாறப்போகிறோம். ஏனென்றால், வரவேண்டியவர்கள் வந்துவிட்டார்கள். நடக்கவேண்டியது எல்லாம் நடக்கப் போகிறது" என்று பூடகமாகவே பேசிக்கொண்டு வந்தார் ஜாம்பவான்.

ஓர் இடத்தில் ஓடை ஒன்று குறுக்கிட்டது. ராமனும் லட்சுமணனும் அதில் இறங்கி, மறுகரையின் மணல் வெளியில் கால் பதித்து நடக்க, அங்கங்கே அவர்களின் பாதத் தடங்கள். பின்தொடர்ந்து வரும் ஜாம்பவான் மிகக் கவனமாக அந்தத் தடங்களின் மேல் தன் கால்கள் பட்டுவிடாத படி கவனித்து நடந்தார். அதேசமயம், அந்தத் தடங்களைப் பார்த்து 'இந்த மண் செய்த புண்ணியம் நான் செய்யவில்லையே!' என்றும் எண்ணிக் கொண்டார்.

அங்கதனுக்கோ குழப்பம் தீர்ந்தபாடில்லை.

சுக்ரீவன் அடைந்துகிடந்த குகை மிகவும் இருளடர்ந்து இருந்தது. கள்ளியும் முள்ளுமாய் நுழைமுகத்தில் ஒரே தடை. ஆங்காங்கே சர்ப்பங்கள் வேறு கொடி போல் ஆடிக்கொண்டிருந்தன. சில சர்ப்பங்கள் படம் விரித்து நிமிர்ந்திருந்தன.

குகை முகப்பில் வட்டமான இரு பாறைகளை உருட்டிவந்து போட்டான் அனுமன். அவற்றின்மேல் சில பூங்கொடிகளைப் படரவிட்டான். "செம்மல்களே.. நான் உள்ளே சென்று, எனது அரசனான சுக்ரீவ ராஜாவுடன் வந்து உங்களை எதிர்கொள்வேன். அதுவரை தாங்கள் இங்கே இளைப்பாறுங்கள்!" என்று பணிவோடு கூறிவிட்டுக் குகைக்குள் புகுந்தான்.

பாறைமேல் அமர்ந்த ராமன், லட்சுமணனையும் அமரச் சொல்ல.. "தாங்கள் அமருங்கள் அண்ணா. நான் நிற்கிறேன். இந்த வானர தூதன் இன்னமும் எப்படியெல்லாம் சந்தர்ப்பச் சூழல்களைப் பயன்படுத்திக் கொள்ளப்போகிறான் என்றும் பார்க்கப் போகிறேன்..." என்றான் லட்சுமணன்.

ராமன் முகத்தில் அதைக் கேட்டு, மீண்டும் ஒரு மந்தகாசப் புன்னகை. ஆனால், க்ஷணத்தில் அது மாறி, அவனது நீல நயனங்களில் சீதையைப் பிரிந்த சோக உணர்வு பரவி நிற்பதை ஜாம்பவான் கவனித்தார்.

அப்படியே கோதண்டத்துடன் ராமன் அமர்ந்திருக்கும் அந்தக் கோலம் பார்த்தும் மனதுக்குள் ரசித்தார்.

உள்ளே குகைக்குள் சுக்ரீவன்!

அனுமன் நடந்துவரும் சத்தம்கூட அவனிடம் நடுக்கத்தை உண்டு பண்ணிற்று. வாலிதான் தன்னை தேடி வந்துவிட்டானோ என்று எண்ணியவன் வேகமாக உள்ளேயே ஒரு பாறையின் பின்னால் ஒளிந்துகொண்டான். வருவது அனுமன் என்று தெரிந்த பிறகே வெளிப்பட்டான். அதேசமயம், அனுமனிடம் தெரிந்த உற்சாகமும் தெம்பும் சுக்ரீவனை சிந்திக்க வைத்தது.

"அரசே... அரசே..!"

"வா ஆஞ்சனேயா... என்ன இது? நீ வந்த வேகம், எனக்கு அந்த வாலியை ஞாபகப்படுத்திவிட்டதே..!"

"சதாசர்வகாலமும் அவர் நினைப்புத்தானா உங்களுக்கு!"

"என்ன செய்வது? அவன் என் மனதுக்குள் மூட்டியிருக்கும் அச்சத்துக்கும் ஆற்றாமைக்கும் அளவே இல்லை. சரி, சரி... வந்த விஷயத்தைச் சொல். நமது இந்த பர்வத எல்லைக்குள் நுழைந்த அந்த இரு நரர்கள் யார்? வாலியால் ஏவிவிடப்பட்ட மாயாவிகளா, இல்லை வழி தெரியாமல் வந்துவிட்ட வேட்டைக்காரர்களா?"

"எதற்கு இத்தனை பதற்றம் அரசே? எதனால் உங்கள் உள்ளம் இப்படி நடுங்குகிறது? வந்திருப்பவர்கள் ஒருவிதத்தில், வேட்டைக்காரர்கள்தான். ஆனால், மிருகங்களை வேட்டையாடும் ஊன்பசி மிகுந்த வேட்டைக்காரர்கள் அல்ல இவர்கள். தர்மத்துக்கும் நியாயத்துக்கும் எதிரானவர்களை வேட்டையாடப் புறப்பட்டுவிட்டவர்கள்.

விளக்கமாகச் சொல்வதானால், ரவிகுலத்துத் திலகர்கள். அயோத்தி மாமன்னர் தசரத மகாசக்ரவர்த்தியின் அருமைப் புதல்வர்கள். சிற்றன்னையின் வரத்துக்காகவும் தந்தையின் அறத்துக்காகவும் தங்களை வனச் சிறைப்படுத்திக் கொண்ட சத்தியபுத்திரர்கள்!

மிதிலை மன்னர் ஜனக மகாசக்ரவர்த்தியின் திருமகளை வில்லொடித்து மணந்த ஸ்ரீராமன் இவர்களில் மூத்தவர். அவரது அடியொற்றி வந்திருப்பவர் இளவல் லட்சுமணன்!"

"ஆஞ்சனேயா.. மானிட வேந்தர்களான இவர்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறார்கள்..?"

"காரணமிருக்கிறது அரசே. முன்னவரான ராமரின்



**ராமபத்தினியாரும் ஒரு சக்ரவர்த்தினி. மலர்த் தொட்டிலில் உறங்கி தங்கக் கிண்ணத்தில் பாலருந்தியவர். பூவினும் மென்மையான அவரும் பதியோடு இணைந்து கானகத்துக்குப் பயணப்பட்டுவிட்டார் என்றால், அந்தப் பூமகள் உள்ளத்தின் உறுதி எத்தகையது என்பது விளங்குகிறது!**

தர்மபத்தினியாரை அசுரன் ஒருவன் கவர்ந்து சென்று விட்டான். இம்மட்டில் அவரது நிலையும் உங்கள் நிலையும் ஒன்று..”

“என்ன கொடுமை இது... அங்கேயும் ஒரு வாலியா?”

‘‘தவறு அரசே... இங்கேதான் வாலி. அங்கே கவர்ந்து சென்றவன் யார் என்றே தெரியவில்லை!”

“அது எப்படி?”

“கவர்ந்து சென்றவன் ஒரு மாயாவி. இந்த வீர புருஷர்களை நேருக்கு நேர் சந்திக்கத் திராணியற்ற ஒருவன். பொன்மான் ஒன்றைத் தேடி இவர்கள் சென்றுவிட்ட நிலையில், தந்திரமாக ஸ்ரீராம பத்தினியைக் கவர்ந்து சென்றிருக்கிறான்..”

“சரி.. அவர்கள் இங்கு வந்த காரணம்?”

“சம்பாதிதான் உங்களை நோக்கி அவர்களை அனுப்பி இருக்கிறான். சம்பாதியை நான் அறிவேன்.. காரணம் இல்லாமல் அவன் இந்த வீர புருஷர்களை இங்கு அனுப்பவில்லை..!”

“என்ன காரணம்..?”

“இவர்கள் உண்மையில் வந்திருப்பது நமது

## வெற்றிக்கான ஸ்துதி!

**கா**ரியங்களில் வெற்றி தோல்விகள் ஒளிந்துள்ளன. ஒருவருக்கு ஏற்படும் வெற்றியே இன்னொருவருக்கு தோல்வியாகிறது.

வெற்றிக்குரிய ஒருவராக நாம் திகழ ஒரு பிரார்த்தனை ஸ்லோகம் உள்ளது.

'அஸாத்ய ஸாதக ஸ்வாமி, அஸாத்யம் தவகிம்வத
ராமதூத க்ருபா ஸிந்தோ
மத் கார்யம் ஸாதயப்ரபோ...'

– இந்த ஸ்லோகத்தை ஜெபிக்க ஜெபிக்க, நமது செயல்களில் எல்லாம் வேகமும் எடுத்த காரியத்தில் வெற்றியும் நிச்சயம் கிட்டும்.

சேனையின் உதவியைக் கேட்டுத்தான். ஆனால், அதற்குமுன் இவர்கள் உங்களுக்கு உதவப் போகிறார்கள்..”

“எப்படி?”

“உங்கள் சகோதரர் வாலியை எதிர்த்து அழிக்கும் வல்லமையை நான் இவர்களிடம் காண்கிறேன்..”

“ஆஞ்சனேயா, என்ன சொல்கிறாய் நீ? அண்ணன் வாலியின் வர விலாசம் உனக்குத் தெரியும்தானே?”

“அதைவிடப் பெரியது இவர்களின் வீர விலாசம்..”

“இவர்களே நமது உதவி கேட்டு வந்திருப்பவர்கள்... இவர்களை எப்படி நீ மாவீரர்களாகக் கருதுகிறாய்?”

“இவர்கள் மரவுரி தரித்து ரிஷிகளைப் போல் வாழ்ந்த கானகத்தில் ஏராளமான அரக்கர்கள் உண்டு. அவர்களுக்கெல்லாம் இவர்கள் துளியும் அஞ்சவில்லை. அவ்வளவு ஏன்? 'காட்டுக்குப் போ' என்று இவர்கள் தந்தையான தசரத சக்ரவர்த்தி பணித்தபோது, நாடுதான் பெரிது என்று இவர்களில் மூத்தவரான அந்த ஸ்ரீராமர் கூறி, நாட்டிலேயே தங்கியிருக்கலாம். ஆனால், தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்று மறுமொழி பேசாமல் காட்டில் பதினான்கு ஆண்டுகள் வாழ்ந்திடத் துணிந்தவர் ஸ்ரீராமர். இந்தத் துணிவும் திடமும் ஒரு சாமான்ய

மனிதனுக்கு வருமா? எந்த அளவு தர்மத்தின் மீதும் சத்தியத்தின் மீதும் பற்று இருந்தால் அவர் இப்படி துணிந்திருப்பார்? கானகம் போகச் சொன்னது ஸ்ரீராம பிரானை மட்டும்தான். ஆனால், இளவல் லட்சுமணன் 'அண்ணா, உன்னைப் பிரிய என்னால் இயலாது' என்று கூடவே வந்துவிட்டார். அதற்கு இளவலின் பத்தினியாரும் உடன்பட்டு வழியனுப்பி வைத்திருக்கிறார்.

கவரப்பட்டிருக்கும் ராமபத்தினியாரும் ஒரு சக்ரவர்த்தினி. மலர்த் தொட்டிலில் உறங்கி தங்கக் கிண்ணத்தில் பாலருந்தியவர். பூவினும் மென்மையான அவரும் பதியோடு இணைந்து கானகத்துக்குப் பயணப்பட்டுவிட்டார் என்றால், அந்தப் பூமகள் உள்ளத்தின் உறுதி எத்தகையது என்பது விளங்கவில்லையா?

இவ்வளவு சோகத்திலும்கூட, அவரது முகத்தில் ஒரு பொலிவை நான் காண்கிறேன். பதற்றமோ, பயமோ துளியும் இல்லை.

கானகத்து அரிமா ஒன்றின் காலில் தைத்த முள்ளை கருணையோடு எடுத்து எறிந்ததைக் கண்டேன். அந்த விலங்குக்குக்கூட அவர்களைப் பற்றித் தெரிந்திருக்கிறதோ என்னவோ? மிக அமைதியாகவும் நன்றியோடும் அது விலகிச் சென்றது. அவர்களின் சமீபம் என்னை மிகமிக நெகிழ்த்துகிறது.

வடிவில்தான் அவர்கள் மனிதர்கள். ஆனால், உண்மையில் தேவர்களிடமும் காணமுடியாத ஏதோ ஒன்றை நான் அவர்களிடம் காண்கிறேன். நீங்களும் அவர்களைத் தரிசித்தால், உங்கள் நெஞ்சத்திலும் எனக்கேற்பட்ட அத்தனை நெகிழ்வும் ஏற்படும்.."

அனுமனின் வியாக்யானம் சுக்ரீவனை அப்படியே கட்டிப் போட்டாலும், அவனுக்குள் புதைந்து கிடக்கும் அச்சம் 'அவர்களால் என் சகோதரன் வாலியை வெல்ல முடியுமா?' என்று திரும்பத் திரும்பக் கேட்க வைத்தது.

அனுமனுக்கு அந்த நொடியில் 'இனி பேசுவதைவிட ஸ்ரீராமபிரானின் வீரத்தை சுக்ரீவன் ஒருமுறை கண்ணாரக் காணச் செய்தலே சிறப்பானதாகும்' என்று தோன்றியது.

"அரசே.. அவர்கள் வீரத்தை நீங்கள் புரிந்து கொள்ளும் படி

நிரூபிப்பேன். அதற்காக அவர்களிடம் 'எங்கே, உங்கள் வீரத்தைக் காட்டுங்கள்?' என்று கூறுவது அவர்களைப் பரிசோதிப்பது போலாகிவிடும். சோதிப்பவர்கள் எப்போதும் சோதிக்கப்படுபவர்களை விட வீரம் மிகுந்தவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் சோதிக்கும் தகுதி அவர்களுக்கு உண்டு.

எனக்கென்னவோ நமக்கு அந்தத் தகுதி இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, சாதுர்யமாக நான் செயல்பட இருக்கிறேன். நீங்களும் அதைக் காண்பீர்கள். அதன் பிறகாவது நான் கூறியதை நீங்கள் நம்பி, அவர்களுக்கு நாம் உதவுவோம். என்ன கூறுகிறீர்கள்?" என்று திரும்பக் கேட்டான் அனுமன்.

சுக்ரீவனும் அனுமனை அணைத்து, "ஆஞ்சனேயா... நீ இப்போதெல்லாம் காலங்களை ஊடுருவிப் பார்த்தே எதையும் பேசுகிறாய். உனது தாய் அஞ்சனை உன்னை என்னிடம் சேர்த்தபோது, உன்னை விசித்திரனாகத்தான் நினைத்தேன். அங்கதன், நீலன் போல உன்னையும் ஒருவனாகவே கருதினேன். ஆனால், நீ வேறுபடுகிறாய். உன்னை இப்போது என்னால் விசித்திரனாகப் பார்க்க முடியவில்லை. விசித்தனாகவே பார்க்கிறேன். காரணம், உன் சித்தத் தெளிவு!"

சுக்ரீவன் அனுமனைப் பாராட்டிய அந்த நொடி, அந்தக் குகைப் பரப்பிலுள்ள சிவலிங்கம் போன்ற பாறை ஒன்றின்மேல் உள்வரை ஊடுருவியிருந்த கொடி ஒன்று ஆமோதிப்பதுபோலத் தனது மலர் ஒன்றை உதிர்த்தது.

அது – அந்த லிங்கத்தை அர்ச்சிப்பது போல அதன்மேல் விழுந்தது!

ரிஷ்யமுக பர்வதத்தில் சுக்ரீவன் ஒளிந்து இருக்கும் குகைக்கு வெளியே ராம லட்சுமணர்கள் காத்திருக்க, அனுமனின் ஆக்ஞைப்படி சுக்ரீவன் ஸ்ரீராமபிரானையும் லட்சுமணனையும் எதிர்கொண்டான். அதன்பின் பரஸ்பர அறிமுகங்கள் நிகழ்ந்து முடிந்தன.

சுக்ரீவனும் தனது சகாக்கள் புடைசூழ ராம லட்சுமணரை அழைத்துச் சென்றான். எளிய உபசரிப்புகளுக்குப் பின், 'தங்களின் துக்கத்தை என்னால் உணரமுடிகிறது. நானும் என் பத்தினியை இழந்து துடித்துக் கொண்டிருப்பவன்தான்' என்று சுக்ரீவன் வருத்தத்தோடு கூற, ராமன் பதிலுக்கு லட்சுமணனைப் பார்த்தான். பிறகு,




"என் சீதையைக் கவர்ந்துசென்றவன் யாரென்றே தெரியவில்லை. இங்கோ சுக்ரீவ பத்தினி இருக்குமிடம் பளிச்சென்று தெரிகின்ற நிலை. இருவர் நிலையும் ஒன்றுதான் என்றாலும், ஸ்தூலமாகத் தெரிவதை முதலில் சந்திப்பதே சிறப்பு!" என்று ராமன் சொல்ல,

"பிரபோ.. நான் கேட்கத் தயங்கிய உதவியைத் தாங்களே புரிந்துகொண்டு பேசுவது, 'நானிருக்கிறேன்.. நீ ஏன் கவலைப்படுகிறாய்?' என்று கேட்பதுபோல் உள்ளது!" என்றான் அனுமன்.

"என் கோதண்டத்தின்மீது உனக்கு அவ்வளவு நம்பிக்கையா?"

"பிரபோ, இதென்ன கேள்வி? இதென்ன சாதாரண வில்லா.. சிவ தனுசையே முறித்தவர் தாங்கள். முறியாத இந்த தனுசு,



அதனிலும் மேலானதாகவே இருக்க முடியும். இதன்முன், இந்த வனத்தில் வரிசையாக உள்ள சால்மரக்கூட்டம்கூட சாதாரணமானதுதானே?'' – அனுமன் பேச்சு வியப்பைக் காட்டியபடி, 'சால்மரக் கூட்ட'த்தை தொட்டு நின்றது.

''அப்படியானால், அந்த சால்மரங்கள் மாதிறம் கொண்டவையா, என்ன?'' ராமன் வினவிட.. அருகிலுள்ள அங்கதன், ''அப்படித்தான் நாங்கள் நினைக்கிறோம். ஒன்றல்ல இரண்டல்ல... வரிசையாக ஏழு மரங்கள்! அதை வீழ்த்துபவர்களாலேயே என் பெரிய தந்தையான வாலியையும் வீழ்த்த முடியும் என்று நாங்கள் எண்ணிக்கொண்டு இருக்கிறோம்!'' என்றான்.

அங்கதன் சொல்லி முடித்த அடுத்த நொடியே லட்சுமணனை ஒருவித ஆவேசம் தொற்றிக்கொண்டது. ''அண்ணா... என்ன இது? மரங்களை வியக்கிறார்கள் இவர்கள்! எடுங்கள் பாணத்தை.. தொடுங்கள் அந்த சால்மரங்கள்மீது. அந்த மரக்கூட்டம் விழவேண்டும் என்பதல்ல என் எண்ணம். அனுமனின் நம்பிக்கை வீண் போய்விடக்கூடாது!''



–லட்சுமணனின் பேச்சு, அனுமன் உள்ளத்தில் பாலை வார்த்தது.

அனுமன் சால்மரம் பற்றி ஆரம்பித்த விதம், அதை அங்கதன் எடுத்து விஸ்தரித்த விதம், லட்சுமண் அதில் விழுந்த விதம் மூன்றுமே ராமனுக்கு க்ஷணத்தில் விளங்கிவிட்டது. உணர்வுகள் மனிதர்களை ஆட்டிப் படைக்கும் விதத்தை விளங்கிக் கொண்ட ராமன், அதைத் தொடர்ந்து சுக்ரீவனைத்தான் பார்த்தான்.

சுக்ரீவனிடம் தவிப்பு தெரிந்தது.

"அந்த சால்மரங்கள் காலகாலமாக இருக்கின்றன. மிக உறுதியானவை. வீழ்த்துவது இயலாது என்பார்கள். என் சகோதரன் வாலியோ, அந்த சால்மரங்களை விட உறுதியானவன். பொல்லாத வரம் பெற்றவன். அவனை யார் எதிர்த்தாலும், எதிர்ப்பவர்களின் பலத்தில் சரிபாதியை ஈர்த்துக் கொள்ளக்கூடியவன். போதாததற்கு, இப்படி ஒரு வரம் கொடுத்த அந்த தேவேந்திரன் சொர்ணமாலை ஒன்றையும் தந்திருக்கிறான். அதை அணிந்துகொண்டால், அவனுக்குத் தோல்வியே கிடையாது என்பதும் அவனது செருக்குக்கு இன்னொரு காரணம்.

இப்படி மகாபலம் உடையவன், அதைக் கொண்டு எளியவர்களைக் காப்பாற்ற வேண்டும். இவனோ ஹிம்சிக்கிறான். என்வரையில், மாவீரர்கள் எவரும் பிறருக்கு உதவுவதில்லை. உதவ நினைப்பவர்களோ மாவீரர்களாக இருப்பதில்லை."

சுக்ரீவனிடம் சந்தேகமும் பயமும் தடதடவென ஒரு ஓர் அருவிப்பெருக்கு போல வெளிப்பட்டது. அது லட்சுமணனை மேலும் தூண்டியது.

"அண்ணா... மாவீரர்கள்மேல் இந்த சுக்ரீவ ராஜா கொண்டுள்ள கருத்தைப் பார்த்தீர்களா? அந்த வாலிதான் இவனை இப்படியெல்லாம் சிந்திக்க வைத்துவிட்டான். இனி ஒரு விநாடிகூட நீங்கள் பொறுக்கக்கூடாது. உம் என்று சொல்லுங்கள்.. அந்த மரங்களை நான் வீழ்த்திக் காட்டுகிறேன். இங்கே மரம் வீழ்ந்தால்தான், மனம் நிமிரும் போலத் தெரிகிறது. உத்தரவிடுங்கள் அண்ணா!" –லட்சுமணன் சிலிர்த்தெழுந்தான். அனுமன் உள்ளத்திலோ, அங்கே வீரக்கனல் பற்றத்தொடங்கிவிட்ட பூரிப்பு.

ராமன் அதற்குமேல் தயங்கவில்லை. சால்மரக் கூட்டத்தை நெருங்கி, அவற்றை ஒரு பார்வை பார்த்து, பின் கோதண்டத்தை மெள்ள உயர்த்தி, அம்பறாத் தூளியிலிருந்து ஒரு பாணத்தையும் எடுத்து, மெள்ள நாணேற்றினான். பின் இடக்காலை சற்றுமுன் நிறுத்தி, வலக்காலை சற்றே பின்னுக்குக் கொண்டு சென்று சால்மரக் கூட்டத்தின் பருத்த நடுப்பாகத்தை குறிவைத்து, குருமலை வாசத்தில் தனக்கு வித்தை கற்பித்த அத்தனை குருமகான்களையும் மனதுக்குள் வணங்கியவனாகி, சட்டென்று பாணத்தைப் பின்னுக்கு இழுத்து, பாயவிட.. அந்த பாணமும் அந்த சால்மரங்கள் ஏழினையும் துளைத்துக் கொண்டு சென்றுவிட்டு, அப்படியே திரும்பி ஸ்ரீராமனின் அம்பறாத் தூளியிலேயே வந்து விழுந்தது!

அந்த நொடி சுக்ரீவன் அடைந்த மகிழ்ச்சிக்கும் திகைப்புக்கும் அளவேயில்லை. அனுமனின் விழிகளிலோ ஆனந்த பாஷ்பம். அங்கே கூடியிருந்த அங்கதன், நீலன் முதலானோரிடம் மகிழ்ச்சி எக்காளம். லட்சுமணன் முகத்தில் மட்டும் அப்பட்டமான வீரச்செருக்கு. ஊடே ஓடிவந்த அனுமன், ஸ்ரீராமனின் கைகளை வேகமாகப் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

புன்னகையுடன் ராமனும், "அனுமந்தா... என் வில்லாவது ஏழு சால்மரங்களைத்தான் துளைத்தது. உன் சொல்லோ, இங்குள்ளோரின் சந்தேகம், பயம் என்கிற சகலத்தையும் துளைத்துவிட்டது. சொல்லாமல் சொல்வது, செய்யாமல் செய்வதெல்லாம் தபஸ்விகளுக்கே உரியது. அம்மட்டில் நீயுமோர் தபஸ்வி!" என்றான்.

"உண்மைதான்! அனுமன் ஒரு தபஸ்வி மட்டுமல்ல, அவன் ஒரு பிரகாசியும்கூட. ராமச்சந்திரப் பிரபுவே இந்த நொடி எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது. நான் இனி உள்ளம் நடுங்க ஒளிந்துகிடக்கப் போவதில்லை. எனக்கு நீங்கள் இருக்கிறீர்கள். அதேசமயம் உங்களுக்கு நாங்கள் இருக்கிறோம். எனது வானரப் படை இனி உங்கள் படை. இந்த நொடியே நான் அதை உறுதி செய்கிறேன்" என்றவன்,

அங்கேயே – அப்போதே ஒரு ஹோமம் வளர்த்தான். அதில் அக்னியை பற்றியவன், அரளிக் கட்டைகளால் அதையும் வளர்த்தான். மூன்று முறை ராம லட்சுமணர்களின் கரம் பற்றி



"பாதி பலத்தைக்
கவரும் வரபலத்தோடு வரும்
ஒருவன் எப்படி வீரனாவான்?
எதிரியின் பலத்தை முன்பே அபகரித்துக்
கொண்டுவிட்டு, அதன்பின் உள்ள மிச்ச
பலத்துடன் மோதுபவன், தனக்குச்
சமமானவனோடு எங்கே மோதுகிறான்?"



அந்த ஹோமகுண்டத்தை சுற்றி வந்தவன், தனது நட்பையும் நம்பிக்கையையும் உறுதிசெய்தான்.

ராமனும் வாலிவதத்துக்கு ஆயத்தமானான்.

லட்சுமணன் கேட்டான்: "அண்ணா, அவனை எப்படி எதிர்கொள்ளப் போகிறீர்கள்? உங்களின் சரிபாதி பலத்தை அவன் எடுத்துக்கொண்டுவிட்டால், நீங்கள் உங்களுக்கு இணையான ஒருவரோடு மோதுவது போலாகிவிடும். அவனோ, அதற்கும் மேலாக சொர்ணமாலையையும்

**சுக்ரீவனின் மொத்தப் படையுமே விதவிதமாக யோசித்தது. ஆனால், அவர்களில் ஜாம்பவான் என்கிற கரடி ராஜா சிந்தித்த விதம்தான் அற்புதமானது.**
**அந்த த்ரிகால ஞானிக்கு அனுமன்தான் நினைவில் வந்தார். அனுமனை உலக்குக்குக்காட்ட வேளை வந்துவிட்டதாகத் தோன்றிவிட்டது.**

அணிந்தவன்.."

"நீ என்ன சொல்கிறாய் லட்சுமணா... எதிரி மிக பலசாலி என்று என்னை எச்சரிக்கிறாயா? இல்லை, அவனை வெல்ல முடியாது என்கிறாயா?"

"அண்ணா.. தப்பித்தவறிகூட அப்படி என்னைப் பார்த்து இனி ஒருமுறை கேட்டுவிடாதீர்கள். பாதி பலத்தை கவரும் வரபலத்தோடு வரும் ஒருவன் எப்படி வீரனாவான்? எதிரியின் பலத்தை முன்பே அபகரித்துக் கொண்டுவிட்டு, அதன்பின் உள்ள மிச்ச பலத்துடன் மோதுபவன் தனக்குச் சமமானவனோடு எங்கே மோதுகிறான்? தன்னிலும் கீழானவனோடு அல்லவா மோதுகிறான். அப்படி மோதி, அதில் வெல்வதும் ஒரு வெற்றியா?"

"லட்சுமணா, வாலியின் வீரம் பற்றிய உன் விமர்சனத்தை விடு. உன் பேச்சு யுத்த தர்மம் பற்றியது. இங்கே இருப்பதோ யுத்த தந்திரம்..!"

"சரியாகச் சொன்னீர்கள்! வாலியிடம் இருப்பது யுத்த தர்மமில்லை.. யுத்த தந்திரம்! அந்தத் தந்திரத்தை எப்படி எதிர்கொள்வது?"

"தர்மத்துக்குத் தர்மம்... தந்திரத்துக்குத் தந்திரம்தானே சரியானதாக இருக்க முடியும்!"

"அப்படியானால், நீங்களும் அவனைப்போல தந்திரத்தில் இறங்கப் போகிறீர்களா? என்ன அண்ணா இது... தந்திரங்கள் அற்பர்களின் உபாயம். நமக்கெதற்கு அது?"

"தர்மமோ, தந்திரமோ... அது உருவாக்கித் தரும் விளைவால்தான் சிறக்கும். நல்ல விளைவுகளைத் தராத தர்மமும் ஒன்றுதான், தந்திரமும் ஒன்றுதான்!"

"என்றால்..?"

"விளைவுக்கே செயல்..."

"அப்படியானால், உங்கள் தந்திரம் எத்தகையது?"

"அவன் வரத்துக்கு என்னிடம் வேலையிருக்காது... அவ்வளவுதான்!"

லட்சுமணனிடம் ராமன் சொன்னது, வாலி ராமனைத் தேடிவந்து புஜம் புடைக்க நின்றபோது புரியத் தொடங்கியது.

மதம் கொண்ட யானை போல், "யார் அது என்னை எதிர்க்க வந்திருப்பது..?" என்று ஆக்ரோஷமாக வானம் அதிர வாலி கத்தியபோதும் அவனை ஒரு மரத்தின் பின்னால் மறைந்து நின்று, ராமன் பாணத்தைக் கோதண்டத்து நாணில் பூட்டியபோது முற்றிலுமாகப் புரிந்துவிட்டது.

அதன்பின் பாணம் தன் கடமையை முடித்துவிட்டது. வாலியும் விழுந்தான். மெள்ள ராமரும் அவன் முன் சென்றார்.. கூடவே அஞ்சனை மைந்தனும்!

வாலி ராமரைப் பார்த்த மாத்திரம் "மாவீரா.." என்று கைகளைத்தான் கூப்பினான். ஓடிச்சென்ற அனுமன்தான் அவனைத் தன் தொடைமேல் தாங்கிக்கொண்டான்.

அதன்பின் வாலி ராமனிடம் சில நியாயங்கள் பேசியது, மென்னகையாலேயே அதற்கு ராமன் விளக்கமளித்தது ஒருபுறம் நிகழ நிகழ.. மறுபுறம் அஞ்சனை மைந்தன் மனதிலும்

## செந்தமிழ் துதி!

அனுமனைப் பற்றிய துதிகளில் செந்தமிழ்த் துதி ஒன்று என்றும் வலியது.

கம்பன் தான் எழுதிய ராமாயணத்தில் உள்ளம் உவந்து எழுதியது இது. இதைச் சொல்லச் சொல்ல வெல்லம்பட்டார்போல நாவெல்லாம் தித்திக்கும்.

தமிழின் திண்மையும் வன்மையும் சேர்ந்து அனுமனுக்கு நிகராய் பொருளாட்சி செய்வதும் புரியும். இனி அந்தப்பாயிரம்!

*'அஞ்சிலே ஒன்று பெற்றான், அஞ்சிலே ஒன்றைத் தாவி*
*அஞ்சிலே ஒன்று ஆறு ஆக, ஆருயிர் காக்க ஏகி*
*அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்*
*அஞ்சிலே ஒன்று வைத்தான், அவன் எம்மை அளித்துக் காப்பான்.'*

அங்கு நடந்த சம்பவம் எது யுத்த தர்மம் என்பதற்கு ஓர் இலக்கணத்தையே உருவாக்கி அளித்து விட்டது.

அனுமனின் மடிமேல் வாலி கிடந்த அந்த தருணத்தில் அனுமன் உள்ளத்தில் மூண்ட ஒரு எண்ணம் 'இனி நான் இந்த வானரக் கூட்டத்துக்கு அமைச்சனில்லை... இதோ, இந்த வானளாவி நிற்கும் புகழுடையவனுக்கே நான் இனி தொண்டன்' என்று சங்கல்பித்துக்கொண்டது.

அதுகாறும் அனுமனிடம் புத்தியொளிதான் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. அந்த நொடிமுதல் பக்தியொளியும் சேர்ந்துகொண்டது. சுக்ரீவனும் மீண்டும் கிஷ்கிந்தைக்கு அரசனானான். தனது சேனையை ராம காரியத்துக்காகச் செயலில் இறக்கினான்.

அன்னை சீதையைக் கவர்ந்து சென்ற அந்த கள்வனைத் தேடி அந்தக் கூட்டம் போகாத இடமில்லை. அலையாத அலைச்சலில்லை.

அனுமனும் கூட்டத்தை வழிநடத்தி, காடு மேடெல்லாம் அலைந்து திரிந்தார்.

இறுதியாக ஜடாயுவின் சகோதரனும் கழுகரசனான விஸ்ரவசின் மகனுமான சம்பாதி மூலமாக, ஒரு புஷ்பக

விமானத்தில் சீதையை ராவணன் கடத்திச் சென்ற விஷயம் தெரியவந்தது. அப்படியானால், கடலுக்கு அந்தப் பக்கமாகத்தான் ராவணன் சீதையைச் சிறை வைத்திருக்க வேண்டும். என்ன நடந்தது என்பதை அறிய கடல் கடந்தாக வேண்டும்.

எப்படிக் கடப்பது? யார் கடப்பது? மாதா சீதை எந்த கதியில் இருக்கிறாள்..? அறிந்து வரப்போவது யார்? அடுக்கடுக்காய் வினாக்கள்...

சுக்ரீவனின் மொத்தப் படையுமே விதவிதமாக யோசித்தது. ஆனால், அவர்களில் ஜாம்பவான் என்கிற கரடி ராஜா சிந்தித்த விதம்தான் அற்புதமானது.

அந்த த்ரிகால ஞானிக்கு அனுமன்தான் நினைவில் வந்தார். அனுமனை உலக்குக்குக் காட்ட வேளை வந்துவிட்டதாகத் தோன்றிவிட்டது.

அவ்வப்போது காலகதி குறித்து சிந்தித்து மாய்ந்து போகும் ஜாம்பவானுக்குள் சுந்தரனாகிய அனுமனின் பராக்கிரமங்கள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வரத்தொடங்கின.

"அனுமனே... நீ எதற்காக வானரப் பிறப்பெடுத்தாயோ, அதற்கான வேளை வந்துவிட்டது. உன் பிறப்பின் ரகசியங்களை இவ்வேளையில் நான் எண்ணிப் பார்க்கிறேன்!" என்றவருக்குள், அனுமனோடு கூடி, அந்த சிவபிரான் நினைவும் சேர்ந்தே வந்தது.

ஓம் நமச்சிவாய!

ஜாம்பவானுக்கு நன்கு தெரியும் அனுமன் எப்படிப்பட்டவன் என்று!

அனுமனுக்கே தெரியாத உண்மைகளைக் கூட ஜாம்பவான் அறிவார். கரடி ராஜாவாக இருந்தாலும் ஜாம்பவான் மிகுந்த ஞானம் உடையவர். ஒருவரை பார்த்த மாத்திரத்தில் எடை போட்டு, தள்ளுவன தள்ளி, கொள்ளுவதைக் கொள்ளக் கூடியவர்.

திரேதாயுகத்திலே இன்றைய மனித வாழ்க்கை முறையில் இருந்து நிறைய மாறுபாடுகள் இருந்தன. குறிப்பாக சில சாபங்கள், காரியங்கள் காரணமாக விலங்குகளின் வடிவிலும் மனிதர்களின் ஞானத்தோடும் ஓர் இனம் அந்த நாட்களில் காணப்பட்டது.




அந்த வகையைச் சேர்ந்தவர்கள்தான் கிளியின் முக அமைப்பை உடைய சுக மகரிஷி, மற்றும் சப்த கன்னியரில் ஒருத்தியான பன்றி முகத்தை உடைய வராஹி போன்றவர்கள்.

இவர்களுக்கு இடையே வானர மனித இனம் ஒன்றும் வனங்களிடையே மனிதர்களைப் போலவே அரசாட்சியெல்லாம் புரிந்து வந்தது. அந்த இனத்தின் வழி வந்தவர்கள்தான் சுக்ரீவன், வாலி முதலானோர். இவர்கள் பிறப்புக்கும் தேவர்களுக்கும் ஒரு மறைமுகத் தொடர்பு இருந்தது.

மனிதர்கள் ஆண், பெண் என்னும் இருபாலரின் இந்திரியச் சேர்க்கையால் உருவாகிறவர்கள். ஆனால், இதையும் கடந்து அந்த நாட்களில் சில இந்திரியச் சேர்க்கைகள் நிகழ்ந்துள்ளன. அவற்றின் மூலமாக அபூர்வமாக பல உயிர்களும் தோன்றியுள்ளன.



குந்தியின் காது வழியாக பிறந்ததாக கூறப்படும் கர்ணனின் பிறப்பே ஆய்வுக்குரியதுதான். ஓர் எல்லைக்கு மேல் இன்றைய விஞ்ஞான பாதிப்புக்களை உடைய மனதால் அவற்றை எடைபோட்டுப் பார்க்க முடியவில்லை. அவற்றை விசித்திரமான கற்பனை என்றோ நம்ப முடியாத ஒரு சம்பவமாகவோதான் நினைக்க வேண்டியுள்ளது.

அனுமனின் பிறப்பிலும்கூட பல விசேஷங்கள் புதைந்து கிடக்கின்றன.

திருமாலின் பத்து அவதாரங்களில் ராமன் என்கிற ஓர் அவதார காலத்தின்போது அனுமன், ராமலட்சுமணர் களோடு சேர்ந்து மாபெரும் சாகசங்கள் செய்ய வேண்டும் என்பதெல்லாம் கால கதியில் முன்பே தீர்மானிக்கப் பட்டவை என்று சொல்கிறவர்கள் உண்டு.

அவற்றை ரசமான கற்பனைகள் என்பவர்கள்கூட அனுமனை நம்பித் தொழுது அதனால் துயரங்கள் விலகியும், ஞானம் கைகூடியும் நன்மைகள் விளையும்போது அனுமனை எண்ணி ஆனந்தக் கண்ணீர் விட்ட சம்பவங்கள் ஏராளம், ஏராளம்.





பஞ்சபூதங்களில் ஒருவனாகிய வாயுவுக்கு அந்த ஒளியைச் சுமப்பதில் ஓர் ஆனந்தம். கூடவே இந்த ஒளியாகிய சக்தியில் இருந்து இன்னொரு பிரபஞ்சம் உருவாகப் போகிறதா, இல்லை தங்களைப் போன்ற நித்ய பூதம் ஒன்று உருவாகப் போகிறதா, அல்லது உமையால் கணபதியும், ஈசனால் முருகக் கடவுளும் உருவானது போல இன்னொரு தெய்வதம் தோன்றப் போகிறதா என்றெல்லாம் கேள்விகள், ஆச்சரியங்கள்!



விளைவுக்கே செயல் என்கிற அடிப்படையில் பார்த்தால் அனுமன்மீதான பக்தி நமக்கு அளிக்கும் விமோசனங்களுக்கு அளவே இல்லை. அது நுட்பத்திலும் நுட்பமாக நமக்குள் பலப்பல எண்ணங்களை உருவாக்குவதையும் தவிர்க்க முடியாது.

'உலகில் மனிதன் மட்டுமே உயரிய உயிரினம். மற்றவை அவனுக்கு கீழே!' என்பதை நமது புராணங்கள் மறுத்து, 'விலங்குகள் தாழ்ந்தவையல்ல... அவற்றுக்கு மனிதனுக்கும் மேலான சக்தி உண்டு' என்று கூறுவதாகவே தோன்றுகிறது.

அம்மட்டில் அனுமன் பாத்திரம் ஓர் அட்சயப் பாத்திரம். அவன் பிறப்பிலும் பலப்பல சூட்சுமங்கள்.

அனுமனின் தாய் அஞ்சனை. அவளும் வானரப் பெண்தான். கேசரி என்கிற வானர வீரனை மணந்து, இன்பமாக வாழ்ந்தவளுக்கு மழலை இல்லாதது ஒன்றுதான் குறையாக இருந்தது.

இதனால் இருவரும் அடைந்த துன்பமும் எல்லையில்லாதது. அந்த நிலையில் கேசரியின் துயரத்தை அறிந்த ஒரு முனிவர் சிவபிரானை நோக்கிக் கையைக் காட்டினார்.

"கேசரி, உனக்கான மழலையை அந்த ஈசனால்தான் தரமுடியும். அவன் திருவடிகளை இறுக்கிப் பிடி. பக்தர்கள் துயர் தீர்ப்பதில் அந்த ஈசன் நிகரில்லாதவன்" என்றார். கேசரியும் கானகத்தில் உள்ள ஒரு லிங்கத்தின் முன் கண்ணீருடன் மண்டியிட்டுவிட்டான்.

அஞ்சனையோ மாயவனை நோக்கிப் பூஜிக்கத் தொடங்கினாள். "அஞ்சனா.. நீ இப்பொழுதே வேங்கட மலைக்குச் செல். அந்த வேங்கடவன் திருப்பாதம் பிடி. வேங்கடமலை மேல் அவன் கோயில் கொண்டிருப்பதே உன் போன்றவர்களின் துயரத்தைத் தீர்க்கத்தான்" என்றாள் தேவதை ஒருத்தி.

இப்படி பெருமானை கேசரியும், திருமாலை அஞ்சனையும் பற்றிக்கொண்டு மனதுக்குள் மழலைக்காக உருக ஆரம்பித்தனர்.

அவர்களின் தவத் தீ தன் வேலையைக் காட்டத் தொடங்கியது. அஞ்சனையின் தவத்தைக் காண அந்த ஈசனும் உமையும்

வேங்கடமலைக்கு வந்தபோது அங்கே ஓர் ஆண் குரங்கும் ஒரு பெண் குரங்கும் ஆலிங்கனத்தில் இருந்தன.

உலக உயிர்களின் இயக்கத்திற்கே காரணமான தேவ தேவியர்க்கு தங்களின் இன்பமான சேர்க்கைதான் உலகில் இப்படி எதிரொலிக்கிறாற்போல் தோன்றியது.

ஈசனும் உமையும் தங்களையே இரு மந்திகளாய் நினைத்துக்கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கோடு ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளும்போது அவர்களின் சங்கமத்தில் ஓர் ஒளி உருவானது.

**விளைவுக்கே செயல் என்கிற அடிப்படையில் பார்த்தால் அனுமன்மீதான பக்தி நமக்கு அளிக்கும் விமோசனங்களுக்கு அளவே இல்லை. அது நுட்பத்திலும் நுட்பமாக நமக்குள் பலப்பல எண்ணங்களை உருவாக்குவதையும் தவிர்க்க முடியாது.**

இப்படி உலக நாயகன் நாயகியரின் மனோபாவம் அமைவதும் அதில் உருவாகும் மகிழ்ச்சி ஓர் ஒளியாவதும் கோடிகோடி ஆண்டுகள் கொண்ட கால கதியில் எப்போதோ நடக்கும் ஓர் அதிசயம் ஆகும். அந்த வேளையில் அவர்களோடு அங்கே உலா வந்தவர்களில் வாயுவும் ஒருவன்.

பஞ்சபூதங்களில் ஒருவனாகிய வாயுவுக்கு அந்த ஒளியைச் சுமப்பதில் ஓர் ஆனந்தம். கூடவே இந்த ஒளியாகிய சக்தியில் இருந்து இன்னொரு பிரபஞ்சம் உருவாகப் போகிறதா, இல்லை தங்களைப் போன்ற நித்ய பூதம் ஒன்று உருவாகப் போகிறதா, அல்லது உமையால் கணபதியும், ஈசனால் முருகக் கடவுளும் உருவானது போல இன்னொரு தெய்வதம் தோன்றப் போகிறதா என்றெல்லாம் கேள்விகள், ஆச்சரியங்கள்!

வாயு அந்த ஒளியைச் சுமந்தபடியே திரிந்தபோது தவத்திலிருந்த அஞ்சனைமேல் மோதிட, அந்த ஒளியும் அவள்

சுவாசிக்கையில் காற்றுபோல அவளுக்குள் புகுந்துவிட்டது.

கண் திறந்த அஞ்சனையின் எதிரில் வாயு. ஒளி உள் நிறைந்ததால் அஞ்சனையின் உடல், மனம் என்று சகலத்திலும் மளமளவென்று மாற்றங்கள்.

அடுத்த நொடியே அவள் வயிற்றில் யாரோ கருக்கொண்டது போல ஓர் உள்ளுணர்வு. வாயுவும் "என் வசம் இருந்த சிவபார்வதி ஒளிதான் உன்னுள் பெருகப்போகிறது. அது எதுவாக இருந்தாலும் அதற்கு நீ தாய் என்றால் நான் தந்தை.." என்றான்.

அஞ்சனை அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அதன்பின் அவள் கருக்கொண்டு ஒரு மூல நட்சத்திரத்தில் அனுமனை ஈன்றாள்.

சிவ சக்தியே ஒளியாகி பின் நுண் உயிராக, அதை வாயு அஞ்சனையிடம் சேர்ப்பித்தது என்பதுவரை எல்லாமே தெய்வ சங்கல்பம்.

அனுமனின் மூலம் இது! முருகன் போல், விநாயகர் போல் அன்றி கருவில் தங்கி, பின் பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உருவான சரீரம் அனுமனுக்கு..!

முருகனின் பிறப்புக்கும், விநாயகரின் பிறப்புக்கும் வெவ்வேறு விசேஷ காரணங்கள் இருப்பதுபோல ஆஞ்சனேயனின் பிறப்புக்கும் ஒரு விசேஷ காரணம் இருக்கவே செய்தது.

விசேஷ பிறப்பெடுத்தவனுக்கு மற்ற தேவர்களும் அணிவகுத்து வந்து வரங்களைப் பரிசாகத் தந்தனர். சிவசக்தி அம்சம் என்பது சாதாரணமானதா என்ன? அதற்கு அச்சம் ஏது? துக்கம்தான் ஏது?

அதனால்தானோ என்னவோ, வானில் அன்றாடம் உதயமாகும் சூரியனை ஒரு சிவந்த பழம் என்று பால அனுமன் அதைப் பறித்து உண்ண ஆகாயத்தில் பறக்கத் தொடங்கி விட்டான்.

சூரியனை சமீபித்தால் அனுமன் கதி என்னாகும்? இந்த நெருப்பை அந்த நெருப்பு விழுங்குமா.. இல்லை இது அதை விழுங்கிவிடுமா?

தேவர்களிடம் ஒரே நடுக்கம். மகனின் வேகத்தையும் விவேகமில்லாத குறும்புச் செயலையும் பார்த்து செய்வதறியாது

**இ**ந்த ஸ்லோகம் நாம் தியானிக்க மட்டுமல்ல... நம்மைச் சார்ந்தவர்களுக்கு எழுதிக் கொடுத்து, அவர்களையும் தியானிக்கக் கூறலாம்.

இதைப் பாராயணம் செய்யச் செய்ய நம் சொல்லும் செயலும் எப்பொழுதும் வெற்றியை நோக்கியே இருக்கும்.

*'ஓம் நமோ பகவதே ப்ரஷாவாரிஷே*
*அனுஷ்டுப் சன்னா...*
*ஓம் பிரம்மமுகம், ஓம் விஷ்ணுமுகம்*
*ஓம் மகேஷ்வரமுகம் ஸ்ரீராமதூதாய*
*ஸ்ரீஹனுமாராயா...*
*ஹ்ஹ ரீங் யங் மங் சங்*
*ஐயும் கிலியும் சவ்வும் நங்மங்சங்*
*வருக வருக என் நாவின் மேல்*
*வசிய வசிய ஸ்வாஹா!'*



வாயு திகைத்து நிற்க, இந்திரன்தான் ஓடிப்போய் வழிமறித்துத் தடுத்தான்.

அனுமன் இந்திரனை லட்சியம் செய்வது மாதிரியே தெரியவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த இந்திரனுக்கு வஜ்ராயுதத்தைக் கையில் எடுப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

அந்த ஆயுதத்தால் ஒரே அடி!

பால அனுமனும் மயங்கி, கீழே விழுந்துவிட்டான். அதன்பிறகு இந்திரன் "ஐயா நான் தேவர் உலகத்தையும் சகல லோகங்களையும் காப்பாற்றவே இந்த சிறுபிள்ளையைத் தீண்டினேன். என்பிழை ஏதுமில்லை" என்று அரற்ற, அதைக்கண்ட மற்ற தேவர்களான வருணன், குபேரன், யமன், ருத்திரன் முதலானோர் அனுமனைச் சமாதானப்படுத்த எண்ணம் கொண்டார்கள்.

அதற்கு முன் அனுமன் மூர்ச்சை தெளிய வேண்டுமே..

வாயு, தந்தைப் பாசத்துடன் பிரம்மனிடம் முறையிட.. பிரம்மன், அனுமன் கணக்கில் ஒரு புது வாழ்க்கை அளிக்கும் ஆயுளையே வைக்க, பால அனுமனும் மூர்ச்சை தெளிந்தான்.

அப்பொழுதே பிரம்மன் கூறிவிட்டான்.. "சிவசக்தி அம்சத்துடன் பிரம்ம லிபியும் சேர்ந்து விட்டது. இனி இது திருமாலுடன் சேரவேண்டியதே பாக்கி.."

பிரம்மா கூறியதன் பொருள் எல்லோருக்கும் விளங்கிவிட்டது. பூவுலகில் திருமால் ராமனாக அவதாரம் எடுக்கப் போகிறார். சிவபக்தனான ராவணன் அகந்தையோடு 'அரக்கர் குலம்தான் உயர்ந்தது' என்கிற எண்ணத்தில் இருந்து வருகிறான். அவனை அழிக்க திருமால் முனையும்போது அனுமனே துணை செய்ய வேண்டும். உலகில் ஓர் அறப்பணி நடக்கப்போகிறது, அதில் நமது பங்கும் சேரவேண்டும் என்று எண்ணியே குபேரன்,

**மூல நட்சத்திரத்தில் அஞ்சனை கருவில் பஞ்ச பூத அம்சங்களுடன் மனித உருக்கொண்டு குரங்கின் சாயலில் பிறந்த அனுமனை -கோள்கள் தங்கள் கடப்பாட்டின்படி அணுக முடியாதபடி போயின.**

யமன், சூரியன், இந்திரன் என்று ஒருவர் பாக்கியில்லாமல் தங்கள் தங்கள் பங்குக்கு வரங்களை வாரி வாரி வழங்கினார்கள்.

ஒவ்வொருவர் அளித்த வரமும் மிக விசேஷமானது. சூரியன் தன் ஒளி எழிலில் ஒரு பங்கையே தாரை வார்த்துக் கொடுத்துவிட்டான். பிரம்மனோ "போரில் உன்னை யாராலும் எந்த ஆயுதத்தாலும் கொல்ல முடியாது" என்றும், "என்னால் மூர்ச்சை தெளிவிக்கப்பட்டதால், உனக்கு சிரஞ்சீவி என்று ஒரு நாமம் அமையும்" என்றும் வரத்தை அருளிச் சென்றார்.

குபேரனோ "எந்தச் செல்வத்திற்கும் உன்வரை தடையில்லை. உன்னை வணங்குகிறவர்க்கும் நான் அள்ளித் தந்தருள்வேன்" என்று தன் பங்கிற்கு வரத்தைத் தந்திட, யமனோ, "நீ விரும்பினாலன்றி உன்னை நான் நெருங்க மாட்டேன்" என்று கூற, ருத்திரனோ "உன்னுள் வெப்பம் தகிக்கும்போதெல்லாம் பேராற்றல் வெளிப்படும். அதனால் நீ இந்த உலகையே கூடத் தூக்கி எறிந்து பந்துபோல உருட்டி மகிழலாம். அப்படி ஒரு பலம் உன்னுள் பெருகும்" என்று சொன்னான்.

இதனால் மூல நட்சத்திரத்தில் அஞ்சனைக் கருவில் பஞ்ச பூத அம்சங்களுடன் மனித உருக்கொண்டு குரங்கின் சாயலில் பிறந்த அனுமனை - கோள்கள் தங்கள் கட்டுப்பாட்டின்படி அணுக முடியாதபடி போயின.

அது மட்டுமல்ல.. அனுமனைச் சரண் புகுந்தவர்களிடமும் கோள்கள் செயலிழக்கும் ஒரு பேரருளும் அனுமனிடம் உருத்திரளத் தொடங்கியது.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் கேசரியின் சிவபக்தி, அஞ்சனையின் மால் பக்தி, வாயுவின் பேருதவி இம்மூன்றால் உயிரான சிவசக்தி அம்சமாகிட உடலானது திருமாலின் அம்சமாகிட இந்த இரண்டையும் இணைத்த கர்த்தாவாக வாயு விளங்கிட ஏனைய பஞ்சபூதங்களுடன், தேவாதிதேவர்கள் பலரும் தங்களுக்கே உரிய சிறப்புகளை வரமாக அளித்திட உலகின் ஒப்பு உயர்வற்ற சக்தியாக, இணையில்லா அருளம்சமாக அனுமன் உருத்திரண்டான் என்பதே அனுமன் பிறப்பின் சூட்சமம்.

இப்படியான சர்வ சக்திக்கும் காலம் ஒரு பூட்டினைப் போட்டது. அங்கேதான் காலத்தின் சக்தியை நாம் வியக்க வேண்டியுள்ளது!

சீதை இலங்கைக்குக் கடத்தப்பட்டு விட்டாள் என்பது தெரிந்துவிட்டது. இலங்கையோ கடலுக்கு அப்பால் உள்ளது.

யாரால் இந்தக் கடலைக் கடக்க முடியும்?

இடையிலுள்ள இந்த ஆழியைக் கடப்பதைவிட முக்கியம், சீதை நிச்சயமாக இலங்கையில்தான் இருக்கிறாளா என்று தெரிந்துகொள்வது.

கழுகரசன் ஜடாயு கூறுவது பொய்யாக இருக்க முடியாது. அவன் சகோதரன் சம்பாதியும் யூகமாகப் பேசுகிறனவல்ல. ஆனாலும் சீதையை ராவணன் இலங்கையில்தான் வைத்திருக்கிறான் என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது?

இப்படிப் பல கேள்விகள் அனைவருக்குள்ளும் எழும்பினாலும்

# தேவாதி தேவன்!



கடல் கடப்பது என்பது சாதாரண விஷயமில்லையே?

அந்த மலைப்பு ஒவ்வொருவரிடமும் இருக்க, ஜாம்பவானிடம் மட்டும் அது துளியும் இல்லை. அவர் நயனங்கள் அனுமனையே நோக்குகின்றன. அனுமனின் ஆதி அந்தம் அறிந்த ஞானக்கரடி அல்லவா இந்த ஜாம்பவான்!

ஜாம்பவான் என்றாலே ஆற்றலிலே அசாதாரண அளவு கொண்டவர் என்பதுதானே பொருள். இன்றும் சிறந்த கல்வியாளரை வல்லவர் என்றோ தீரர் என்றோ சூரர் என்றோ கூறினாலும், அது அவரின் திறத்துக்குப் பொருத்தமான ஒரு சொல்லாக அமையாமல் போய், 'அவர் ஒரு ஜாம்பவான்' எனும்போது மட்டுமே அனைவருக்கும் நன்கு விளங்கும் எனும்போது, ஜாம்பவானுக்குத் தெரியாத முன்பின் விஷயங்களா?



குறிப்பாக, இங்கேதான் இருக்கிறாள் சீதை என்று தெரிந்துவிட்ட மாத்திரத்தில் நிமிர்ந்து எழுந்து, 'இப்பொழுதே புறப்பட்டுவிட்டேன் இலங்கைக்கு' என்று அனுமனால் சொல்ல முடியாமல் போனதற்கான அந்தக் கணத்தில்தான் ஜாம்பவான் மனதும் போய்ப்போய் நிற்கிறது.

'எல்லாம் அந்த வனத்து ரிஷிகளின் சாபம். அறியாத வயதிலேயே அசாத்திய சக்திகளை அடுக்கடுக்காகப் பெற்றதன் எதிரொலி. அந்த சக்திகளை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் தவித்த தவிப்பினாலும், பின் அவற்றை முறைதவறிப் பயன்படுத்தியதாலும் வந்ததன் விளைவுதான் சக்தியின் நாயகனாக இருந்தும் அந்தச் சக்தி பற்றிய விபரங்களே மனதில் இல்லாமல் போய்விட்டது...'

– ஜாம்பவான் முதலில் அனுமன் அப்படி இருப்பது குறித்து மேலோட்டமாகத்தான் நினைத்துப் பார்க்கிறார். பிறகு விபரமாகவே எண்ணிச் சொல்கிறார்.

''வாதாத்மஜா, உன்னைப் பார்க்கும்போது எனக்கு



வியப்பும் விதிர்ப்பும் ஒருசேரவே ஏற்படுகிறது. விடலைப் பிராயத்தில் அசாத்திய சக்திகளை வைத்துக்கொண்டு நீ குறும்பாகச் செய்த செயல்கள்தான், இன்று உன்னையே உனக்குக் காட்டாதபடி தடுத்து நிறுத்திக் கொண்டிருக் கின்றன.

மோனத்தவம் இயற்றிய பல முனிவர்கள்மேல், நீ ஒரு ஊழிக்காற்றுபோல் சென்று மோதியிருக்கிறாய். அவர்களது பர்ணசாலைக் கூரையை எல்லாம் பிரித்துப் போட்டு, கேட்டால் 'அது உறுதியாக இருக்கிறதா?' என்று பார்த்ததாகச் சொன்னாய்.

ஒரு முறை, ஒரு மரத்தின் உச்சியில் மலர் ஒன்று பூத்திருந்தது. அதை ஒரு முனிவர் பறிப்பதற்காகச் சிரமப்பட்டு நின்றபோது, அந்த மரத்தையே பிடுங்கிச் சாய்த்தாய். ஒரு பூவுக்காக, ஒரு மரத்தையே அழித்த உன் செயலால் ஒடுங்கிப்போனார் அந்த முனிவர்.

மொத்தத்தில், உனது குறும்பினால் தவசிரேஷ்டர் களுக்கு ஏற்பட்ட மனக்கிலேசங்களுக்கு ஓர் அளவில்லை. ஆடினாய்.. பாடினாய்.. குதித்தாய்.. எல்லாம் உன் செயல் மட்டும் இல்லை. உன்னுள் கிடந்த சக்திகளின் செயல்!

நீருக்குள் மீனால் நீந்தாமல் இருக்க முடியுமா? காற்று வீசும்போது, கிளைகள் ஆடாமல் இருக்க முடியுமா? பள்ளம் கண்டால் பாய்வதுதானே நீரின் இயல்பு? உன் குறும்பும் இவற்றோடு சேர்ந்துவிட்டது.

அந்தக் குறும்பை உன் தாய் அஞ்சனை ரசித்தாள். தந்தையான வாயுவும் ரசித்தான். ஆனால், அமைதியை விரும்பும் முனிவர் களால் ரசிக்க முடியவில்லை.

'ஏ, வானர புத்ரனே.. உனக்கு உன் சக்திகள் மறந்தாலன்றி, நீ அமைதியாக மாட்டாய். ஆகவே, அவை உனக்கு மறந்து போகட்டும்..' என்று உன்னைச் சபித்துவிட்டார்கள்.

இருப்பினும், த்ரிகாலங்களையும் ஊடுருவவல்ல அவர்களுக்கு உன் ஜென்ம காரணம் தெரிந்ததால், 'யாராவது அவற்றை ஞாபகப்படுத்தினால், உனக்கு உன் சக்திகள் தெரியவரும்.. அவற்றை நீ பயன்படுத்துவாய்' என்றும் கூறிவிட்டனர். அன்று அவர்கள் உன் சக்திகளுக்குப் போட்ட பூட்டை, இன்று நான் திறந்துகொண்டிருக் கிறேன்.." என்றார் ஜாம்பவான்.

ஜாம்பவான் அப்படிச் சொன்னபோது, சுற்றி நின்றபடி இருக்கும் அங்கதன் முதலான அனைவர் முகத்திலும் ஒரு பரவசம்.. ஒரு எதிர்பார்ப்பு!

"ஜாம்பவானே, எங்கள் அனுமனிடம் அப்படி என்ன சக்தி இருக்கிறது? சற்று விவரித்துதான் கூறுங்களேன்.." என்று அங்கதனும் உடனே வேண்ட, ஜாம்பவானின் கரங்கள் உடனேயே துதிசெய்வது போலக் கூம்புகின்றன.

"எதற்கு இந்த நமஸ்காரம்?"

"நமஸ்காரம்தான்.. அஞ்சனனை இனிவரும் காலத்தில் மாந்தர்கள் தொழுதவண்ணம் இருக்கப்போகிறார்கள். நான் சற்று முந்திக்கொள்கிறேன்.."

"புரியும்படியாக கூறுங்கள், ஜாம்பவான் அவர்களே.."

"கூறுகிறேன்.. அனுமனின் பிறப்பிலிருந்தே கூறுகிறேன். கேட்டுக் கொள்ளுங்கள்.. இந்த வாயுபுத்திரன் ஒரு ருத்ராம்சதாரி! சாட்சாத் அந்தக் கைலாசபதியின் ஊடகம் இவன். அவதரித்த நாளும் அசாதாரணமான ஒரு நாள். மான்முகம் போலத் தென்படும் நட்சத்திரக் கூட்டமான மிருகசீரிஷமானது பெரும்பாலும் பௌர்ணமியில் வருவதால், அந்த மாதத்துக்கும் மார்க்க சிரம் எனும் பொருள் கொண்ட மார்கழி என்கிற பெயர் வந்தது.

இந்த மார்கழிக்குள்தான் இருக்கிறது நம்மைப் போன்ற உயிர்களுக்கெல்லாம் மார்க்க வழி! இது தேவர்களின் மாதம். அதிலும் இதன் உஷத் காலம் அதிவிசேஷமான காலமாகும். மனம் ஒருமைப்படும். ஈஸ்வர கிருபை எளிதில் கிட்டும்.

இந்த விசேஷ மாதத்தில் கதி நிறை நன்னாளான அமாவாசையன்று மூலநட்சத்திரத்தில் பிறந்தவன் அனுமன். பௌர்ணமியன்று நமது மதி நிறையும். அமாவாசை அன்றோ, நமது பித்ரு கர்மங்களால் நமக்கான கதி நிறையும். அப்படி ஒரு கதி நிறைந்த நாளில் அவதரித்தவன் இந்த அஞ்சனை மைந்தன்.

ஐந்து வயதுக் குழந்தையாக இருக்கும்போதே அனற்பழமான சூரியனை ஏதோ ஒரு வன்பழம் என்று கருதி, அதைப் பறித்து உண்ணச் சென்றவன் இவன். அவ்வேளையில், சூரியனை விழுங்க வந்த ராகுவும்கூட அனுமனைக் கண்டு அஞ்சியதை என்னென்பது!

**ஐந்து வயதுக் குழந்தையாக இருக்கும்போதே அனற்பழுமான சூரியனை ஏதோ ஒரு வனப்பழும் என்று கருதி, அதைப் பறித்து உண்ணச் சென்றவன் இவன். அவ்வேளையில், சூரியனை விழுங்க வந்த ராகுவும்கூட அனுமனைக் கண்டு அஞ்சியதை என்னென்பது!**

**சூரியனின் சுழற்சி வேகத்துக்கு இணையாகச் சுற்றிப் பறந்து, சூரியனையே வியக்கவைத்த சுகவீரன்!**



சூரியனின் சுழற்சி வேகத்துக்கு இணையாகச் சுற்றிப் பறந்து, சூரியனையே வியக்கவைத்த சுகவீரன் இவன். ஆயினும், இந்திரனின் வஜ்ராயுதம் இவன் சூரியனை நெருங்கிடாதபடி செய்வதற்காக, இவன் தாடையில் வந்து மோதியது. அதுவும் நன்மைக்கே என்று ஆகிவிட்டது.

மயங்கி விழுந்துவிட்ட அனுமனுக்காகப் பாசத்தில் துடித்தாள் அஞ்சனை. அதைவிட அதிகமாகத் துடித்த வாயுவோ, தன் கடமையைச் செய்யாமல் செயலற்றுப் போனான். வாயுவின் செயலறுந்தால், பூமியில் வாழும் உயிர்களின் நிலை என்னாகும் என்று எண்ணிப் பார்.

இந்திராதி தேவர் முதல் சகலரும் வாயுவைச் சமாதானப் படுத்த ஓடிவந்துவிட்டனர். குழந்தைக் குறும்புக்கு, தான் அளித்தது அதிகபட்ச தண்டனைதான் என வாயுவை இந்திரனும் தேற்றினான். முதல் காரியமாக அனுமனை உயிர்த்தெழ வைத்து வாயுவுக்கு மகிழ்ச்சியளித்தார் பிரம்மன். அதன்பின்தான் வரமழை பொழியத் தொடங்கியது.

எனக்குத் தெரிந்து பாலகனாக இருக்கும்போதே, அனுமன் போல வரங்களைப் பெற்றவர்கள் யாருமே இல்லை. அதற்கு பிரம்மமூர்த்தியும் ஒரு காரணம். சூரியன் தன் எழிலில் பத்தில் ஒரு பங்கைக் கொடுத்து, 'உன்னை யாராலும் வெல்லவோ சொல்லவோ முடியாது' என்று கூறிவிட்டான்.

இந்திரன் 'இனி வஜ்ராயுதத்தில் அனுமனுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது' என்று கூறியதோடு, தனது கழுத்தில் அணிந்திருந்த பொற்றாமரை மாலையையும் எடுத்து அணிவித்து விட்டான். அடுத்து வருணன், 'வருண பாசத்தாலோ, தண்ணீராலோ அஞ்சனை மைந்தனுக்கு மரணமோ, உபத்திரவமோ இல்லை' என்று வரமளித்து விட்டான்.

'உறுதியான, ஆரோக்கியமான சக்தி மிகுந்த உடம்பாக இவன் உடம்பு இந்த நொடி முதல் ஆகட்டும்' என்றான் யமன். அடுத்து, தேவசிற்பியான விஸ்வகர்மா வந்தார். 'எனது உருவாக்கங்களான எந்த அஸ்திரமும் அனுமா, உன்னை ஏதும் செய்யாது' என்று கூறிவிட்டார்.

குபேரனோ, 'நீ இருக்கும் இடத்தில் தரித்திரம் இருக்காது. செல்வம் கூத்தாடும்' என்றான். இறுதியாக பிரம்மனும், பரமேஸ்வரனும் தங்கள் பங்குக்கு வரங்களை அளித்தனர்.

'எனது பிரம்மாஸ்திரம் மட்டுமல்ல.. என் சாபங்களாலும் உன்னை அழிக்க முடியாது' என்று பிரம்மா கூற, பரமேஸ்வரன் தான் இறுதியாக அனுமனைச் சிரஞ்சீவியாக்கினார். "உனக்கு மரணமில்லை.. நீ விரும்பினால்தான் மரணிக்கலாம். நீ இனி நித்ய சிரஞ்சீவி!" என்றார்.

இப்படி ஆளுக்கு ஆள் 'வரம்' என்கிற பெயரில் தங்களது சக்தியை எல்லாம் அனுமனுக்குள் திணித்துவிட்டனர். அந்த வகையில் பார்க்கப் போனால், அனுமன் தனி ஒருவனல்ல. அவன் ஒரு தேவர் கூட்டத் தொகுப்பு. மாபெரும் சக்திகளின் கலவை.

மந்திர, யந்திர, தந்திரங்கள் மட்டுமல்ல.. அஷ்டமா சித்திகளும்கூட அனுமனுக்குள் அடக்கம். இப்படிப்பட்ட அனுமனுக்கு அன்று மறதி என்னும் பூட்டை சில தவசிகள் போட்டுவிட்டனர். இதோ இன்று நான் திறந்துவிட்டேன்..."

—சொல்லி முடித்த ஜாம்பவானைப் பதிலுக்கு அனுமனும் பார்த்தவிதம் இருக்கிறதே.. அதில்தான் எத்தனை பரவசம்.. எத்தனை நெகிழ்ச்சி!

"ஜாம்பவானே, எங்கே உங்கள் திருவடிகள். முதலில் நான் அதை நமஸ்கரிக்கிறேன்..."

"தேவாதி தேவா.. நீயா என்னை நமஸ்கரிப்பது? இது என்ன சோதனை?"

"என்னை எனக்குக் காட்டிய கண்ணாடியல்லவா தாங்கள். இந்த நொடி எனக்கு எல்லாமே ஞாபகத்துக்கு வந்துவிட்டது. இந்தக் கடல் இல்லை, எந்தச் சக்தியாலும் இனி என்னைத் தடுத்து நிறுத்த முடியாது. ராமகார்யம் இனி சோம வீர்யத்துடன் நிகழ ஆரம்பிக்கும்.

எம்பிரான் அளித்த கணையாழி வடிவில், அவரே என்னுடன் இருக்கிறார். இனியும் நான் தாமதிக்கக்கூடாது. இப்பொழுதே நான் புறப்படுகிறேன்.." என்ற அனுமன், அடுத்த நொடி அண்ணாந்து ஆகாயத்தில் பார்த்தது, அந்த ஒளிக் கோளமாகிய சூரியனைத்தான்!

அந்த பாஸ்கரனைச் சேவித்த கையோடு, தந்தை வாயுவை நினைத்த மாத்திரத்தில் அனுமனின் மூச்சுக் குழல்களுக்குள் வாயுவின் வேகமான ஊடுருவலும் அதனால் மார்பில்

இந்தத் தியான ஸ்லோகம் மந்த்ராலய மகானாகிய ஸ்ரீஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் அருளியது.

அவரது திருநாமமே ஒரு மகாமந்திரம். ஆம்... **'ஓம் ஸ்ரீ ராகவேந்த்ராய நமஹ'** என்றாலே, நமது உள்ளம் அமிலத்தால் கழுவப்பட்டதுபோல சுத்தப்படும் - ஒளியும் பெறும்.

இந்த ஸ்லோகத்தைத் தியானிக்கும்போது, ஒருசேர ஸ்ரீராகவேந்திர ஸ்வாமியையும் அனுமனை யும், அந்த சீதா ராம லட்சுமணனையும் மொத்தமாக ஐவரையும் தியானித்த பயனை நாம் பெறுகிறோம்.

*'யஸ்ய ஸ்ரீ ஹனுமான் அனுக்ரஹ - பலாத் தீர்ணாம்புதிர் லிலயா*
*லங்காம் ப்ராப்ய நிசாம்ய ராம - தயிதாம் - புங்க்த்வா வனம் ராக்ஷஸான்!*
*அ க்ஷாதீன் விநிஹத்ய விஷ்ய தசகம் தக்த்வா - புரீம் தாம் புந:*
*தீர்ணாப்தி கபிபிர்யுதோ யம் அநுமத் தம் - ராம சந்திரம் பஜே!'*

விம்பிதமும் ஒருசேர நிகழ, அனுமனின் உருவமும் வளர ஆரம்பிக்கிறது!

அஷ்டமா சித்திகளில் ஒன்றான மஹிமாவின் மகிமையாலோ.. இல்லை, அவனுக்குள் புகுந்த வாயுவின் பெருக்கத்தாலோ.. இல்லை, எதனாலோ என்று வானரக் கூட்டமே ஆச்சரியத்தோடு நோக்க அனுமன் வளர்ந்துகொண்டே போகிறான்!

அருகிலேதான் இருந்தது மகேந்திரமலை. சற்றுமுன் வரை அதன் அடிவாரச் சருக்கத்தில் ஆறடி உயர மனிதனாக மட்டுமே இருந்த அனுமனின் திருவுருவம் ஆகாயத்தையே கிழிக்கத் தொடங்குகிற மாதிரி வளர்ந்து கொண்டே போனதில், அந்த மகேந்திரமலை அனுமனின் காலடியில் கிடக்கும் ஒரு பெரும் பாறை போலத்தான் தெரிந்தது.

அதன்மேல் ஏறி நின்று, கடலை நோக்கிடும்போதே அனுமனுக்குள் இலங்கை சென்று வந்துவிட்டதைப் போல ஒரு நினைப்பு. அவனது காலடியில் உள்ள வானர வீரர்களும் சிறு எறும்புகளைப் போலத்தான் தெரிகின்றனர்.

அங்கதன், ஜாம்பவான் இருவரும் அவர்களிடையே

அண்ணாந்து பார்த்த நிலையில் தெரிகின்றனர். அங்கிருந்து நூறு யோஜனை தூரத்தில் இருக்கிறது இலங்கை. அவ்வளவு தூரத்தைப் பறந்து வீசிக் கடக்க, எத்துணை பெரிய அளவு வளரவேண்டும் என்று ஒரு கணக்கு இருக்கிறது.

ஒரு பொருளின்மீது குறிவைத்துக் கல்லை எறியும்போது, ‘கையில் இருந்து கல் விடுபடும் நொடிக்கும் குறைவான காலகதி எது’ என்று எறிபவரால்கூட உணரமுடியாது. ஆனால், உள்ளுணர்வில் அச்செயல் பிசகின்றி நடந்து முடிந்திருக்கும். அப்படித்தான் அனுமனின் விஸ்வரூப வளர்ச்சியும்!

அவன் ஏறித் தாவிப் பறக்கும்போது, கீழே உள்ள சமுத்திரத்தில் பத்து யோஜனை அகலத்துக்கும் முப்பது யோஜனை நீளத்துக்கும் நிழல் விழுந்து அந்த நிழலைவிட, கடலில் நீந்தும் மீன்கள் ‘இப்பொழுதுதானே மாரிக்காலம் முடிந்தது. அதற்குள் திரும்ப ஆரம்பித்து விட்டதா என்ன?’ என்று எண்ணியோ இல்லை.. வானில் தெரிவது என்ன என்று பார்க்க வேண்டியோ, கடல் தளத்தின் மேலேயே வந்துவிட்டன.

திண்டுதிண்டான மேகப் பொதிகள் சிலீர், சிலீர் என்று அனுமனின் முகத்திலும் உடலிலும் மோதிட, அவற்றை கைகளால் விலக்கியபடி, கண்களால் இலங்கை தென்படுகிறதா என்று துழாவியபடியே இருக்க, ராமபாணம் எப்படி விசையுடன் சீறிச் செல்லுமோ, அப்படியே அனுமனின் உடலும் பறந்தபடி உள்ளது.

‘ராமபாணம் இலக்கைத் தாக்காமல் திரும்பாது.. நானும் அப்படித்தான்’ என்கிற நினைப்பு அனுமனுக்குள்!

சூரியன் அந்த அரிய காட்சியை உற்றுநோக்குகிறான். அங்கங்கே தேவர் கூட்டமும் கண்டு மகிழ்கிறது. இடையே ஒரு தடை போல, பரந்த அந்தக் கடல்பரப்பின் உள்ளிருந்து ஒரு மலையானது எழும்பத் தொடங்குகிறது.

அந்த நாளில் பர்வதங்கள் சிறகுகளுடன் பறக்கக்கூடியவை யாக இருந்தன. இதனால் இடம்பெயர்வது, புதுப்புது இடங்களில் தோன்றுவது என்று திரிந்த அவற்றின் சிறகுகளை வெட்டிவிடத் தீர்மானித்தான் இந்திரன்.

அந்த சமயத்தில் வாயுதேவன் உதவியுடன் தப்பித்து கடலுக்குள் சமுத்திர ராஜனின் அரவணைப்பில் ஒளிந்துகொண்ட ஒரு மலைதான் மைனாக மலை!

கடலிடை கம்பீரமாக எழுந்து நின்ற மைனாக மலை மானிட உருவமும் கொள்ளக்கூடியது. எழும்பி நின்ற வேகத்திலேயே அத்தனை உயரத்திற்கான மானிட முக வடிவத்தையும் பெற்று, பறந்துவரும் அனுமனைப் பார்த்துப் பேசியது அது.

"வாழ்க வீரா, வாழ்க! நீ வாயு மகன்தானே?" என்று கேள்வி




எழுப்ப, அனுமன் ஆமோதித்தான்.

"உனது உத்தமமான நோக்கத்தை அறிவேன் நான்! அற்புதன் நீ. அதனாலேயே ராம கார்யமாக இலங்கை செல்கிறாய். என்னாளும் பேசப்படப்போகிற செயல்வீரனே.. நெடுந்தூரத்தில் இருந்து உத்வேகத்துடன் பறந்துவரும் உனக்கு எவ்வளவு களைப்பாக இருக்கும் என்று எண்ணிப் பார்க்கிறேன்.

மைனாக பர்வதன் என்மேல் உன் திருமேனி படட்டும். இந்திரனுக்கு அஞ்சி சமுத்திரத்துக்குள் ஒளிந்து கொண்டவன் நான். அதற்கு உதவியவர் உன் தந்தையான வாயு. அவர் குமாரனான உனக்கு இளைப்பாறுதல் தருவதன் மூலம் நான் எனது நன்றிகளை உன் தந்தைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சஞ்சலமா சங்கடமோ கொள்ளாது உன் மேனி என் மலை மேனிமேல் பரவட்டும். எனக்கும் ராம கார்யத்துக்கு உதவிய



ஒரு திருப்தி ஏற்படும்.

என் நண்பன் சமுத்திரராஜன் கூட ஸ்ரீராமனின் முன்னோர்களால் ஆதரிக்கப்பட்டவன். அவனும்கூட, 'பறந்து வந்து கொண்டிருக்கிறான் அனுமன்.. பாங்கோடு உதவிடு' என்றான். அப்பொழுதுதான் நான் கடலிடை ஒளிந்த காரணமும் விளங்கியது. இன்று உனக்கு உதவுவதற்கு காலம் அன்றே என்னை தயார்ப்படுத்தி இருக்கிறதோ.." என்று ஒரு நீண்ட உரை நிகழ்த்தினான் மைனாக பர்வதன்.

அனுமன் முகத்திலும் உவகை. ஆயினும் 'ஓய்வு, களைப்பாறுதல் என்று இங்கே தங்குவது செயல்வேகத்தைக் கெடுத்துவிடும். எனக்கெதற்கு ஓய்வும், உறக்கமும்? யமன் எனக்களித்த வரத்தின்படி என் உடல்தான் களைப்பே கொள்ளாதே..' என்று தனக்குள் கேள்வியை கேட்டுக்கொண்ட அனுமன், "மைனாகமே.. உன் உபசரணைக்கு நன்றி. இந்த நொடி நான் என்னை ஒரு ராம பாணமாகத்தான் உணருகிறேன். எப்படி என் பிரபுவின் பாணம் இடையில் விழாதோ, அதேபோல் நானும் விழத் தயாரில்லை. இலங்கையை அடையும்வரை நான் வேறு எது



சீதை என்னும் மகா சக்தியைத் தேடச் செல்பவன் எதிரில் அதன் நேரெதிர் வடிவமாய்த் தோன்றி இடிச்சிரிப்பு சிரித்தாள் சுரஸை. புதர் போன்ற விரிசடை, பாறை போன்ற நெற்றி, ஒரு மரத்தின் தண்டு பாகம் போன்ற நாசி, வெள்ளைக் குளத்தில் மிதக்கும் கறுப்புத் தட்டு போன்ற ராட்சஸ விழிகள், இரண்டு அணைக்கட்டுகள் அடுத்தடுத்து கட்டப்பட்டதுபோன்ற உதடுகள், அதன் இரு ஓரங்களிலும் யானைத் தந்தம்போல வளைந்த கோரைப் பற்கள்.







குறித்தும் சிந்திக்கப் போவதில்லை.

முன்பே மாரிக்காலம் இடையிட்டு அதில் பல மாதங்கள் சென்றுவிட்டன. பின்னும் தேவியார் இருப்பிடம் தெரியாமல் தென்பகுதி முழுக்க அலைந்ததே மிச்சம்.

இன்றுதான் சம்பாதி மூலமாக தேவியார் இருப்பிடம் அறிந்தேன். அந்த நொடி என்னைப் பற்றியும் அறிந்தேன். இந்திராதி தேவர்கள் என்னை வரங்களில் மூழ்க வைத்ததன் காரணமே ராம கார்யத்துக்காக தான்.

அந்த உத்தேசத்திற்கு ஒரு பழுதும் வந்துவிடக் கூடாது என்றால், நான் நில்லாமல் சென்றாக வேண்டும். வெற்றி யுடன் நான் திரும்புவேன். ராம கார்யத்தர்களுக்குத் தோல்வியே ஏற்படாது. திரும்பி வரும்போது நான் உன் பர்வதத்தில் தங்கிச் செல்கிறேன். இப்பொழுது நீ வழிவிடுவாயாக..'' என்ற அனுமனை அதற்குமேல் மைனாகபர்வதனால் தடுக்க முடியவில்லை.

ஆனாலும் ஒரு தீரச் செயலில் ஒருவன் ஈடுபடும்போது அவன் தீரத்தை எல்லாக் கோணங்களிலும் அளவிட்டுப் பார்க்க முயற்சிக்கிற மாதிரி அனுமனின் வேகத்திற்கும், தெளிவான நோக்கத்திற்கும் தடைபோட அதே சமுத்திரவெளி மீது ஆகாயத்தில் சுரஸை என்ற ஒரு அரக்கி தோன்றினாள்.

சீதை என்னும் மகா சக்தியைத் தேடச் செல்பவன் எதிரில் அதன் நேரெதிர் வடிவமாய்த் தோன்றி இடிச்சிரிப்பு சிரித்தாள் சுரஸை. புதர் போன்ற விரிசடை, பாறை போன்ற நெற்றி, ஒரு மரத்தின் தண்டு பாகம் போன்ற நாசி, வெள்ளைக் குளத்தில் மிதக்கும் கறுப்புத் தட்டு போன்ற ராட்சஸ விழிகள், இரண்டு அணைக்கட்டுகள் அடுத்தடுத்து கட்டப்பட்டதுபோன்ற உதடுகள், அதன் இரு ஓரங்களிலும் யானைத் தந்தம்போல வளைந்த கோரைப் பற்கள்.

இப்படி ஒரு கோர உருவமான சுரஸையை அனுமன் எதிர்பார்க்கவில்லை. ராம கார்யம் என்பதொன்றும் சாமான்ய பணியில்லை. அது ஒரு தெய்வத் திட்டம்.. ராவணனை அழிக்க காலத்தோடு சேர்ந்து பிரம்மன் முதலான தேவர்கள் மிகுந்த கவனத்துடன் நேற்று செய்த இன்றும் செய்து நாளையும் செய்யவிருக்கிற ஒரு அறப்பணி. அரும்பணியும் கூட! பரமனையே தன் வீணை இசையால் கட்டிப் போட்டுவிட்ட ராவணன் மும்மூர்த்திகளாலும் அழிக்கப்பட முடியாத வரம்

பெற்றவன். மாயையையே ஆட்டுவிக்கும் ராவணனின் இலங்கை ஓர் அரக்கர் சாம்ராஜ்ய பூமி.

அது ஒன்றும் அன்று அனுமன் மரங்களைப் பெயர்த்தெறிந்து விளையாடி முனிவர்களின் சாபத்துக்கு இலக்கான வனாந்திரமோ அயோத்தி, மிதிலை போல தரும மிகு பட்டணமோ இல்லை. எனவே, அங்கே செல்லும் அனுமன், சுக்ரீவன் சபையில் அவனுக்கு உகந்த மந்திரியாக திகழ்ந்த அந்த மதியூகத்துடன்தான் செல்கிறானா.. இல்லை தனது சர்வசக்திகளை உணர்ந்த நிலையில் மகா கர்வியாகி புத்திக்கூர்மை இழந்து விட்டானா என்றெல்லாம் சில தேவர்களும், ஏன் பிரம்மனுமே நினைக்கப் போய்தான் அவர்கள் சுரஸையை பயன்படுத்தி அனுமனை சோதிக்க விரும்பினர். அந்த சோதனைதான் இப்பொழுது அனுமனிடம் நடக்க இருக்கிறது.

'ராமபாணம் இடையில் விழாது, அதேபோல நானும் இடைத் தங்கேன்' என்று மைனாக பர்வதத்திடம் கூறிய அனுமன், இந்த சுரஸையை எப்படிச் சமாளிக்கப் போகிறான்?

ஆவலுடன் பார்க்கிறார்கள் தேவர்கள். சுரஸையின் கோர உருவத்தைப் பார்த்து அனுமன் அயரவில்லை. சுரஸை இடிச் சிரிப்பு சிரித்தாள். அதன் எதிரொலியாக கடல் தளும்பி உருவான நீரலைகள் அவன் முகத்தில் பட்டுத் தெறித்தது.

அனுமனுக்குள்ளும் யார் இவள் என்னும் கேள்வி. ஒருவேளை, அந்த லங்காதிபதி நான் வருவது தெரிந்து ஏவிவிட்ட அரக்க ஏவுகணையோ என்றெல்லாம் அனுமன் எண்ணினான். அவளும் "ஏ வானரனே.. நீ எப்பொழுது வருவாய் என்றுதான் காத்திருந்தேன். எனது அகோரப் பசிக்கு நீதான் இன்று உணவு" என்றவள் விழுங்கத் தயாராவதுபோல வாயைத் திறந்தாள்.

அனுமன் ஒன்றும் அவள் பேச்சால் அயர்ந்து விடவில்லை.

"அரக்கியே.. வழிவிடு! நான் ராம கார்யமாகப் போய் கொண்டிருக்கிறேன். உனது பசிக்கு இப்பொழுது நான் ஆகாரமாக முடியாது. வரும்போது வேண்டுமானால் உனக்கு உணவாகிறேன். ராமகார்யத்தில் ஈடுபட்டிருக்கும் எனக்கு தடையாக இராதே. அது தர்மத்திற்குத் தடையாக இருப்பது

போன்றது..”

அனுமனின் விளக்கத்தை சுரஸை காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

“அதெல்லாம் முடியாது.. உன்னை விழுங்கி ஏப்பம் விடுகிறேன் பார்” என்று பல யோஜனை நீள, அகலத்திற்கு வாயைத் திறந்தாள். அனுமனும் அவள் விழுங்க இயலாத அளவிற்கு தனது உருவத்தை பெரிதாக்கிக் கொண்டே போனான்.

பிறகு, சட்டென்று இயல்பான தன் உருவிற்கு மாறிய அனுமன், அவளது பாதாளம் போன்ற வாயினுள் புகுந்து, மூச்சுக்காற்று வழியாக வெளியேயும் வந்துவிட.. சுரஸை உடனேயே பழைய நிலையை அடைந்து, “பலே வாயுகுமாரா.. என் விருப்பத்தை நிறைவேற்றுவது போல உன்னையும் காத்துக்கொண்டாய். உனது சமயோஜிதத்தை அறியவே நான் இவ்வாறு நடந்துகொண்டேன்.

நான் நச்சரவங்களுக்கெல்லாம் தாய். இங்கே உன் முன்னால் நான் இவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது தேவர்களின் விருப்பம்.

என்னை வெற்றிகொண்ட நீ எங்கும் வெற்றியே பெறுவாய். உனக்கு என் ஆசிகள். இன்று என்னை வெற்றிகொண்ட உன்னை அரவங்கள் என்றும் தீண்டாது. அதுமட்டுமல்ல உனக்கு அரவக்கூட்டமே கட்டுப்படும்” என்றாள் சுரஸை.

அது என்னவோ தெரியவில்லை. அனுமனின் ராசியே முதலில் மோதல் பிறகு வரங்களாக வாங்கிக்கொள்ளுதல் என்றாகிவிட்டது. இங்கும் அது தொடர, அனுமன் சுரஸையைப் பணிந்துவிட்டு வான வீதியில் மீண்டும் வேகமெடுத்தான். இனி தடையேதும் இருக்காது என்பது அவன் எண்ணமாக இருக்கலாம். ஆனால், பறந்து கொண்டேயிருந்த அனுமனின் நிழலைப் பிடித்தாள் ஒருத்தி.. சிம்ஹிகை அவள் பெயர்.

இலங்கையை சுற்றியுள்ள கடல் பரப்பில் தன் தளத்தை அமைத்துக்கொண்டு இலங்கையைக் காவல் காக்கும் அரக்கி அவள். மகா பெரிய ராவண விசுவாசி.

இவளைத் தாண்டி ஒரு ஈ எறும்புகூட இலங்கைக்குள் புகமுடியாது. இவளைப் போல பல அரக்கியர்கள் இருக்கும் பலம்தான் ராவணனை செருக்கோடு வைத்திருந்தது.

சிம்ஹிகை உருவத்தால் மட்டும் கோரமான அரக்கியல்ல..

**இ**ந்தத் தியான ஸ்லோகம் ஆதிசங்கர பகவத் பாதர் அருளியது. ஆஞ்சநேயர் புஜங்க ஸ்தோத்ரத்தில் பதினாறு கண்ணிகளாக உள்ளதில் எட்டாம் கண்ணியான இது, தியானிப்பவர்களுக்கு மிக விசேஷ பலனைத் தரவல்லது.

***'மஹாக்ராஹ பீடாம், மஹோத்பாத பீடாம்***
***மஹாரோக பீடாம், மஹாதிவ்ரபீடாம்***
***ஹரந்த்யாஸ்தே பாத பத்மாநு ரக்தா***
***நமஸ்தே கவிச் ரேஷ்ட ராமப்ரியாய..'***



கைப்பற்ற முடியாது என்று கருதப்படும் ஒருவரின் நிழலையே கைப்பற்றி அந்த நிழலுக்கு உரிய வரையே தன்வசம் கவர்ந்து இழுக்கும் மாயாவி அவள்! அந்த மாயம்தான் சமுத்திரத் தில் பல யோஜனை அளவில் விழுந்த அனுமன் நிழலையும் கைப்பற்ற முயன்றது.

உடனேயே எதிரொலி வானத்தில்.. அனுமனின் பறக்கும் வேகம் ஒரு கட்டுக்கு வர, அனுமன் அப்படியே வானில் இருந்து சமுத்திரத்தில் விழத் தொடங்கினான். நல்லவேளையாக சுதாரித்துக்கொண்டவன் சிம்ஹிகையை உற்றுப்பார்த்தான். அவளுக்கும் சுரஸையைப் போலவே பல யோஜனை நீள, அகலத்தில் வாய். அப்பொழுதுதான் சுரஸை எதிர்ப்பட்டு தன்னை சோதித்ததும் ஒரு பயிற்சி என்பது அனுமனுக்கு புரிந்தது. அந்த பயிற்சி யில் வென்றதுபோலவே இதோ இங்கேயும் இவளிடம் நடப்போம் என்று வெகுவேகமாக முடிவிற்கு வந்த அனுமன் நொடியில் தன்னை ஒரு கட்டை விரல் அளவிற்கு தும்பிப் பூச்சியாய், பருமனான ஒரு மலைத் தேனி கணக்காக மாறி, திறந்து கிடந்த அவளது வாய்க்குள் நுழைந்தவன் அப்படியே அசுர வேகத்துடன் உள்ளே தொண்டை வழியாக வயிறு வரை சென்று பிறகு அப்படியே சகலத்தையும் பிளந்து கொண்டு வெளியில் வந்தான்.

சிம்ஹிகையும் அலறிக்கொண்டு உயிர்விட்டாள். அனுமனிடமும் 'அப்பாடா' என்று ஒரு பெருமூச்சு. அப்படியே நிற்காமல் தொடர்ந்து பறந்தவன் கண் எதிரே இலங்கையும் தெரியத் தொடங்கியது. இலங்கையின் கடலோர விளிம்பில் 'லம்பம்' என்கிற பர்வதம் 'வா அனுமா.. வா' என்று அவனை வரவேற்கிற மாதிரி பார்த்தது. பறந்து வந்த வேகத்திலேயே அதன்மேல் போய் நின்ற அனுமன் நிமிர்ந்தான்.

மகேந்திரகிரியில் விஸ்வரூபெடுத்துத் தொடங்கிய அனுமனின் வான்மிசைப் பயணம் இலங்கையின் கடற்பரப்பின் ஓரமாக உள்ள லம்பம் மலையில் வந்து முடிவடைகிறது.

சிறகுள்ள பறவைகள் வானில் பறப்பது இயற்கை. ஆனால், ஒரு வானர மனிதன் சிறகுகள் இன்றி பறந்த விந்தையை வானவீதியில் உள்ள அத்துணை தேவர்களும் பார்த்து மலைத்துப் போயிருந்தனர். அடுத்தடுத்து சோதனைகள்... அதை அனுமன் வெற்றி கொள்ள வேண்டும் என்னும் ஆதங்கம் வேறு! ஒரு நாடகம் நடிக்கப்படும்போது, அதை ஆக்கியவன் திரை மறைவில் இருந்துகொண்டு பிழை ஏதுமின்றி காட்சிகள் நடந்து முடியவேண்டுமே என்று கவலைப்படுவது போலத்தான்

# இசை வித்தகன்!



இருந்தது தேவர்களின் கவலையும்!

அதற்கு ஒரு வலுவான காரணமும் உண்டு. ராவணேஸ்வரனின் ஆளுமைத் தணலில் சகல லோகங்களுமே அப்போது கருகிக் கொண்டிருந்தன. அருமையான சிவபக்தன்.. அற்புதமான இசை வித்தகன்! இருந்தும், பல கொடிய செயல்களின் மொத்த வடிவமாக ராவணன் திகழ்ந்து கொண்டிருந்தான் என்பதுதான் நிஜம். அதில் பிரதானமானது அவனது காமம். அடுத்து, தனக்கு நிகர் எவரும் இல்லை என்கிற கர்வம். இதனால் அவனிடம் தேவர்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல...

மனித வாழ்வை நிர்வகிக்கும் ஒன்பது கோள்களும் கூட அவனது சிம்மாசனத்தின்கீழ் ஒன்பது படிகளாகி விட்டன. கோள்களின் வயிற்றில் மிதித்துக் கொண்டு ஏறி, சிம்மானத்தில்



அமர்ந்தால்தான், ராவணனுக்கு அமர்ந்த மாதிரியே இருக்கும். அடுத்து தேவர்களின் தலைவனான இந்திரனின் அமராவதிப் பட்டணத்தை விஞ்சும் வண்ணம் தனது இலங்கை மாநகரத்தை அவன் வடிவமைத்துக் கொண்ட விதம், அதையும் மயனை வைத்தே செய்துகொண்டதுதான் விசேஷம்.

இதனால் இலங்கையின் எழிலை விவரிப்பது என்பது மகாகவிகளுக்கேகூட சவாலான விஷயம்தான்.

லம்பம் மலைமேல் நின்றபடி நோக்கும் மாருதியின் கண்களிலும் எழில்மிகு இலங்கை வியப்போடு விரியத்தான் செய்தது. அந்த மாநகரில் விருட்சங்களுக்கும் பஞ்சமே இல்லை. மலை வனங்களில்தான் எல்லாவிதமான விருட்சங்களையும் பார்க்கமுடியும். சில விருட்சங்களுக்கு பருவச்சூழலும் மிக முக்கியமானது. மலையில் நிலவும் பருவம் தரையில் நிலவாது. ஆனால், இலங்கையிலோ பஞ்சபூதங்களும் ராவணனுக்குக் கட்டுப்பட்டு கால் அமுக்கிவிடும் ஏவலர்களாக சேவகம் செய்து கொண்டிருப்பதுபோல் தோன்றியது. அதனால்





"நான் இந்த இலங்கைக்கு காவல் தேவதை. ஆயினும் பிரம்ம உபாசனை உடையவள் நான். எனது அதிபன் ராவணன்போல நானும் தேவர்களிடமிருந்து பல வரங்கள் பெற விரும்பினேன். எனது அதிபன் ஈஸ்வர பக்தன். அவரை இறுகப்பற்றிக்கொண்டான். நானோ ஒருமுகத்திற்கு மூன்று முகம் உடைய பிரம்மனை பற்றிக்கொண்டேன். தேவர்கள்தான் எங்களுக்கு எதிரி. மூவர் அல்ல. அதிலும் பிரம்மன் என் ஆராதனைக்குரிய மூர்த்தி. ஒருநாள் அவனை துதிக்கையில் பிரம்மன் கூறியது இன்று பலித்து விட்டது."

எங்குபார்த்தாலும் விருட்சங்கள்! அதனால் எங்கும் குளிர் நிழல்!

பகலில் சூரிய ஒளியில் தகதகக்கும் விமானங்களுடன் கூடிய மாட மாளிகைகள், இரவானால் சந்திர பிம்பத்தால் தாக்குண்டு மென்மையாக ஜொலித்தன. மாளிகை முகப்புக்களிலும் எங்கு பார்த்தாலும் சொர்ணப் பிரகாசம். உலோகங்களின் அரசன் என்று சொர்ணத்தைச் சொல்வார்கள். அது பஞ்சபூதங்களால் அழிக்க முடியாதது. அபூர்வமானது.

**மேற்கில் ஆதித்தனும் அமிழ்ந்து, சந்திரன் பிரதிபிம்பமாய்த் தோன்றிட, இரவுக்காலமும் ஆரம்பமாகிவிட்டது. இதில் எங்கே சென்று அன்னை மைதிலியை தேடுவது என்று முதலில் சற்று ஐயமுற்றாலும், இந்த நகரின் ஒரு இண்டு இடுக்கைக்கூட விட்டு வைக்கக் கூடாது என்கிற ஒரு முடிவுக்கு வந்து முதற்காரியமாக ராஜவீதியில் காலை வைத்தான்.**

நல்லதொரு மனிதரை தங்கமான மனிதர் என்று கூறுவதுகூட இதையொட்டித்தான். எதனாலும் பாதிப்படையாமல் பண்பு கெடாமல் இருப்பது என்பது மாய உலகில் அசாத்தியமான ஒரு விஷயம்.

அதற்கு சாட்சி சொல்வது போன்றதுதான் விசுவாமித்திரரையே மேனகை மயக்கிய சம்பவம். விசுவாமித்திரர் தன் தவ வலிமையால் திரிசங்கு என்கிற பெயரில் புதிதாக ஒரு லோகத்தையே நிர்மாணித்தவர். வசிஷ்டரின் வாயாலேயே பிரம்மரிஷி என்று புகழப்பட்டவர். ஆனாலும் மேனகை என்னும் மாயை அவரை உருக்கி குலைத்துவிட்டது. மாயைக்கு அப்படி ஒரு சக்தி. அது கவர்ந்து இழுக்கக் கூடியது. இலங்கையும் அனுமனைக் கவர்ந்துதான் இழுத்தது.

ஆனாலும் விசுவாமித்திரன்போல ஒரு கிறக்கத்தை அனுமன் கொள்ளவில்லை என்பது அழுத்திச் சொல்லவேண்டிய

ஒன்று.

ஆங்காங்கே மயங்கினாலும் உடனுக்குடன் அவன் விழித்துக் கொண்டதுதான் ஆச்சரியம்.

“நான் வந்திருப்பது அன்னை மைதிலியைத் தேடி.. இலங்கை அழகில் மயங்க அல்ல’ என்று தனக்குள் சொல்லிக்கொண்டே அந்த சூழலுக்கேற்ற சராசரி உருவத்தை ஏற்படுத்திக்கொண்டு, லங்கா நகருக்குள் நுழைய முயன்றான், அதுவும் முதல்காலாக இடது காலை வைத்து! சத்ருக்களின் வீடு, மயானம், போகக்கூடாத இடம் இங்கெல்லாம்தான் இடது முதலிடம் பெறும்.

மகாபாரத்தில், மகத மன்னன் ஜராசந்தனைச் சந்திக்க பீமனுடன் கிளம்பியபோது கிருஷ்ணன் எடுத்துவைத்த முதல் அடியும் இடது அடிதான்.

அனுமனின் சாஸ்திர ஞானம்தான் அவனது இடப்பாகத்தை தூக்கி வைக்கச் சொன்னது. ஆனால், நுழை முகத்திலேயே ஆகாய மேகங்களை உரசுகிற அளவுக்கு மதில்சுவர்!

அழகிய இலங்கைக்கு காவலா இந்த மதில்சுவர்? அசுரன் ராவணனுக்கு கூட அச்சமா? எவர் வந்து விடுவர் என்று இத்தனை உயரத்திற்கு மதில் எழுப்பியுள்ளான்? ஒருவேளை, அனைத்திலும் நான் வேறுபட்டவன் என்று காட்டுவதற்காக இருக்குமோ.. இல்லை, இலங்கை நகரையே அவன் தனது அரண்மனையாக கருதி இந்த மதிலை எழுப்பியிருக்கிறானா? சில அசுரர்கள் ஊர்வேறு அரண்மனைவேறு என்று பிரிந்துகிடப்பார்கள். ராவணனோ மொத்த இலங்கையையே தான் உவந்து வாழ்கிற பகுதியாக கருதியிருக்க வேண்டும். அப்படி கருதக் கூடியவன்தான் அவனும். இல்லாவிட்டால் பஞ்சணையில் உறங்கும்போது வருணனைக் கூப்பிட்டு மெல்லிய சாரல் மழை பெய்யச் சொல்வானா? அக்னியை அழைத்து இதமாகக் குளிர்காய்வானா?

மொத்த தேவர்களையும் அடிமைப்படுத்தி, சதா தன் புகழையே பேசும்படி செய்து, அதைக் காது குளிரக்கேட்டு மகிழும் குணத்தை உடைய ராவணன் தனது ராஜாங்கமானது நிகரில்லது என்று ஒவ்வொருவருக்கும் உணர்த்த எதை வேண்டுமானாலும் செய்வான்தான்!

அனுமன் மதிலைப்பார்த்து இப்படியெல்லாம்

எண்ணிக்கொண்டே அதைத் தாண்ட முனைந்தபோது எங்கிருந்தோ ஒரு எக்காளச் சிரிப்பு சப்தம் கேட்டது. அசுரச் சிரிப்பு. அதிலும் பெண்ணொருத்தியின் சிரிப்பு.

பெண்ணுக்கும் இடிச்சிரிப்புக்கும் சம்பந்தமே கிடையாது. அப்படி ஒரு சம்பந்தம் இருந்தால் அவள் பெண்ணும் கிடையாது.

அனுமனும் அந்த சிரிப்பைப்பற்றி இப்படித்தான் நினைத்தான். சிரிப்பு வந்த திசையையும் நோக்கினான். அங்கே, மாமிச மலை போல ஒரு ராட்சஸ உருவம்!



மரத்திலிருந்து தொங்கும் விழுதுகள்போல சடைபிடித்த கருப்பு முடிகள். கரிய பெரிய நெற்றி. அதன்கீழே தீக்கங்கு போன்ற முட்டைவிழிகள்! பனைமரம் ஒன்று சாய்ந்து கிடப்பதுபோல மூக்கு, அதற்கும் கீழே அகழிச் சுவற்றை ஞாபகப்படுத்தும் பல்வரிசையோடு கூடிய கணவாய் போன்ற வாய்.

கழுத்தில் பலநூறு மனித கபாலங்களை கோத்து அணிந்த மாலையும், அது தவழும் குறுமலை போன்ற மார்பகங்களுமாக அரக்கி ஒருத்தி, இமைக்கக்கூட மறந்து அனுமனையே வெறித்துப் பார்த்தபடி இருந்தாள். அனுமனுக்கோ அவள் உருவைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. ஒரு பெண்ணுக்கு இப்படி ஒரு சொரூபமா.. ஹூம்! என்ன பாவம் செய்தாளோ என்றுதான் நினைக்கத் தோன்றியது. அவளிடமோ ஆச்சரியப் பிரவாகம். தன் உருவைக் கண்டு நடுங்காமல் ஒரு வானர மனிதன் நிற்கிறானே என்கிற திகைப்பு!

“ஏ வானரனே.. யார் நீ? எங்கு வந்தாய்?” என்று அந்த ஆச்சரியம் கலையாதபடி வினா எழுப்பினாள் இலங்கையின் காவல் தெய்வமாகவும், ராவணனின் ஏவல் தேவதையாகவும் விளங்கிடும் லங்கிணி என்கிற அந்த அரக்கி.

**இ**ந்தத் தியான ஸ்லோகம் அனுமனே கூறியது.

சீதையைத் தேடி அலையும் முயற்சியில் அலுத்துக் களைத்த நிலையில், அனுமனின் புத்திக்குள் சட்டென்று ஒரு சூரியன் உதிக்கிறான். 'யாரை நீ தேடிக் கொண்டிருக்கிறாயோ அவள் சக்தி அம்சமுள்ள வள். நிலத்தை கர்ப்ப வயிறாகக் கொண்டு ஒரு பெட்டியை கருப்பையாகக் கொண்டு கலப்பையால் முட்டப்பெற்று பின் வெளிப்பட்டவள். அவளை ஒருவன் ஒளிக்கத்தான் முடியுமா? இருப்பினும் ஒளிக்கப்பட்டிருக்கிறாள் என்றால் அதற்கு அவளே ஒத்துழைத்திருக்க வேண்டும். இது ஒரு தேவ நாடககாட்சி. அவள் அருளால் அன்றி அவளைக் காண இயலாது. அதற்கான சக்தியை அவளிடமே தியானித்துப் பெற்றுக்கொள். பிறகென்ன, வழி தானாக தெரியும். ஒளிந்த சக்தியும் அறிந்த சக்தியாவாள்' – என்கிற எண்ணம் அனுமனுக்குள் எழ, அடுத்த வினாடி அவன் உள்ளத்தில் துளிர்க்கிறது இந்த ஸ்லோகம்.

'ஜயப்ரதான ஸ்லோகம்' என்று இதை குறிப்பிடு பவர்கள்.. பலமுறை முயன்றும் ஒரு விஷயம் வெற்றி அடையாத போது மனதில் அலுப்பும் சலிப்பும் ஏற்படுகிறது. அப்போது இந்த ஸ்லோகத்தை திரும்பத் திரும்ப கூறினால், ஏதோ ஒருவகையில் தோல்வி அளித்துவந்த முயற்சியானது வெற்றிக்கு மாறுவதைக் காணலாம்.



***நமோஸ்து ராமாய ஸலஷ்மணாய***
***தேவ்யை சதஸ்யை ஜநகாத்மஜாயை***
***நமோஸ்து ருத்ரேந்த்ர யமா நிலேப்யோ***
***நமோஸ்து சந்த்ரார்க்க – மருத் கணேப்ய!***

"நான்.. நான்.. லங்கா நகரத்து எழிலைப் பருக வந்த ஒரு நாடோடி" என்றான் அனுமன். "குரங்கு நீ.. உனக்குள் எழில் ரசனையா? ஓடிப்போய்விடு.." என்றாள் அவளும் பதிலுக்கு.

"இந்த இலங்கையை நான் சுற்றிப் பார்ப்பதால் உனக்கு என்ன ஆகிவிடப் போகிறது. பெண்ணாக இருந்தும் துளியும் கருணையே இல்லாமல் பேசுகிறாயே தாயே.."

"குரங்கே.. என்ன இது? ஆரறிவுடைய பேரறிவாளர் போலெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறாய். நான் லங்கிணி. என்

கடப்பாடு இங்கே காவல் இருப்பது. என்னை மீறிக்கொண்டு ஒரு குருவிகூட இலங்கைக்குள் புக முடியாது. அதிலும் சமீபகாலமாக காவலில் மிக கவனமாக இருக்கும்படி எனது அதிபன் ராவணன் உத்தர விட்டிருக்கிறான். திரும்பவும் சொல்கிறேன், ஓடிப்போ..”

லங்கிணி இம்முறை இதழ்களிடையே தீப்பொறி பறக்க கர்ஜித்தாள். அனுமனோ துளியும் அயரவில்லை.

ராமகார்யத்தை ஒரு ராவண கார்யமா தடுத்து நிறுத்துவது?

“இயலாது லங்கிணியே.. நான் உள் நுழைந்தே தீருவேன்” என்று அனுமன் சொன்ன அடுத்த நொடி, அவன் கன்னத்தில் லங்கிணி யின் வலதுகரம் ஓர் அறைவிட்டுத் திரும்பியது.

அது இந்திரனின் வஜ்ராயுதம் பட்ட கன்னம். வஜ்ராயுதத்தாலேயே ஒன்றும் ஆகிவிடவில்லை. லங்கிணியின் கைதானா வலி ஏற்படுத்தப் போகிறது?

அடுத்த நொடி, அனுமன் உள்ளம் கனலாகிவிட்டது. தாக்கப்பட்டாலன்றி பந்துகள் மேல் எழும்பாது. சிலருக்கு வலிதான் வலிமையை தரவல்லது. அனுமனும் அன்பாய், பண்பாய்த்தான் பேசினான். ஆனால், அது கன்னத்தில் அறையாக மாறிவிட்டது. இனியும் பொறுத்தால் இந்த லங்கிணிக்கு அது பெருமை சேர்த்துவிடும் என்று ஆவேசித்த அனுமன், சட்டென்று அவளுக்கும் மிஞ்சிய உருவுக்கு மாறி தனது உருக்குக் கைகளையும் விசையோடு அசைத்து, அதில் இடது கைவிரல்களை மடக்கிக் குவித்தவனாக லங்கிணியின் மைய மார்பில் ஒரு குத்துவிட்டான். ஒரே ஒரு குத்து தான்! கூடவே, ஒரு ஆக்ரோஷ சப்தம்! இதயப்பகுதிக்குள் ஒரு பிரளயம் ஏற்பட்டு உடம்பு ஒட்டுமொத்தமும் நொறுங்கி விட்டதுபோல, அப்படியே தரையில் விழுந்தாள் லங்கிணி.

இதழ்க்கடையோரம் ஓர் அருவிப்பெருக்குபோல குருதியும் பொங்கி வழிய, தனது தடித்த கைகளைக் கூப்பி அனுமனை ஆசீர்வதிக்கப் பார்த்தாள். பின் நிதானமாக, “பிரம்மதேவன் கூற்று மெய்யாகிவிட்டது” என்றாள். அவள் அப்படிக் கூறியது அனுமனைக் கூர்மையாக்கியது.

“லங்கிணி.. என்ன கூறுகிறாய் நீ?”

“நான் இந்த இலங்கைக்கு காவல் தேவதை. ஆயினும் பிரம்ம உபாசனை உடையவள் நான். எனது அதிபன் ராவணன்போல நானும் தேவர்களிடமிருந்து பல வரங்கள் பெற விரும்பினேன். எனது அதிபன் ஈஸ்வர பக்தன். அவரை இறுகப்பற்றிக்கொண்டான். நானோ ஒருமுகத்திற்கு மூன்று முகம் உடைய பிரம்மனை பற்றிக்கொண்டேன். தேவர்கள்தான் எங்களுக்கு எதிரி. மூவர் அல்ல. அதிலும் பிரம்மன் என் ஆராதனைக்குரிய மூர்த்தி. ஒருநாள் அவனை துதிக்கையில் பிரம்மன் கூறியது இன்று பலித்து விட்டது.

‘இந்த இலங்கை ஒரு நெடியுடை நகரம் அல்ல.. இது எரி தழலில் கருகப்போகிறது. அதன் முன்னோட்டமாகவே ராவணனை காமக்கனல் பற்றிக்கொண்டுள்ளது. வானர வீரன் ஒருவன் வருவான். அவனால் நீ தாக்கப்படும் நாளிலிருந்து இலங்கையின் அழிவு ஆரம்பமாகும். அதாவது இங்கு இப்பொழுது நிலவியபடி இருக்கும் அதர்மங்களுக்கு அழிவு ஆரம்பமாகும். அன்றே நீ என்னை அடைந்திடுவாய்’ என்ற அவன் கூற்று இன்று மெய்யாகிவிட்டது. உனக்கு இனி வெற்றிதான்..” என்றாள் லங்கிணி.

அனுமனுக்கு மகிழ்ச்சி. நுழைமுகத்திலேயே ஒரு அருள்முகம் கிடைத்த புதிய தெம்பில் அப்படியே ஓங்கி உயர்ந்த அந்த மதிலை ஒரு நொடியில் தாண்டிக் குதித்தான்.

மேற்கில் ஆதித்தனும் அமிழ்ந்து, சந்திரன் பிரதிபிம்பமாய்த் தோன்றிட, இரவுக்காலமும் ஆரம்பமாகிவிட்டது. இதில் எங்கே சென்று அன்னை மைதிலியை தேடுவது என்று முதலில் சற்று ஐயமுற்றாலும், இந்த நகரின் ஒரு இண்டு இடுக்கைக்கூட விட்டு வைக்கக் கூடாது என்கிற ஒரு முடிவுக்கு வந்து முதற்காரியமாக ராஜவீதியில் காலை வைத்தான்.

இங்கேயும் இடக்கால் தான் முதலில். வாழ்வளிப்பது வலது.. இடர்ப்படப்போவது இடது. இந்த எதிரிப் பட்டணமும் இடர்ப்படத்தான் போகிறது என்பதுபோல முதலில் இடது பாதம்தான்.

இரவுக் காலம்! ராஜவீதியில் கால் பதித்திருந்தான் அனுமன். இதமான குளிர்காற்று, ஒரு கவரித் தென்றல் போல வீசிக் கொண்டிருந்தது.

இது இலங்கை. இங்கே நடந்து கொண்டி ருப்பது அசுரன் ராவணனின் ஆட்சி. 'அடேய் வாயு! என் மண்ணில் உன் வேகத்தைக் காட்டாதே. வாலைச் சுருட்டிக் கொண்டிரு' என்று அவன் உத்தரவிடக்கூடும் என அஞ்சி, வெகு நிதானமாக அந்தக் குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தாற்போல் தோன்றியது.

அதே சமயம், ராஜவீதியின் மாடமாளிகைகளில் ஓர் அசாதாரண அழகு! சற்று முயன்றால், நீந்தித் திரியும் மேகங்களை அப்படியே இழுத்துப் போட்டுப் புரட்டலாம்




என்னும் அளவுக்கு மாளிகைக் கோபுரங்களின் உயரம்!

உள்ளேயும் ஒளிவெள்ளம். எரிசுடர்கள் ஒவ்வொன்றும் தங்கமுலாம் பூசப்பட்டது போன்று தோன்றின. அங்கங்கே தொங்கியபடி இருக்கும் திரைச்சீலைகளின் பலவித வண்ணங்களும், அதன் அடிவரிசையில் பின்னிக் கட்டப்பட்டிருக்கும் சிறு சிறு மணிகளின் ஒலியும் கண்ணுக்கும் காதுக்கும் ஒருசேர ரம்யத்தைச் சேர்த்தன.

ஒவ்வொரு மாளிகையாகத் தாண்டித் தாண்டி நடக்கும்போதும் அங்கே பலப்பல காட்சிகள்!

ஒரு மாளிகையில் பெண்ணொருத்தி நாட்டியமாடிக் கொண்டிருக்க, சுற்றிலும் பலர் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்தனர். அவர்களின் கைகளில் சோம ரசமெனும் மதுக்கிண்ணம். 'உல்லாசித்து வாழ மட்டுமே இந்த வாழ்க்கை'



என்பது போலிருந்தது அவர்களது செய்கை. அந்தப் பெண்ணின் நாட்டியத்திலும் உயர்ந்த லாவண்யங்களில்லை. சரியான அசைவுகளில்லை. அடிமைப்பட்டுக் கிடப்பவர் பயந்துகொண்டே ஆடுவதுபோல்தான் இருந்தது.

ராஜவீதியிலும்கூட நடந்து செல்வோர்களிடம் ஒருவிதமான தள்ளாடலும் தும்சமும் இருந்தது. அடிக்கடி சில குதிரை ரதங்கள் கட்டுப்பாடில்லாத வேகத்தில் அனுமனைக் கடந்து போயின.

தொடர்நடையில் ஒரு மாளிகையில் அதிசயமாக வேத அத்யயனக் குரலொன்று கேட்டது. ஆச்சரியத்தால் விரிந்த விழிகளோடு அனுமன் எட்டிப் பார்த்தபோது, கன்னங்கரிய உருவில் அசுரன் ஒருவன், பண்டிதர் உடையில் மரக்கிடை மேல் வேதத்தை வைத்துப் பாராயணம் செய்யும் காட்சி ஆச்சர்யமளித்தது.



அவனது உச்சரிப்பில் ஏராளமான பிழைகள். இருப்பினும், 'வேதம் என்ன பெரிய வேதம்?! அதைக் கரைத்துக் குடித்துக் காட்டுவேன்' என்பது போன்ற

ஓர் ஆவேச முனைப்பைத்தான் அவனிடம் உணரமுடிந்தது.

அதற்குத் தோதாக, வயதான ஒருவர் அந்த அரக்கன் அருகே வந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு, "பலே... இப்படித்தான் இதைப் பாராயணம் செய்யவேண்டும். இது தங்களுக்கேயுரியது என்பது தேவர்கள் கருத்து. இதைத் தங்களாலன்றி யாராலும் கற்கமுடியாது என்பதும் அவர்களின் மமதை. அதை உடைத்தெறிய வேண்டும். உனக்குச் சோர்வு தட்டும்போதெல்லாம் லங்காதிபதி ராவணேஸ்வரரை நினைத்துக்கொள்" என்று கூறிவிட்டுச் செல்வதையும் கேட்டபோது அனுமனுக்கு வியப்பான வியப்பு.

'வேத ஞானம் என்பது அனுக்ரஹம் சார்ந்த ஒன்றல்லவா? அதை வெறும் சப்தமாகக் கருதி, தனக்குள் அடைத்துக்கொள்ள எண்ணுகிறானே இந்த அறிவிலி' என்ற எண்ணத்தோடு அனுமனின் நடை தொடர்ந்தது.

இடையிடையே தன்னை யாரும் பார்க்கிறார்களா, தனக்கு இடையூறு நேர்ந்துவிடுமோ என்கிற அச்சமும் அதன் எதிரொலியாக எச்சரிக்கை உணர்வும் அனுமனைத் திரும்பித் திரும்பிப் பார்க்க வைத்தன.

தனக்கு வெகு ஸ்ரேஷ்டமான 'கதை'யை அவ்வப்போது தோளில் தாங்கி, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை என்று அனுமன் லங்கா நகரின் அந்த ராஜவீதிக்குள் திரிந்த பாங்கு, அழகிய கவிதை!

ஆயுதங்களில் 'கதை' மற்ற ஆயுதங்களிலிருந்து மிகவும் மாறுபட்டது. பரமனின் சூலம், குத்திக் கொல்வது; கூர்முனை உடையது! மாதவனின் ஸ்ரீசக்கரம், கூர்முனையைத் தொடர்ச்சியாகக் கொண்டு, வட்ட வடிவில் திகழ்வது. சுழன்று வந்து அது தாக்கினால், இடைப்பட்டது எதுவாயினும் இரண்டுபட்டே தீரவேண்டும்! வாள்கூட ஒருபுறம்தான் கூரியது.

'கதை' மட்டுமே எதிரியைச் சிதைக்காமல் சாய்ப்பது. மோதித் தாக்கும். தடுத்தும் நிறுத்தும். மூர்ச்சிக்கச் செய்யும். ஆனால், இரண்டாக்கி ரத்தம் பெருக்கி உடம்பைச் சிதைக்காது.

யுத்தம் செய்ய விரும்புகிறவர்கள், 'கதை'யைக் கொண்டு அனல் பறக்க மோதிக்கொள்வதையே பெரிதும் விரும்புவார்கள்.

அதே சமயம், புஜபலமும் உடல்பலமும் தாங்கும் திறனும் அதிகம் வேண்டும்.

அனுமனுக்கும் 'கதை'யைச் சுழற்றிக்கொண்டு மோதிக் கொள்வது மிகப் பிடிக்கும். அப்படியொரு 'கதை'க்கு இலங்கையில் வேலை இருக்குமா, இருக்காதா... தெரியவில்லையே? என்று அனுமனின் நயனங்கள் நாற்புறத்தில் பார்த்துக்கொண்டே செல்கின்றன.

இரவுக்காலம் என்பது, ஒரு வகையில் எதிரிகள் கண்ணில் படாமல் தப்புவதற்குத் தோதாக இருந்தாலும், அதே இரவுக்காலம் அன்னை சீதையை மறைப்பதற்கும் காரணமாக இருப்பதை எண்ணிய அனுமனுக்குள் ஒரு விநாடி வருத்தமேற்பட்டது.

இத்தனை பெரிய நகரில் அன்னை சீதை எங்கே இருக்கிறாளோ, தெரியவில்லையே? ஓர் இண்டு இடுக்கு விடாமல் தேடிப் பார்த்து விடுவதே உத்தமம்' என்று நினைக்கும்போதே, ஏராளமான குதிரைகள் கட்டப்பட்ட லாயம் ஒன்று இடையிட்டது. அந்த லாயத்தை ஒட்டிய மாளிகை வீட்டிலோ, ஒரே கும்மாளம். இனபேதமின்றி ஆண்களும் பெண்களும் ஒருவர் மடியில் ஒருவர் கிடக்க, காமக் கோலாகலம்!

அந்தக் காட்சிகளைக் கண்ட மாத்திரத்தில், அத்யந்த பிரம்மச்சாரியான அனுமனின் உதடுகள் இரண்டும் 'ராம், ராம்'. என்றே உச்சரித்தன. அடுத்த நொடியே, தான் கண்ட ஒரு புலனின்பக் காட்சியால், தன் புலன்களிடையே நேரிட்ட தாக்கம் விலகி ஓடிவிட்டது போலத் தோன்றியது! 'ராம், ராம், ராம், ராம்...' என்கிற நாமக் குரலுடன் அனுமன் அங்கிருந்து வேகமாக விலகினான்.

அடுத்து அவன் கண்டது, அந்த இரவு வேளையிலும் இரண்டு மல்லர்கள் மலைகளைப் போல மோதிக்கொண்ட காட்சியைத்தான்!

சுற்றிலும் இலங்கை நகரவாசிகள் அதை ஒரு கேளிக்கையாகக் கருதிக் கைக்கொட்டியும் வாயாரச் சப்தமிட்டும் பிறர் தோள்களில் அடித்தும் ரசித்த விதத்தில் ஆனாலும்... அகோரம்.

'என்ன ரசனை இது? இலங்கையில் எங்கும் எவரிடமும்



**'இத்தனை பெரிய நகரில்
அன்னை சீதை எங்கே
இருக்கிறாளோ, தெரியவில்லையே?
ஓர் இண்டு இடுக்கு விடாமல் தேடிப்
பார்த்து விடுவதே உத்தமம்' என்று
நினைக்கும்போதே, ஏராளமான
குதிரைகள் கட்டப்பட்ட லாயம் ஒன்று
இடையிட்டது. அந்த லாயத்தை
ஒட்டிய மாளிகை வீட்டிலோ, ஒரே
கும்மாளம். இனபேதமின்றி
ஆண்களும் பெண்களும் ஒருவர்
மடியில் ஒருவர் கிடக்க, காமக்
கோலாகலம்!**

புலன் சார்ந்த முனைப்புதான் தெரிகிறது. சுகத்துக்கு இதமான இன்பங்களை இங்கிருப்பவர்களுக்கு அடையாளம் தெரியாதா?' –கேள்வியுடன் அங்கிருந்தும் விலகி நடந்தான். இப்படிக் கேளிக்கையும் கூத்துமாக உள்ள இடத்தில் எல்லாம் அன்னை சீதை இருக்க வாய்ப்பில்லை என்றே நம்பியது மனது.

அப்படியே பார்வை, இலங்கை நகரின் அழகைத் திரும்பத் திரும்ப ஊடுருவுகிறது. நிச்சயம் இது அரக்கர்களால் நிர்மாணிக்கப்பட்டதாக இருக்காது. அவர்களுக்கெல்லாம் மதுவில் மயங்கிக் கிடக்கவும் விழித்திருக்கும்போது மல்லாடவும்தான் தெரியும். ரசானுபாவங்களை அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. ஒருவேளை, ராவணேஸ்வரன் மகா ரசானுபாவியோ? தனது நகரம் எழிலின் சிகரம் என்று எவரும் கூறவேண்டும் என்பதுதான் அவன் எதிர்பார்ப்போ?

இந்திரனின் அமராவதிப் பட்டினம்தான் எழில்மிக்கது. மேகப்பொதியையே அங்கே மேலாடையாகப் போர்த்திக் கொள்ளலாம். வண்ண வண்ணக் கோலங்களுக்கு வடிவழகு தந்து, வானவீதியில் நிமிர்த்தி நிறுத்திவைத்தது போலக் கட்டடங்கள். தங்கத்தையே குழைத்து மெழுகியது போல சுவர்கள். அவற்றில் சூரிய ஒளியும் சந்திர ஒளியும் படும்போது, கண்ணிருப்பதே இந்த இதமான ஒளி அழகுகளைக் காணத்தான் என்பது போன்ற தோற்றங்கள்.

அனைத்துக்கும் மேலாக, அங்கங்கே வாவிகள். அதில் தாமரைகள். அதனூடே அலகுக் குழைப்போடு நீந்தும் அன்னங்கள் என்று அமராவதிப் பட்டினம்தான் எழில் நகரம்! காரணம், மயன் மற்றும் விஸ்வகர்மா!

ராவணனுக்கும் அமராவதிப் பட்டினம் பற்றித் தெரியும். அதேசமயம், 'அந்த இந்திரனின் பட்டினம், என் இலங்கைக்கு முன்னால் ஒரு சிறு கிராமமாகிவிட வேண்டும்' என்பதுதான் அவனது எதிர்பார்ப்பு.

தானே சகல லோகங்களிலும் மேலானவன்; ஒன்பது கோள்கள் முதல் முப்பத்து முக்கோடி தேவர்கள்வரை தனக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய அடிமைகள் என்பதும் அவன் எண்ணம். தேவர்களும் அடிமைகளாகத் தானே கிடந்தார்கள்! அதனாலேயே மயனை அழைத்து, இலங்கையை அவன் வடிவமைத்துக் கொண்டதாகக் கூறுவார்கள்.

ஆயினும், மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும், நாற்புற வீதிகளும்தான் அழகாயிருந்தன. அங்கே வாழும் மாந்தர்களின் செயல்பாடுகளில் இங்கிதமில்லை, இதமில்லை, பதமில்லை, பக்குவமில்லை.

ஓரிடத்தில் மட்டும் இனிய வீணாநாதம் அனுமன் காதை நனைத்தது. தேவமங்கையரைப் போல் தோன்றிய சில பெண்கள்தான் வீணை இசைத்தபடி இருந்தனர்.

லங்கேசனின் இனிய இசையாயுதம் அது. அவனது கொடிச் சின்னமும் அதுதான்! வீணை நரம்புகளில்தான் இசை எனும் நதியை மெல்லிசாகவும் வல்லிசாகவும் ஓடவிட்டுப் பார்க்க முடியும். அதிலும் தோடியை ஒரு வெள்ளம் போல் பாயவிட்டு, ஈசனின் உள்ளத்தையே கொள்ளை கொண்டவன் அந்த ராவணேஸ்வரன்.

அனுமனும் இசையின்பம் மிக்கவன். அபார ஞானஸ்தனும்கூட. ஏழு சுரங்களை எழுதிப் படித்தவர்களைவிடவும் வழுதிப் பிடித்தவன்.

இசை இன்பத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது, வாணியின் வீணையும், நாரதரின் மஹதியும்தான் ஞாபகத்தில் வரும். இரண்டுமே சப்தம் சார்ந்தவை. சப்த என்கிற ஏழு சுரங்களிலிருந்துதான் செவிப்புலனால் உணர முடிந்த அனைத்தும் பிறக்கிறது. அதனாலேயே சப்த சார்ந்த ஒலியை சப்தம் என்கிறோம். சப்தத்தின் சமன நிலைதான், நம் பேச்சாகிய மொழி. உச்ச நீச்சங்கள் இசையாகி விடுகின்றன. அதிலும் இரண்டு கூறுகள் ஸ்வரம்... அபஸ்வரம்! ஆரோஹணம்... அவரோஹணம்!

இவை அனைத்தும் கல்வி ஞானம் சார்ந்தவை. 'அதை நான் கைக்கொண்டுள்ளேன்' என்று கூறாமல் கூறத்தான் வாணி வீணாராணியாகக் காட்சி தருகிறாள்.

இவளது புத்ரன் எனப்படும் நாரதர், மஹதியோடு சர்வ உலகத்தையும் சுற்றி வருபவர். இவருக்குத் தேவர் உலகமும் அரக்கர் உலகமும் ஒன்றுதான்.

நாராயணனையும் சந்திப்பார். ராவணனையும் சந்திப்பார். எங்கும் இடையீடு இல்லாதவர். உயிர் வாழத் தேவையான காற்று, தேவருக்கும் அரக்கருக்கும் பொதுவாகிப் போனதுபோல, ஏனைய பஞ்சபூதங்களும் கூடப் பொதுவாகிப் போனதுபோல,

## இரட்டைப் பலன்தரும் ராம புஜங்கம்!

**இந்தத் தியான ஸ்லோகம் ஆதிசங்கரரின் ராம புஜங்கத்தில் வருவது...**

*'ஸதா ராம ராமமதி ராமாம்ருதம் தே*
*ஸதாராமம் ஆனந்த – நிஷ்யந்த – கந்தம்*
*பிபந்தம் நமந்தம் ஸீதந்தம் ஹஸந்தம்*
*ஹநுமந்தம் அந்தர் பஜேதம் நிதாந்தம்...'*

**– 'சதாசர்வ காலமும் ராமநாமத்தை ஜெபித்தபடி, அதே பித்தாக உள்ள அனுமனை நான் நமஸ்கரிக்கிறேன்' என்பதுதான் இதன் சுருக்கமான பொருள்.**

**இதில் சூட்சுமமாக வேறொரு பொருளும் உண்டு. அனுமனை நாம் நினைத்தாலே போதும். சதாசர்வ காலமும் அவன் ராம ரசத்தில் திளைத்தபடி இருப்பதால், நாமும் அந்த ரசத்தில் அவனோடு சேர்ந்து, அவனளவு ராமநாமத்தை ஜெபித்தவர் களாகவும் ராமனின அணுக்க தாசனாகவும் அந்த நொடியே ஆகிவிடுகிறோம்.**

**ராமன் திருவடியை அடைய, இதைவிட ஓர் எளிய வழி உலகில் இருக்க முடியுமா? அனுமனை நாம் தியானிப்பதால், நமக்குக் கிட்டும் இரட்டைப் பலனல்லவா இது!**

பொதுவான ஒரு தேவர் நாரதர்.

சூட்சுமமாகப் பார்த்தால், இசை வடிவானவர். இசைக்கு, அரக்கன் காது ஏது? தேவன் காது ஏது? அதுதான் கல்லையே கரைக்கக் கூடியதாயிற்றே!

இதனால் அவ்வப்போது தனது அதிசிறப்பு காரணமாகக் கர்வம் கொள்வது நாரதர் இயல்பு. அது பிறகுக்குப் பாடம் புகட்டும் கதையாகிப் போனதும் புராண வரலாறு.

இவருக்கும் அனுமனுக்கும் ஓர் இசைப் போட்டி நடந்ததுதான் விந்தை. 'இந்த வானர மனிதனுக்குள் இசை லயமா? சாத்தியமே இல்லை!' என்று அனுமனைப் போட்டிக்கு அழைத்து மோதியதில்தான் அனுமனின் இசைஞானம் உலகறிய

வந்தது.

ராமநாமத்தையே தோடியில் குழைத்து, விதவிதமாகப் பாடியதுடன் வீணையிலும் இசைத்த அனுமன், அதனால் எதிரில் இருந்த கற்பாறையையே உருக்கினான். அதன் மேல் வைக்கப்பட்ட நாரதரின் மஹதி வீணை, உருகிய பாறைக்குழம்பின் மேல் மிதக்கலாயிற்று.

பதிலுக்குப் பாடிய நாரதராலோ, ஒரு சிறு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை. நாரதருக்குள் இருந்த 'நான்' பெருந்தடையாகிவிட்டது. அனுமனுக்குள் இருந்த 'ராம்' பெரும் சக்தியாகிவிட்டது. இன்றும் ராகங்களில் 'அனும தோடி' ஒரு தனி ராகமாயிற்றே!

இந்த இசையறிவுக்கு எது காரணம் என்பதற்கு அனுமனின் ஞானவிலாசத்தில் ஆயிரம் காரணங்கள் சிக்குகின்றன. அந்த இசை ஞானத்தால், இலங்கையில் தன்னை மறந்து அவன் அங்கே நின்றதுதான் முக்கியம்.

ராம காரியமாக வந்தவனை, வீணை இசை சற்றே தடுத்து நிறுத்தினாலும், வானின் மிசை வந்த கார்மேகக் கூட்டமும் அவற்றின் மோதலால் உருவான இடியோசையும் நல்லவேளையாக அனுமனை பிரக்ஞைக்குப் பிடித்து இழுத்துவிட்டன.

'அடடே, இசை என்னைக் கட்டிவிட்டதே! விடிவதற்குள் அன்னையைக் கண்டறிந்தாக வேண்டுமே' என்கிற பரபரப்பும் துடிதுடிப்பும் அடுத்த நொடியே அனுமனை அங்கிருந்து தள்ளிக்கொண்டு சென்றது!

அதன்பின் அயராத வேட்டை... சளைக்காத வேட்டை! 'இங்கே கவனிக்கத் தவறிவிட்டேன்...' 'அங்கே பார்க்க மறந்துவிட்டேன்' என்பதற்கே இடம் இருக்கக்கூடாது என்பதுபோல, அந்த மாருதியின் பாதங்கள் லங்காபுரி மண்மிசைமேல் படாத இடமில்லை.

ஒருவழியாக, ஒளி மிகுந்த ஒரு மாளிகையை எட்டி, 'அங்கே யார் இருக்கிறார்கள்?' என்று நோக்கியபோது, உறங்குவதில் பெயர்பெற்ற கும்பகர்ணன் ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். அவனுக்குத் தேவகன்னிகையர் கவரி வீசி, சேவை செய்தபடி இருந்ததைக் கூர்ந்து கவனித்தான் அனுமன்.

கும்பகர்ணனின் மாளிகை எல்லா வகையிலும் பிரமாண்டமாக இருந்தது. பெரிய பெரிய சாளரங்கள், அகலமான இடைகழிகள், ஆலமரத் தண்டின் பருமனோடு தென்னை மர உயரத்துக்கு வெண்ணிறத் தூண்கள்... என அந்த மாளிகையின் தோற்றம் மிரள வைத்தது.

அதேசமயம், அங்கே உலவிய ஒரு பெரும் காற்று விசையும் அதன் சப்தமும் அனுமனுக்கு ஆச்சரியமூட்டின. இடைகழியில் நடக்கையில் அவனது வலிமையான உடலே உள்ளே இழுக்கப் பட்டது; பின் வெளியிலும் தள்ளப்பட்டது.

யாரோ ஒரு மாயாவிதான் தன்னை மாயமாக இப்படி இழுத்திருக்க வேண்டும் என்று அனுமன் எண்ணிக்

# நித்ர சிரஞ்சீவி!



கொண்டாலும் உண்மை அது இல்லை என்பது வெகு சீக்கிரத்திலேயே தெரிந்து போயிற்று. ஒரு பெரிய அறையில் ராட்சஸக் கட்டில் ஒன்றின் மேல் அரக்க உருவம் ஒன்று மல்லாக்கப் பார்த்தபடி படுத்திருந்தது. கால்களை அகட்டிக் கொண்டு கை இரண்டையும் கோர்த்து மார் மேல் போட்டபடி கிடந்த அந்த அரக்க உருவம் மூச்சு விடும்போதெல்லாம், குறட்டை ஒலியுடன் மூக்குக்கு கீழே உள்ள மீசை முடிகள் புயலில் அகப்பட்ட வயல் நாற்றுப் போல தலைசாய்ந்து ஆடின.

அந்த நொடியில் அந்த அறை முழுக்க காற்றானது நிரம்பி, அங்கே இருப்பதை எல்லாம் வெளியே தள்ளப் பார்த்தது. அடுத்த நொடியே மூச்சுக் காற்றை அந்த உருவம் உள்ளிழுக்கும்போது, தள்ளப்பட்ட வேகத்தில் இழுக்கப்படுவதும் நடந்தது.



‘அடேயப்பா! இந்த அசுரனின் தூக்கத்தில் விளையும் சாதாரண மூச்சுக் காற்றுக்கே இப்படி ஒரு சக்தியா? இவன் யாராக இருக்கும்? இவன்தான் ஒருவேளை ராவணனோ... ராவணன் என்றால் பத்துத் தலை இருக்க வேண்டுமே! ஒருவேளை இவன் லங்காதி பதியின் மெய்க்காப்பாளனோ? சீச்சீ... நிச்சயம் இருக்காது. எந்த மெய்க்காப்பாளன் இப்படி இடிமுழக்கம் போல குறட்டை விட்டுத் தூங்குவான்? இல்லை ராவணேஸ்வரன்தான் தூங்க விடுவானா? இவன் வேறு எவனோ’ என்று அங்கே கும்பகர்ணன் குறித்து குழப்பம் கொண்டான் அனுமன்.

தன்னையும் அறியாமல் தூக்கத்தையே வரமாகப் பெற்றவன் கும்பகர்ணன். அரக்கர்களுக்கென்று ஓர் இயல்பு உண்டு. ஐம்புலன்களை ஆவேசமாக அடக்கி தேவர்களையே விஞ்சும் வண்ணம் தவம் செய்து மும்மூர்த்திகளிடம் வரத்தைப் பெற்றுவிடுவார்கள். வரம் பெறும்வரையில்தான் அவர்களிடம் கட்டுப்பாடும் கண்ணியமும் இருக்கும். அதன்பிறகு பெற்ற வரத்தை எப்படியெல்லாம் துஷ்பிரயோகம் செய்யலாம்







கும்பகர்ணனுக்கோ பிரம்ம தரிசனத்தை துளியும் நம்ப முடியவில்லை. தனது தவத்துக்கு பிரம்மன் இவ்வளவு சீக்கிரம் மகிழ்ந்து தரிசனமளித்து விட்டானே என்கிற ஆனந்தமும் பரவசமும் கும்பகர்ணனைத் தொற்றிக் கொண்டதில், நாவிலும் தடுமாற்றம். இங்கேதான் கலைமகள் தன் விளையாட்டை நிகழ்த்தினாள்!

என்றுதான் பார்ப்பார்கள். புத்தி அங்கே கட்டவிழ்ந்துவிடும். அதுநாள் வரை அடங்கியதற்கும் சேர்த்துப் பாய ஆரம்பித்து விடுவார்கள். தேவர்களுக்கோ வரம் பெறும் வரையில்தான் அதன்மேல் ஈர்ப்பிருக்கும். பின்னர், 'இதற்குப் போயா இத்தனை தவமிருந்தோம்? மும்மூர்த்திகளின் அனுக்ரஹத்தை விடவா இதெல்லாம் பெரியது?' என்று சிந்திப்பார்கள். இப்படிச் சிந்திப்பதால்தான் அவர்கள் தேவர்கள்.

கும்பகர்ணனும் வரத்துக்கு ஆசைப்பட்டான். ராவணேஸ்வரனுக்கு இணையாக வரங்கள் பெற பிரம்மனை நோக்கி கடும் தவம் செய்தான். பிரம்மனும் அவன் தவத்துக்கு மகிழ்ந்து அவன் முன் பிரசன்னமானார். 'ஒரு ராவணனையே தாங்க முடியவில்லையே... இவன் வேறா?' என்று தேவர் உலகம் அஞ்சியது. அந்தவேளை சரஸ்வதிதான் அவர்களைத் தடுத்தாட்கொண்டாள். 'நான் பார்த்துக் கொள்கிறேன்' என்றாள்.

கும்பகர்ணனுக்கோ பிரம்ம தரிசனத்தை துளியும் நம்ப முடியவில்லை. தனது தவத்துக்கு பிரம்மன் இவ்வளவு சீக்கிரம் மகிழ்ந்து தரிசனமளித்து விட்டானே என்கிற ஆனந்தமும் பரவசமும் கும்பகர்ணனைத் தொற்றிக் கொண்டதில், நாவிலும் தடுமாற்றம். இங்கேதான் கலைமகள் தன் விளையாட்டை நிகழ்த்தினாள். 'நித்ய சிரஞ்சீவியாக, எவராலும் அழிக்கப்பட முடியாதவனாக திகழ வேண்டும்' என்று வரம் கேட்க விரும்பிய கும்பகர்ணனுக்கு நாக்கு தடுமாறியதில், 'நித்ய சிரஞ்சீவி' என்பது 'நித்ர சிரஞ்சீவி'யாகிவிட்டது.

'அப்படியே ஆகட்டும்! ததாஸ்து' என்று அருளினார் பிரம்மமூர்த்தி. வரமும் வேலையைக் காட்டத் தொடங்கி விட்டது. அதுதான் இப்படியொரு தூக்கம் அவனிடம்! மாதக் கணக்கில் தூங்கினாலும் பிரம்ம வரம் காரணமாக பசி தாகத்தால் அவன் சரீரம் பாதிக்கப்படாது.

கும்பகம் என்பது ஒருவித மூச்சுப் பயிற்சி முறை. ஒரு மூக்குத் துவாரம் வழியாக காற்று உள்புகுந்து மறு துவாரம் வழியாக வெளியேறும். இடையில் சிறிது நேரம் இதய பாகத்தில் அந்தக் காற்று தங்கும். பின் அது சீறிக் கொண்டு வெளியேறும். அந்த சமயம் மார்பு இரண்டும் அரண்போல மேலேறும். கும்பகத்தால் உருவான அரண் அது. அதனாலேயே அவனுக்கு 'கும்பகர்ணன்'

என்று பெயர் வந்ததாக சிலர் ரசனையுடன் கூறுவார்கள்.

இதெல்லாம் அனுமனுக்கு அந்தப் பொழுதில் தெரிந்திருக்கவில்லை. ஒன்று மட்டும் விளங்கியது. 'இவன் ராவணனில்லை..!' என்பதே அது.

கும்பகர்ணன் உறங்கிடும்போது அவனுக்கு சேவை செய்ய ஒரு தேவ கன்னியர் கூட்டமே இருந்தது. அவர்களெல்லோரும் அவன் விடும் மூச்சுக் காற்றுக்கு ஈடு கொடுத்துக் கொண்டு, அவனது நெடிய உடலை அமுக்கி விட்டுக் கொண்டும், அவனது குறட்டையை சகித்தபடியும் இருப்பதை உணர்ந்த அனுமனுக்கு அவர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.



கும்பகர்ண மனையைத் தொட்டு அடுத்தடுத்த மாளிகை மனைகளில் புகை மட்டுமே செல்ல முடிகிற இண்டு இடுக்கு கூட விடாமல் தேடினான் அனுமன்.

'இங்கெல்லாம் அன்னை சீதை எப்படி இருக்க முடியும்?' என்று புத்திக்குள் புகுந்து அதன் மனக்கணக்குகளில் சிக்கிக் கொள்ளாமல், உணர்வின் மிகையில் மெல்லிய ஆவேசத்தோடும் ஒருவேளை அங்கு எங்காவது இருந்துவிட்டால் அசட்டையால் காணத் தவறிவிட்டோம் என்கிற பழிக்கு இலக்காகிவிடக் கூடாது என்கிற வேகத்தோடும் செயல்பட்டான் அனுமன்.

அதன் விளைவாக, மாட்டுத் தொழுவம் முதல் குதிரை லாயம் தொட்டு யானைக் கொட்டாரம் வரை ஒரு இடத்தையும் அனுமன் விட்டுவைக்கவில்லை.

*'ஆத்துறு சாலைதோறும் ஆனையின் கூடம்தோறும்*
*மாத்துறு மாடம்தோறும் வாசியின் பந்திதோறும்*

தேடுதேடு என்று தேடுகிறான் அனுமன்' என்கிறார் கம்ப நாட்டாழ்வார்.

கும்பகர்ணன் அரண்மனையைத் தொடர்ந்து அனுமன் அடுத்து சென்றது விபீஷணரின் மனைக்குத்தான்.

விபீஷணன்!

அரக்கர்களில் ஒரு விதி விலக்கு.

உருவத்தில் கருப்பாக, அந்த இனத்தவர்க்கே உரிய ஆகிருதி உடையவனாக இருந்தாலும் அவன் முகத்தில் ஒருவித சாந்தம் பரவிக் கிடக்கிறது.

அது 'நான்' என்கிற அகந்தையை விட்டுவிட்டு பக்தி செய்யத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே வசப்படும் உணர்ச்சி.



அடுத்தது காட்டும் பளிங்கை விட துல்லியமானதாயிற்றே முகம். விபீஷணனின் முகத்திலும் அனுமனுக்கு ஒரு செய்தி இருக்கிறது. அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே 'தர்மப்படி நடப்பவன் விபீஷணன்' என்பது அனுமனுக்கு விளங்கி விடுகிறது.

ஒருவேளை... விபீஷணன் உறங்கும் விதம், உறக்கத்திலும் கலைந்திடாத அவன் நெற்றித் திலகம், அதீதமாக விலகியிராத ஆடைகள், அருகாமையில் காணப்படாத சேடியர் கூட்டம், மது வாடையே இல்லாத சூழல்... இவற்றால்கூட அனுமனுக்குள் 'விபீஷணன் உருவில் கரியவனாயினும் உள்ளத்தால் வெள்ளையன்' என்று தோன்றியிருக்கக் கூடுமோ, என்னவோ?

விபீஷணனும் ராவணன் போல, கும்பகர்ணன் போல தவம் புரிந்தவன்தான். ஆயினும் அந்த மாலவன் நேரில் தோன்றியபோது 'நான் மரணத்தை வெல்ல வேண்டும்... பதினான்கு லோகத்தையும் அடிமையாக்கிக் கொள்ள வேண்டும்' என்றெல்லாம் எந்த வரத்தையும் கேட்காமல், 'உன்னை என்றும் மறவாமல் பக்தி செய்தாலே போதும்...

## ராம நாம பஜனை!

அனுமனுக்கு இன்னொரு பெயர் சிரஞ்சீவி. சிரஞ்சீவி என்றால் 'பாவங்களை வென்றவன்' என்றும் ஒரு பொருள் உண்டு. மானிடர்களாகிய நமக்குத்தான் காலமாகிய 'நேற்று இன்று நாளை'களால் உடம்பிலும் உள்ளத்திலும் மாற்றங்கள். அனுமனுக்கு இதெல்லாம் கிடையாது.

யுகங்கள் கடந்து வாழும் வல்லமை பெற்ற அனுமனின் பிரதான பணி காத்து ரட்சிப்பது.

அணுமின் நிலைய மின்சாரத்தை மின்கம்பம் மூலம் பெற்று வீட்டுக்குள் ஒளி ஏற்படுத்திக் கொள்கிற மாதிரி அனுமனை, அவனது காப்புச் சக்தியை நமது இல்லத்தில் நிலைநிறுத்தவும் ஒரு வழி உள்ளது. இது மிகமிக சக்தி மிகுந்த ஒரு பூஜை முறையும்கூட!

புற்றுமண் கொண்டுவந்து அதை தேன் விட்டுப் பிசைந்து, உடன் கற்பூரம் சேர்த்து மஞ்சப் பிள்ளையார் போல பிடித்து, அதிலும் அனுமன் பிறந்த நாளான மூல நட்சத்திர நாளில் காலை சூரிய உதயத்தின்போது பிடித்து, பூஜையறையில் வைத்து, செவ்வாழைப் பழத்தை நிவேதனமாக்கி,

'சாது ஜனப்ரிய ஸ்ரீராமா...
ராமராஜ்ய விட்டலா ஜெயராமா...
ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்' – எனும்

ராம நாம பஜனையை முடிந்த அளவு செய்ய, அனுமன் அங்கே உடனடி பிரத்யட்சமாகிறான் என்பது ஆன்றோர் வாக்கு!

---

பக்தியைவிட பெரிய பலம் இந்த உலகில் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, அந்த உணர்ச்சி என்றும் மாறாமல் உள்ளத்தில் இருக்க வேண்டும்' என்று கேட்டு திருமாலையே வியப்பில் ஆழ்த்தியவன்.

ராவணனும் பெரிய சிவபக்தன்தான்.

ஆனால், அவன் பக்தி ஸ்திரமாக இல்லாமல் சந்தர்ப்ப

**‘இந்திரஜித்தின் உருவம் அனுமனுக்குள் மூட்டிய எண்ணங்களில் அந்த முக்கண்ணனாகிய சிவனும் அவரின் சுடர்க்கண் தந்த முருகனின் வடிவும் தெரிந்ததுதான் ஆச்சரியம்! அந்த முருகனுக்குத்தான் ஆறு முகங்கள், பன்னிரு விழிகள். அவையெல்லாம் ஒன்றாகி இதோ இந்திரஜித்தாக இங்கே கிடக்கிறதோ!’**

சூழல்களால் மாறிப் போனதால்தானே பாதகன் ஆனான்?

பேரரசன்... மாவீரன்... ஈஸ்வர பட்டத்துக்கு உரியவன்... இசைச் சாகரன்... கிரகங்களையே தன் கிருகத்தில் அடைத்தவன். கபட உருவில் ‘பிட்சாந்தோஹி’ என்று பிச்சை கேட்டல்லவா சீதை முன் சென்றான்?

இதெல்லாம் முன்பே உணர்ந்தவன் போல விபீஷணன் மாறாத பக்தியை வரமாகக் கேட்டது எத்தனை பெரிய சிறப்பு உடைய செயல்?

அதனாலேயே அவன் முகத்தில் பக்தி பிரதிபலிக்க, அனுமனும் அதை உணர்ந்துகொண்டது ஆச்சரியம்தான்.

அந்த ஆச்சரியம் கலையாமல் அன்னையைத் தேடும் அனுமனது பார்வையில் பட்ட அடுத்தடுத்த காட்சிகள் எல்லாமே அதிர வைப்பவை.

எங்கு பார்த்தாலும் அரக்கர் நடமாட்டம்... அவர்களும் மதுவில் விழுந்து அழன்று உழன்று கிடக்கின்றனர்.

அவை அவ்வளவுமே அனுமனுக்கு ஒளிந்து ஒளிந்து மேலேற வசதியாகப் போய்விட்டது. இல்லாவிட்டாலும் பாதகமில்லை. ஆனானப்பட்ட லங்கிணியே அனுமனின் ஒரு இடக்கைக் குத்துக்குத் தாங்கவில்லை. இவர்கள் எம்மாத்திரம்?

இருந்தாலும் நேரம் வீணாகுமே...?

நொடிப்பொழுதும் வீணாகிவிடக் கூடாது என்கிற துடிப்போடு விரிந்த விழிகளும், துடிக்கும் புஜங்களுமாக அனுமனின் பயணம் தாவித்தாவித் தொடர்ந்தது.

அடுத்தடுத்து அனுமன் நுழைந்த இடமெல்லாம் நவமணிகளால் இழைக்கப்பட்ட ராவணேஸ்வரனின் புத்திரர்கள், உறவினர்களின் மாளிகைகள்.

அவற்றின் செல்வச் சிறப்புக்குப் புற உலகில் ஓர் உதாரணம் இருப்பதாக அனுமனாலேயே எண்ணிப் பார்க்க முடியவில்லை.

அதிலும் மகோதரன் மாளிகையும், ஜம்புமாலியின் சயனகூடமும், யித்தோன்மத்தனின் வாவியோடமைந்த அந்தப்புரமும், ஹஸ்திமுகனின் தர்பார் மண்டபமும் அதில் தென்பட்ட ஓவியங்களும், சோணி தாட்சன் இல்லத்தில் கேட்ட இசையொலியும் அனுமன் வரையில் ஆச்சரியப் படைப்புகள்!

இவர்களில் இந்திரஜித்தின் உருவம் அனுமனுக்குள் மூட்டிய எண்ணங்களில் அந்த முக்கண்ணனாகிய சிவனும் அவரின் சுடர்க்கண் தந்த முருகனின் வடிவும் தெரிந்ததுதான் ஆச்சரியம்! அந்த முருகனுக்குத்தான் ஆறு முகங்கள், பன்னிரு விழிகள். அவையெல்லாம் ஒன்றாகி இதோ இந்திரஜித்தாக இங்கே கிடக்கிறதோ! – வியக்கிறான் அனுமன்.

விபீஷணனைப் பார்த்த மாத்திரத்தில் இவன் அரக்கரில் இரக்கன் என்றறிந்ததுபோல இந்திரஜித்தைப் பார்த்த மாத்திரத்தில் இவன் 'மாவீரன்... அதிதீரன்' என்றெல்லாம் அனுமானிக்கிறான்.

அப்படியே ராவணேஸ்வரனின் மாளிகைப் புலத்தை எட்டியபோது அங்கே கண்ணில்பட்டது ராவணன் சீதையை கவர்ந்துவரப் பயன்படுத்திய புஷ்பக விமானம்!

அனுமனின் கண்ணில்பட்ட அநேக காட்சிகளில் புஷ்பக விமானம் மட்டும் ஒரு தனித்த தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் மிகையே இல்லை.

தங்கத் தகட்டால் வேயப்பட்டு, ரத்னமணிகள் பதிக்கப்பட்டு, நெளிசுழியான வேலைப்பாடுகளுடன் ஹம்சம், அன்னம், சக்கரவாகம் முதலான பட்சிரூப முத்திரைகளுடன் இந்திரனின் ஐராவத யானையின் வலுவான கால்களைப் போன்ற தூண்களுடன், கலசம் அமைந்த கூரையுடன் அந்த புஷ்பக விமானம் விதவிதமான ஒளிப்புனலை ஓடவிட்டபடி இருந்தது. அந்த விமானத்தைப் பார்த்துவிட்டு கண்களைக் கசக்கிக் கொள்ளாமல் இருக்க முடியாது.




பட்சிகளுக்கு சிறகுகள் எப்படி இருக்குமோ அப்படி அந்த விமானத்திற்கு உலோகச் சிறகுகள் இருந்தன.

ஸ்ரீ மந்திரத்தால் விக்ரஹ சக்கரங்கள் சக்தி பெற்று செயல்படுவது போல இந்த புஷ்பக விமானமும் மந்திரம் போல ஒரு சில சொற்களால் தூண்டப்பட்டு பறப்பதாக இருந்தது.

இதில்தான் அன்னை சீதையை ராவணன் கவர்ந்து சென்றான். அதைப்பார்த்த சாட்சிகளில் பிரதான சாட்சி ஜடாயு. அடுத்து அவன் சகோதரன் சம்பாதி.

தூர திருஷ்டி கொண்டவன் சம்பாதி. கண்களை மூடிக் கொண்டு மனக்கண்ணாலேயே தான் பார்க்க விரும்பியதை பார்க்கும் ஆற்றல் பெற்றவன். 'அசாத்தியமாக ஜொலிக்கும் ஒரு விமானத்தில் கதறக் கதற அன்னை சீதை ஆகாய மார்க்கமாக சென்றதும், இலங்கையில் ஒரு தபஸ்வினி கோலத்தில் அவள்



இருப்பதுபோலவும் என் மனக் கண்களுக்கு தோன்றுகிறது' என்று சம்பாதி இந்த விமானம் பற்றி கூறியிருந்தான்.

இந்திர சபையை நிர்மாணித்த விஸ்வகர்மா விசேஷ நுட்பத்துடன் உருவாக்கியதுதான் புஷ்பக விமானம். அஷ்டமா சித்தியால் பல ரிஷிகளும் தேவர்களும் நினைத்த இடத்தில் தோன்றி மறையும் சக்தி பெற்றிருந்த நிலையில், அந்த சக்தி இல்லாதவர்கள் லோகம் விட்டு லோகம் செல்ல ஒரு வாகனம் இருந்தால் நல்லது என்கிற எண்ணத்தில் உருவானதுதான் அது.

சாதாரண விமானமில்லை அது. புஷ்பக விமானம்... புஷ்பத்தின் சுகம் எப்படி இருக்கும்? வாசமுள்ளதாக, மென்மையாக இருக்கும். இந்த விமானமும் பயணம் செய்கையில் அந்த உணர்வைத் தரும்.

ராவணேஸ்வரனின் பொக்கிஷங்களில் இதுவும் ஒன்று. உள்ளபடியே இந்த பறக்கும் விமானம் ஒரு குபேர சம்பத்து.

விஸ்ரவசு என்பவனின் மகன்தான்



குபேரன். நவநிதிகளுக்கு அதிபதி. இவன் தனது நிதிகளைப் பெரிதாக எண்ணவில்லை. இந்த வாகனத்தையே பெரிதாக எண்ணினான். இதற்காகவே பிரம்மாவை துதித்தான். ஏனென்றால், விஸ்வகர்மா தனது படைப்பான இதை பிரம்மனுக்கு அளித்துவிட்டார். எனவேதான் குபேரன் தவமிருந்து பிரம்மாவை வரவழைத்து, சிறு குழந்தைகள் மாமன்மார்களிடம் விளையாட்டுப் பொருட்களை ஆசையாகக் கேட்டுப் பெறுகிறாற்போல் இந்தப் புஷ்பக விமானத்தைப் பெற்றான். அப்படியே இலங்கைக்கு வந்து அதையே தனக்குரிய குபேரப்பட்டினமாக ஆக்கிக்கொண்டு வசித்து வரவும் செய்தான்.

குபேரன் வாழ்ந்த இலங்கைக்கு சமாலி என்பவன் அரசனாக இருந்தான். சமாலியும் அவன் மகள் கேசுகியும் பாதாள லோகவாசிகளாகிவிட்டிருந்தனர். இலங்கையைப் பழைய பற்றுதலுடன் காண வந்தபோது அவர்கள் கண்களில் குபேரன் ஏறித் திரிந்த புஷ்பக விமானமும் பட்டது.

குபேரனுக்குள் கொழுந்துவிட்ட ஆசை கேசுகிக்குள்ளும் மூண்டது. விஸ்ரவசுவிடம் சென்று குபேரனது விமானம் தனக்கு வேண்டும் என்று கேட்க விரும்பி, பின் விஸ்ரவசுவையே மயக்கி மணந்து ராவணன் தொடங்கி, விபீஷண, கும்பகர்ணரை மகன்களாக பெற்றாள் கேசுகி.

அதன்பின் ராவணன் குபேரனின் ஐஸ்வர்யங்கள் முதல் புஷ்பக விமானம் வரை அனைத்தையும் அவனிடமிருந்து தட்டிப் பறித்துவிட்டான். அதற்காக ராவணன் மேற்கொண்ட முயற்சிகள் விசித்ரமானவை.

மொத்தத்தில் அந்தப் புஷ்பக விமானம் ஒரு நெடிய வரலாறு கொண்டதாக இருந்தது. அதுமட்டும் ஒருவேளை கண்டு பிடிக்கப்படாமல் இருந்திருந்தால் அன்னை சீதையை ராவணன் எப்படி எந்த விதத்தில் இலங்கைக்குக் கடத்திச் சென்றிருக்க முடியும் என்பதும் ஒரு பிரதான கேள்வி.

தொட்டுத் தூக்கிச் செல்ல அவளது கற்புக்கனல் இடம் தராது. விருப்பமில்லா மாதரை ஒரு துஷ்டனைப் போல தொடுவதை ராவணேஸ்வரனும் இழிவாகக் கருதினான். எனவே, தொடாமல்... அதே சமயம் கடத்தும் உபாயத்திற்கு விமானம் தவிர வேறு வழியே இல்லை.

பெருமை மிக்க ஒன்று, சிறுமை மிக்க ஒரு செயலுக்கு துணை போய் விஸ்வகர்மாவுக்கே தலைக்குனிவை உண்டாக்கி விட்டிருந்தது.

அனுமனுக்கு அந்த புஷ்பக விமானத்தைப் பார்க்கும்போது அந்த எண்ணம்தான் தோன்றியது. கூடவே, விமானம் இங்கிருக்கிறது என்றால் அன்னையும் அருகில்தான் எங்கோ இருக்கவேண்டும் என்று ஒரு நம்பிக்கை அவனுக்குள் மூண்டு விட்டது. உற்சாகமாக புஷ்பக விமானத்தைக் கடந்து ஒளிப்புனலாய் ஜொலிக்கும் அருகிலுள்ள ஓர் அரண்மனைக்குள் புகுந்தான்.

அனுமனின் மனத்திட்பத்திற்கும் அவனது பிரம்மச்சர்ய பலத்திற்கும் சோதனையான இடமாக அந்த மாளிகை இருந்தது.

தங்கத்தூண்கள் என்ன! பட்டுத்திரைச் சீலை என்ன? ஒயிலான சிற்பங்கள் என்ன! பனிமலைப் பொதி போல தவழ்ந்து செல்லும் அகிற்புகை என்ன! ஆங்காங்கே பேழைகளில் ரத்தினம், பவழம், மாணிக்கம், வைரம் என்னும் நவரத்ன ஆபரணங்கள் என்ன! சுங்கச் சாவடிகளில் பழரசம் ஒருபுறம் என்றால் மறுபுறத்தில் மதுரச வகைகள். தட்டுத்தட்டாக கனிகளின் கூட்டம் வேறு.

பெண்கள் என்றாலே சந்நிதித் தெய்வமாக, பெற்ற தாயாக, உற்ற சகோதரியாக எண்ணச் செய்யும் பவித்ரமான, தன்னடக்கம் கொண்ட மாதர்களே அங்கே இல்லை. ராவணேஸ்வரனின் வன்புஜத்தை, திண்ணிய மார்பைத் தழுவி வருடி மகிழ்கின்றவர்களாக கற்பனை செய்துகொண்டு போதையில் கிடந்த அவர்களைப் பார்த்தபோது அனுமனின் உள்ளத்தில் கனல்தான் மூண்டது. அவர்களையே எரிக்கத் துடித்த கோபக்கனல்!

ஏராளமான ராட்சஸ மகளிர் நடுவில் தேவமகளிரும் இருந்தனர். பற்பல லோகங்களில் இருந்து கவர்ந்து வரப்பட்ட பெண்டிரும் வெறும் போக தேகங்களாக, மதியற்று, அருள் நிதியுமற்றுக் கிடந்தனர்.

அனுமனுக்கு அவர்களைக் காண கண்கள் கூசின. இருப்பினும் இந்தக் கூட்டத்தில் எங்காவது ஒருவேளை அன்னை சிறைப்படுத்தப்பட்டிருந்தால் என் செய்வது என்கிற



தங்கத்தூண்கள் என்ன!
பட்டுத்திரைச் சீலை என்ன?
ஒயிலான சிற்பங்கள் என்ன!
பனிமலைப் பொதி போல தவழ்ந்து
செல்லும் அகிற்புகை என்ன!
ஆங்காங்கே பேழைகளில் ரத்தினம்,
பவழம், மாணிக்கம், வைரம் என்னும்
நவரத்ன ஆபரணங்கள் என்ன!
சுங்கச் சாவடிகளில் பழரசம் ஒருபுறம்
என்றால் மறுபுறத்தில் மதுரச வகைகள்.
தட்டுத்தட்டாக கனிகளின் கூட்டம் வேறு.





## ராம நாம பஜனை!

அனுமனுக்கு இன்னொரு பெயர் சிரஞ்சீவி. சிரஞ்சீவி என்றால் 'பாவங்களை வென்றவன்' என்றும் ஒரு பொருள் உண்டு. மானிடர்களாகிய நமக்குத்தான் காலமாகிய 'நேற்று இன்று நாளை'களால் உடம்பிலும் உள்ளத்திலும் மாற்றங்கள். அனுமனுக்கு இதெல்லாம் கிடையாது.

யுகங்கள் கடந்து வாழும் வல்லமை பெற்ற அனுமனின் பிரதான பணி காத்து ரட்சிப்பது.

அணுமின் நிலைய மின்சாரத்தை மின்கம்பம் மூலம் பெற்று வீட்டுக்குள் ஒளி ஏற்படுத்திக் கொள்கிற மாதிரி அனுமனை, அவனது காப்புச் சக்தியை நமது இல்லத்தில் நிலைநிறுத்தவும் ஒரு வழி உள்ளது. இது மிகமிக சக்தி மிகுந்த ஒரு பூஜை முறையும்கூட!

புற்றுமண் கொண்டுவந்து அதை தேன் விட்டுப் பிசைந்து, உடன் கற்பூரம் சேர்த்து மஞ்சப் பிள்ளையார் போல பிடித்து, அதிலும் அனுமன் பிறந்த நாளான மூல நட்சத்திர நாளில் காலை சூரிய உதயத்தின்போது பிடித்து, பூஜையறையில் வைத்து, செவ்வாழைப் பழத்தை நிவேதனமாக்கி,

*'சாது ஜனப்ரிய ஸ்ரீராமா...*
*ராமராஜ்ய விட்டலா ஜெயராமா...*
*ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்*
*ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்'* – எனும்

ராம நாம பஜனையை முடிந்த அளவு செய்ய, அனுமன் அங்கே உடனடி பிரத்யட்சமாகிறான் என்பது ஆன்றோர் வாக்கு!

*ஐயப்பாடு இருந்ததால், கண்களில் கூர்மை தேக்கி அவர்களைக் கண்டபடியே நடந்தான்.*

*அனுமன் அடுத்து கண்ணுற்றது அந்த மாளிகையின் மயக்க உலகமான மதுச்சாலையைத்தான். அங்கே, மதுவானது குடம் குடமாக தயாரிக்கப்பட்டு பேழைகளில் நிரப்பப்பட்டிருந்தது.*

அதிலும் ராவணேஸ்வரன் அமர்ந்து பானம் தயாரிக்கும் இடம் தங்கக் கோப்பைகள் சூழ, பெண்டிர் வெட்கமேயின்றி காமவேதனையில் அரண்டு புரண்டு கிடக்கும் ஒரு இடமாக இருந்து.

போகம் என்பது அனுபோகம், நவபோகம், சம்போகம் என்றெல்லாம் விதம் விதமாக விளக்கப்படும் ஒன்றாகும். ராவணேஸ்வரனின் போகத்தை விவரிக்க இந்த சாதாரண வார்த்தைகள் போதுமானதாக இல்லை. அவனது இச்சைக்கு இங்கே கிடக்கும் பெண்கள் போதாமல் போய்விட்டனர். அழகிய கந்தர்வ மகளிர் கூட்டம்கூட ராவணனுக்கு அலுத்துப் போனதால்தானே சீதையைத் தேடிவந்து சிறை பிடித்தான்? பெண்ணாசை வரையில் திடமான ஒரு தடுப்பு இல்லை என்றால் அது கொழுந்துவிட்டு எரிந்து, மொத்த பெண் இனத்தையே கூட எரித்துவிடலாம்.

ராவணன் வாழக்கூடாதவன். அழித்து, ஒழிக்கப்பட வேண்டியவன்... அனுமனுக்கு அந்த மதுக்கூடத்தை கடக்கும்போது இப்படி எல்லாம்தான் தோன்றியது.

இறுதியாக யானைகள் காவலிருக்க, மகளிர் கூட்டம் கவரி வீச, தங்கக் கட்டில் ஒன்றில் ஆகிருதியான கட்டுடலோடு எவ்வளவு அணிகள் உண்டோ அவ்வளவும் தரித்தவனாக ராவணன் உறக்கத்தில் கிடப்பதையும் அனுமன் காண்கிறான்.

அந்த நொடியே அவனை அழித்துச் சிதைத்துவிடும் ஆத்திரமும் கோபமும்தான் அனுமன் மனதில் மூள்கிறது. ஆன போதிலும் ஒரு சரியான காரணம் புத்தியில் சுடர் விட்டு அந்த கோபத்தைத் தணிக்கிறது.

அயர்ந்த உறக்கத்தில், அதேசமயம் ராட்சஸ தேஜசுடன் உடம்பெங்கும் பொன்னும் மணியும் ஜொலிக்க, பட்டுடுத்திய கோலத்தில் கிடப்பவனைப் பார்த்த மாத்திரத்தில் அவனே ராவணன் என்பது அனுமனுக்கு உறுதியாகிவிட்டது.

அவனது தேக்குத் திருவடிகளின் அருகில் இரு கன்னியர், பக்கத்திலேயே ஒரு மேடை மீது நாட்டியப் பெண்கள் சிலர், இதுபோக நாதம் மீட்டிய வீணை மீது ஒருத்தி, மிருதங்கத்தின் மீது ஒருத்தி, கவிழ்ந்து கிடக்கும் சந்தனக் கிண்ணம் மீது ஒருத்தி, மதுப்பாத்திரத்தை அணைத்தபடி ஒருத்தி... என்று பெண்கள், பெண்கள், பெண்கள்!

இப்படி போகமயமான ஒரு சூழலில் கிடப்பவன் ராவணன்




அல்லாது வேறு யாராக இருந்துவிட முடியும்?

அனுமனுக்குள் அவனைப் பார்க்கப் பார்க்க ஆத்திரம் அலைமோதத் தொடங்குகிறது. அனுமனின் நெஞ்சகத்தில் கனல் பெருக்கம்... சிவந்துவிட்ட கண்கள் அதை எதிரொலிக்கின்றன!

‘தர்மத்தின் சின்னங்களான ராம லட்சுமணர்களை வனத்தில் அலைபாய விட்டுவிட்டு, அண்ணலின் பத்தினியைக் கவர்ந்தும் வந்துவிட்டு ஆனந்தமாக உறங்குகிறாயா நீ..? உன்னை, உன் பத்து தலைகளை தென்னங்காய்களைப் பறித்து வீசுவதுபோல வீசி எறிந்துவிட்டு, உன் உடம்பையும் பஞ்சுபஞ்சாக வீசி எறிகிறேன் பார்...’ என்று அனுமனின் மனமும் உடலும் ஒரு கணம் அவனை முந்தித் தள்ள, அதன்பொருட்டு கை, கால்களை வீசிக் கொண்டு ஆக்ரோஷமான அனுமன் அடுத்த கணம் அப்படியே மடங்கி, ‘ஐயோ... இது என் அண்ணலின் வீரத்துக்கு



இழுக்கு செய்தது போல் ஆகிவிடுமே... அன்னை எங்கிருக்கிறார் என்பதே தெரியாத நிலையில் இவனை வதம் செய்வதும் பலனில்லாத ஒன்றே!' என்று சட்டென்று தன்னை அடக்கிக் கொண்டான்.

'இந்தக் காமுகன் அண்ணல் மூலமாகப் பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். அதற்காகவாவது இவனை உயிரோடு விட்டு வைத்தாகவேண்டும்' என்று எண்ணியவனாக அமைதியானான். அப்படியே சந்தடியின்றி அந்த மாளிகையைக் கடந்து, இன்னொரு மாளிகைக்குள் சென்றான் அனுமன்.

ஒரு மாளிகையைச் சாதாரணமாகக் கல் கொண்டும் மண் கொண்டும் பின் விளாச்சாறு, சுண்ணம் என்கிற இயற்கைக் கனிமங்கள் கொண்டும்தான் எழுப்புவார்கள். ஆனால், ராவண ராஜ்யத்தில் மாளிகைகள் அப்படி எழுப்பப்பட்டது போலவே தெரியவில்லை. பாளம் பாளமாக இந்திர நீலம், பச்சை மரகதம், செம்பவழம் என்று ரத்தினக் கற்களைக் கொண்டு எழுப்பப்பட்டது போலவே அனுமனுக்குத் தோன்றியது.



அங்கங்கே வாவிகள்... அவற்றில் மலர்ச்செடிகள். அவற்றினுள் ஹம்சபட்சிகளுக்கும் குறைவில்லை.

ஒரு அழகிய வாவியை ஒட்டிய, இந்திர நீலக்கல் பட்டுத் தெறிக்கும் அறை ஒன்றின் பஞ்சணைமேல் ஒருத்தி படுத்திருப்பதை அனுமனின் விழிகள் கண்டன.

அதுவரை அவன் இலங்கையில் கண்ட பெண்கள் ஒருத்தியிடம்கூட நாணமில்லை. ஆனால், இவளிடமோ ஓர் அடக்கம் தெரிகிறது. பஞ்சணைமீது ஆடை விலகி இராதபடி, அதேசமயம் நெற்றித் திலகம் ஜொலிக்க, பதவிசாக அடக்க ஒடுக்கமாக தூங்கிக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். அவளைச் சுற்றிலும் கூட சேடியர் கூட்டம். மயிற்பீலி, மான்கவரி என்று ஆளுக்கொரு அம்சத்தைக் கைகளில் பற்றிக் கொண்டே அவர்களும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடமும் ஒருவிதத் தன்னடக்கம்.

இந்த ஒரு மாளிகையில்தான் மதுக்குடங்களையோ, மாமிசப் பதார்த்தங்களையோ அனுமன் காணவில்லை. பவித்ரமாகத்தான் இருக்கிறது சூழல்!

'அநேகமாக இவளே மாதா சீதையாக இருந்தாக வேண்டும். இருக்குமோ? ஆயினும், இப்படி ஒரு ஆடம்பரமான அரண்மனையில், கவரப்பட்ட துயரமே துளியும் இன்றி எப்படி மாதாவால் தூங்க முடிகிறது?'

– அனுமனுக்குள் தீர்மானங்களும் குழப்பங்களும் காற்றும் மழையும் கலந்து வருகிற மாதிரி வந்தன.

எவ்வளவு குழம்பினாலும், உணர்ச்சிவயப்பட்டாலும் தெளிந்துவிடும் திடசித்தம் அனுமனுக்கே உரிய சொத்தாயிற்றே? எனவே, கடலோர அலைகள்போல மனம் ஏறி இறங்கினாலும், அவன் பார்த்துக்கொண்டு இருந்த நிலையில் புரண்டு படுத்த அந்தப் பெண்ணின் மறுபக்க தோற்றமும் கூந்தல் புஷ்பங்களும் அனுமனுக்கு ஒரே கணத்தில் அவள் சீதையல்ல என்பதை உணர்த்திவிட்டன.

வாச மலர்களை, அதிலும் தேர்ந்த சில மலர்களைத்தான் மங்கல மங்கையர் சூடிக்கொள்வார்கள். காட்டுப் பூவையும் கொடிப் பூவையும் சூடிக்கொள்வதும், கூந்தலை கட்டாமல் விடுவதும் அரக்க சுபாவங்கள்.

'இவள் அரக்கர் இனத்தவளே' என்று அனுமன் ஒரு

முடிவுக்கு வந்த நிலையில்தான் புலனாயிற்று, அவன் சீதை என்று கருதி உற்றுநோக்கிக் கொண்டிருந்தது ராவணன் மனைவி மண்டோதரியை என்று!

'நல்லவேளை... இவளை மாதா சீதை என்று கருதி ஏமாறத் தெரிந்தேன்' என்று தனக்குத்தானே தேறுதல் கூறிக்கொண்டு, தொடர்ந்து தனது தேடல் பணியில் தீவிரம் காட்ட ஆரம்பித்தான் அனுமன்.

யார் யாரோ கண்ணில் படுகின்றனர். ஆனால், அவர்களில் சீதை இல்லை. காணக் கொடூரமான பல காட்சிகள்... காமக்கனல் பறந்த காட்சிகளில் இருந்து, அகோர, விகார அரக்க உலாக்கள் வரை பலவற்றைக் கண்டும் கலங்கியிராத அனுமன் உள்ளம் மெள்ள சோர்வு வயப்படத் தொடங்கியது.



சோர்வு எப்போதுமே தனக்குத் துணையாக சந்தேகத்தையும் சஞ்சலத்தையும் தட்டி எழுப்பக் கூடியது. அனுமனை அது விதிவிலக்காக்க விரும்பவில்லை. அனுமன் உள்ளமும் கலங்கியது.

'அன்னை சீதை ஒருவேளை இந்த இலங்கை மாநகரிலேயே இல்லையோ? தூர திருஷ்டிக்குப் பேர் போன சம்பாதி சொன்னது சீதா மாதா விஷயத்தில் பொய்யாகி விட்டதோ?

இல்லாத ஒன்றை எவ்வளவு தேடினாலும் அது கிடைக்கப்போவதில்லை. நானும் அப்படித்தான் இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறேனோ? அன்னை இங்கே இல்லை என்று கூறிக்கொண்டு ராம லட்சுமணரைச் சந்தித்தால், அவர்கள் நிலை எப்படிப்பட்டதாக இருக்கும்?

தட்டிக் கொடுத்த ஜாம்பவான், விடை கொடுத்த சுக்ரீவன், நம்பிக்கை வைத்த வானர வீரர்கள் என்று ஒவ்வொருவரும்



என்னுள் எந்தச் சிடுக்கு இருந்தாலும்,
அது சீராகி விடும்.
என் அண்ணலின் நாமம்
அதைச் சீராக்கும்.



ராம்... ராம்... ராம்... ஸ்ரீராம்... ஜெயராம்...



என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

ஏமாந்து திரும்புவதற்கா உனக்கு இத்தனை வரங்களை தேவர்கள் வாரி வழங்கினார்கள் என்று கேட்டால் என்ன செய்வது? இப்படிக் கலங்குவதற்கு, உயிரை மாய்த்துக் கொண்டு விடலாமே..?

என்ன இது சோதனை...? எது இப்படி என்முன்னே அன்னையை ஒளித்து வைத்து விளையாடுகிறது? இல்லை... எனக்குத்தான் அன்னை சீதையைக் காணும் பாக்கியம் இல்லையா?'

– அனுமனுக்குள் அடுக்கடுக்கான கேள்விகள்... தடுமாற்றங்கள்... கதாயுதத்தை ஒரு புறம் கைநழுவ விட்டுவிட்டு, கண்கள் கலங்க ஓரிடத்தில் அடர் இருள் நடுவே அமர்ந்துவிட்டது அவன் தேகம்!

எங்கெல்லாம் இப்படி மனமானது தளர்ந்துபோய் குமைச்சல் உறுகின்றதோ, அங்கெல்லாம்தானே ஒரு புதிய எண்ணமோ, முடிவோ உருவாகும்? அது சாதாரணமாகச் சிந்திக்கப்பட்ட ஒரு எண்ணம் போலவே இருக்காது.

அனுமனுக்குள்ளும் அந்த நொடி, தந்தையான வாயுவில் தொடங்கி, தாய் அஞ்சனா தொட்டுச் சகலரையும் ஒரு முறை மனக் கண்முன் காட்டிவிட்டு, இறுதியாக ராமனிடம் வந்து நின்றது.

'மகேந்திரகிரி மலையில் விசுவரூபமெடுத்து பறக்கத் தொடங்கியபோது, வானில் அனற்பழமாகத் தெரிந்த சூரியனை வணங்கிவிட்டுப் புறப்பட்டாலும் இந்த நிகழ்வுகளுக்கெல்லாம் கர்த்தாவான ராமபிரானிடம் ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ளாததும் அவரை வணங்கி ஆசிபெறாமல் வேகம் கொண்டதும்தான் பிழையா?' இதுதான் அப்போது அவனுக்குள் எழுந்த பிரதான கேள்வி.

'அண்ணலின் ஆசிகளை வேண்டிப் பெறாததே இங்கு தடையாக இருக்கிறதோ? அண்ணலுக்கான பணியில், அவரிடம் ஆசிகேட்கத் தோன்றாததும் ஏன்? அது ஒரு ஆர்வக்கோளாறோ... இல்லை கர்வமோ? யாரைப் பார்த்த நொடி நெஞ்சில் இனம்புரியாத அமைதி ஏற்பட்டதோ, யாரால் தனது வானர இனத்து சோகம் நீங்கியதோ, அவரின் வீரத்தைவிடவும் எனது வீரமே பெரிது என்று எனக்கே தெரியாமல், நான் ஒருவேளை

**'மகேந்திரகிரி மலையில் விசுவரூபமெடுத்து பறக்கத் தொடங்கியபோது, வானில் அனற்பழமாகத் தெரிந்த சூரியனை வணங்கிவிட்டுப் புறப்பட்டாலும் இந்த நிகழ்வு களுக்கெல்லாம் கர்த்தாவான ராமபிரானிடம் ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ளாததும் அவரை வணங்கி ஆசிபெறாமல் வேகம் கொண்டதும்தான் பிழையா?' இது தான் அப்போது அவனுக்குள் எழுந்த பிரதான கேள்வி.**

எண்ணிவிட்டேனோ?

இந்த மனம்தான் எத்தனை விசித்திரமானது? யாரும் வந்து எதையும் கூறாமல் எண்ணங்களாலேயே இது எப்படி எல்லாம் மாறுகிறது... இதுவோ அதுவோ, அதனாலோ இதனாலோ என்று எத்தனை எத்தனை குழப்பங்கள்...

உண்மையில் நான் யார்? என் பணி இங்கே எது? அந்தப் பணிக்கு வெற்றி உண்டா? ராம கார்யமாக ஒரு அரக்கனே செயலாற்றினாலும் வெற்றி அவனைத் தொற்றிக் கொண்டாக வேண்டுமே? இனியும் இதுபோலக் கலங்கிக் குழம்புவதில் பொருளே இல்லை. இருக்கவே இருக்கிறது, நெஞ்சுக்கு இதமான ராம நாமம். அதைச் சொல்வோம். எல்லாம் அடங்கிவிடும்.

என்னுள் எந்தச் சிடுக்கு இருந்தாலும், அது சீராகி விடும். என் அண்ணலின் நாமம் அதைச் சீராக்கும்.

ராம்... ராம்... ராம்... ராம்... ஸ்ரீராம்... ஜெயராம்... ராம்... ராம்... ராம்... ராம்... ராம்...'

—அனுமன் தனக்குள் முட்டி மோதி, இறுதியில் அடைக்கலம் புகுந்தது ராமநாமத்திடம்தான். கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் பெருக, உள்ளம் நெகிழ்ந்து உருக, 'ராம்... ராம்... ராம்... ராம்...' என்று அவன் ஜெபித்த ராம நாமம் விண்ணில் சென்று முட்டியதோ என்னவோ, வானிலிருந்து ஒரு நட்சத்திரம்

## பிரிந்தவர் சேர...!

**ரா**மநவமியன்றும், அனுமன் ஜெயந்தியன்றும் அனுமனைத் துதிக்கும்போது கணையாழியை வைத்து பிரத்தியேகமாக வழிபடுவது பல நன்மைகளை அளிக்கவல்லது. குறிப்பாகப் பிரிந்தவர் சேரவும், திருமணம் கைகூடவும் இந்தக் கணையாழி வழிபாடு மிகவும் துணை செய்யும். இந்த வழிபாடு கர்ம துயரங்களை ஈடுசெய்து உரியவருக்கு நலம் சேர்க்கும்.

பூஜையின் முடிவில் ராமநாமம் பொறித்த ஐம்பொன் கணையாழிகளை அனைவருக்கும் வழங்குவது மிகவும் நல்லது. பூஜையிலும் கணையாழிக்கே கவரி சாத்துதல் உட்பட அனைத்து மரியாதைகளும் செய்யப்பட வேண்டும்.

இனி துதிப்பாடல்!

*'மராமரம் துளைத்த அண்ணல்*
*மலர் விரல் அணிந்த ஆழி!*
*பராசக்தி அன்னை மணிவிரல்*
*ஸ்பரிசத்தால் மிளிர்ந்த ஆழி!*
*மெய்ப்பேராம் ராமநாமம்*



உதிர்ந்து, அந்த இலங்கை மாநகரின் ஒரு பாகத்தில் விழ... அதைக் கண்ணுற்ற அனுமன் கண்களுக்கு அங்கே விதவிதமான விருட்சங்கள் கொண்ட ஒரு வனக்கூட்டம் தெரிய, 'இந்த வனப்பகுதியைச் சலிக்காமல் விட்டுவிட்டோமே!' என்று அனுமன், எங்கே நுழைந்து, யாரைக் காண வேண்டுமோ... அங்கே மிகச் சரியாகப் பிரவேசிக்கலானான்.

ஆச்சா மரக் கூட்டமும் கடம்ப, செண்பக மரங்களும் மாமரமும் வெண்தேக்கும் செம்மரமும் மங்கள மரங்களும்... என்று ஒரு திட்டமிட்ட நந்தவனப் பகுதியாக விளங்கிய அந்தப் பகுதிக்குள் அனுமன் கால் வைத்த மாத்திரத்தில் ஒரு சிலிர்ப்பு. மரங்களிலும் பட்சிக் கூட்டங்களின் எக்காளம்! ஊடே ஊடே, கொடுவாள் சுமந்த நிலையில் கொடிய அரக்கப் பெண்களின்

*மேவியே பதித்த ஆழி!*
*உய்விக்கச் சென்ற ஆழி!*
*உச்சியில் நின்ற ஆழி!*

*சோபனச் செய்தி சொல்லிச்*
*சோதியாய் மிளிர்ந்த ஆழி!*
*ஆபரணம் அனைத்துக்கும் ஓர்*
*ஆபரணம் ஆன ஆழி!*
*பிரிந்தோரைச் சேர்க்கும் ஆழி!*
*பிரியத்தை வளர்க்கும் ஆழி!*
*விரிந்தெங்கும் சௌபாக் யங்கள்*
*விளைந்திடப் புரியும் ஆழி!*

*முடிவென்று சோர்ந்த தாய்க்கே*
*முதல் தந்த முதலாம் ஆழி!*
*குடிவாழச் சுடர்ந்த ஆழி!*
*கும்பிட்டோம் வாழி! வாழி!*



*அஞ்சனை மைந்தன் பேராலே*
*கும்பிட்டோம் வாழி! வாழி!*
*நெஞ்சம் ராம நாமத்தால் நிரம்ப*
*கும்பிடுவோம் வாரீர்! வாரீர்!*

பருத்த கால்களின் புழுதி கிளப்பும் துவம்ச நடை.

அனுமனின் மதிநுட்பம், அவன் உருவைச் சிறிதாக்கிக் கொண்டு விறுவிறுவென்று ஒரு மரத்தின்மேல் அவனை ஏற்றியது.

பார்வை நாலாபுறமும் சுழன்றது. உள்மனமோ ராமநாம ஜெபத்தில்தான் இருந்தது. அதன் உட்பொருள் – 'பிரபோ, நீங்கள் கடலுக்கு அப்பால் இருந்தாலும், இங்கே நீங்களே வழிகாட்ட வேண்டும்' என்பதே! அதுவும் காட்டிவிட்டது!

அதோ, அசோக மரம் ஒன்றின்கீழ், மெலிந்த, ஆனால் ஒளி குன்றாத நிலையில், விரிந்த கூந்தலுடன், தாழ்ந்த சிரத்துடன் எளிய, அழுக்கேறிய ஆடையுடன் ஒரு பெண்ணாக–

*சீதை!*

சீதாதேவியைக் கண்டுவிட்ட அனுமனின் கண்கள் அகன்று விரிந்தன. அசோக மரத்தினடியில் ஒரு கல் மேடைமேல் அழுக்கடைந்த ஓவியத்தை, ஒரு மூலையில் போட்டு வைத்திருப்பதைப் பார்க்க நேர்ந்தால், எப்படி ஒரு உணர்ச்சி தோன்றும்?

அப்படி ஒரு உணர்ச்சிதான் அனுமனுக்கும் தோன்றியது. கூடவே, சில சந்தேகங்களும்! ஏற்கனவே மண்டோதரியைப் பார்த்த காட்சி மனதில் விரிந்தது. அவளையே சீதை என்று முற்றிலுமாக முடிவு செய்து, பின் ஏமாந்த அனுபவம் அனுமனுக்குள் ஓர் எச்சரிக்கையாக ஓடியது.

ஆனாலும், ஒரு வித்தியாசத்தையும் உணர ஆரம்பித்தான்.

# காத்திருக்கும் காலங்கள்!



லம்பம் மலைமேல் கால் வைத்து இறங்கியதிலிருந்து, விருட்சம் ஒன்றின்மேல் அமர்ந்திருக்கும் இந்த நொடி வரையில் அவன் பார்த்த மனிதர்களில் ஒருவரிடம்கூட துளியும் சோக உணர்ச்சியே இல்லை.

ஆட்டமும் பாட்டுமாக, ஆழ்ந்த நித்திரையும் அதனூடே முனகலுமாக, மதுவருந்திய போதையுடனும் விரகதாபத்துடனும் மிருக உணர்ச்சிகளோடுதான் எல்லோரும் இருந்தனர்.

இந்த லங்காபுரியே ஒரு காமப்பட்டினம், ஓர் உல்லாச கேந்திரம் என்றுதான் ஒவ்வொரு காட்சியுமே நினைக்க வைத்தது. இதற்கு நடுவில் சோகமயமாக ஒரு மாது கண்ணில் பட்டிருக்கிறாள்.

ஒரு தேய்பிறை நிலாவைப் புழுதி மேகம் மூடும்போது எப்படி இருக்கும்? அப்படி இருக்கிறாள். அலை போன்ற கூந்தல்கூட



சடைப் பிடித்து அழுக்கேறிக் கிடக்கிறது. கழுத்தில், காதில் எங்கும் ஆபரணங்கள் இல்லை.

அனுமனின் நயனங்கள் அவளைக் கூர்மையாக ஆராய்ந்தன. அப்படியே அணைக்கட்டில் வெள்ளம் கூடி நீர்மட்டம் உயர்வது போல, அவன் மனதிலும் 'இவள் அன்னை சீதையாகத்தான் இருக்க வேண்டும். இனியும் சந்தேகிப்பதில் அர்த்தமில்லை' என்கிற நம்பிக்கையும் உயர்ந்துகொண்டே போனது.

மனதில் நம்பிக்கை ஏற்பட்டதும், உடம்பிலும் அதற்கேற்ப மாற்றங்கள், கண்களில் ஒருவித பரவசம் வந்து தொற்றிக் கொண்டது. மரக்கிளையை இறுகப் பற்றியிருந்த கரங்கள், அந்தப் பிடியை விடுத்து, ஒன்றுகூடி நமஸ்கரிக்கத் துடித்தன. அவன் உடம்பின் ஒட்டுமொத்த ரத்த ஓட்டத்திலும் ஒரு பரவசக் குதிரை பிடரியை சிலிர்த்துக்கொண்டு ஓடத் தொடங்கியது.

'ராமச்சந்திர பிரபுவே... எனது தேடல் வெற்றி பெற்றுவிட்டது. எனது ஏமாற்றங்கள் ஒரு முற்றுப்புள்ளியைக் கண்டுவிட்டன. உங்கள் தர்மபத்தினியைக்



கண்டுகொண்டேன். ஆஹா...இவளல்லவா உத்தமப்பெண்! மிதிலை ராஜகுமாரி... அயோத்தியின் பட்டமகிஷி, இங்கே பட்டமரம் போல இருக்கிறாள். அந்த உச்சம்தான் என்ன? இந்த நீச்சம்தான் என்ன?

எந்த அளவுக்கு உங்கள்மேல் காதல் இருந்தால், எந்த அளவுக்கு அன்னைக்குள் கற்பு நெருப்பெரிந்து கொண்டிருந்தால், அவள் இந்த அளவுக்கு இளைத்திருப்பாள்?

சுற்றிலும் அரக்கியர் கூட்டம்! நெளிகிற பாம்புகளை சடைகளாகப் பெற்றவர்கள் போல் அவர்கள் இருக்கிறார்கள். வெயிலில் காயும் மலைப்பாறை கணக்காக அவர்கள் முதுகுகள்... மொத்தத்தில், கோரமான மாமிச மலைகள்... கைகளிலும் பளபளக்கும் பட்டரி வாட்கள். ஆங்காங்கே திகுதிகுத்தபடி இருக்கும் தீப்பந்தங்களின் ஒளியில் அந்த பட்டரிவாட்கள் பொன்போல ஒளிர்வதில்கூட ஒருவித கோரம் இருக்கிறது.

**"வந்துவிட்டேன் அன்னையே... நான்தான் அவர் தூதன். இனி உங்களுக்குக் கவலையில்லை" என்று அந்த நொடி கத்தவேண்டும் போலக்கூடத் தோன்றியது.**

இத்தனை கோரங்களுக்கு நடுவில் எப்படி மலரிலும் மெல்லியலாளான என் அன்னை கலங்காமல் கிடக்க முடியும்? ஐயோ... என்ன ஒரு கொடிய அனுபவம்! காலதேவன் எதற்காக இப்படி ஒரு பரீட்சையை வைத்திருக்கிறான்?

அனுமனுக்குள் கேள்விகள் சிதறிப் பெருகின. அதேசமயம், தூக்கமின்றி அமர்ந்திருக்கும் சீதை மனதுள்ளும் அனுமனைப் போலவே எண்ணப் பெருக்கு. அனுமனுடைய யோசனை ஒருவிதமாக இருந்தது என்றால், அன்னையின் யோசனை வேறுவிதமாக இருந்தது.

மெள்ளத் தலையை உயர்த்தி, வானத்தைப் பார்த்தாள். பின், நாலாபுறமும் யாரையோ தேடுவது போல ஒரு பார்வை பார்த்தாள். சதா சர்வ காலமும், ஒரு நொடிகூடப் பிசகாமல் கண்கள் இமைக்க, ராமன் எப்படியும் வந்து தன்னை மீட்டுச் செல்வார் என்று அவள் எதிர்பார்ப்பது அவள் கண்களில்



பளிச்சிட்டது.

அனுமனுக்கும் அது விளங்கியது. 'வந்துவிட்டேன் அன்னையே... நான்தான் அவர் தூதன். இனி உங்களுக்குக் கவலையில்லை' என்று அந்த நொடி கத்தவேண்டும் போலக்கூடத் தோன்றியது. ஆயினும், விவேகம் 'சற்றுப் பொறு' என்று அவன் துடிப்பைக் கட்டிப் போட்டது.

சீதையிடமோ, இடைவிடாத தேடல் பார்வை. அவளைச் சுற்றிலும் காவல் இருக்கும் அரக்கியர்களோ, சிங்கமும் புலியும் கர்ஜிக்கும்போது, யானையும் சேர்ந்து பிளிறினால் எப்படி இருக்குமோ, அப்படி ஒரு குறட்டையுடன் சயனித்திருந்தனர்.

இரை தின்ற மலைப் பாம்பு, புரண்டு படுத்து ஜீரணிக்க முயல்வது போல, அவ்வப்போது புரண்டு படுத்து அவளுக்கு

**"இலங்கை ஒரு யானைப் பட்டினமும்கூட! காளை, அந்த ஈசனின் வாகனம். சிங்கமோ, அந்த சக்தியின் அம்சம். அவை ஒன்றுகூடி யானையை அழிப்பது என்பது, 'ஈசனும் சக்தியும் ஒன்றுகூடி இலங்கையை அழித்திட நாள் குறித்துவிட்டார்கள்' என்று உணர்த்துவதுபோல்தான் எனக்குப் படுகிறது!" என்று திரிஜடை கூற, சீதை உள்ளம் பூரித்துப் போனாள்.**

அச்சமூட்டினர்.

அங்கே ராவணனும் அவன் மனைவியும் புத்திரர்களும் சப்த மஞ்சத்தில், கவரி வீச்சுக்கு நடுவில் உச்ச பட்ச நிசப்தத்தில் உல்லாசமாக உறங்கிய படி இருக்க, இங்கே மாதா ஜானகியின் நிலை நேர் எதிராக இருப்பதைக் கண்ட அனுமன் ஒரு விநாடி கோபக் கனலாகி, தான் அமர்ந்திருக்கும் சிம்சுபா விருட்சக் கிளையை, அது முறிந்து விடும் அளவுக்கு இறுக்கி அழுத்தினான். அப்படியே தன்னையும் அடக்கிக் கொண்டவன், அடுத்து

என்ன செய்வது என்று யோசிக்கவும் தொடங்கினான்.

ஜானகிக்குள்ளும் யோசனைகள்! இல்லை இல்லை. நம்பிக்கை மின்னல்கள் அவள் மனதில் ஓடி ஓடி வெளிச்சம் காட்டியபடி இருந்தன.

யார் யாரோ சிவ தனுசைத் தொட்டு நிமிர்த்தினார்கள். நாணேற்றி வளைக்கவும் முயன்றார்கள். முடியவில்லை. ஆனால், ராமன் அதைத் தொட்டு நிமிர்த்திய விதம், நாணேற்றிய விதம், அப்படியே முறித்த விதம் சகலமும் அழகு! அந்த வீரதீரக் காட்சி ஜானகிக்குள் தோன்றித் தோன்றி மறைந்தது.

'சிவதனுசுவை விடவா பெரியவன் இந்த ராவணன்? நிச்சயம் இவன் அண்ணலின் பாணங்களுக்குப் பதில் கூறித்தான் தீரவேண்டும்! அண்ணல் வருவார். வந்தே தீருவார். இருந்தும், அவரது தர்மபத்தினியான எனக்கு இப்படி ஒரு துக்கம் சம்பவிக்க என்னுள் மூண்ட அந்தப் பொன்மான் ஆசையே காரணம்.

மாயைக்கும் மகிமைக்கும் எனக்கு வித்தியாசம் தெரியாமல் போய்விட்டது. அது தெரியத்தான் இந்த துக்ககரமான நிகழ்வுகள்! இதை நான் தாங்கித்தான் தீரவேண்டும். தாங்கினாலே தேவி. இல்லாவிட்டால் பாவி.

இதைவிட இன்னமும் துயரம் வந்தாலும் நான் நம்பிக்கை இழந்துவிடக் கூடாது. எனக்கான இந்த அனுபவங்கள் நாளை எவருக்கும் ஏற்படலாம். அப்போது அவர்களுக்கு நான் உதாரணமாக வேண்டியே, இன்று இங்கே காலம் என்னைப் புடம் போட்டுக் கொண்டிருக்கிறது.

இதனால் எல்லாம் நான் வீரமும் தீரமும் மிகுந்த கேசரியாகிவிட வேண்டுமே அன்றி, சராசரி ஆகிவிடக்கூடாது. நான் கண்ணீர்விடுவதுகூட இழுக்கு. ஒரு வகையில் எனக்கு இது தண்டனை.

தண்டனையை உவந்து அனுபவிப்பதில்தான் வீரம் இருக்க முடியும். எனவே, இதை நான் அனுபவிப்பேன். உவந்து அனுபவிப்பேன்' என்று தனக்குள் எண்ணத்தீ வளர்த்துக் கொண்டு கண்ணீரையும் துடைத்துவிட்டுக் கொண்டாள்.

எல்லாமே சில நொடிகள்தான். மீண்டும் கண்களில் கண்ணீர் பெருக, விம்மி விம்மி அழத் தொடங்கினாள். இந்த முறை

அவள் அழுததிலும் நியாயம் இருக்கத்தான் செய்தது.

'என் நாதர் மஹாவீரர்தான். தர்மசீலர்தான். ஆனாலும், என்னைப் பிரிந்த துக்கத்தால் ஒருவேளை செயலற்றுப் போய்விடுவாரோ?

மகா பெரியது யானை. அதை ஒரு சிறு அங்குசம் அடக்கி விடுவதில்லையா? என் நாதனையும் எனது பிரிவுத் துயரம் அங்குசமாகி அடக்கியிருக்குமோ? செயலற்றுப் போயிருப்பாரோ?

என் கரம் பற்றும்போதும், என் தோள் மேல் அவர் விரல் தொற்றும்போதும்கூட எனக்கு வலித்துவிடக் கூடாது என்கிற ஒரு மென்மை இருக்குமே... பிஞ்சுக் குழந்தையை அள்ளி அணைப்பவர்கள்கூட, சற்று தினவு காட்டுவார்கள். அதைவிடவும் மென்மையைக் காட்டி என்னை அணைப்பவராயிற்றே அவர். அப்படிப்பட்டவர் எப்படி என் பிரிவை மட்டும் தாங்குவார்?'



—சீதைக்குள் இப்போது வேறுவிதமான கேள்வி. அதனால் சிறிது குழப்பம்... அது கண்களில் கண்ணீரை இழுத்து வந்து, அருவி போலப் பெருக்கித் தள்ளியது.

அந்த நொடி அவளது இடக்கண் புருவமும் துடித்தது. அந்தத் துடிப்பு அவளது கண்ணீரைச் சற்று அடக்கி, அவளுக்குள் ஒரு புதுவிதமான நம்பிக்கையை மூட்டியது.

மிதிலா நகரில் குருகுலத்தில் வித்யாப்யாசம் பயின்றபோதும் இப்படி இடக்கண் துடித்தது. அப்போது அவளைப் பொறுத்தவரை, அது ஒரு சாதாரண சம்பவம். ஆனால், அதைக் கவனித்த அவளது குருநாதர், "குழந்தாய், உனக்கு நிறைய நல்வினைவுகள் ஏற்பட இருக்கின்றன. அதன் சமிக்ஞையை, உன் உடல் முன்பே பெற்று எதிரொலிக்கிறது. அதனால்தான்

**இ**ந்த தியான ஸ்லோகம், ஸ்ரீஆதிசங்கர பகவத் பாதாள் அருளியது.

'வாயுபுத்ரனை தியானியுங்கள். அவன் பவித்ராப்த மித்ரன். அதாவது, இணை சொல்ல முடியாத நண்பன். அப்படியே அவன் மனதில் நித்திய வாசம் செய்யும் ராமனையும் தியானியுங்கள். அது எங்கும் துணை வருகின்ற ஒரு சக்தி. அனுமனுக்குள் இருக்கும் ராமன், பாலுக்குள் இருக்கும் நெய்யைப் போன்றவன். ஒன்றைத் தொட்டால் இன்னொன்று தானாகவே வந்துவிடும்' என்கிற பொருளில் ஆதிசங்கரர் உருகிச் சொன்னது இந்த ஆஞ்சநேய புஜங்க ஸ்தோத்திரம். இதன் முதல் பன்னிரு வரிகள் கைகூப்பிய நிலையில் எங்கும் எப்பொழுதும் சொல்லி மனச்சீர்பெற உதவுவது.

ஸ்லோகம்:

*'பிரபந்நாநுராகம் ப்ரபாகாஞ்சநாங்கம்*
*ஜகத் பீதி ஸௌர்யம் துஷாராத்ரி தைர்யம்*
*த்ருணீ பூதஹேதிம் ரணோத்யத் விபூதிம்*
*பஜே வாயுபுத்ரம் பவித்ராப்த மித்ரம்.*
*பஜே ராம ரம்பாவனீ நித்யவாஸம்*
*பஜே பால பாநு ப்ரபாசா ருபாஸம்*
*பஜே சந்த்ரிகா குந்த மந்தார ஹாசம்*
*பஜே சந்ததம் ராம பூபாலதாஸம்*
*பஜே லக்ஷ்மணப்ராண ரக்ஷா திதக்ஷம்*
*பஜே தோஷி தாநேக கீர்வாண பக்ஷம்*
*பஜே கோர ஸங்கிராம ஸீமா ஹதாக்ஷம்*
*பஜே ராம நாமாதி ஸம்ப்ராப்த ரக்ஷம்.'*



இடக்கண் துடிக்கிறது!" என்று கூறினார். மைதிலியும் "அப்படியா!" என்று வாய்பிளந்தாள்.

"ஆம் மகளே... நமது உடல் பஞ்சபூதங்களால் ஆனது. கிரக

சக்கரங்களால் இயக்கப்படுவது. கண்களுக்குப் புலப்படாத அலைவரிசையால், நாம் சர்வலோகங்களுடனும் ஓர் இணைப்போடுதான் எப்போதும் இருக்கிறோம்.

அவரவர் பிறக்கும் வேளைக்கு ஏற்ப, நட்சத்திர நாயகர்களாலும் லக்னாதிபர்களாலும் அவர்களைத் தொட்டு நிற்கும் மற்ற கிரக சஞ்சாரங்களாலும் நாம் ஆளப்படுகிறோம்.

வான்மிசை நிகழும் மாற்றங்கள் நாமே அறியாதபடி நம் உடம்புக்குள்ளும் நிகழ்ந்திருக்கும். இதை உணர்ந்து, யோக குணங்களால் இந்த உடம்பை நிரப்பி வைத்துக் கொள்ள வேண்டும். யோகத்துக்கு எதிரி ஆசைதான்.

ஆசை புகுந்தால் ஆனை புகுந்தாற்போல... அடக்குதல் கடினம்'' என்று இடக் கண்ணின் துடிப்புக்கு நீண்ட விளக்கமளித்தது, அந்த வேளையில் அன்னை ஜானகிக்கு ஞாபகம் வந்தது.

ராவணன் வந்து கவர்ந்து செல்லும்போது வலக்கண் துடித்தது. அந்த நிமித்தமும் அப்படியே பலித்துவிட்டது. இப்போதோ இடக்கண் என்றால், எனக்கு நல்லது நடக்கப் போகிறதா? எனக்கான நல்லது ஒன்றே ஒன்றுதான். அது – எனது பதியின் தரிசனம். அது, ஒருவேளை கிடைக்கப் போகிறதா? சீதைக்குள் மகிழ்ச்சிப் பூவாணம். அந்த வேளையில், அதை உடனே யாரிடமாவது பகிர்ந்துகொள்ள அவளது மனம் துடித்தது.

அந்த அரக்கியர் கூட்டத்தில் அவளையும் புரிந்து, ஆறுதலாக நடக்கத் தெரிந்த ஒருத்தியும் இருந்தாள்.

அவள் பெயர் திரிஜடை. விபீஷணன் புத்ரி!

காவலிருப்பவர்களுக்கு நடுவே, சீதைக்குப் பெரிதாக உத்பாதம் நேர்ந்துவிடக்கூடாது என்று கருதி விபீஷணன், திரிஜடையை அவளோடு இருக்கப் பணித்திருந்தான்.

அவளைத் தேடிச் சென்று எழுப்பிய சீதை முன் திரிஜடையும் “தாயே, என்ன சங்கதி?” என்றுதான் கண்விழித்தாள்.

“திரிஜடை, என் இடக்கண் துடிக்கிறது. பத்து மாதமாக நான் படாத பாடு பட்டுவிட்டேன். நம்பிக்கையாக ஓர் ஒளி தோன்றவில்லை. இன்றுதான் முதன்முதலாக இடக்கண் துடிக்கிறது. இது மிகச் சிறந்த சகுனம்!” என்று சீதை ஒரு

குழந்தை போல குதுகலிக்க...

"அம்மா, நானும் ஒரு சொப்பனம் கண்டேன். அது உங்களுக்கு நன்மை ஏற்படப்போவதை உறுதி செய்கிறது" என்றாள். அந்த சொப்பனம் பற்றி விரிவாகக் கூறத் தொடங்கினாள்.

"எனது பெரியப்பா ராவணன், அவர் புதல்வன் இந்திரஜித், கும்பகர்ணன் ஆகியோர் உடல் முழுக்க தைலம் பூசிக்கொண்டு, சிவப்பு வஸ்திரமும் அணிந்து கொண்டு, கழுதைகள் பூட்டிய ரதத்தில் தென்திசை நோக்கிப் பயணிக்கின்றனர்.

அவர்கள் எமலோகம் நோக்கிச் செல்வதுதான் இதன் உட்பொருள். அதுமட்டுமல்ல, காளையும் சிங்கமும் நட்பு கொண்டு யானையோடு மோதுகின்றன. அதில் யானைகள் மடிந்து விழுகின்றன.

இந்த இலங்கை ஒரு யானைப் பட்டினமும்கூட! காளை, அந்த ஈசனின் வாகனம். சிங்கமோ, அந்த சக்தியின் அம்சம். அவை ஒன்றுகூடி யானையை அழிப்பது என்பது, 'ஈசனும் சக்தியும் ஒன்றுகூடி இலங்கையை அழித்திட நாள் குறித்துவிட்டார்கள்' என்று உணர்த்துவதுபோல்தான் எனக்குப் படுகிறது!" என்று திரிஜடை கூற, சீதை உள்ளம் பூரித்துப் போனாள்.

"திரிஜடை... போ, நன்றாக உறங்கு. இதுபோல கனவு கண்டு, பின் எனக்கும் கூறு..." என்று உற்சாகமானாள்.

இங்கே இவர்கள் பூரித்துக் கொண்டிருக்க, தசக்ரீவனாகிய ராவணன் மாளிகையிலோ வேறுவிதமான எதிரொலி. அவனும் ஒரு கெட்ட சொப்பனம் கண்டு உறக்கம் கலைந்திருந்தான்.

கூடவே, சீதையை அழைத்துச் செல்ல இலங்கைக்குள் யாரோ நுழைந்துவிட்டது போல உள்ளுணர்வு. அதன் எதிரொலியாக, உடனேயே அசோக மரத்தடியில் இருக்கும் சீதையைக் காணப் புறப்பட்டுவிட்டான்.

அவனது வருகையின் எதிரொலியாக, அந்த இரவில் அந்தப் பிராந்தியமே விழித்தெழ, அரக்கியர்கள் எல்லோரும் எழுந்து அணிவகுத்து நின்றனர்.

சிம்சுபா விருட்சத்தில் ஒளிந்து அமர்ந்திருந்த அனுமனும் கூர்மையானான்!

சிம்சுபா விருட்சக்கிளைகளில் தன்னை ஒளித்துக் கொண்டு அனுமன் கூர்மையானான். கீழே சீதையாகிய ஜானகியின் முன்னால் ராவணப் பிரவேசம்.

அரக்கியர்கள் அப்படியே ஒதுங்கி கைகட்டி வாய்மூடி நிற்க ராவணன் வந்து நின்றதில் லேசான ஒருவித பதற்றம். பஞ்சணையில் இருந்து உறக்கத்திற்கு நடுவில் ராவணன் எழுந்து வந்திருப்பதை கலைந்திருக்கும் அவனது உத்தரியங்கள் காட்டிக் கொடுக்கின்றன.

சிரசில் ரத்னக் கிரீடமும் இல்லை. எப்பொழுதும் திருநீறோடு சிவப்பிரகாசம் தகிக்கும் அவன் முகத்தில் இப்பொழுது அவன் கெட்ட கனவு கண்டதன் சுருக்கங்கள்.




எவ்வளவோ முறை சீதையை சந்திக்க அந்த அசோக மரத்தடிக்கு அவன் வந்திருக்கிறான். அப்பொழுதெல்லாம் இல்லாத ஒரு தன்மையை சீதையும் அவனிடம் கண்டாள். கண்டாள் என்பதைவிட உணர்ந்தாள் என்பதே பொருத்தமாக இருக்கும்.

ராவணனை நேருக்கு நேர் பார்ப்பதைக் கூட ஓர் அங்கீகாரமாக அவன் கொண்டுவிடக் கூடும். அதை அவனுக்கு அளித்துவிடக் கூடாது என்று சீதை எண்ணினாள் அது பொருத்தமாக இருக்கும்.

ராவணனை அவளது பாராமுகம் ரொம்பவே படுத்தியது. ஆயிரம் அஸ்திரங்கள் தரும் துன்பத்தைவிட ஓர் அலட்சியம் தருகிற துன்பம் கூர்மையானதல்லவா?



இப்பொழுதும் சீதையிடம் அதே அலட்சியம். திரிஜடையும் ஒதுங்கி நின்று தன் பெரியப்பனை வெறுப்போடு பார்த்தாள். கூடவே இப்படி அர்த்தராத்திரியில் வந்திருக்கும் காரணம் புரியாமல் குழம்பவும் செய்தாள். பதிலை ராவணனே தரத் தொடங்கினான்.

"ஜானகி... இந்த நள்ளிரவில் என்னை நீ துளியும் எதிர்பார்த்திருக்க மாட்டாய் என்பது எனக்குத்தெரியும். ஆனால் உனக்கு ஒரு விஷயம் தெரியாது. உன்னை இழப்பது போல ஒரு சிறு சொப்பனம் கண்டால்கூட என்னால் அதைத் தாளமுடியவில்லை. அந்த அளவிற்கு நீ என்னை ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறாய்.

இப்பொழுது கூட ஒரு குரங்கு வந்து உன்னை தூக்கிச் செல்ல முயல்வது போல ஒரு கனவு கண்டேன். உடனேயே கண்விழித்தேன். கண்டது கனவுதானே என்று அட்சியமாக இருக்க என்னால் முடியவில்லை. அதனால்தான் உன்னைக் காண வந்துவிட்டேன்."

ராவணன் அப்படிச் சொல்லவும்



பாராமுகத்தோடு அமர்ந்திருக்கும் சீதைக்குள்ளும் ஓர் உற்சாகப் பெருக்கு.

'கனவு என்பது ஒரு வகையில் கால கதியின் பாஷை, இங்கே எனக்கோ இடக்கண் துடித்தது! திரிஜடைக்கோ லங்காபுரியே அழிந்துவிடப் போவது போல பொருள் கொள்ளக் கூடிய எமப்பட்டினம் நோக்கிய கழுதை ரதப் பயணக் கனவு... இது போதாது என்று தசகிரீவனுக்கும் கெட்ட சொப்பனம்... பலே!'

சீதையின் அடிமனதில், கிணற்றில் ஊற்று பெருகுவது போல ஒரு புது உற்சாகம். ஆனாலும் அதை வெளிக்காட்டாத அழுத்தமான துச்சமான அதே மௌனம். கண்களிலும் ராவணன் பார்க்கும்படியாக புரண்டு ஒழுகும் கண்ணீர்.

ராவணன் பெருமூச்சு விட்டான். கைகளைக் குத்திப் பிசைந்தும் கொண்டான்.

"ஜானகி... நீ பொய்யான நம்பிக்கைகளால் வீணாகிக் கொண்டிருக்கிறாய். என்னை அடையத் துடிக்கும் பெண்களை நான் பட்டியலிட ஆரம்பித்தால் அதற்கு ஒரு நாள் போதாது. ஆனால் அவர்கள் அத்தனைபேரும் உன் கால் தூசிக்கு சமமாக மாட்டார்கள்...

உன்னை அவ்வளவு உயர்வாக நினைக்கும் என்னை நீ வெறுப்பது மூடத்தனம்.மாதங்கள் பத்தைக் கடந்துவிட்டன.

இன்னமும் அந்த ராமன் வருவான் என்று கனவு காணாதே. என் அறிவிற்கு எட்டியவரையில் கூறுகிறேன். அவன் உன்னைத் தொலைத்த துக்கத்தில் உயிரையே விட்டிருப்பான். ஒரு நரனால் எந்த அளவுக்கு துன்பத்தை தாங்கமுடியும் என்பதை நானறிவேன்.

முதலில் ராஜ்யத்தை இழந்தான். அடுத்து காட்டுவாசியானான். பிறகு உன்னையும் பறிகொடுத்துவிட்டான். மிதிலா ராணியான உன்னை, காட்டிலும் மேட்டிலும் இழுத்தடித்த அவனுக்கு நான் சரியான தண்டனையைத் தந்துவிட்டேன். அவனை நீ எண்ணிக் கொண்டிருப்பது பேதைமையிலும் பேதைமை. ஒருவேளை... ஒருவேளைதான் அதுவும் உனக்குப் புரிவதற்காக எண்ணிப் பார்க்கிறேன். அவன் உயிரோடு இருந்தால் அதனாலும் ஆகிவிடப் போவது ஏதுமில்லை. நான் யாராலும்

வெல்லப்படமுடியாத வரம் பெற்றிருப்பவன்.

உனக்கே தெரியும்... ஊரையும் உலகையும் ஆட்டிப்படைக்கும் கிரகங்கள் என் அரண்மனையில் எனக்கு சேவகம் செய்கின்றன.

மும்மூர்த்திகளில் ஒருவனான பிரம்மனுக்கும் கூட நான்குமுகங்கள்தான். எனக்கோ பத்துமுகங்கள். ஈசனின் மகனான முருகனின் ஆறுமுகங்களையும் நான்முகனின் நான்கு முகங்களையும் சேர்த்து பத்து முகங்கள் பெற்றதில் இருந்து நான் அந்த தேவர்களுக்கும் மேலானவன் என்பது தெரியவில்லையா உனக்கு?

எதற்காக இப்படி உன்னை வதைத்துக் கொள்கிறாய்? என் ராஜ்யத்தில் பரம ஏழை கூட உன் அளவு அழுக்கான ஆடையோடு இருந்ததில்லை. பொன்னாக ஒளிர வேண்டிய உன் மேனியை இப்படியா மண்ணாக மட்க வைத்திருப்பாய்?

ஒரே ஒரு நொடி போதும் உன்னை நான் அபகரிக்க! ஆனால் நீ உளமார என்னை நேசிக்க... அதன்பின் உன்னை அணைப்பதையே நான் பெரிதாக எண்ணுகிறேன்.

மகாராணியாக மண்டோதரி இருக்கிறாளே... என்னை அந்தப்புரத்தில் தாசிபோலதானே வைத்திருப்பீர்கள் என்றெல்லாம் நீ கேட்க நினைத்தால் தாராளமாகக் கேள்.

நீ என்னை ஒப்புக்கொண்ட மறுநொடி நீதான் இந்த லங்கைக்கு ராணி. அந்த மண்டோதரி உன் பாதங்களை பிடித்துவிடும் சேடியாகிவிடுவாள். அதன்பின் நீ வைப்பதுதான் சட்டம்....."

– ராவணனின் நீண்ட விளக்கத்தில் அவன் அவளை லங்காபுரி ராணி என்று கூறியது அவள் காதுகளில் ஈட்டியாக பாய்ந்ததோ என்னவோ ... சரேலென்று காதுகளைப் பொத்திக் கொண்டவள் அப்படியே இடிக்கு பயந்த நாகம்போல உடம்பை ஒடுக்கிக் கொண்டு "போதும் நிறுத்து... நீ இனி ஒரு வார்த்தை பேசினாலும் நான் இங்கே உன் எதிரிலேயே மூச்சையடக்கி ஆத்மஹத்தி செய்து கொண்டு விடுவேன். என் வைராக்கியத்தில் உனக்கு சந்தேகம் இருந்தால் இங்கே நின்று நீ உனது வழக்கமான பிரதாபங்களைச் சொல்லிக் கொண்டேயிரு. ஆனால் என் பிணத்தின் செவிகளில் அது விழவே விழாது" என்று பீறிட்டாள்.





**என் பிராண நாதரின் பாணம் உன்னைத் துளையிட்டு அழிக்க வேண்டும். உன் அடாத செயலுக்கு அப்படி ஒரு முடிவு ஏற்பட்டாலே அது நாளைய பல சீதைகளுக்கு நெஞ்சுரம் தருவதாக இருக்கும்.**

**உலகமாயை என்பதே இப்படித்தான். அது வினாடிக்கு வினாடி மனதை ஆட்டிவைக்கும் அதற்கு சராசரி மனிதரும் சரி, லக்ஷ்மியின் அம்சமான சீதையும் சரி விதிவிலக்கில்லை. மனிதப்பிறப்பெடுத்து, அந்த தேகத்திலிருப்பதால் அதற்குண்டான குணங்களை எல்லாம் புத்தியானது வெளிக்காட்டவே செய்யும்.**

பின் தீர்க்கமாக பேசத்தொடங்கினாள்.

"ஆத்மஹத்தி என் நாதனை செயலற்றவராக ஆக்கிவிடும் என்பதாலும், அவர் வருவார், உன்னை வதம் செய்து என்னை மீட்டுச் செல்வார் என்கிற எனது நம்பிக்கை பொய்யாகி விடக்கூடாது என்பதாலேயுமே நான் உயிரோடு இருக்கிறேன். நான் ஏதோ தடுமாற்றத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டு இருக்கிறாய். எறும்பூரக் கல்லும் தேயும் என்பதுபோல நீ முயற்சிப்பதெல்லாம் கடலில் .பெய்த மழையைப்போல வீணானது என்பதை புரிந்து கொள்.

ஒரு தலைக்கு பத்துத்தலைகள் உனக்கு இருப்பதை நீ பெருமையாக கருதுகிறாய். உனக்கு பத்து தலைகளை இறைவன் அளித்திருப்பது ஏதாவது ஒரு தலையாவது தர்மப்படி நடக்கவேண்டும் என்று எண்ணி உன்னை வழிநடத்தினால் கூட போதும்; நீ தப்பித்து விடுவாய் என்பதற்காகத்தான்.... ஆனால் உனது ஒவ்வொரு சிரசுமே காமவெறியிலும் அதிகார மமதையிலும், நான் என்கிற கர்வத்திலும் ஊறிக்கிடக்கின்றன. அதனால்தான் தீண்டக்கூடாத என்னை தீண்டத் துடிக்கிறாய்.

என் பிராண நாதரின் பாணம் உன்னைத் துளையிட்டு அழிக்க வேண்டும். உன் அடாத செயலுக்கு அப்படி ஒரு முடிவு ஏற்பட்டாலே அது நாளைய பல சீதைகளுக்கு நெஞ்சுரம் தருவதாக இருக்கும். உன்போல் ராவணர்களும் தோன்றாமல்

இருப்பார்கள்.

எனவே நீசனான நீ இங்கிருந்து ஓடிப்போய்விடு. உன் துர்சொப்பனம் பலிக்கப்போவதை இந்த உலகம் பார்க்கட்டும்.

நான் கூறுவது நிச்சயம் நடக்கும். இது சத்தியம்... இது சத்தியம்...” என்று ஒரு பாட்டம் கடல்போல பொங்கிய சீதை அப்படியே மயங்கி விழுந்தாள்.

விருட்சக்கிளையில் ஒளிந்தபடி அவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்த அனுமனின் விழிகளிலும் அதன் எதிரொலியாக கண்ணீரின் பெருக்கு. அப்படியே நாடி நரம்புகளில் எல்லாம் ராவணனை வதம் செய்யத் துடிக்கும் துடிப்பு.



ஆனாலும் ‘ராம பாணத்தால் ராவணன் அழிவது தான் சிறப்பு’ என அன்னை ஜானகியே எண்ணும்போது முந்திரிக் கொட்டை போல தான் துடிப்பது தவறு என்று அடக்கிக்கொண்டான். ராவணனும் சினத்தால் சிவந்து ஓர் அனல்பந்து போல ஆகிவிட்டிருந்தான். சூழ்ந்து நிற்கும் அரக்கியர்களைப் பார்த்தான்.

“நீங்கள் யாரும் என் பெருமைகளை இவளிடம் கூறியிருக்கவில்லை. அதனால்தான் இவள் இந்த அளவு பேசுகிறாள்.

இப்பொழுதும் கெட்டுவிடவில்லை. இன்னும் இரண்டு மாத கால அவகாசம் தருகிறேன். இதுதான் இறுதி வாய்ப்பு. இவள் மனம் மாறாவிட்டால் முதலில் உங்களை சம்கரிப்பேன். பின் இவளையும் சம்காரம் செய்து அப்படியே புசித்துவிடுவேன். இது சத்தியம்” என்று ஆவேசமாக தொடை தட்டியபடி அங்கிருந்து நகர்ந்தான்.

**இ**ந்த தியான ஸ்லோகம் வால்மீகி ராமாயணத்தில் வால்மீகியாலேயே பாடப்பெற்றதாகும்.

இந்த பூமியே பஞ்சபூதங்களால் ஆனதால், அந்த பூதங்களில் ஒன்றின் புதல்வர் அனுமன் என்பதால் அவரும் ஒரு பஞ்சபூத அம்சமானவர். இந்த பஞ்ச பூதங்களை ஒரே சமயத்தில் விஸ்வரூப தரிசனம் செய்ய ஏற்ற ஒரே இடம் கடற்கரை. இங்கே மட்டும்தான் நாம் அளப்பரிய நீரைக் காணமுடியும். அதே அளவு ஆகாயத்தையும், காற்றையும், நிலப் பரப்பையும், கூடவே ஆகாயஜோதியாய், அக்னிப் பிழம்பாய் உள்ள சூரியனையும் ஒருசேர காணமுடியும்.

அதனால்தான் கடற்கரைக்கு சென்ற உடன் நமது உடம்பில் பரவசமும் புத்துணர்வும் ஏற்படுகிறது. கடற்கரையில் நின்றுகொண்டு ஜெயிப்பதும் தியானிப்பதும் அதீத பலன்களை தரவல்லது. பஞ்ச பூதங்களின் விசையில் இங்கேதான் தங்குதடை இல்லாமல் இருக்கும்.

இப்படிப்பட்ட கடற்கரையில் நின்றுகொண்டு தீர்க்கமாக தியானிக்க ஏற்ற ஒரு ஸ்லோகமும் உள்ளது.

*அவன் அப்படிச் சொன்னதன் எதிரொலி அந்த அரக்கியர்களை எல்லாம் உசுப்பி விட அவர்கள் தங்கள் கோர உடலுடன் 'ஹோ' என்ற இரைச்சலுடன் சீதையை சூழ்ந்து நிற்கத் தொடங்கினர்.*

*"எங்கள் ராஜாவை நீ ரொம்பத்தான் சோதிக்கிறாய். அவர் இப்படி யாருக்காகவும் காத்திருந்து நாங்கள் பார்த்ததேயில்லை!" என்று பேச ஆரம்பித்து இறுதியாக அவளை துளியும் புத்தியின்றி தங்கள் ராட்சஸ குணத்துக்கே உரிய ஆவேசத்தோடு மிரட்டவும் செய்தனர். நல்லவேளை திரிஜடை அங்கு இருந்ததால் அவர்களை எல்லாம் அடக்க முடிந்தது. காக்கையை விரட்டுவது போல அவ்வளவு பேரையும் விரட்டிய திரிஜடை*

*'கோஷ்பதீ க்ருத வாராசிம்*
*மசகீ க்ருத ராக்ஷஸம்*
*ராமாயண மஹாமாலா*
*ரத்னம் வந்தே (அ)நிலாத்மஜம்!'*

'கடலை ஒரு பசுவின் குளம்படி நீரைப்போல கருதியவரும், அசுரர்களை சின்னஞ்சிறு பூச்சிகளாக கருதி வதம் செய்தவரும், ராமாயணத்தின் உன்னத ரத்னமாகவே திகழ்பவருமாகிய வாயு குமாரனை தியானிக்கிறேன்' என்பது பொருள்.

கவிதைக்கு பொய் அழகு என்பார்கள். மிகை கூட ஒருவகையில் பொய்யோடு சேர்ந்ததுதான். ஆனால் இந்த ஸ்லோகத்தின் பொருளில் பொய்யோ மிகையோ இல்லை. காரணம் அஞ்சனை மைந்தனின் திறம் அந்த அளவு பெரியது.

அத்தனை பெரிய சாகஸங்களை நாம் தியானிக்கும்போது நமது வாழ்க்கை இடர்கள் கண்ணுக்குத் தெரியாத தூசிபோலாகி நம்மையே பலவானாக்கி விடுகிறது.

அந்த மாயம் நமக்குள் நடக்க இந்த தியானம் பெருந்துணை செய்யக் கூடியது.

சீதையிடம் வந்து பெருமூச்சோடு கண்ணீர் பெருக நின்றாள். சீதையோ நொறுங்கிப் போய்விட்டாள். பொழுதோ விடியலை நோக்கிச் சென்றபடி இருந்தது.

"அம்மா... நடந்த அவ்வளவையும் ஒரு சொப்புனமாகக் கருதுங்கள். துளியாவது உறங்குங்கள். உங்களைப் பார்த்தால் எங்கே உங்களுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று என் மனது கிடந்து நடுங்குகிறது.

பெரியப்பா பேச்சையோ, இந்த அரக்கியர்கள் கூச்சலையோ ஒரு பொருட்டாக கருதாதீர்கள். நிச்சயம் நல்லது நடக்கும். நான் கண்ட சொப்பனம் பலிக்கும்" என்று திரிஜடையும் பலவாறு ஆறுதல் சொல்லிவிட்டு அவளைத் தனிமையில்

விட்டுச் சென்றாள்.

ஆனால் சீதையோ நடந்த சம்பவங்களால் பெரிதும் உடைந்து போயிருந்தாள். 'பொழுது வேண்டுமானால் விடியலாம்... என் வாழ்வு விடியாது' என்றே அவள் மனம் எண்ணி நடுங்கியது. 'பத்துமாதங்களாக வராத நாதர் இனி இருக்கும் தவணைக் காலமான இரண்டு மாதத்தில் வந்து என்னை மீட்டுச் சொல்வாரா?'–அவளுக்குள் முதல்முறையாக சந்தேகமின்னல் கிளைத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தது.

'ஐய்யோ இந்த ராவணன் தனக்கு ஒரு கண் போனாலும் பிறருக்கு இரு கண் போகவேண்டும் என்று எண்ணும் மனிதனாயிற்றே? கெஞ்சிப் பார்த்தேன் ஒன்றும் நடக்கவில்லை. இனி மிஞ்சிப்போய் அழித்து விடவேண்டியதுதான் என்று என்னை அழித்துவிட்டால் என் வைராக்யம் என்னாவது? இவன் கையால் சாவதற்கா இங்கே இப்படி நான் காத்திருக்கவேண்டும்? அதற்கு ஆத்மஹத்தி ஆயிரம் மடங்கு மேலானதாயிற்றே? இறுதிவரை ஜானகி ராவணனுக்கு ஆட்படவில்லை அதைவிட உயிரை விடுவது மேல் என்று எண்ணி உயிரை விட்டுவிட்டாள் என்று உலகம் பேசுவது நல்லதா; இல்லை... அவனால் அழிக்கப்படுவது நல்லதா?'

சீதைக்குள் குழப்ப மேகங்கள் ஒன்றுதிரள, வைராக்ய மனோபாவம் பலவீனப்பட்டு நடுநடுங்க, அதன் எதிரொலியாக புத்தியிலும் அனர்த்தமான முடிவுகள்.

உலகமாயை என்பதே இப்படித்தான். அது வினாடிக்கு வினாடி மனதை ஆட்டிவைக்கும் அதற்கு சராசரி மனிதரும் சரி, லக்ஷ்மியின் அம்சமான சீதையும் சரி விதிவிலக்கில்லை. மனிதப்பிறப்பெடுத்து, அந்த தேகத்திலிருப்பதால் அதற்குண்டான குணங்களை எல்லாம் புத்தியானது வெளிக்காட்டவே செய்யும்.

இப்படியும் சொல்லலாம்... அதேசமயம் ஒரு நல்ல ஆரம்பத்திற்குக் கூட மனது இப்படி அலைபாயலாம். காலில் எலும்பு முறிந்து 'கீழே விழுந்து விட்டவர்களைப் பற்றி. கீழே விழுந்தால் அவர்கள் கால் எலும்பு முறிந்தததா இல்லை எலும்பு முறிந்ததால் அவர்கள் கீழே விழுந்தார்களா?' என்று கேட்பார்கள்.

அப்படித்தான் சீதைக்கும் கூட... ஒரு புதிய நம்பிக்கை ஒன்று

திரண்டு வெளியேற வேண்டுமல்லவா?

சீதையை அது ஆத்மஹத்திக்கு தயார்படுத்தியது. சீதையும் எழுந்து நின்றாள். அரக்கியர்கள் ஒதுங்கிய நிலையில் உறக்கத்தில் கிடந்தனர்.

இதுதான் சந்தர்ப்பம் என்று எண்ணியவள் அந்த அசோக மரக்கிளையிலேயே தூக்கு மாட்டிக் கொண்டுவிட முனைந்து அதற்காக தயாரானபோது அதை கண்கொட்டாமல் பார்த்தபடி இருந்த அனுமனுக்கு நெஞ்சு கிடந்து பதைத்தது.

'மாதா! என்ன இது விபரீதம்? நாதன் வருவார். உன் உயிரை வதைத்து என்னை மீட்டுச் சொல்வார் என்று சற்றுமுன் ராவணன் எதிரில் சூரியனாய் ஜொலித்தீர்களே... எப்படி அதற்குள் இப்படி நிலவாகி அதிலும் தேயத் தொடங்கி விட்டீர்கள்?' என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டவன் சீதைமுன் தோன்றி தடுக்கலாமா என்றுதான் முதலில் எண்ணினான். ஆனால் தனது தோற்றத்தையும் அரக்கியர் தோற்றம் போலக்கருதியோ... இல்லை ராவணன்தான் மாறுவேடத்தில் வந்திருக்கிறான் என்றோ நினைத்துவிட்டால் விபரீதமாகி விடும். அரக்கியர்களும் எழுந்து விடுவார்கள் என்று எண்ணிய அனுமனின் புத்தி சாதுர்யம் சீதையைத் தடுத்து நிறுத்த ஒரே ஒரு சொல்லால் மட்டுமே முடியும் என்று சட்டென்று புத்திப் பிரகாசமாகியவன் அந்த மந்திரச் சொல்லான ராம நாமத்தை மரத்தில் அமர்ந்திருந்த நிலையில் மென்மையாக உச்சரிக்கத் தொடங்கினான்.

அந்த அதிகாலைவேளையில் 'ராம்... ராம்... ராம்... ராம்...' என்கிற அந்த மந்திரச் சொல்லும் காற்றின் மிசை பரவி சீதையின் செவிகளை அடைய... அவளுக்குள் ஒரு புது ஒளி!

‘ராம்... ராம்... ஜெய்ராம்...
ராம்... ராம்... ஜெய் ஜெய் ராம்...
ராம்... ராம்... ராம்...’

அனுமன் உச்சரிக்கத் தொடங்கிய ராம நாமம், வெள்ளத்தை தேக்கிப் பிடித்து நிறுத்திய அணைபோல, சீதையின் தற்கொலை முயற்சியை அப்படியே தடுத்து நிறுத்தி விட்டது.

மொழியின்பால் உள்ள சொற்கள், அதற்கான பொருளைத் தான் மனதில் தோற்றுவிக்கும். ஆனால், ராம நாமமோ உயிர்க்கூட்டின் பூட்டையே திறக்கும் ஒரு சாவி.

‘எங்கிருந்து வந்தது இந்த ராம நாமம்?’ என்று சீதை விக்கித்தாள். ‘ஒருவேளை, எதற்கு இந்த உயிர் என்று




உதிர்த்துவிட முனையும் போது, அதுதான் உன் வரையில் நான் ராம நாமமாகவே இருக்கிறேனே என்று என்னிடமே என்னைக் காட்டுகிறதா?’

அந்த இரவுக் காலத்தில் உருண்டு புரண்டு கிடக்கும் அரக்கியர் கூட்டத்துக்குள் எல்லாம் பார்வையை விட்டாள். அவர்களில் யாராவது ராம நாமத்தை கூறுகின்றனரா? அவர்கள் எண்ணிக்கூட பார்க்க விரும்பாத ஒரு சொல் ஆயிற்றே அது.

சீதையிடம்கூட “எங்கள் ராஜா இப்படித் தவித்து நாங்கள் பார்த்தது இல்லை. நீ மட்டும் அவர் இச்சைக்குக் கட்டுப்பட்டு விட்டால், உலகையே உள்ளங்கையில் வசப்படுத்திவிட்ட ஒரு ராணியாக நொடியில் ஆகிவிடுவாய்... யாருக்குக் கிடைக்கும் இப்படி ஒரு பாக்யம்?” என்று மோவாயில் கை வைத்து வியந்தவர்கள்தானே இவர்கள்... இவர்களா ராம நாமத்தைக் கூறுவார்கள்?



சீதை கேள்விகளின் பிடியில் உழன்றபோது சிம்சுபா மரக் கிளையில் அமர்ந்திருந்த அனுமனும் ராம நாமத்தால் சீதை தற்கொலை எண்ணத்தைத் தாண்டிவிட்டதைப் பார்த்து மனதுக்குள் மகிழ்ந்து போனான்.

அப்படியே சீதையின் மனத்துயரை மாற்ற ராமநாமத்தை தொடர்ந்து ராம கதையையும் கூற ஆரம்பித்தான்.

குயவனின் விரல் பக்குவம், பானை உருண்டு திரளும்போது உடைந்திடாதபடி பார்த்துக் கொள்வதோடு அந்தப் பானைக்கு ஒரு முழு வடிவத்தையும் கொடுத்து அதன் வளைமுகத்தில் சில நெளிவேலைகளையும் செய்து பரிபூரணமான ஒரு பானைக்கு எல்லா முயற்சிகளும் செய்யும்.

அந்த முயற்சியின்போது மனது வேறு எதிலும் இராது. மனத்தின் விசைப்பாட்டில் கண்கள் கூர்ந்து பார்க்க, கையிரண்டும் உரிய ஏற்ற இறக்கத்தில் பானையை உருவாக்கி, அதை அப்படியே அமுதகலசத்தைப் போல ஏந்திப் பிடிக்கும்.



அனுமனின் ராம நாமமும் குயவனின் முனைப்பு போல அப்படியே ராமகதைக்குள் புகுந்துவிட்டது.

அது அவனறிந்த கதை. அதில் அவனது ரசானுபவமும் உணர்ச்சிகளும் சேர்ந்துதான் இருக்கும். அவன் கூறத் தொடங்கிய ராம கதையிலும் அது அமிர்தம் சேர்ந்தாற்போல கலந்தே எதிரொலிக்க தொடங்கியது.

ராம்...

ஸ்ரீராம்...

ஜெயராம்...

இந்த நாமத்துக்குரியவன் இக்ஷ்வாகு குலத்தில் வந்தவன். ஒரு ரதத்தில் ஏறிவருவதையே மகாபெரிதாக எண்ணும் ராஜ வாழ்க்கையில், தசரதங்களைக் கொண்ட மாமன்னனான தசரதனின் மூத்த புத்திரன் இவன். எல்லோர்க்கும் தன்னை ஈன்றவள் ஒருத்திதான் தாயாவாள். ஆனால், ஸ்ரீ ராமனுக்கோ ஈன்றவளோடு சேர்த்து மொத்தம் மூன்று மாதாக்கள். மாதாக்கள் மட்டுமா? சகோதரர்களும் மூவர். லட்சுமணன், பரதன், சத்ருக்னன் என்னும் அம்மூவரும் அண்ணலுக்கு வாய்த்த மும்மூர்த்தியர்.

இவர்களை இக்ஷ்வாகு குலத்தின் வாரிசுகளாகத்தான் முதலில் கருதினார் தசரத மகாசக்ரவர்த்தி. ஆனால், அதை மாற்றுவதற்காகவே வந்தார் ராஜரிஷி விஸ்வாமித்திரர். கானகத்தில் தவமியற்றும்போது அதைத் தடுத்தும் அடுத்தும் கெடுத்தும் ஆட்டம் போடும் அரக்கியர் வதத்துக்காக ராம லட்சுமணரைக் கேட்டார். ராஜா தசரதர் தந்தை தசரதராகி சிந்தை குமைந்தார்.

'பாலகர்கள் எப்படி பராக்கிரமசாலிகளாவார்கள்?' என்றும் பயந்தார்.

"பராக்கிரமசாலிகள்தான் உன் வரையில் பாலகர்களாவே உள்ளனர். இவர்களின் ஜாதக விசேஷம் பற்றி நீ அறியாய். நீரால் மட்டுமே நெருப்பை அணைக்க இயலும். அதுபோல, இவர்களால் மட்டுமே சிலர் கொழுப்பை அடக்க முடியும். நாளைய சாதனைக்கு ஓர் ஒத்திகை நிகழ்ச்சிதான் நடக்கப் போகிறது" என்று ராஜரிஷி பிலா, அதிபலா மந்திரங்களை உபதேசித்து அண்ணலின் வரையில் முனித் தொண்டாற்றிச் சென்றார். முதல் தொண்டாற்றியும் சென்றார். அரக்கியர்

அழிந்தனர்–பாலகர் நிமிர்ந்தனர். அவர்கள்பால் பல பார்வையும் மாறியது!

வந்தது மணப்பருவம்... வாவென்றழைத்தது சிவதனுசு!

தனுசை முறித்தால் மிதிலாமகளே பரிசு. முறித்திட பரவசத்தில் நிமிர்ந்தது மைதிலியவள் சிரசு!

எங்கள் ஜெயராமன் சீதாராமனுமாகிட, கழிந்தது பன்னிரண்டு ஆண்டுகள்.

அயோத்தியரசரும் களைத்தார். மூத்தவன் ராமனுக்கே முறைப்படி பட்டம் கட்ட நினைத்தார்.

முடியாது போனது கைகேயியால்... கைகேயி கெட்டதோ மந்தரையால்.

சக உதிரன் பரதன் நாடாளவும், யுக தருமன் ராமன் காடாளவும், வரத்தின் திறத்தால் ராமராஜ்யம் வராது தடுத்தாள் கைகேயி.

இலக்குவனுடன் அண்ணலும் புறப்பட்டார் காடு நோக்கி ஆவியாய் உடன் தொடர்ந்தாள் மிதிலா வைதேகி.

பாவியாம் ராவணன் தங்கை சூர்ப்பநகையால் தொலைந்தது எங்கள் அண்ணலிடம் புன்னகை.

அண்ணல் மேல் மயக்கம் ராவணனின் தங்கைக்கென்றால்... அன்னை மேல் மயக்கம் அந்த ராவணனுக்கு!

வந்துவிட்டது விதியோடு கொடிய பிணக்கு. பொன் மான் வந்திட பெண்மான் மயங்கியதும் அதனுடைய கணக்கு. ராவணசதியால் வந்துவிட்டது வழக்கு.

நடந்ததை அறியாத நாயகனாம் ராமனும் உடைந்தார் உள்ளத்தால்... நயனங்கள் மூழ்கின கண்ணீர் வெள்ளத்தால்!

இடையினில் ஏற்பட்டது வானரர் தலைவன் சுக்ரீவன் நட்பு. அந்த நட்பாலே அறிய வந்தது ராவணன் செருப்பு.

அதை அடக்கவும், அன்னை இருக்குமிடம் அறியவும் கதை தூக்கிப் பறந்தவன் ஒருவன்... அஞ்சனை புதல்வன், அவன் பெயர் அனுமன்!

அனுமனும் கண்டானே அன்னையை... அன்னை அறிவாளோ இந்த உண்மையை?'

– அனுமன் ராம நாமத்தைத் தொட்டுச் சொன்ன ராமகதை சீதையைத் திக்கு முக்காடவைத்தது.



இந்த இலங்கையில் உங்களை நான் தேடாத இடம் இல்லை. என் காலடி படாத இடமும் இல்லை. உங்களைத் தவிர அவ்வளவு பேரையும் கண்டேன். எங்கே உங்களைக் காணாமல் போய்விடுவேனோ என்று கலங்கிய நான் களைத்து அமர்ந்தபோது, என்னைக் கைதூக்கி விட்டதும் அண்ணலின் நாமம்தான். நல்லவேளை, உங்களை இங்கே நான் கண்டேன். அதுவும் உரிய வேளையில் கண்டேன்.

"யாரது... யாரிந்த வரலாற்றைக் கூறியது... அரக்கனின் வனத்தில் இரக்கனின் கதையைக் கூறியது யார்... யார்?" – சீதையும் அரற்றினாள். அதற்குமேல் மறைந்தே கிடக்க அனுமனுக்கும் பிடிக்கவில்லை.

மரத்தினின்று குதித்து உரிய வடிவில் அவள் எதிரில் தோன்றி, "அம்மா வணக்கம்... தாயே வணக்கம்... அடியேன் அனுமன், வாயுபுத்திரன்! நானே உரைத்தேன். தேனே போன்ற என் தேவனின் கதையை..." என்றான்.

உடம்பு நடுங்கிட, கைகள் வணங்கி நிற்க, பணிவோடும் பரவசத்தோடும் பேசிய அனுமனை முதன்முதலாகப் பார்த்த சீதைக்குள் ஒரு ஆச்சரியத் திகைப்பு.

ராவண ராஜ்யத்தில் அவள் காணாத ஒரு விலங்கு குரங்கு. 'அதன் வடிவில் ஒரு மனிதனா? ஒருவேளை ராவணன் இப்படி ஒரு வடிவில் வந்திருக்கிறானா? அவன்தான் பெரிய மாயாவியாயிற்றே? என்னை அபகரிக்க வந்தபோது சன்யாசி... இப்போது குரங்கு ரூபத்திலா..!' – சீதையின் சந்தேகம் அவள் கண்களில் வழிந்தது. அனுமனும் அதை உணர்ந்தான்.

"அம்மா... நான் யாரென்பதில் தங்களிடம் பெரும் பயமும், குழப்பமும் நிலவுவதைப் பார்க்கிறேன். அச்சம் வேண்டாம். நான் மரத்தின் மேலிருந்து உரைத்ததுபோல நான் வானர அரசன் சுக்ரீவனின் மதியூக மந்திரி. வாயுபுத்திரன். அஞ்சனை மைந்தன். அனுமன் என் பெயர். நான் ராமகதையைக் கூறியதுகூட தாங்கள் என்னை முழுமையாக அறியவேண்டும் என்பதற்காக மட்டுமல்ல... அது ஒன்றுதான் உங்களை ஆத்மஹத்தி செய்து கொள்ளாதபடி தடுக்கும் என்பதால் தான்!

இந்த இலங்கையில் உங்களை நான் தேடாத இடம் இல்லை. என் காலடி படாத இடமும் இல்லை. உங்களைத் தவிர அவ்வளவு பேரையும் கண்டேன். எங்கே உங்களைக் காணாமல் போய்விடுவேனோ என்று கலங்கிய நான் களைத்து அமர்ந்தபோது, என்னைக் கைதூக்கி விட்டதும் அண்ணலின் நாமம்தான். நல்லவேளை, உங்களை இங்கே நான் கண்டேன். அதுவும் உரிய வேளையில் கண்டேன். இல்லாவிட்டால் அண்ணலின் முயற்சி, எனது தேடல், எனது வானரக் கூட்டத்தின் எதிர்பார்ப்பு என்று அனைத்தும் பாழாகியிருக்கும்.

குறிப்பாக, ராவணனுக்கு ஒரு பாடம் கற்பிப்பதில் பெரிய பிழை ஏற்பட்டிருக்கும்...!"

– அனுமன் ஒரே மூச்சில் தான் நினைப்பதை எல்லாம் சீதை முன் கொட்டினான். அப்பொழுதும் சீதையிடம் தயக்கம்.

அந்த அளவு ராவணன் அவளை பல மாயைகள் புரிந்து குழப்பியிருந்தான்.

விருப்பமில்லாத மகளிரைத் தீண்டினால், அவன் தலை சுக்குநூறாகிப் போகும் என்னும் பிரம்ம சாபம்தான் ஒரு வேலியை உருவாக்கி, சீதையைக் காப்பாற்றிக்கொண்டும் இருந்தது.

சீதையைக் கவர ராமன் வேடம் போடக்கூட ராவணன் தயாரானான். ஆனால், அந்த வேடம் தாங்கிய மறுகணமே அவனது புலன்களிடம் ஒரு அபார மாற்றம். எந்தப் பெண்ணையும் அவனால் காமப் பார்வையே பார்க்க முடியவில்லை.

வேடத்துக்கே இத்தனை சக்தியா என்று அவன் வெலவெலத்துப்போய் அதன்பின் அவன் ராமனைப் போல மட்டும் வேடம் போட எண்ணவேயில்லை. இப்படி சீதையை வழிக்குக் கொண்டுவர அவன் செய்திருந்த ஏராளமான முயற்சிகள் சீதையை குழப்பி, அவளை தடுத்து நிறுத்தியதில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை.

இப்படி எல்லாம் நிகழும் என்று தெரிந்துதானே அண்ணல் அவனிடம் தனது கணையாழியைக் கொடுத்திருந்தார்?

"சீதையைக் காணும் சமயம் இந்த கணையாழியைக் காட்டு. சீதை முகத்தில் நீ ஒரு தாமரையைப் பார்க்கலாம். இதன்பின் உள்ள ரசமான சங்கதிகளை அவள் ஒருத்தியே அறிவாள்" என்று அண்ணல் கூறியிருந்தது அனுமனின் நினைவில் முந்தியது. இடையாடைக்குள் பத்திரமாகவும் இருந்தது அந்த கணையாழி. அதை வேகமாக கைகளில் எடுத்தவன்,

"தாயே... இதோ உங்கள் நாதர் தங்களிடம் தருவதற்கு என்று என்னிடம் தந்த கணையாழி. இதைப் பார்த்தாலே உங்கள் முகம் மலர்ந்துவிடும் என்றார். நானோர் ராம தூதனே என்பதற்கு இதைவிட ஒரு பெரிய சாட்சி இருக்க முடியாது. பாருங்கள்..." என்றபடியே அதை சீதையின் கரங்களில் சேர்த்தான்.

அதை உற்றுப் பார்த்த சீதை, அப்படியே உண்மையான பரவசத்துக்கு மாற ஆரம்பித்தாள். கண்களில் வைத்து அதை ஒற்றிக் கொண்டவள், தலை உச்சியில் வைத்தும் மகிழ்ந்தாள்.

"அம்மா... இங்கே நீங்கள் இந்த கணையாழியைப் பார்த்து பரவசப்படுகிற மாதிரிதான் புஷ்பக விமானத்தில் தாங்கள் ராவணனால் கடத்தப்பட்டபோது தாங்கள் உதிர்த்துப் போட்ட நகைகளைப் பார்த்து அண்ணலும் பரவசப்பட்டார். அந்தப் பரவசம் அப்படியே துக்கமாக மாறி 'சீதா... சீதா...' என்று உங்களை எண்ணி புலம்ப வைத்துவிட்டது. மாவீரர்கள் அழுவதைப் பார்க்க யாரால் ரசிக்க முடியும்? அதேசமயம் இதயம் இருப்பதால்தானே அழுகிறார்?

இதைவிட ரசமான ஒரு அனுபவத்தையும் நான் பெற்றேன். தாங்கள் கழற்றிப் போட்ட நகைகளைச் சேமித்து வைத்து, அது தங்களுடையதுதானா என்று அறிந்து கொள்வதற்காக அண்ணலின் இளவல் லட்சுமணனிடம் காட்டியபோது அதில் உள்ள பாத அணியைப் பார்த்து, 'இது என் அண்ணியும் அன்னையுமானவரின் அணிகலன்தான். மற்றவை பற்றி தெரியாது. ஏன் என்றால் அண்ணியாரை வணங்கும்போது நான் அவர் பாதத்தில் இந்த அணியை பார்த்திருக்கிறேன். மற்றபடி நிமிர்ந்து நேருக்கு நேர் அண்ணியாரை நான் பார்த்தது இல்லை. ஆகையால் மற்ற அணிகள் பற்றி எனக்கு தெரியவில்லை' என்றார்.

அம்மா, உங்கள் முன் நிமிர்ந்து இவை பற்றி எல்லாம் பேசப் போய் என்னை பணிவில்லாதவனாக தாங்கள் கருதி விடுவீர்களோ என்று எனக்கு அச்சமாகக்கூட உள்ளது.

என்னைப் பற்றி தாங்கள் எண்ணுவது எதுவானாலும் கவலையில்லை... நான் கூறுவது சத்யம் என்று உணர்ந்தால் போதும்.

கடலின் மறுபக்கம் சேதுக்கரையில் தங்கள் பிராண நாதர் எங்கள் வானர சேனையுடன் தயாராக இருக்கிறார். தாங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பது தெரிந்தால் போதும். அங்குள்ள எண்பதாயிரம் பேர் கொண்ட படை புறப்பட்டுவிடும். இந்த இலங்கையும் தூள் தூளாகிவிடும். இதை நீங்கள் வெகு விரைவில் பார்க்கத்தான் போகிறீர்கள்..." என்றான் அனுமன்.

சீதையால் அதற்குமேல் அனுமனை சந்தேகிக்க

## அனுமனே சொன்ன ஸ்லோகம்!

ஸ்ரீராமர், சீதையை மீட்டு அயோத்திக்குத் திரும்பியதும், அவருக்கு அங்கே பட்டாபிஷேக வைபவம் நடைபெறுகிறது. அவ்வேளையில் ஸ்ரீராமபிரானை, ஜெயராமனாகவும், சீதாராமனாகவும், கோதண்ட ராமனாகவும், ராஜாராமனாகவும் நான்கு நிலைகளில் அனுமன் காண்கிறான். மனம் நெகிழ்ந்து துதி செய்கிறான். அவனது துதியை 'ஸ்ரீசீதாராம ஸ்தோத்ரம்' என்று அன்பர்கள் பாராயணம் செய்து வருகின்றனர்.

23 வரிகள் கொண்ட அந்த ஸ்தோத்ரத்தின் இறுதி ஐந்து வரிகள் மனதை நடுநிலைப்படுத்தி தியானிக்க ஏற்றது. நல்ல காரியங்கள் நடைபெறும் முகூர்த்த காலங்களில் அதைப் பார்த்துக்கொண்டே மனதுக்குள் இந்த வரிகளைக் கூறுவது அனுமனையே நாம் அங்கே அழைப்பதற்கு ஈடாகிவிடும். அந்த நற்காரியமும் துலங்கும்.

*'அநேக ஸ்தௌதிய: ஸ்துத்யம் ராமம் ஸீதாம்ச பக்தித:*
*தஸ்ய தௌ தனுதாம் புண்யாஸ்ஸம்பத: ஸகலார்த்ததா:*
*ஏவம் ஸ்ரீராமச்சந்த்ரஸ்ய ஜானகியார்ச விஸேஷத:॥*
*க்ருதம் ஹனுமதா புண்யம் ஸ்தோத்ரம் ஸத்யோ விமுக்திதம்।*
*ய: படேத்ப்ராதருத்தாய ஸர்வான் காமான வாப்னுயாத்॥'*

முடியவில்லை.

அனுமனை அங்கே தனக்கு உயிரோடு ஒளியும் கொடுத்த ஒருவனாகவே பார்க்கத் தொடங்குகிறாள் சீதை.

"சமயத்தில் வந்தவன் நீ. ஒரு சமய சஞ்சீவி நீ. நித்ய சிரஞ்சீவியும் நீ..." என்றாள்.

எவர் ஒருவர் ஒரு கற்புக்கரசியால் சிரஞ்சீவி என்று வாழ்த்தப்பட்டாலும் அவர்கள் சிரஞ்சீவிகள்தான். அவர்களை சிரஞ்சீவியாக்க எப்படி இயங்க வேண்டுமோ அப்படியே கோள்களும் இயங்க ஆரம்பித்துவிடும்.

உலகின் முதல் சிரஞ்சீவி அனுமன்!

'ராவண வதம் நிச்சயம்... இனி தொட்டுத்தொட்டு எல்லாமே நல்லதாகவே நடைபெறப் போகிறது' என்று கூறாமல் கூறிய அனுமனையும் அவன் தந்த கணையாழியையும் கண்ணீர் விழிகளோடு நோக்கிய சீதைக்குள், அந்தக் கணையாழி தொடர்பான சம்பவங்கள் ஞாபகத்தில் அணிவகுக்க ஆரம்பித்தன.

அந்த நொடி சீதை, தானிருந்த மணக்கோலத்துக்கு மாறுகிறாள். எதிரில் ஹோமகுண்டம். சுற்றிலும் வேதியர். அடுத்த அடுக்கில் ஒருபுறம் ஜனகர், மறுபுறம் தசரதர், தங்கள் பத்தினியருடன் எல்லா நாட்டு அரசர்களும் சூழ்ந்திருக்க, ராமன் நீலமேகவண்ணனாக மாப்பிள்ளைக் கோலத்தில் சீதைக்கு அருகில்!

## கணையாழி இங்கே...



மணக்கோலம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குப் பொருள் சொல்வதுபோல இருக்கிறது அந்தக் காட்சி. எத்தனையோ சடங்குகள்... ராமன் அக்னியில் நெய் சேர்க்கிறான்... அட்சதை சேர்க்கிறான்... அவ்வப்போது ஓரப்பார்வையும் பார்க்கிறான். சீதை வெட்கத்தோடு! அவளது சேலைத்தலைப்பும் அவன் உத்தரிய தலைப்பும் இணைத்து கட்டப்பட்டிருக்கிறது. 'இனி பிரியவே மாட்டோம்' என்பதற்கு சான்றாக சீதையின் பஞ்சு விரல்களைப் பற்றியிருக்கிறான்.

ஓர் உயிரும் இன்னோர் உயிரும் இரண்டறக் கலக்கும் முன், தொடக்கம் என்பது கைத்தலம் பற்றுவதில்தான் ஆரம்பிக்கிறது.

முகத்துக்கு அடுத்து முக்கிய பங்கு இரு கைகளின் பத்து விரல்களில்தான் உள்ளது. அதிலும் மோதிர விரல் என்றே



இரண்டாவது விரலுக்குப் பெயர். இதில்தான் மோதிரமாகிய கணையாழி ஏறி அமர்ந்து கொள்கிறது.

இந்த மோதிர விரல் நரம்புதானே இதயத்தோடு போய் முடிகிறது. உடம்பை ஆளும் இதயத்தை நேராக தொட வழியில்லாத நிலையில், இப்படி ஒரு மோதிரம் மூலம் தொட ஒரு வழியை உருவாக்கி, அப்படி இதயத்தையே தொடுபவன் வாழ்க்கைத் துணைவனாகவே இருக்கும் ஓர் ஐதீகத்தை உருவாக்கி, உட்பொருளை மிகமிக ஆழமாக வைத்திருப்பவர்களை என்னென்பது?

சீதையும் கணையாழி கண்ட நொடி இதயத்தில் ராமனால் மீண்டும் ஒருமுறை நிரம்புகிறாள். அந்த ஹோம குண்டம் எதிரில் அவனுக்கு அவள் அணிவித்த மோதிரம், இப்பொழுது திரும்ப வந்துள்ளது. அவனது இதயமே திரும்ப வந்து அவள் மேல் கிடந்து துடிக்கிற மாதிரிதான் உணர்ந்தாள். மனது நெகிழும்போதெல்லாம் கண்கள் ஈரமாகி அதை காட்டிக் கொடுக்கும். சீதையின் கண்களும் கண்ணீரால் அந்த மோதிரத்தை அபிஷேகித்தன.




“கணையாழியைத் தந்து என்னுள் உயிராழியை எழுப்பியவனே... இது சூளாமணி! என்னை நீ சந்தித்ததன் அடையாளமாக நான் தருவது... இதை என் நாதனிடம் நீ காட்டுவாயாக.”

அனுமனும் அந்தக் காட்சியைப் பார்த்து உருகினான். ஒரு விநாடி உணர்ச்சியின் உச்சிக் கூரை மேல் ஏறியவன், "அம்மா... உங்களை இந்தக் கோலத்தில் பார்க்கும்போது எனது இதயமும் கிடந்து துடிக்கிறது. இந்தக் கணையாழியைப் பார்த்ததற்கே தாங்கள் இப்படி நெகிழ்ந்தால், அண்ணலை நேரில் கண்டால் எந்த அளவு புத்துயிர் பெறுவீர்கள் என்று எண்ணிப் பார்க்கிறேன். இனி ஒரு விநாடிகூட நான் தாமதிக்கப் போவதில்லை. தாயே... என் தோள் மீது ஏறிக்கொள்ளுங்கள். சில நாழிகைகளில் உங்கள் பிராணநாதரிடம் சேர்ந்துவிடலாம். நான் இந்த இலங்கை நோக்கி வந்த நோக்கமும் முழுமையாக ஈடேறட்டும்...'' என்றபடி, சீதை முன் மண்டியிட்டு அமர்ந்தான்.

'உன்னால் எப்படி என்னை சுமந்து செல்ல முடியும்?' என்பது போன்ற பாவனை சீதையின் முகத்தில் வெளிப்பட, "தயங்காதீர்கள் தாயே... தாங்கள் இப்பொழுது காண்பது எனது ஒடுங்கிய ரூபம். இந்த அரக்கியர்கள் கண்ணில் படாமல் ஒளிந்தும் அலைந்தும் திரிய நானாக அமைத்துக் கொண்டது. என்னால் வானைத் தொடும் அளவுக்கு உயரவும் முடியும். விஸ்வரூபம் கொண்டே கடல் மேல் பறந்து இங்கு வந்தேன். தாங்கள் அறிவதற்காக மீண்டுமொருமுறை அந்த ரூபத்தை இங்கே உங்களுக்குக் காட்டுகிறேன். தேவர்கள் வாரி வழங்கிய வரங்களால் வந்த திறன் இது. மாயம் என்றோ, சூது என்றோ, சூழ்ச்சி என்றோ கருதிவிடாதீர்கள்" – என்றபடியே சீதை முன் அனுமன் விஸ்வரூபம் எடுத்து நிமிரலானான்.

சீதையும் அதைக் கண்டு வியந்தாள்.

கணையாழியைக் கண்டு கண்ணீரைச் சொறிந்த அவளது விழிகள் அனுமனின் விஸ்வரூபத்தால் வியப்பைச் சொறிந்தன. எல்லாம் சொற்ப நொடிகள்தான். மீண்டும் இயல்பான உருவத்துக்குத் திரும்பிய அனுமனை வியப்பு விலகாமல் பார்த்த சீதை...

"அஞ்சனா நந்தா... உன் பராக்ரமத்தை அறிந்தேன். உனக்கு இருக்கும் துடிப்பும் விளங்குகிறது. அதேசமயம், இங்கே நான் தவிப்பதை நீ உணர்ந்து கொண்டிருப்பதில் சில பிழைகளும் உள்ளன. இந்த இலங்கையை என் சொல்லாலேயே சுட்டுச் சாம்பலாக்க எனக்குத் தெரியும். ஆனால், அது என் நாதனுடைய வீரத்துக்கு இழுக்கு செய்துவிடும்.

வேள்வியின்போது தேவதேவர்களுக்காக வைத்த அவிசை கபடமாக ஒரு நாயானது கவ்விச் சென்று உண்ண முற்பட்டதுபோல அவன் என்னைக் கவர்ந்து வந்தான். நீ என்னை இங்கிருந்து ரகசியமாகக் கொண்டு சென்றால், அவனுக்கும் உனக்கும் என்ன வேற்றுமை?

அண்ணல் இங்கே வரவேண்டும். ஆயிரம் கரங்களோடு சூரியன் உதிக்கிறாற்போல பாணங்களோடு தோன்றி, ராவணனை வதம் செய்து, பிறகு என்னை அழைத்துச் சென்றாலே அது அனைவருக்கும் பெருமை!"

சீதையின் நீண்ட விளக்கம் அனுமனை நெகிழ வைத்தது. துன்பத்திலும் துயர உளைச்சலிலும்கூட சீதைக்குள் இருக்கும் அந்த கோபக்கனலும், நேரிய விருப்பமும் அனுமனை சிலிர்க்க வைத்துவிட்டன.

"தாயே... தங்களது திரு உள்ளம் அறியாமல் பேசிவிட்டேன். உங்களது எண்ணமே எனக்கும். உறங்கிக்கொண்டிருந்த ராவணனை முதன் முதலில் பார்த்தபோது எனக்குக்கூட அவனது பத்துத் தலைகளையும் கொத்தாக பிய்த்து எறிய வேண்டும் போல்தான் தோன்றியது. ஆனாலும் அண்ணலின் வீரம் அதனால் விளங்காமல் போய்விடும் என்றே அடக்கிக் கொண்டேன். இங்கே தங்களின் நைந்த நிலை என்னை அதை எல்லாம் மறக்கச் செய்துவிட்டது. இருப்பினும் தவறுதான், என்னை மன்னியுங்கள்" என்ற அனுமனை வாஞ்சையுடன் பார்த்தாள் சீதை.

"உன் துடிப்பில் பிழையே இல்லை அனுமா... அதேசமயம் என்னாலும் இங்கே இனியும் இருக்க இயலாது. பத்து மாதங்கள் விளையாட்டு போல ஓடிவிட்டது. ராவணனுக்கு ஆயுள்பலம் அதிகம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இத்தனை நாட்களாகவா என் இருப்பிடம் அவர் அறியாதபடி இருக்கும்? இன்று உன் மூலம் அவர் அறிந்து கொள்ளப் போவதில்தான் எனக்கு விடிவே உள்ளது.

இந்த பௌர்ணமியில் தொடங்கி அடுத்த பௌர்ணமி என்னும் ஒரு மாத காலம்தான் இனியும் என்னால் பொறுத்திருக்க முடியும். அதற்குள் என் நாதன் வந்து என்னை மீட்டுச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் இங்கே அவர் வரத் தேவையே இல்லை. கங்கைக் கரையில் எனக்கான கர்ம காரியங்களைச்

செய்தால் போதும்.

அவர் வீரத்தின்பாலுள்ள நம்பிக்கைதான் என் பிராணனை பிடித்து நிறுத்தி உள்ளது. இருப்பினும் அதற்கும் ஓர் எல்லை உண்டல்லவா? என்ன இருந்தாலும் என் மனதில் பேதைமையான எண்ணங்களுக்கும் குறைவே இல்லை. என் நாதன் வருவாரோ? இல்லை... ஒருவேளை அயோத்திக்கே திரும்பி விடுவாரோ என்றும் என் மனது அரற்றுகிறது.

அங்கே அவரது இளவல் ஒரு சத்திய வாழ்க்கை வாழ்ந்தபடியல்லவா இருக்கிறார்? அரியணையில் என் அண்ணலின் பாதுகைகளை வைத்து அயோத்தியை ஆளும் அவரோ 'பதினான்கு ஆண்டு காலம் முடிந்த நிலையில் ஒரு நாள் ஒரு நாழிகைப் பொழுதுகூட தாமதிக்காமல் வந்து சேரவேண்டும். அன்றேல் அக்னி வளர்த்து அதில் குதித்து விடுவேன்' என்று கூறியுள்ளார்.

என்னை மீட்கும் முயற்சியால் கால தாமதம் ஆகலாம் என்று என் நாதன் கருதினால், இதுபோல் பலப்பல காரணங்கள் அவர் மனதில் தோன்றி அவரைத் தடுத்து நிறுத்தலாம்.

நானிருப்பதோ ஒரு தீவில்... இடையிலோ பெரும் ஆழி! இதை உன்னைப்போல ஒவ்வொருவரும் கடந்து இங்கு வந்து சேரவேண்டுமே... இது எப்படி சாத்தியமாகப் போகிறதோ தெரியவில்லையே..." என்று சீதை ஒரு சராசரிப் பெண்ணைப் போல மருகி உருகிப்போய் பேச, அனுமனுக்கு அவளது உள்ளம் எப்படியெல்லாம் அலைபாய்ந்தபடி உள்ளது என்பது துல்லியமாக விளங்கியது.

"அம்மா... சுக்ரீவன் படையில் நானொருவன் மட்டுமே பராக்ரமனில்லை. எவ்வளவோ பேர் உள்ளனர். நானொருவனேகூட போதும், இந்த இலங்கையை ஒரு உலுக்கு உலுக்கிப் பார்க்க! அலைகடல் ஆழியென்ன ராவணன் போல அத்தனை கொடியதா? நான் பறந்து வரும் சமயம், ராமதூதனான எனக்கே சமுத்திரராஜனும், அவனிடம் அடைக்கலம் பெற்ற மைநாக பர்வதமும் உதவிடத் துடித்தன. நான்தான் அவற்றின் உதவியை மறுத்து ஒரே குறியாகப் பறந்து வந்தேன்.

கவலையே வேண்டாம். அண்ணல் வருவார். அவர் முன் இந்த ராவணன் ஒரு துரும்பு. இவன் எங்கும் ஓடி ஒளிய முடியாது. அவரது பாணத்துக்கு பதில் கூறியே தீர வேண்டும்"

## வெற்றிக்கு ஒரு துதி!

ஒரு செயல் எப்படி நடந்து முடியுமோ என்பதில் எந்த அளவுக்கு சுவாரஸ்யம் ஒளிந்திருக்கிறதோ அதே அளவு பயமும் ஒளிந்திருக்கும். அந்தச் செயல் நல்லவிதமாக முடியும்வரை அந்த பயம் நம்மை விட்டு நீங்காது. செயல் நல்ல விதமாக முடிந்த பிறகும் சிலருக்கு அந்த பயம் தொடர்ந்து கொண்டிருக்கும்.

எந்த விஷயத்தையும் தைரியத்தோடு அணுகுவதுதான் இதற்கு ஒரே தீர்வு. தைரிய மனோபாவம் இல்லாதவர்கள் என்ன செய்வது? அவர்களுக்காகவே ஆஞ்சனேய உபாசனை உள்ளது. அனுமன் பற்றிய சில துதிகள் மனதுக்குள் அனுமனைப் போட்டு நிரப்பும். பயம் இருக்கவேண்டிய இடத்தில் அனுமனை போட்டு நிரப்பினால் பயம் தவிடு பொடியாகும். பயமில்லாத மனது தெளிவாக செயல்படும். வெற்றி பங்கமில்லாமல் கிட்டும்.

பயத்தை விரட்டி, வெற்றியை உருவாக்கத்தான் இதோ இந்த அனுமன் துதி. சப்த ரசமே இதன் விசேஷம்.

*'வீர மாருதி... கம்பீர மாருதி!*
*கம்பீர மாருதி... வாயு புத்ர மாருதி!*

*தீர மாருதி... ரணதீர மாருதி!*
*தருண மாருதி... அருள் கருணை மாருதி!*

*சூர மாருதி... அதி சூர மாருதி!*
*ராம சார மாருதி... மனோரம்ய மாருதி!*
*ப்ராண மாருதி... ஜீவப்ராண மாருதி!*
*ஞான மாருதி... சப்த கான மாருதி!'*



என்று அனுமன் கூறும்பொழுது, சீதைக்குள் சித்ரகூட மலையில் நடந்த ஒரு சம்பவம்தான் ஞாபகத்துக்கு வந்தது.

"சரியாகச் சொன்னாய் அனுமனே! 'சாதுக்களுக்கு கோபம் வந்தால் அது எப்படி இருக்கும்... அப்பொழுது ஒரு தர்ப்பைப் புல்கூட பிரம்மாஸ்த்திரமாகிவிடும்' என்பதை நான் கண்ணாரக் கண்டவள். இப்பொழுது நினைத்தாலும் என் நெஞ்சு சிலிர்க்கிறது" என்று சீதை அந்த சித்ரகூட மலைச் சம்பவத்தை

எண்ணிப் பார்த்தாள்.

அது ஒரு விசித்திரமான சம்பவம்.

ஒருநாள்... சித்ரகூட மலையின் பசும் புல்வெளிமீது ஏகாந்தமாக சீதை அமர்ந்திருந்தாள். அப்பொழுது எங்கிருந்தோ ஒரு காக்கை பறந்து வந்து சீதையையே உற்று நோக்கியது. பட்சியினத்தைக் கண்டாலே பரவசமாகும் சீதைக்கு, 'கிளியைத்தான் கொஞ்ச வேண்டும், காக்கை என்றால் விரட்ட வேண்டும்' என்கிற பேதங்களெல்லாம் இல்லை. அந்தக் காக்கையையும் ஆசையோடு கொஞ்சத் தலைப்பட்டாள். ஆனால், அதுவோ அவள் ஸ்பரிசம் பட்டவுடன் உலகமாதா அணைப்பு கிட்டியதே என்று எண்ணாமல் சீதையின் செல்வ தனங்களின் மேல் முட்டியது.

திரும்பத் திரும்ப பறந்துவந்துக் கொத்தியதில் ரத்தமும் பெருகலாயிற்று. சீதை வலியால் துடித்தாள். உதவிக்கு ராமனை அழைத்தாள். ராமனும் முதலில், 'பகுத்தறிவில்லாத பட்சியினம்தானே' என்று சாதாரணமாக எண்ணி விரட்டத்தான் முனைந்தான். ஆனாலும், சுற்றிச் சுற்றி பறந்துவந்து, ராமன் விலக்கி விட்டபோதெல்லாம் சீதையின் மேல் வந்து விழுந்த காகம், 'நான் காகமில்லை... காமம்' என்று சொல்லாமல் சொல்லிற்று.

சீதையும் அரற்றினாள். ராமனுக்குள் ஒருவித ஆக்ரோஷம் பொங்கியது. 'ஒரு காக்கைக்கு எங்கிருந்து இப்படி ஒரு மூர்க்க குணம் வரமுடியும்? இது இயல்புக்கு மிகமிக மாறுபட்ட ஒன்று' என்று சிந்தித்த ராமன், 'அது காகம்தானா? இல்லை, காக உருவில் அரக்கன் எவனாவது வந்து சீண்டுகிறானா?' என்கிற கேள்வியில் விழுந்து அடுத்த கணமே, தனது மந்திரோபாயத்தால் அது இந்திரன் மகன் ஜயந்தன் என்று அறிந்தான்.

ஜயந்தனுக்குள் சீதையின் பேரெழில் காமத்தை உருவாக்கிவிட்டதுதான் கொடுமை. உள்ளே உள்ளது எதுவோ அதை பன்மடங்கு பெருக வைப்பது சீதையின் தாக்கம். ஜனகபுத்திரியை பக்தியோடு பார்த்தால் நம்முள் பக்தி பெருகும், பாசத்தோடு பார்த்தாலும் இதுதான் நிலை. இது காமத்தோடு பார்ப்பவன் விஷயத்திலும் உதவிவிட்டது.

அந்த நொடி ராமன் வசம் கோதண்டமும் இல்லை. 'அதனாலென்ன? ஒரு காக்கையை வீழ்த்த ஒரு அம்பு

**"அனுமனே... எனக்கும் நம்பிக்கை இருக்கிறது. இல்லாவிட்டால் இந்த உயிர் இன்னமுமா நிலைத்திருக்கும்? நிச்சயம் என் நாதன் வருவார்... இந்த இலங்கை அழியும். நீ வேகமாகப் போய் சேதியைக்கூறு. அப்படியே என் தனயன் இலக்குவனை நான் மிக மிக விசாரித்ததாகக் கூறு. அதுபோல, என்பொருட்டு என் நாதருக்கு உதவத் தயாராகியிருக்கும் உன் ராஜா சுக்ரீவனையும்..."**

என்பதுகூட கூடுதல்... அதிலும் ஜயந்தன் போன்ற ஒரு கபந்தனுக்கு அம்பு எதற்கு? அந்த புல்லனுக்கு ஒரு புல்லே போதும்' என்று எண்ணிய ராமன், தன் அமர்வுக்கு கீழ் தழைத்திருந்த தர்ப்பை புல்லில் ஒன்றை பிடுங்கி பிரும்ம மந்திரத்தை ஜபித்து அதை எறிந்தான். புல்லும் ஒரு பிரம்மாஸ்திரமாகி ஜயந்தனை துரத்த ஆரம்பித்தது.

அதன்பின் ஓட்டம்... ஓட்டம்... அப்படி ஒரு ஓட்டம் ஜயந்தனிடம்! அவன் முதலில் தஞ்சம் புகுந்தது தாய் தந்தையான இந்திரனிடமும் இந்திராணியிடமும்தான்.

ராமனின் பிரம்மாஸ்திரம் துரத்துகிறது என்றாலே அது தர்மத்தின் கணைதான். மாதாவையே மன்மதப் பார்வை பார்த்துத் தொலைத்துவிட்டான் என்பது தெரிந்ததும், 'பெற்ற மகனேயானாலும் காமம் தொற்றியதால் நீ கருமன். உன்னை ரட்சிப்பது, தப்பான உணர்வுக்கு அளிக்கும் பாதுகாப்பாகிவிடும்' என்று இருவருமே அவனை கைவிட, அடுத்து அவன் ஓடியது கைலாயம் நோக்கி! கைலாய வாயிலில் உள்ள பூத கணங்களே அவனை விரட்டியடித்து விட்டன.

சத்யலோகத்து பிரம்மனோ தன் நான்முகத்து எட்டு கண்களையும் இறுக மூடிக்கொண்டான். அவனும் ஓடி ஓடிப் பார்த்து ஒருவழியும் கிட்டாமல், ராமனின் காலடிக்கே வந்து விழுந்தான். கதறினான்.

ஆயினும் ஏவியபாணம் இலக்கை தாக்காமல் திரும்பாது. அதிலும் பிரம்மாஸ்திரம் தோல்வி கண்டால் அஸ்திரலீலை அவ்வளவுமே பொய் என்றாகிவிடும். என்னதான் செய்வது?

ராமனே ஜயந்தனுக்கு ஒரு உபாயம் கூறினான்.

'எந்தக் கண்களால் உன்னுள் காமம் புகுந்ததோ அதில் ஒன்றைக் கொடுத்துவிடு. உயிர் பிழைக்கலாம். கூடவே உதாரணமாகவும் நிலைக்கலாம்' என்றான். ஜயந்தனும் தனது வலது கண்ணை பிரம்மாஸ்திரத்துக்கு கொடுத்து, உயிர் பிழைத்தான்.



ஒரு தர்ப்பைப்புல் கணையான அந்த சம்பவம் ஞாபகத்தில் வந்துவிட, சீதைக்கு புதிய தெம்பும் புரண்டு வந்தது.

"அனுமனே... எனக்கும் நம்பிக்கை இருக்கிறது. இல்லாவிட்டால் இந்த உயிர் இன்னமுமா நிலைத்திருக்கும்? நிச்சயம் என் நாதன் வருவார்... இந்த இலங்கை அழியும். நீ வேகமாகப் போய் சேதியைக்கூறு. அப்படியே என் தனயன் இலக்குவனை நான் மிகமிக விசாரித்ததாகக் கூறு. அதுபோல, என்பொருட்டு என் நாதருக்கு உதவத் தயாராகியிருக்கும் உன் ராஜா சுக்ரீவனையும், அவனுக்கு உற்ற துணையாக விளங்கும் ஒவ்வொருவரையும் மிகமிக விசாரித்தேன் என்று கூறு.

உம்... உம்... புறப்படு! நான் மீண்டும் சோர்ந்து மனப் பிரமையால் புலம்பும் முன் புறப்பட்டுவிடு.

ஒருக்கால் என் நாதர் வரத் தாமதமாகி, எனக்கு இங்கே ஏதாவது நடந்து விட்டாலும் நான் மீண்டும் பிறந்து என் அண்ணலையே சேர வேண்டும். இந்த மேனியை அவரையன்றி யாரும் தீண்டிட இந்நாளில் மட்டுமல்ல; எந்த நாளிலும் ஏன்... வரும் ஜென்மங்களிலும்கூட இடமில்லை.

இடமில்லை என்று நான் கூறினால் ஆயிற்றா?

காலகதியில் அலைபடும் துரும்புகள் நாம். ஆனால், என் நாதர் காலத்தையே திசை திருப்ப வல்லவர். அவரால்தான் அவரையே நான் சேரும் வரத்தையும் எனக்கு வழங்க முடியும். இந்த வரம்தான் என் பிரார்த்தனை. இதையும் அவரிடம் கூறு" என்று அலைபோல தாழ்ந்தும் எழும்பியும் தன் மனநிலையைக் காட்டினாள் சீதை.

'இனியும் தாமதம் கூடாது' என்று அனுமன் அவள் முன் விழுந்து வணங்க, அவன் தலையைத் தடவி ஆசீர்வதிக்க முனைந்த சீதை, அவனுக்கு எதையாவது தருவதற்காக தன்னிடம் தேடியபோது, உச்சந்தலையில் உதிர்க்கப்படாத நிலையில் அவளிடம் இருந்த ஒரே ஒரு ஆபரணமான சூளாமணி அகப்பட்டது.

மிதிலையில் இருந்து அயோத்திக்குள் நுழைந்து புக்ககம் புகுந்தபோது அலைபாய்ந்த கூந்தலை அடக்கிப் பிடிக்க ஆசையாக ஒரு சூளாமணியைத் தந்திருந்தாள் மாமியார் கோசலை.

அப்படி ஒரு நினைவுச் சின்னமான சூளாமணியை அனுமனிடம் தந்தவள், "கணையாழியைத் தந்து என்னுள் உயிராழியை எழுப்பியவனே... இது சூளாமணி! என்னை நீ சந்தித்ததன் அடையாளமாக நான் தருவது... இதை என் நாதனிடம் நீ காட்டுவாயாக. அவருக்குள் என் எண்ணம் மட்டுமல்ல, என் மாமியார் கோசலை, மாமனார் தசரத சக்ரவர்த்தி ஆகியோர் நினைவும் ஒரு சேர எழும். இதன் பின்னே அப்படி ஒரு சம்பவத் தொடர்பு உள்ளது. அதை அவர் அறிவார். இந்த அணிகலன்கள் அவருக்குள் நீ என்னை சந்தித்துவிட்டதை ஊர்ஜிதம் செய்வது பெரிதல்ல... இதன்பின் நடக்க வேண்டியவையே மிக முக்கியம். இதை நீ மறவாமல் அவரிடம் கூறு..." என்று சூளாமணியைத் தந்தபடி கண்ணீர் உகுக்க, அனுமனும் ஒரு அஸ்திரம்போல ஒரு கருத்தைக் கூறலானான்...

"தாயே... தாமதியாமல் அவர் இங்கு வந்தாலே அவர் அண்ணல். அன்றேல் அவரே ராவணன்!"

அனுமன் கூறியதைக் கேட்டு சீதை முகத்தில் திகைப்பு!

சூளாமணியோடு புறப்படத் தயாரான அனுமனை, சீதையும் வாழ்த்தி வழியனுப்பி வைத்தாள்.

இலங்கையில் உள்ள வனங்களில் சற்று விசேஷமானது அசோக வனம். சுநாதமான தென்றல், சுகந்தமான மலர் வாசம், கலவையான பட்சி ஜாலங்கள், குளிர்ச்சியை சொரியும் மரநிழல், மீன்கள் துள்ளும் தடாகங்கள் என்று அசோக வனச் சிறப்பை அடுக்கிக்கொண்டே போகலாம். அதற்குள் புகுந்தாலே மனம் லேசாகிவிடும். ஏகாந்தம் உடம்பை ஆக்ரமித்து இழுக்கும்.

சீதையைவிட்டு நீங்கிய நிலையில் அசோக வனத்தைப் பற்றி சிந்தித்தபடியே நடந்தான் அனுமன்.

# ஐவர் வியூகம்!

சீதாதேவி சந்திப்பு நிகழ்ந்து, கணையாழியை கொடுத்து, சூளாமணியைப் பரிமாறிக் கொண்டதோடு, மைதிலிக்கு மன தைரியம் அளித்ததுவரை எல்லாம் சரிதான்... இருந்தாலும் இது போதாது! முக்கியமான செயலொன்று பாக்கி உள்ளது. என்ன அது? அனுமனுக்குள் கேள்வி முளைத்த மறுவிநாடி, தசக்ரீவனாகிய ராவணன் முகம்தான் நினைவுக்கு வந்தது. அவன் முன்னே சென்று 'ராவணா! உனக்கு அழிவுக் காலம் ஆரம்பம்!' என்று கர்ஜிக்க விரும்பி, உள்ளுணர்வும் துடித்தது.

திருட்டுத்தனமாக வந்தோம்; போனோம் என்றா இருப்பது? மைதிலியை காணும் வரை ஒருவித மறைவு தேவைப்பட்டது... கண்டபின் எதற்கு அதே ஒளிவும் மறைவும்? அப்போதைய ஒளிதல் ஒரு விவேகச் செயல். இப்போது ஒளிந்தால், அதுவே கோழைத்தனமாக மாறிவிடுமே!

ராவணனை எப்பாடுபட்டேனும் சந்திக்கவேண்டும். அவன்



முன்னே 'ராம தூதன் நான்' என மார்தட்ட வேண்டும். 'இந்த நொடி... இதே நொடி போதும். உன்னை அழித்து மைதிலியை தூக்கிச் செல்ல! ஆனால், அது உன் செயலை ஒற்றி எடுத்தது போலாகிவிடும். அடுத்து, தலை இருக்க வாலாடக் கூடாதல்லவா? அதனாலேயே எச்சரிக்கை மட்டும் செய்ய வந்திருக்கிறேன்' என்று கூறவேண்டும்...

அனுமனுக்குள் எழுந்த உணர்வலைகள் கடலோர அலைகளை ஓரம் கட்டிவிட்டன. ராவண சந்திப்புக்கு உள்ளம் துடித்தான். ஆனால், அவனைச் சந்திப்பது என்ன அவ்வளவு சுலபமான செயலா? உறங்கி எழுந்துவரும் வேளையில்கூட, கர்ணகடூர குரலில் கட்டியம் கூறுகிறார்கள். சதாசர்வ காலமும் முன்னும் பின்னுமாக ஒரு கூட்டம் வேறு... இந்நிலையில், அவனைக் காண ஒரே வழிதான் உள்ளது. அசோக வனத்தில் சீதையைத் தேடி அவனாகவே வந்ததுபோல வந்தால் ஆயிற்று. இல்லாவிட்டால், என்னை யாராவது அவன் முன் கொண்டுசென்று நிறுத்தினால்தான் உண்டு. 'என்னை அவன் முன் கொண்டு நிறுத்தும் வழிதான் எது?'



ஓங்கி உயர்ந்தவன்; இங்கும் உயரத் தொடங்கினான். அசோக வனமே அவன் காலடியில் ஒரு சிறு கீரைத் தோட்டம்போல தென்படும் அளவுக்கு ஓங்கி உயர்ந்த அந்த உத்தமன், ஒரு மரத்தை வேரோடு பெயர்த்தான். பட்சியினங்கள் அலறிப் புடைத்துக்கொண்டு வானம் எழும்பின.



– அனுமன் யோசித்த சமயம், பக்கத்து மரக் கூட்டங்கள்தான் கண்ணில்பட்டன. அவற்றின் கிளைகளில் எல்லாம் நூற்றுக்கணக்கில் பட்சிகள்.

'வாயுகுமாரா... நாங்கள் எதற்கு இருக்கிறோம்? உம்... எங்கள் மேல் உன் புஜ பலத்தைக் காட்டு. எங்களைப் பிடுங்கி, ஆகாசத்தில் வீசு. பட்சிகளும் ஓலக்குரல் எழுப்பும். இந்த வனத்தைப் பராமரிக்கும் பருவதேவர் முதல் இங்கே சீதைக்குக் காவல் இருக்கும் ராட்சஸக் கூட்டம் வரை எல்லோரும் அலறட்டும். திசை யானைகள் வேறு உள்ளன. அவை பிளிற ஆரம்பித்தால் லேசில் அடங்காது. சப்தம் தசக்ரீவனின் இருபது காதுகளிலும் விழும். அப்புறமென்ன?' என்று அவை கேட்டதுபோலத் தோன்றியது.

அடுத்த நொடியே, அனுமனிடம் அதற்குண்டான பராக்ரமம் ஆரம்பமாகிவிட்டது.

அனுமனுக்குள் எவ்வளவோ ஆற்றல்கள்! அஷ்டமா சித்திகளும் அவனுக்குள் அடக்கம். அதில் ஒன்றாகிய விஸ்வரூபம் அவனிடம் ஆரம்பமாயிற்று. அன்னை சீதை முன் ஓங்கி உயர்ந்தவன்; இங்கும் உயரத் தொடங்கினான். அசோக வனமே அவன் காலடியில் ஒரு சிறு கீரைத் தோட்டம்போல தென்படும் அளவுக்கு ஓங்கி உயர்ந்த அந்த உத்தமன், ஒரு மரத்தை வேரோடு பெயர்த்தான். பட்சியினங்கள் அலறிப் புடைத்துக்கொண்டு வானம் எழும்பின.

'எங்களை அழித்துவிடு... ஒரு தேவதேவியை எங்களுக்குள் சிறை வைத்து, காலகாலத்துக்கும் எங்களை ஒரு சிறைச்சாலைபோல எண்ணிட வழி வகுத்துவிட்டான் ராவணன். எங்கள் வாழ்க்கை நீடித்தால், இன்னொரு சீதையை ராவணன் எங்கிருந்தாவது கொண்டுவந்து சிறை வைத்தாலும் வைக்கலாம். ஒரு அரக்கனால் போஷிக்கப் படுவதைவிட, அனுமனே... உன்னைப் போன்ற இரக்கனால் அழிக்கப்படுவதை நாங்கள் பெருமையாகக் கருதுகிறோம்' என்று அங்குள்ள விருட்சங்கள் கருதுவதாகத் தோன்றியது.

அலறிப் புடைத்த பட்சியினங்கள், பெயர்ந்து விழ ஆரம்பித்த விருட்சங்களால் விளைந்த சப்தம் என்று அந்த அதிகாலை வேளையில் ஏற்பட்ட அமளி துமளியில், உறங்கிக்கொண்டிருந்த அரக்கியர் கூட்டம் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தது.

யானைக் கூட்டமும் பிளிற ஆரம்பிக்க... பருவ தேவர்களும் பதைப்புடன் நிமிர்ந்தனர். அவர்கள் கண்முன் அனுமன் ஆகாயத்தைத் தொட்டுவிடும் உயரத்துடன், வாலைச் சுழற்றி அடித்தபடி நிற்கக் கண்டு மிரண்டுபோயினர். அருகிலேயே இருந்தது ஒரு குன்று. அதை ஏதோ ஒரு கல்லைப் பெயர்ப்பது போல பெயர்த்துத் தூக்கிய அனுமன், ஒரு பந்தைப்போல வீசி எறிந்ததில், அது இலங்கை நகரின் முக்கிய வீதியில் உள்ள மாளிகைகள் பலவற்றை தரைமட்டமாக்கியபடி விழுந்தது.

அரக்கியர்கள் கோபம், பயம் இரண்டின் கலவையாக ஆர்ப்பாட்டம் செய்தும், கைவசம் உள்ள ஈட்டி, அம்பு, கோடாரி என்று விதம்விதமான ஆயுதங்களை வீசியெறிந்தும் பயனில்லை. அவையெல்லாம் அனுமனின் தொடையளவு கூட சென்று தாக்கவில்லை. அதேசமயம், அவன் பதிலுக்கு ஒரு கர்ஜனை புரியவும்... அந்த நொடி, அசோக வன நிலப்பரப்பே நடுங்கியது.

இவ்வளவு களேபரத்திலும் சீதைக்கு நிழலும் இடமும் தந்திருந்த மரத்துக்கோ, அவளுக்கோ யாதொரு பங்கமும் இல்லை! அரக்கியர்கள் அதையும் கண்டார்கள். சிலர், தகவல் சொல்ல அரண்மனை நோக்கி ஓடினார்கள். சீதைக்கு அனுமனின் நோக்கம் உடனேயே அர்த்தமாகிவிட்டது. நடப்பதை ஆனந்தமாகக் காணத் தொடங்கினாள்.

அப்பொழுதுதான் சற்றுக் கண்ணயரலாம் என்று, தேகத்தைப் பஞ்சணையில் சாய்த்திருந்தான் ராவணன். 'இனி உனக்குச் சாவில்தான் உறக்கம். எழுந்திரு' என்கிறாற்போல திமுதிமுவென்று ஓடிவந்த அரக்கியர்களின் கூக்குரல் கேட்டுக் கண்விழித்த ராவணன், தனது மாளிகையின் முற்றத்துக்கு வந்து கீழே நோக்க, திரண்டு வந்திருந்தது அவனது வனக்காவல் படை.

"மகாபிரபுவே... இந்த அதிகாலை வேளையில் தங்கள் திருமுன் விஜயகோஷமிடுவதற்கு மாறாக, அச்சத்துடன் வந்திருக்கிறோம். ஆகாயத்தை உரசுமளவுக்கு ஒரு குரங்கு அசோக வனப் பகுதியையே நாசம் செய்தபடி உள்ளது. வனத்தை ஒட்டிய செங்குன்றத்தையே பெயர்த்து பந்தைப் போல வீசி எறிந்துவிட்டது. இது கனவா, இல்லை நனவா என்றே தெரியவில்லை. பராக்கிரமரே, நீங்கள்தான் எங்களைக் காத்து ரட்சிக்கவேண்டும்!"

– ஒருசேரப் புலம்பிய அவர்களை ராவணன் ஆச்சரிய

அதிர்ச்சியோடு பார்த்தான்.

"என்ன இது உளறல்? ஈ, எறும்பு கூட நுழைய அச்சப்படும் ஓர் இரும்புக் கோட்டை இந்த இலங்கை. இந்த மண்ணில் ஒரு குரங்கு அட்டகாசம் செய்கிறதா? கனவு கண்டுவிட்டு அதைத் துணிச்சலாக என்னிடமே வந்து கூறுகிறீர்களா? இப்படி ஒரு கனவைக்கூட நீங்கள் காண, நான் அனுமதிக்க மாட்டேன். ஓடிப்போங்கள்..." என்று ராவணனும் அவர்கள் கூறியதை நம்பாமல்தான் மறுமொழி கூறினான்.

ஆனால், அடுத்த நொடியே அவன் பார்க்க ஆகாய வெளியில் பறந்த, பிடுங்கி எறியப்பட்ட ஒரு மரமும் அத்துடன் சேர்ந்து பறந்த சில யானைகளும், அவர்கள் கண்டது கனவல்ல என்பதை அவனுக்குப் புரியவைத்துவிட்டன. அடுத்தநொடியே, அவன் கண்களில் வெம்மை கூடியது. புருவங்கள் வளைந்தன.

அவன்மேல் ஒரு துரும்புகூட விழாதபடி கண்காணித்தவாறு இருக்கும் கிங்கரர்களில் சிலர், "மகாபிரபு... பார்க்கும்போதே உங்களின் எண்ணம் எங்களுக்குப் புரிகிறது. நாங்கள் எதற்கு இருக்கிறோம்? அனுமதி தாருங்கள். அந்த அட்டகாசக் குரங்கை பெட்டிப் பாம்பாகப் பிடித்து இழுத்து வருகிறோம்" என்றனர். தசக்ரீவனின் ஒரு கரம் அதற்கான அனுமதியை வேகமான அசைவுடன் அளிக்க, கிங்கர சேனை வில்லில் இருந்து புறப்பட்ட நாணைப்போல புறப்பட்டது. கிங்கரர்களுக்கு எப்பொழுதுமே மானுடர்களோடு மல்லுக்கு நிற்பது மிகவும் பிடிக்கும். துவம்சம் செய்வது, எக்காளமிடுவது, ரத்தம் குடிப்பது, குடல் மாலை சூடிக்கொண்டு சுற்றி வந்து ஆடுவது போன்ற அடாத செயல்கள் அவ்வளவிலும் ஆனந்தம் காண்பவர்கள்.

அனுமனை வெறும் காட்டுக்குரங்காக நினைத்து அசோக வனம் நோக்கிச் சென்றுவிட்டனர். ஆனால், பாவம்! அந்தக் காலை வேளையோடு அவர்கள் கூட்டம் மொத்தமும் அழிந்து, சூரியன் உதிக்கும்போது கிங்கர இனத்தில் ஒருவர்கூட உயிரோடு இருக்கப் போவதில்லை என்பதை அவர்களோ, ராவணனோ அறிந்திருக்கவில்லை.

சூரியன் உதயமாகவும், கிங்கரர்கள் அழிந்த செய்தி வர, 'அட, ஒரு குரங்குக்கு இத்தனை சக்தியா?' என்று முதல்தடவையாக ஒரு மெல்லிய கவலை ராவணனை ஆட்கொண்டது. அப்படியே, சீதையை நள்ளிரவில் காண விழைந்ததும் அதற்கு காரணமான

# துவாதச ஸ்லோகம்!

நாட்களை நாம் தேதியும் கிழமையும் கொண்டு உணர்ந்தாலும், அவற்றினூடே வரும் திதிகளுக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. 'பஞ்சாங்கம்' எனப்படும் பஞ்ச அங்கங்களில் ஒன்று இந்தத் திதி.

இதில்கூட வளர்பிறை திதி, தேய்பிறை திதி என இரு பிரிவு உண்டு. இதில் ஏகாதசி திதிக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. இந்தத் திதியை உபவாசம் இருந்து கழித்தால், உடம்புக்கு ஆரோக்கியம் கிட்டும்.

இந்த ஏகாதசி உபவாசத்துக்குப் பின்னே சூட்சுமமான காரணங்கள் நிறையவே உள்ளன. ஏகாதசிக்கு மறுநாள் துவாதசி. அமாவாசையிலிருந்து பன்னிரண்டாவது நாள்! இந்த நாளில் ஏகாதசி விரதம் முடித்து, உணவு உண்ணவேண்டும். இந்த உணவு, மருந்து போலவும் மாறவல்லது. துவாதசி திதிக்கு உள்ள சிறப்புகளில் ஒன்று இது.

துவாதசியின் இந்தச் சிறப்பு, அனு மனுக்கும் பொருந்தும். இவன் நாமமே ஒரு அருமருந்து. அடுத்து, இவனிடமும் பன்னிரு சிறப்புகளை காணலாம். அனுமனை இதன் காரணமாக 'துவாதசன்' என்றும் சிலர் கூறுவர்.

அவனது துவாதச சிறப்புக்குரிய ஸ்லோகம் ஒன்றும் உண்டு.

*'ஹனுமானஞ்சனா ஸூனுர்;*
*வாயுபுத்ரோ மஹாபல: 1*
*ராமேஷ்ட, பால் குணோஸக*
*பிங்காக்ஷோமித விக்ரம:11*
*உததிக்ரண, மணஸ்ஸைவ*
*ஸீதா ஷோக விநாசன:1*
*லக்ஷ்மண, ப்ராண தாதாஸ*
*தஸக்ரீவ ஸ்ய, தர்ப்பஹா...*
*ஏவம் த்வாதஸ நாமானி,*
*கபீந்த்ரஸ்ய மஹாத்மன;*
*ஸ்வபாவகாலே, ப்ரபோதேஸ*
*யாத்ரா காலேசய: படேத்*
*தஸ்ய ஸர்வ பயம் நாஸ்தி*
*ஸர்வத்ர விஜயோபவேத்11*



– இந்த ஸ்லோகம் நம் மனதில் இருக்கும் பட்சத்தில் அச்சம் இருக்காது, செயலில் தயக்கம் இருக்காது. புறத்தில் இருக்கும் உயிர்மைக்குள் இந்த மந்திர அலையானது புகுந்து, சீரான மாற்றத்தை செய்து தரவல்லது. அதீத பிரேமையுடன் கண்ணீர் மல்க இதை உபாசிப்பவர்கள் முன் அனுமனேகூட தரிசனம் தரக்கூடும்!

கனவும் நினைவுக்கு வந்தது. அந்தக் கனவில்கூட ஒரு குரங்குதான் இலங்கையை அழிக்க வந்திருந்தது.

'ஒருவேளை, இந்த நிஜம்தான் தனக்குள் கனவாகிவிட்டதோ?' என்கிற எண்ணமும் ஒருசேர எழும்பியபோது, அவன் எதிரே கலங்கிய முகத்துடன் பருவ தேவர்கள், தப்பி ஓடிவந்த அரக்கியர் கூட்டம்!

"அரசே, என்ன சிந்தனை? வான் மழையைவிட வலிதாக அம்பு மழை பொழியும் வில்லும் வாளும் உடைய ஜம்புமாலி இருக்க, இதற்கெல்லாமா தாங்கள் கவலைப்படுவது?" என்று ஒரு குரல் இடையிட, அதைக் கேட்ட மறுநொடி "எங்கே ஜம்புமாலி?" என்றுதான் ராவணனும் கேட்டான். ஜம்புமாலியும் காத்திருந்ததுபோல துள்ளிக்கொண்டு முன்வந்தான்.

"ஜம்புமாலி... உம் புறப்படு. அந்தக் குரங்கைப் பிடித்து இழுத்து வா" என்று கட்டளையிட, ஜம்பு மாலிக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. எவ்வளவோ வீரர்கள் ராவணனின் ராஜ்ஜியத்தில் இருக்க, அவர்களுக்கு நடுவில் தனது வீரத்தைக் காட்ட ஒரு வாய்ப்பாக ஜம்புமாலி இந்தத் தருணத்தை எண்ணியபடியே அனுமனைப் பிடிக்கப் புறப்பட்டு விட்டான்.

கிங்கரர் வதம் அவனை தனியாகச் செல்லவிடாதபடி செய்துவிட்டது. எனவே, அவனுடன் பல நூறு வீரர்களும் அணிவகுத்தனர். அதுவும் இலங்கையின் ஆசை விலங்கான யானைகளின்மேல்... திபுதிபுவென்று புழுதிப் புனலோடு தன்னை நோக்கி வந்த ஜம்புமாலியின் படைக் கூட்டம், அனுமன் பார்வையில் சாரை சாரையாக எறும்புகள் திரண்டு வந்து நிற்கிறாற்போலத்தான் இருந்தது!

காலை அசைத்து, ஒரு வீசு வீசினால் போதும். அவ்வளவு பேரும் நசுங்கியும் பறந்தும் எங்கெங்கோ போய் விழவேண்டும். ஆனால், அனுமன் அவ்வாறு செய்யாமல், இடுப்பில் இரு கைகளை வைத்துக் கொண்டு ஒரு சிரிப்பு மட்டும் சிரித்தான். அதுவே அவர்களை எல்லாம் மிரட்டியது. பதிலுக்கு, கைவசமுள்ள சர்வ ஆயுதங்களையும் அனுமன்மேல் எறிந்தனர். அந்த நொடி அனுமனின் உடல் ஒரு இரும்புச் சிலையாகி விட்டது. எல்லாம் அஷ்டமாசித்தியின் ஆற்றல்!

கோரக்க சித்தரை எவ்வளவு வெட்ட முனைந்தாலும்

வாள்தான் மழுங்கும். அல்லம சித்தருக்கோ, வாளால் காயம் உண்டானாலும் வாள் கீழ் விழும் முன் காயம் ஆறிவிடுமாம். அதையும்விடப் பேராற்றலோடு அனுமன் நிற்க, ஜம்புமாலி யின் அம்பு மழையால் அனுமனை எதுவுமே செய்யமுடியவில்லை. இறுதியில் அவனையும் தூக்கி எறிய பிரஹஸ்தனின் செல்வ மகனான ஜம்புமாலி அழிந்ததே மிச்சம்.

ஜம்புமாலியும் அழிந்தான் என்கிற செய்தி ராவணேஸ்வரனை அடையவும், ராவணனின் புஜங்கள் துடிப்பு எடுத்தது. அவனது கால்களும் உடனேயே அனுமனைச் சந்திக்க ஒருவித ஆவேசத்தோடு புறப்பட்டுவிட்டன. ஆனால், அவனது பஞ்ச சேனாபதிகளான 'பூபாட்சன், துரிதரன், பிரசனன், விரூபாட்சன், பாசகர்ணன்' என்கிற ஐவரும் பாய்ந்து வந்து ராவணனைத் தடுத்தனர்.

"மகாபிரபு.... ஒரு குரங்கைப் பிடிக்க தாங்கள் செல்வதா? இது எப்பேர்ப்பட்ட இழுக்கு? உங்களின் பொருட்டு நாங்கள் எமனையே அவன் லோகத்துக்குச் சென்று, கைது செய்து இழுத்துவந்த பெருமைக்கு உரியவர்கள். உயிர் வாங்கும் எமனை விடவா இந்தக் குரங்கு பெரியது?

அனுமதியுங்கள். நாங்கள் சென்று வெற்றியுடன் திரும்புகிறோம். இல்லாவிட்டால், அனைத்து உலகத்திலும் தங்கள் மேலான அச்சம் கட்டவிழ்ந்துவிடும். கிரகாதிபதிகளையே படியாகப் போட்டு மிதித்து நிற்கும் நீங்கள்போய், ஒரு விலங்கை வேட்டையாடப் புறப்படுவதா? அதன்பின் எங்களுக்குத்தான் என்ன பெருமை?" என்று கேட்ட அந்த ஐந்து பேரையும் சற்றே நம்பிக்கையுடன் பார்த்தான் ராவணன். அவர்களும் புறப்பட்டனர்!

ஐந்து பேரும் ஐந்து விதமாகப் படை நடத்தி, ஒரு வியூகம்போல அனுமனை சுற்றி வளைத்து நின்றனர். அந்த நொடி, அனுமனும் இலங்கை நகரின் நுழைவாயில் வளைவுமேல் ஒரு காலை வைத்துக்கொண்டு, ஆகாயம் பார்த்தபடி நின்றிருந்தான். வானினின்றும் தேவர் கூட்டமானது அனுமனது ஆக்ரோஷ விளையாட்டை அச்சம், ஆசை, சிலிர்ப்பு, பரவசம் என்கிற பல உணர்ச்சிகளோடு வேடிக்கை பார்த்தபடி இருந்தது.

அனுமனின் விஸ்வரூபம், அந்த பஞ்ச சேனாபதிகளுக்கும் ஓர் அரிய காட்சி. வணங்கி மகிழ வேண்டிய திருக்காட்சியும் கூட. ஆனால், யுத்தம் புரிய வந்திருக்கும் அந்த ராவணப் பிரதிநிதிகளுக்கு அனுமனின் விஸ்வரூபம் ஒரு தர்மத்தின் ரூபமாகத் தெரியவில்லை.

மாயாவி ஒருவன் எடுத்த போலி உருவாகத் தெரிந்தது!

ஐவருமே ஒன்று போல எண்ணுகிறார்கள். “ஏ மாயாவி... குரங்கு வடிவில் வந்து வானுக்கும் பூமிக்கும் உயர்ந்து நின்றுவிட்டால் அஞ்சிவிடுவோம் என்று கருதிவிட்டாயா? நாங்கள் மாயாவிகளுக்கெல்லாம் மாயாவியான ராவணேஸ்வரனின் படைத் தளபதிகள். உலகின் ஒவ்வொரு உயிரும் எண்ணி நடுங்கும் மகிஷ வாகனன் எமனையே எமப்



# மகா சக்தி... மாயக் குரங்கு!

பட்டணத்திற்குள் புகுந்து, கட்டி இழுத்து வந்தவர்கள்.

உனது மாயாரூபம் எங்களை எதுவும் செய்யாது. பதிலுக்கு அந்த உயரத்துக்கு எழும்பப்போகும் எங்கள் வில்லின் கணைகளுக்கும், வேற்கம்புகளுக்கும், வஜ்ர கோடாரி, திரிசூலபராவி போன்ற எங்களது ஆயுதங்களுக்கும் நீ பதில் சொல். உன் ஒவ்வொரு முடிக்கும் ஓர் ஆயுதம் எறிவோம். முடிந்தால் தடுத்துக்கொள்!” என்று ஒரு பிரசங்கம் நிகழ்த்திவிட்டு, பாணமழை பொழியத் தொடங்கிய அவர்கள் ஐவரும் ஆளுக்கொரு ரதத்தில் அமர்ந்திருந்தனர். அவை அனுமனின் காலடியில் வட்டம் கட்டி, சீரிய இடைவெளியில் அணிவகுத்து நின்றன.

பூமியில் இருந்து பொங்கும் நீர் ஊற்றுபோல அந்த ரதங்களில் இருந்து அம்புகள் கிளம்பி, அனுமனைத் தாக்கின. அனுமனுக்கோ அவை தேன்கூட்டிலிருந்து வரும் தேனீக்கள் போல்தான்



தெரிந்தன. தன் கைவசம் உள்ள இரும்பு உலக்கையை சிலம்பாட்டம் ஆடுபவன் போல விசையோடு சுழற்றினான். அவ்வளவு ஆயுதங்களும் வந்த வேகத்தில் திரும்பி, எய்தவர்கள் மேலேயே பதில் மழையாக விழுந்தன.

பஞ்சசேனாபதிகள் 'சரமழை அனுமனுக்கல்ல... தங்களுக்கே' என அப்பொழுதுதான் உணர்ந்தனர். சட்டென்று அம்பு எய்வதை நிறுத்தியவர்கள் வேறு மார்க்கம் குறித்து சிந்திக்கத் தொடங்க... 'இனியும் உங்களை விட்டு வைத்தால் ஆகாது' என்று காலாலேயே ரதங்களை மிதித்து அழித்தும், அவர்கள் கை வில்லைப் பறித்து உடைத்தும், சிலரை அப்படியே ரதத்தோடு தூக்கி ஆகாயத்தில் வீசியெறிந்தும்... அனுமன் கொடுத்த பதிலடியில், அந்தப் பஞ்சசேனை பஞ்சாய்ப் பறந்த சேனை ஆகிவிட்டது.



அவ்வேளையில் அனுமனிடம் தெரிந்த மூர்க்கமும், அவன் விழிச் சிவப்பும், படபடவென்று அவன் தன் தோளிரண்டைத் தட்டிக்கொண்ட பாங்கும் வான்மிசை இடிபோல இலங்கை முழுக்கக் கேட்டது. இது,

ராவணனுக்கு மட்டும் கேட்காது போகுமா? வீரர்களும் ஓடிவந்து பஞ்ச சேனாபதிகள் அடங்கி, ஒடுங்கி, அழிந்து போனதைக் கூறவும், ராவணனின் புஜத்தில் ஒரு தினவு காட்டுக் குதிரைபோல ஓடத் தொடங்கியது.

விடிந்தது முதலே தந்தை கலக்கத்தோடு இருப்பதை உணர்ந்து அவரை அணுகினான் ராவண குமாரர்களில் ஒருவனான அட்சகுமாரன்.

"அப்பா... என்ன இது? ஓர் அற்பக் குரங்குக்கா இத்தனை கலக்கம்? பஞ்ச சேனாபதிகள் போனாலென்ன? விஞ்ச ஒண்ணாச் சிறப்புடைய நெஞ்சன் நானில்லை? என்னை அனுப்புங்கள். அந்தக் குரங்கை ஒரு கயிற்றால் கட்டி இந்த லங்கா நகரம் முழுக்க வேடிக்கை பார்க்க இழுத்துவருகிறேன்" என்று கர்ஜித்தான் அவன்.

அட்சகுமாரன் என்றால் எண்ண முடியாத சிறப்புகளை உடையவன் என்பது பொருள். சகோதரன் இந்திரஜித்தைப் பார்த்து பொருமுகின்றவனும் கூட...

ஒருமுறை தேவர்களின் தலைவனான இந்திரன், ராவணனை அலட்சியம் செய்து விட, ராவணன் தன் மகன் மேகநாதனைத்தான் இந்திரனுக்கு பாடம் கற்பிக்க அனுப்பி வைத்தான். அப்போதே, "அப்பா... நான் போகிறேன். அந்த இந்திரனைக் கட்டித் தூக்கி வருகிறேன்..." என்று துடித்தான் அட்சகுமாரன்.

ஆனால், ராவணன் அனுமதிக்கவில்லை.

"நீ நினைப்பது போல இந்திரன் லேசானவன் இல்லை. அவனது வஜ்ராயுதம் ஒன்று போதும். அடுத்து, அவனது ஐராவதம். இரண்டையும் சந்திக்கும் வரபலம் மேகநாதனிடம்தான் உள்ளது. சதாசர்வகாலமும் தவமிருந்து அவன் வாங்கி வைத்திருக்கும் வரங்களுக்கு ஓர் அளவேயில்லை. நீயோ அம்மா பிள்ளை..." என்று கூறி அட்சகுமாரனை தடுத்துவிட்டான்.

இன்றும் அதுபோல தடுத்துவிடுவானோ என்றுதான் அட்சகுமாரனும் கருதினான்.

"அப்பா... என்ன யோசனை? மேகநாதனை இந்திரனைப் பிடித்துவரப் பணித்து, அதில் வெற்றியும் பெற்றதால் அவனை இந்திரஜித்தன் ஆக்கினீர்கள். இந்திரனின் சித்து விளையாட்டை

எல்லாம் வெற்றிகொண்டு, மேகநாதன் இந்திரஜித்தனாகலாம்... இந்த அட்சகுமாரன் அந்தக் குரங்கை வெற்றிகொள்ளலாகாதா?

வீரம் என்பது என்ன, அவனுக்கே உரிமையான சொத்தா? என் உடம்பில் ஓடுவதும் உங்கள் ரத்தம்தானே... எனக்கு ஏன் வாய்ப்பு தர மறுக்கிறீர்கள்?" என்று பலவாறு பேசி, ராவணனை சம்மதிக்க வைத்துவிட்டான் அட்சகுமாரன்.

அடுத்த நொடியே ஒரு பெரும்படை திரட்டப் பணித்துவிட்டு ஓடினான், தாய் மண்டோதரியை நோக்கி.

அவளை பணிந்தவன், "அம்மா எனது வீரத்துக்கு இன்றுதான் வேலை தந்துள்ளார் தந்தை..." என்றான். மண்டோதரியும் அனுமனின் அசோகவனத் தாக்குதலை அறிந்திருந்தாள்.

"அட்சா... உனக்கெதற்கு இந்தப் போராட்டம்? அந்தக் குரங்கு பற்றி நானும் அறிந்தேன். மும்மூர்த்திகளும் ஒன்று திரண்டு வந்துவிட்டது போலவே தெரிகிறது, அதன் மூர்க்கம். அது போடும் சப்தம், இங்கே என் பள்ளியறைவரை கேட்கிறது.

அசோகவனத்தில் அது சீதையைக் காண வந்த குரங்காம். அப்படியாயின், அது ராமனால்தான் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். உன் தந்தையின் இழிவான செயலுக்குப் பழிவாங்க அது வந்திருப்பது போல எனக்குத் தோன்றுகிறது. இதில் நீ சிக்கிக் கொள்ளாதே..." என்று கூறி அட்சகுமாரனை தடுக்கப் பார்த்தாள்.

ஆனால், அட்சகுமாரன் மறுத்துவிட்டான். "அம்மா... ஆசியை மட்டும் நீ வழங்கு. அந்தக் குரங்கை ஒரு தூசியைப் போலத்தான் நான் கருதுகிறேன்" என்று வலிந்து அவளிடம் ஆசிபெற்றவன், ஒரு பெரும்படையுடன் அனுமனை சந்திக்கப் புறப்பட்டான்.

யுத்த ஆயுத வரிசையில் எத்தனை உள்ளதோ அத்தனையும் அனுமனை நோக்கி அணிவகுத்தன.

முதல் பார்வையிலேயே அனுமன்மேல் ஒரு வேலை எறிந்தான் அட்சகுமாரன். அதனிடம் அசுர வேகம். வழக்கம்போலவே அனுமன் அதை, தன் கைவசம் உள்ள இரும்பு உலக்கையால் தட்டிவிட்டான். அதைக்கொண்டு அனுமனின் உத்தியை யூகித்த அட்சகுமாரன், தன் படைக்கு



"அப்பா... என்ன இது? ஓர் அற்பக் குரங்குக்கா இத்தனை கலக்கம்? பஞ்ச சேனாபதிகள் போனாலென்ன? விஞ்ச ஒண்ணாச் சிறப்புடைய நெஞ்சன் நானில்லை? என்னை அனுப்புங்கள். அந்தக் குரங்கை ஒரு கயிற்றால் கட்டி இந்த லங்கா நகரம் முழுக்க வேடிக்கை பார்க்க இழுத்துவருகிறேன்" என்று கர்ஜித்தான் அட்சகுமாரன்.

கட்டளையிட்டான். அவனது படைவீரர்கள் சரமாரியாக வேல்களை எறிந்து அனுமனை திக்குமுக்காட வைக்க, அட்சகுமாரன் புதுப்புது உபாயங்களைக் கடைப்பிடித்துத் தாக்க ஆரம்பித்தான்.

முதல்முறையாக ஓர் அம்பு அனுமனின் புஜத்தைத் தைத்தது. அதைப் பிடுங்கி எறிந்த அனுமன், தன் அடுத்த கட்டத்துக்கு முன்னேறினான்.

ராவணனை சந்தித்து அவனுக்கொரு எச்சரிக்கை செய்யவேண்டும் என்பதுதான் நோக்கம். அதற்காக செய்த ஒரு குறும்புதான் அசோகவன அழிவு. ஆனால், அதுவோ விபரீதமாகி, ஒரு யுத்தத்துக்கு வழிவகுக்கும்போது அனுமனுக்குத் தயக்கமாகக்கூட இருந்தது.

இருந்தும், நடப்பவை அனைத்தும் நன்மைக்கே என்று எண்ணியவன், அத்தனை வீரர்களையும் ஒருசேர தன் பாதத்தால் மிதித்தே கொன்றான். இறுதியாக எஞ்சி நின்றது அட்சகுமாரன் மட்டுமே. ஆனாலும், அட்சகுமாரன் அயர்ந்துவிடவில்லை. ஆவேசத்தைக் குறைத்துக் கொள்ளாமல் போரிட்டான். ஒரு கட்டத்தில் அவனை அவனது ரதத்தோடு தூக்கி வானவீதியில் வீசி எறிந்து, பின் கீழே விழுந்தவன் முகத்தில் ஒரு குத்தும்விட, அதற்கு மேல் தாளமுடியாமல் அட்சகுமாரனும் உயிரை விட்டான்.

அட்சகுமாரன் மரணச் செய்தி அரண்மனையை அடையவும், இடிந்துபோய் அமர்ந்துவிட்டான் ராவணன். ஓடிவந்து விழுந்து, பித்துப் பிடித்தவள்போல அரற்ற ஆரம்பித்துவிட்டாள் மண்டோதரி.

ராவண அமைச்சன் பிரஹஸ்தன் ஒருபுறம், தம்பி விபீடணன் மறுபுறம், இடையில் கும்பகர்ணன் என்று ஆளுக்கு ஆள் துக்கத்திலும் வேதனையிலும் துடிக்க, விஷயம் இந்திரஜித்தையும் எட்டியது.

மகாவீரன் இந்திரஜித், தந்தைக்கே புத்தி கூறுமளவு நியாய தர்மங்களையும் அறிந்தவன். சீதையைக் கடத்தி வந்தது முதலே அப்பாவோடு இந்திரஜித்துக்கு ஒரு பிணக்கு இருக்கத்தான் செய்தது. அதனாலேயே பட்டும்படாமல் ஒதுங்கிக் கிடந்தவன், கிங்கர சேனையில் ஆரம்பித்து அட்சகுமாரன்வரை அழிந்துபோனது அறிந்தபோது தன் நாடு, தன் மக்கள் என்கிற

**பிரம்மாஸ்திரக் கட்டில் இருக்கும்போது பிற கட்டுகள் கூடாது. அப்படி கட்டினால் பிரம்மாஸ்திரம் செயலிழக்கும். இதை இந்திரஜித்தும் அறிவான். தன் வீரர்கள் காட்டிய அவசரத்தை அறிந்து பதைத்துப் போனான்!**

ரீதியில் துடித்துவிட்டான். ஓடியும் வந்தான்.

அனலும் கனலுமாய் அமர்ந்திருக்கும் ராவணன் முன் "இதென்ன கூத்து? என்னை ஏன் முதலிலேயே அந்தக் குரங்கை அழிக்கக் கூப்பிடவில்லை?" என்றான்.

"ஒரு குரங்கை அழிக்க நானோ, நீயோ எதற்கு என்று இருந்துவிட்டேன். கிங்கரர்கள் புறப்பட்டபோது அவர்களே கூட எனக்கு அதிகபட்சமாகத்தான் தோன்றினார்கள். ஆனால், என்ன மாயம் என்று தெரியவில்லை... அந்தக் குரங்கு தன் கொட்டத்தை அட்சகுமாரன்வரை அடித்து முடித்துவிட்டது. இனியும் அது தொடர்ந்தால் இழுக்கு எனக்கல்ல... நமது குலத்துக்கே..." - ராவணனின் விளக்கம் இந்திரஜித்தை சமாதானப்படுத்தாமல் முணுமுணுக்கச் செய்தது.

"நீங்கள் எதிரியை சரியாக எடைபோடுவதில்லை. இப்பொழுதுகூட நான் அந்தக் குரங்கை வீழ்த்தினாலும் மாண்டவர் மீண்டு வருவரோ? லங்காபுரியை, அதன் படைவீரர்களை, ராவண குமாரனை ஒரு குரங்கு கொன்று விட்டது என்ற பழி வந்தது வந்ததுதானே? முன்பே எனக்குத் தெரிந்திருந்தால் இவ்வளவு தூரம் வந்திருக்குமா?" - இந்திரஜித்தின் கேள்வியில் இருந்த நியாயம் தசக்ரீவன் தலையையே கவிழச் செய்துவிட்டது.

"சரி... இனி வருந்திப் பயனென்ன? அந்தக் குரங்கை ஒருவழி பண்ணிவிட்டு வந்து பிறகு பேசுகிறேன்" என்று இந்திரஜித் புறப்பட்டான்.

இராவணன்போல மாவீரன் மட்டுமல்ல... புத்தி, உணர்ச்சி இரண்டையும் தேவர்களைப் போல கட்டியாளத் தெரிந்தவன், இந்திரஜித்! தேவலோகமேகூட இந்திரஜித் என்றால் நடுங்கத்தான்

செய்தது. அப்படிப்பட்டவன் அனுமனைப் பிடிக்கப் புறப்பட்டு விட்டான்.

மற்றவர்கள்போல வீண் சண்டை போடாமல், 'அவ்வளவு யுத்தத்திலும் வெற்றி கண்ட அந்த குரங்கு, நிச்சயம் மகத்தான சக்தியுடையதாகத்தான் இருக்கும்' என்று நம்பி, அதற்கேற்ற ஆயுதமாக பிரம்மாஸ்திரத்தையும் எடுக்க இந்திரஜித் முடிவு செய்துவிட்டான். பிரம்மாஸ்திரத்தால் விழாதவன் வேறு எதாலும் விழமாட்டான் என்பது இந்திரஜித்தின் யூகம்.

எவ்வளவோ வரங்களை மூட்டை கட்டியிருக்கும் அனுமனுக்கு பிரம்மாவும் தன் பங்குக்கு வரம் அளித்திருந்தார். அதில் ஒன்று, 'எனது அஸ்திரத்தால்கூட உனக்குத் தீங்கு நேராது. ஆனால், ஒரு முகூர்த்த காலம் உன்னால் எதுவும் செய்ய இயலாது. அதன்பிறகுதான் அது செயலிழக்கும். அதுவரை, நீ உன் விவேகத்தால் சமாளிக்கவேண்டும்' என்று கூறியிருந்தார்.

பிரம்மாஸ்திரம் அனுமனை நோக்கிப் பாயும்போது அனுமனுக்கும் நன்கு விளங்கிவிட்டது. அதை எதிர்கொள்ளாமல் அணைத்துக்கொண்டு அப்படியே மயங்கிவிட்டவன்போல விழுந்தான்.

ஒரு முகூர்த்த காலம் அஸ்திரத்துக்கு உரிய பிரம்ம மூர்த்தியையே உபாசிக்கவும் செய்தான்.

இது எதுவும் தெரியாத இந்திரஜித்தின் படைவீரர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். ஏற்கனவே கட்டுண்டு கிடப்பவனை தங்கள் வசம் உள்ள சங்கிலிகளால் மேலும் கட்டி இறுக்கினார்கள்.

பிரம்மாஸ்திரக் கட்டில் இருக்கும்போது பிற கட்டுகள் கூடாது. அப்படி கட்டினால் பிரம்மாஸ்திரம் செயலிழக்கும். இதை இந்திரஜித்தும் அறிவான். தன் வீரர்கள் காட்டிய அவசரத்தை அறிந்து பதைத்துப் போனவன், அந்த சங்கிலிக் கட்டில் அனுமன் அடங்கிக் கிடப்பதைப் பார்த்து ஆச்சரியமும் அடைந்தான்.

'இது குரங்கல்ல... மிருக வடிவில் உள்ள ஒரு மகா சக்தி. இதை இதன் போக்கில் விட்டே புரிந்துகொள்ள இயலும்' என்று கருதியவன், வீரர்கள் கட்டிய சங்கிலிக் கட்டோடு இலங்கை நகர வீதி வழியாக அனுமனை இழுத்துச் செல்ல

## "மாருதியை போற்றுவோம்!"

இந்தத் தியான ஸ்லோகம் மிகுந்த சந்தச் சிறப்பு உடையது. வால்மீகியின் ராமாயணத்தில் பாராயண ஸ்லோகமாக வருவது.

*'யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்*
*தத்ர தத்ர க்ருத மஸ்த காஞ்ஜலிம்*
*பாஷ்பவாரி பரிபூர்ண லோசநம்*
*மாருதிம் நமத ராக்ஷ ஸாந்தகம்!"*

எங்கெல்லாம் ராமநாமம் ஒலிக்கிறதோ, அங்கெல்லாம் அனுமன் வந்து விடுகிறானாம். அதுவும் எப்படி? தலைமேல் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய அவன் வந்து அமர்ந்து விடுகிறானாம். அந்த அளவுக்கு ராம நாமத்துக்காக உருகிடும் மாருதியைப் போற்றுவோம் என்பது உட்பொருள்.

கர்மக்கணக்கும் தீரும், பக்தியும் பெருகும் – என இரட்டைப் பலன்களை அளிக்க வல்லது இந்த தியான ஸ்லோகம்!

முனைந்தான்.

அனுமனுக்கு அது ஓர் அரிய வாய்ப்பாகத்தான் தோன்றியது. 'தன் வருகையை நகரமும் அறிந்ததுபோல் இருக்கும்; ராவண சந்திப்பும் நிகழும்; எச்சரிக்கைக்குப் பிறகு மிச்ச எதிர்ப்பையும் காட்டலாம்' என்று கருதினான்.

அனுமனுக்கு இலங்கை நகர வீதியில் பலத்த எதிர்ப்பு! அவனது யுத்தத்தால் மடிந்துபோன வீரர்களின் மனைவியரெல்லாம் ஒன்று கூடி நின்றுகொண்டு, அவனை வாரித் தூற்றினர். சிலர் அருகில் வந்து அவன் தாடையிலும் இடித்தனர்.

அனுமன் உள்ளூர அதை ரசித்தான். அதே சமயம், 'மாயக்குரங்கு வசப்பட்டது. மாவீரர் இந்திரஜித்தின் வீரம் நிலை நின்றது' என்ற செய்தி ராவணனை எட்ட... பெரும் கவலையோடு இருந்த அவனது பரந்த மார்பு மெள்ள நிமிர்ந்தது.

அசோகவனத்தில் சீதையோ அனுமனின் நிலையை எண்ணி வருந்தத் தொடங்கியிருந்தாள்!

அனுமன் அகப்பட்டுவிட்டான்!

அதுவும் இந்திரஜித் ஏவிய பிரம்மாஸ்திரத்தால்! அவனை இலங்கை நகரத்து வீதி வழியாக அழைத்துச் செல்கிறார்கள். அநேகமாக ராவண சபையில் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம். ஊரறிய சிரச்சேதம் செய்துவிடும்படி ராவணன் உத்தரவிடக்கூடும்!

–இப்படியொரு தகவல் அசோகவனத்தில் இருந்த சீதையை அடைய, அவளது விழிகளில் கண்ணீர் திரண்டுவிட்டது.

"ஒரு சூரியன் போல வந்து, எனக்குள்ளே இருந்த அவநம்பிக்கை, மனச்சோர்வு, தாளமாட்டாத துக்கம் என்று சகலத்தையும் வெளியேற்றும் விதமாகப் பேசி, பின் என்

# ராவண - வானர சந்திப்பு!

நாதருடன் வந்து என்னை மீட்பதாகக் கூறிச் சென்றவனே... இப்படியா ராவணன் வசம் அகப்படுவாய்? என்னை மீட்டுச் செல்வதாகக் கூறிய உன்னை, இனி யாரால் மீட்க முடியும்?" என்று புலம்பத் தொடங்கிய சீதையை, வழக்கம்போல் திரிஜடைதான் தேற்றினாள்.

"அம்மா... கவலை வேண்டாம்! உங்களைக் காண வந்த அந்த வானர தூதன், அவ்வளவு சுலபத்தில் அழிந்து போகிறவனாக எனக்குத் தெரியவில்லை. இந்திரஜித்தால் கூட பிரம்மாஸ்திரம் போட்டுத்தான் அவனைப் பிடிக்க முடிந்தது! இதை ஒரு பெரிய வீரமாக கருத முடியாது.

அதற்குமுன், இந்த லங்காபுரியில் சரிபாதிக்குமேல் அந்த வானர வீரனால் துவம்சமாகிவிட்டது. விளையாட்டு போல நடந்த துவம்சம் இது. இதுவே விபரீதமானால் எது வேண்டுமானாலும் நடக்கலாம்! எது எப்படியிருப்பினும், நம்



கனவு நிச்சயம் வீண் போகாது. கவலையின்றி இருங்கள். எனக்கென்னவோ, இலங்கை நகரின் முற்றான அழிவுக்கு இன்று ஓர் ஒத்திகை நடக்குமோ என்றுகூடத் தோன்றுகிறது!" என்றாள் திரிஜடை.

அவளது கருத்துக்குத் தோதாகவே, அடுத்தடுத்த காட்சிகளும் அரங்கேற ஆரம்பித்தன.

'அனுமன் அகப்பட்டான்!' என்கிற வெற்றிச் செய்தி ராவணனைக் குதூகலப்படுத்திவிட்டது. அந்த நொடி இந்திரஜித்தை எண்ணி இறும்பூதெய்தினான்.

"எனக்குக் கவலையே இல்லை... அந்தக் குரங்குக்கு ஒரு வகையில் நான் நன்றி கூறவேண்டும். என் மகனின் வீரத்தைப் பலமுறை நான் பார்த்துவிட்டேன். ஆயினும், இன்று இந்திரஜித் காட்டியிருக்கும் வீரம், என் இதயம் உள்ளவரை நினைவிலிருக்கும். ஆங்காங்கே ஒளிந்து கொண்டு, என் அழிவுக்குப் பாடுபட்டு வரும் தேவர்களை நான் நன்கறிவேன். அவர்கள் முகத்தில் என் அருமை மகன் கரி பூசிவிட்டான்!" என்று எக்காளமிட்டான்.

அதன் எதிரொலியாக,



அரண்மனை தர்பார் மண்டபத்திலும் ஆட்டபாட்டம் தொடங்கிவிட்டது! அழிந்துவிட்டவர்கள் பற்றிய துக்கமெல்லாம், 'அனுமன் அகப்பட்டுவிட்டான்' என்கிற ஒன்றால் இன்பமாகிவிட்டது! இதைத்தான் அரக்க புத்தி என்கிறார்களோ?

அனுமனையும் ஓர் அரக்கக் கூட்டம் பிரம்மாஸ்திரக் கட்டுடன் அப்படியே அலைக்கழித்தபடியே இழுத்து வந்தது. முன்னால் கம்பீரமாக நடந்து வந்தான் இந்திரஜித். அவ்வப்போது திரும்பிப் பின்னால் பார்த்தபோது, அனுமன் முகத்தில் ஒருவித மர்மப் பார்வை.

> **"லங்கா வேந்தனே... நானொரு தூதன்! வானர தூதன். உன் இழிச்செயலையும் பழிச்செயலையும் இடித்துரைக்க வந்திருக்கும் மனித தேவன் ஒருவனின் தூதன்!"**

பிரம்மாஸ்திரக்கட்டு எப்போதோ அவிழ்ந்துவிட்டதை இந்திரஜித்தும் உணர்ந்திருந்தான். அந்த நொடி அனுமன் நினைத்திருந்தால், அவனை இழுத்துச் செல்லும் அரக்கர்களை வேகமான மூச்சுக்காற்று ஒன்றாலேயே சுட்டுப் பொசுக்கியிருக்கலாம். இருந்தும், அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுத்து, அவன் வருவதன் பின்னால் ஏதோ பொருள் இருப்பதாகப் புரிந்து கொண்டான். அது, ராவணன் முன் அனுமனை அறிமுகப்படுத்தும் போது நன்றாகவே அவன் குரலில் எதிரொலித்தது.

இதற்குமுன் இதேபோல இந்திரனைப் பிடித்துவந்து, தந்தைமுன் நிறுத்தியிருக்கிறான் இந்திரஜித். "அப்பா... இந்தாருங்கள், நீங்கள் கேட்ட இந்திரன்! தேவர்களின் தலைவன், இங்கே உங்களின் பாதத்தில் விழுந்து கிடக்கும் ஒரு கைதி!" என்று ஏளனமாக, இறுமாப்பாகப் பேசியிருந்தான். அனுமனைப் பொறுத்தவரை அப்படிப் பேச முடியவில்லை!

"அப்பா... இதோ, உங்களை அச்சுறுத்திய வானரன். இவனை சாதாரணமாகக் கருதிவிடாதீர்கள். இவனிடம் வேகம், வீரம்,


விகடன் பிரசுரம் 189

விவேகம் என்று பல உணர்வுகளைப் பார்க்கிறேன்!" என்று சொன்னபோது, ராவணனுக்கே வியப்பு! அவனது கூரிய விழிகள், அனுமனை நோக்கின. அனுமனுக்கும் அந்த ராவணப் பார்வை ஓர் ஆச்சரிய அதிர்வையும் சில கேள்விகளையும் உருவாக்கியது.

ஆகிருதியான தோற்றம், அனலடிக்கும் பார்வை, ஒளிப்புனலாய் கிரீடம், பிசிறில்லாத விபூதி பூசிய நெற்றி, அதன் மையத்தில் மையால் இடப்பட்ட லிங்க முத்திரை! முத்தும் மணியும் குலவிப் புரளும் மார்பு, இடக்கால் முன்னிருக்க, வலக்கால் சற்றே பின்னிருக்க... கருநீலப் பட்டுக் கச்சமுடன் சிங்கமுக சிம்மாசனத்தில் ஒயிலாக அவன் அமர்ந்திருக்கும் பாங்கு, அவனை ஒட்டி – ஆனால், தாழ்வான கீழ்ப்படிகளில் அவனது அமைச்சர் களான பிரஹஸ்தன், துர்த்தரன், நிகும்பன், மஹாபார்ச்வன் என்கிற வரிசை... அவர்களிடம் கொழுத்த அரக்கத் தினவு!

ராவணனையே பார்த்துக்கொண்டிருந்தான் அனுமன்.

'என்ன ஒரு தேஜஸ்... யானையைப் பார்ப்பதுபோல ஒரு கம்பீரம், மயங்கவைக்கிற தோரணை! கண்ணிரண்டு போதும்... வாய் பேசாதபடி கட்டளைகள் இட! தேவப்பிரகாசம் எப்படி, இப்படி ஓர் அரக்கனிடம் இடம் பெயர்ந்தது? மும்மூர்த்தியரை ஒருசேரக் காணும்போது எழுவதுபோல, ஓர் உணர்ச்சி இவனைக் காணும்போது எழுகிறது! ஆனாலும், இவன் தேவனில்லை... தோற்றத்தால் ஏற்றம் கொண்டாலும், அகத்தில் இருள் உடையவனாக – ஒரு காரிகைக் கள்வனாக... அவளிடம் அனுதினமும் சென்று கெஞ்சி நிற்பவனாக அல்லவா இருக்கிறான்? இந்தப் பிரம்ம சிருஷ்டியில்தான் எத்தனை எத்தனை விநோதங்கள்... ஹும்!' என்றுதான் அனுமனுக்குள்ளும் எண்ணங்கள் ஓடின.

அதேசமயம் ராவணன், தன் அமைச்சர் பிரஹஸ்தனை ஒரு பார்வை பார்த்தான். அதன் பொருள் 'இந்தக் குரங்கை நீ அறிந்து சொல்' என்பதே! பிரஹஸ்தனும் தன் ஆசனத்திலிருந்து எழுந்தான். கம்பீரமாக நிற்கும் மாருதியை, முகத்தை அளந்தபடியே பார்த்துக் கொண்டு அருகில் வந்தான்.

கோயில் பிராகாரத்தை ஒரு வலம் வருவதைப் போல, ஒரு சுற்று சுற்றி வந்து, அனுமனை நெருக்கமாகப் பார்த்து

முடித்தவன், அதே தினவோடுதான் கேள்வியைத் தொடங்கினான்.

“ஏ வானரனே... யார் நீ? இந்த லங்கையை உனக்குப் பிரியமான வாழைகள் பழுத்துள்ள ஒரு வாழைத் தோட்டம் என்று எண்ணிவிட்டாயா?”

பிரஹஸ்தனின் கேள்விக்கு அனுமன் உதட்டில் துளியும் அச்சமே இல்லாத ஒரு குறுஞ்சிரிப்புதான் பதிலாக விளைந்தது!

“என்ன நகைக்கிறாய்? மாவீரன் என்கிற நினைப்போ உனக்கு? இந்திரன் முதல் எமன் வரை அடங்கி, ஒடுங்கி



பணிவோடு நின்ற சபை, இந்தச் சபை... தெரியுமா உனக்கு? மால் முதல் மருகன் வரை, முக்கண்ணன் முதல் நான்முகன் வரை எவருக்கும் அஞ்சாத அதிதீரர் எங்கள் அரசர். ஆட்டம் போட்ட உன்னை, எப்படிக் கட்டிப் பிடித்து இழுத்து வந்திருக்கிறோம் என்று பார்த்தாயல்லவா? இனியாவது உண்மையைக் கூறு! உண்மைதான், உன்னை இங்கே தப்புவிக்கும். யார் உன்னை அனுப்பியது? இல்லை, நீயாக வந்தாயா?”

‘பேசு... பேசு... எவ்வளவு பேசுகிறாயோ, அவ்வளவு பேசு!’ என்பதுபோல, பிரஹஸ்தனைப் பேசவிட்ட அனுமன், ராவணனையே பார்த்தபடி நின்றிருந்தான். பின், சற்றும் ஆவேசம் குறையாதபடி வாய் திறந்தான்.

“லங்கா வேந்தனே... நானொரு தூதன்! வானர தூதன்... உன் இழிச்செயலையும் பழிச்செயலையும் இடித்துரைக்க வந்திருக்கும் மனித தேவன் ஒருவனின் தூதன்!” என்ற அனுமனை, ராவணன் உள்ளிட்ட அத்தனை பேரும் ஒரு புதிய நிமிர்வுடன் பார்க்கத் தொடங்க... அனுமனும் தொடர்ந்தான்.

“என்ன பார்க்கிறாய்? தூதன் என்றால் நேராக அரண்மனைக்கு

வராமல், உன் நகரையும் படையையும் ஜம்புமாலி முதலான உன் மகனையும் ஏன் சம்ஹாரம் செய்தேன் என்றா? காரணம் இருக்கிறது! நான் சேதி சொல்ல வந்திருக்கும் ஒருவன் என்பதோடு, ஓரளவு வீரமும் உடையவன் என்பதை உனக்கு உணர்த்தத்தான்!

உன் புதல்வன் போட்ட பிரம்மாஸ்திரக்கட்டு எப்போதோ அவிழ்ந்துவிட்டது! இருந்தும், நான் அடங்கிக் கிடந்தது போல நடிக்கக் காரணம் – உன்னைச் சந்திக்க வேண்டும் என்பதால்தான். இதோ, இப்போது எனது எண்ணமும் ஈடேறிவிட்டது. எங்கே உன்னைக் காணாமல் போய்விடுவேனோ என்று சற்றே அஞ்சினேன்! நல்லவேளை... எனது தேவனான ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் கருணை, உன்னை நான் காண வழி செய்து கொடுத்துவிட்டது!"

– அனுமன், ராமனின் பெயரைச் சொன்ன மாத்திரம் ராவணனுக்கு அந்தச் சபைக்குள்ளேயே ஓர் இடி இறங்கினது போலிருந்தது!

"நீ... நீ..." என்று ராவணன் அவனை முற்றாக அறியத் துடிக்கவும்... கைகளை உயர்த்தி, அலட்சியமாகத் தடுத்த அனுமன், "விவரமாகக் கூறுவேன். வீண் துடிப்பு எதற்கு?" என்று கேட்டபடியே, தான் அமர்ந்து பேச, ஓர் இருக்கையைத் தேட... பிரஹஸ்தன் உடனேயே புரிந்தது போலக் கேட்டான்.

"எதைத் தேடுகிறாய் இங்கே?"

"ம்... தூது வந்த எனக்கு ஒரு சிம்மாசனம் இல்லை என்றாலும், ஒரு சாதாரண ஆசனம்கூடவா இல்லை?"

"அட்டகாசக் குரங்கே... ஆசனம் உனக்கு ஒரு கேடா?"

"அட்டகாசமே வாழ்வாகிப் போன உங்களுக்கு ஓர் அரண்மனையே இருக்கலாம். உங்களின் கொட்டத்தைச் சற்றே அடக்கப் பார்த்த எனக்கு, ஓர் ஆசனம் கூடாதோ? அமைச்சனே!"

– அனுமனின் குறும்பான பதில், பிரஹஸ்தனைக் கொதிப்படையச் செய்ய... மஹாபார்ச்வன் பாய்ந்து எழுந்தான், கையில் வாளுடன்!

"ஏ குரங்கே... கைதியாக நிற்கும்போதும் உன்னிடம் திமிர் குறையவில்லை! உன் வாலை நறுக்கினால்தான் நீ சரிப்படுவாய்!"

**அ**னுமனுக்கான துதிகளில் ஆதிசங்கர பகவத் பாதாள் அருளிய 'ஹனுமத் பஞ்சரத்னம்' விசேஷமானது.

*'வீதாகில விஷயேச்சம்*
*ஜாதா நந்தாச்ரு - புலகம் அத்யச்சம்।*
*ஸீதாபதி தூதாத்யம்*
*வாதாத்மஜம் - அத்ய பாவயே ஹ்ருத்யம்॥*

*தருணாருணமுக - கமலம்*
*கருணாரஸ - பூர - பூரிதாபாங்கம்।*
*ஸஞ்ஜீவனம் ஆசாஸே*
*மஞ்ஜுல - மஹிமாநம் அஞ்சனாபாக்யம்।*

*சம்பர வைரி சாரதிகம்*
*அம்புஜ - தல - விபுல - லோசநோதாரம்।*
*கம்பு கலம் அநில திஷ்டம்*
*பிம்ப ஜ்வலி தோஷ்டம் ஏகம் அவலம்பே॥*



*தூரிக்ருத - ஸீதார்த்தி:*
*ப்ரகடி - க்ருத - ராம - வைபவ ஸ்பூர்த்தி:*
*தாரித - தசமுக கீர்த்தி:*
*புரதோ மமபாது ஹநுமதோமூர்த்தி:*

*வாநர - நிகராத்யக்ஷம்*
*தாநவ குல குமுத ரவி கர ஸத்ருஷம்।*
*தீன- ஜாநவந - தீக்ஷம்*
*பவந - தப: பாக - புஞ்சம் - அத்ராக்ஷம்।*

—மேற்கண்ட துதியை வியாழக்கிழமையன்று நெய்விளக்கேற்றி உருகித் துதித்திட, குருவருளோடு அனுமனின் அருளும் சேர்ந்து கிட்டும். ஆத்ம பலத்தை ஊற்றாய்ப் பெருகவைப்பது இந்தத் துதி.

என்ற மஹாபார்ச்வனை ராவணன் தடுத்து நிறுத்த... அடுத்த நொடியே, எந்த வாலை நறுக்குவேன் என்று மஹாபார்ச்வன் எகிறினானோ... அந்த வால், அந்த அவையில் அனைவரும் காணும் விதமாகச் சரசரவென நீண்டு வளரத்

**வல்லவனுக்கு வல்லவன் போல, ராவணனுக்கு வாலி விளங்கினான். தன் எதிரில் நிற்பவர் எவராயினும், அவரது பலத்தில் சரிபாதி தன்னைச் சேரவேண்டும் என்று வாலி வாங்கி வைத்திருந்த வரம், ராவணேஸ்வரனுக்குப் பெரும் பகையாகிவிட்டது!**

தொடங்கியது!

அனுமனோ, கண்களை மூடிக் கைகளைக் கூப்பியவனாக ராம நாமத்தைக் கூற ஆரம்பித்திருந்தான். நீண்டு வளர்ந்த அந்த வாலும் ஓர் ஆசனம்போல வட்டப்பிரியாக வளைந்து வளைந்து, அடுக்கடுக்காக மேலேறி, ராவணனின் ஆசனத்துக்கு ஓர் அடி கூடுதல் உயரம் வளர்ந்த நிலையில் நின்றுவிட... கண்விழித்த அனுமனும் அதன்மேல் எகிறி அமர்ந்தான்! அப்படியே துளியும் அச்சமின்றி, தன் இடது தொடைமேல் வலது காலைத் தூக்கிப் போட்டவன், தனக்குக் கீழே தெரியும் அவையோரை ஒரு சிறு பூச்சி போலப் பார்த்தான்.

"இதென்ன மாய விளையாட்டு? இது மாயங்களை ஒடுக்கும் ராவண சபை என்பதை மறந்துவிடாதே!"

"மதி கெட்டவனே! இது மாய விளையாட்டல்ல... என் சக்தியால், எனக்கு நானே அளித்துக் கொண்டிருக்கும் மதிப்பு! குறுக்கே பேசாமல், நான் கூறப்போவதைக் கேள்.

நான் ஸ்ரீராமனின் தூதன்! வானரர்களின் தலைவனான சுக்ரீவனின் மந்திரி. அவன் புதல்வரான அங்கதன் தலைமையிலான வானரப் படையோடு, எங்கள் அன்னையான சீதாதேவியைத் தேடித் தென்திசை வந்தவன். சம்பாதியால் அன்னை இந்த இலங்கைக்குள் இருக்கக்கூடும் என்பது தெரியவந்தபோது, அதை ஊர்ஜிதம் செய்துகொள்ள, தனி ஒருவனாகக் கடல்மிசை பறந்தே வந்தவன்.

அசோகவனத்தில் அன்னையையும் கண்டேன். அப்படியே

சந்தடியின்றித் திரும்பிச் செல்ல, நானொன்றும் உங்களைப் போன்றவன் அல்ல... எனவேதான், திரும்பிச் சென்று எங்களின் – அண்ணலின் வீரப்படையோடு இங்கே வருமுன், உனக்கு அறிவுரை கூறவும், எச்சரிக்கை செய்யவும் இங்கே வந்துள்ளேன்!" என்று ஒரு நீண்ட பிரசங்கம் நிகழ்த்தினான்.

தன் உரையில் சுக்ரீவன் பெயரைக் குறிப்பிடவும் ராவணனுக்குத் திகைப்பு. சுக்ரீவன், வாலியின் சோதரன் என்பதை ராவணன் நன்கறிவான். அதுமட்டுமல்ல... வாலியின் வாலில் ராவணன் கட்டுண்டு சிக்கித் தவித்த ஒரு சம்பவமும் ராவணனின் நினைவில் எழும்பியது.

ராவணன் மாவீரன்தான். மகரிஷிகளுக்கு இணையான தபஸ்வி. வரங்களையும் வாங்கிக் குவித்திருப்பவன்தான். ஆனாலும், வாலியிடம் மட்டும் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை!

வல்லவனுக்கு வல்லவன் போல, ராவணனுக்கு வாலி விளங்கினான். தன் எதிரில் நிற்பவர் எவராயினும், அவரது பலத்தில் சரிபாதி தன்னைச் சேரவேண்டும் என்று வாலி வாங்கி வைத்திருந்த வரம், ராவணேஸ்வரனுக்குப் பெரும் பகையாகிவிட்டது!

இல்லாவிட்டால், எமனையும் இந்திரனையும் குபேரனையுமே அடக்கி, நவக்கிரகாதிபர்களையே தன் சிம்மாசனத்துப் படிக்கட்டுகளாக்கிக்கொண்ட ராவணனுக்கு, வாலி ஒரு பொருட்டே இல்லைதான்! ஆனால், வாலியின் வரபலம் – ராவணனை அவன் முன் ஒரு பத்துத் தலை பூச்சி போலச் சாதாரணமாக்கி விட்டது!

'அப்படிப்பட்ட வாலியின் தம்பியான சுக்ரீவனின் மந்திரி என்றால், வாலி என்னவானான்? ராமன் எப்படி இவர்களோடு சேர்ந்தான்?' –ராவணனை நியாயமான பல கேள்விகள் ஆக்கிரமிக்கத் தொடங்கின.

ராவண சபையில் அனுமன், தான் யார் என்று கூறிய கையோடு, தான் வாலியின் சகோதரனான சுக்ரீவனின் அமைச்சன் என்றும் கூற, வாலி குறித்து ராவணன் நெஞ்சம் ஒரு வினாடி நடுங்கவே செய்தது.

தனக்கு நிகராக பூமியில் ஒருவரும் இருந்துவிடக் கூடாது என்பது ராவணனின் பெருவிருப்பம். அதற்கு ஏற்பவே எல்லாமே நடைபெற்றது. தேவர்களுக்கு வழிகாட்ட வசிஷ்டர், வியாசர் என்று ரிஷிகள் இருந்தால், அசுரர்களுக்கு வழிகாட்ட சுக்ராச்சாரியார் இருந்தார்.

எப்பொழுதும் ஒன்று இரண்டாக உள்ளது. இரண்டாக இருந்தாலே அந்த ஒன்றை விளங்கிக் கொள்ளவும் முடியும்.

# ஆளுக்கொரு கணக்கு!



நாணயம் ஒன்றுதான். ஆனால், அதற்கு பூவும், தலையுமாக இருபக்கங்கள்.

மானுடம் ஒன்றுதான்.

அது அசுரம், தேவம் என்று இரண்டாக இருந்ததுதான் நிலை. பிரபஞ்சம் உள்ள அளவும் இந்த இரண்டு இருந்தே தீரும். ஒன்று நெருப்பு என்றால் மற்றது நீர் மாதிரி. ஒன்று வெயில் என்றால் மற்றது நிழல் மாதிரி.

ராவணனுக்கு அசுரம் பிறவி இயல்பாகிவிட்டது. அதனால், தேவம் எதிரியாகிவிட்டது.

உலகில் தனக்கு எதிரியே யாரும் இருந்துவிடக் கூடாது என்று கருதியபோதுதான் வாலி பற்றி அறிந்தான்.

'வாலிக்கு நிகரான வீரன் உலகில் இல்லை. இத்தனைக்கும் அவன் ஒரு வானரன்' என்ற தகவல் ராவணனை அடைந்தபோது, கொதித்துப் போனது அவன் அகந்தை.



ஆறறிவு இருந்தும் பின்நோக்கிச் சென்று மிருக உணர்வு கொண்டு, ஆறை ஐந்தாக்கிக் கொண்டுவிட்டபடியால் சூட்சும அறிவு என்பதே ராவணனிடம் இல்லை. ராவணனிடம் மட்டுமல்ல, எந்த அசுரர்களிடமும் சூட்சும அறிவு இருந்ததில்லை. சூட்சும அறிவு என்பது அகந்தை இல்லாத நிலையில் உருவாவது. அகந்தை நிரம்பித் தளும்பும்போது அது எப்படி இருக்க முடியும்?

இதனால், ராவணன் 'எனக்கு மிஞ்சி ஒரு வீரனா... அவனை என்ன செய்கிறேன் பார்' என்று மார் தட்டிக் கொண்டு கிளம்பிவிட்டான்.

"ப்ரபோ... அவனும் உங்களைப் போல வரங்கள் பல பெற்றவன். குறிப்பாக, அவன் எதிரில் உங்கள் ஈஸ்வரமூர்த்தியே தோன்றினாலும் அவர் பலத்தில் பாதி அவனுக்கு போய்விட, இருவரும் சமமானவர்கள் ஆகிவிடுவார்கள். அவனை சந்திப்பவர்க்கெல்லாம் இழப்புதான். ஜாக்கிரதை" என்று எச்சரித்தனர், அவனது நலம் விரும்பிகள்.

''ஆ... அதெல்லாம்



மற்றவர்க்கு! நான் ராவணேஸ்வரன்! அந்த கைலாசநாதனுக்கு வேண்டுமானால் வரங்களைத் தந்துவிட்டு, பின் அதில் மாட்டிக்கொண்டு தவிப்பது வழக்கமாக இருக்கலாம். நான் அசுர குல திலகன். அந்த காளியே எனக்கு ஒன்றுமில்லாதவள். இந்த வாலியெல்லாம் எந்த மூலைக்கு?" என்று வாலியை சந்திக்கப் புறப்பட்டு, பின் சந்திப்பிலும் தன் கித்தாப்பைக் காட்டப்போய் அதுவே ராவணனுக்கு ஆபத்தாகிவிட்டது.

ராவணனின் சரிபாதி பலம், ஏற்கனவே உள்ள வாலியின் மிருகபலம், போதாக்குறைக்கு வரபலம் என்று பலங்களின் சக்கரவர்த்தியான வாலி, ராவணனை தன் வாலாலேயே கட்டிவிட்டான்.

'நான் கைகளால் தொடக்கூடிய அளவுக்கு நீ ஒன்றும் பெரியவன் அல்ல' என்று சொல்லாமல் சொன்னவன், தன் மகன் அங்கதனுக்கு ஒரு கிலுகிலுப்பை போல ராவணனை ஆட்டிக் காட்டினான்.

'மகனே, இதோ பார் பத்து தலைப் பூச்சி... இதன் ஒவ்வொரு தலைக்குள்ளும் சொல்லமுடியாத அளவு ஆணவம் உள்ளது. இதை இப்பொழுது ஆகாசத்தில் வீசி எறிகிறேன் பார்' என்று வீசி எறிய, அங்கதன் அதைப் பார்த்து கை கொட்டிச் சிரிக்க, ராவணனும் வானிடைப் பறந்து தப்பித்தால் போதும் என்று இலங்கை திரும்பி வந்தது ஒரு தனிக்கதை.

அதன்பின் அந்தத் தோல்வியை நினைக்கக்கூட ராவணன் தயாரில்லை. அசுரர்களுக்கு உண்டான இயல்பு இது.

ஆனால், வாலி பற்றி அறிந்த ராமனோ, அவனை அழிக்க சூட்சுமத்தோடு செயல்பட்டான். தன் சக்தியை இழந்து விடாதிருக்கவே மரத்தின் பின் ஒளிந்தான். யுத்த தர்மத்தோடு தன் செயலைப் போட்டு குழப்பிக் கொள்ளவில்லை. இறுதியில் ராமனுக்கே வெற்றி கிட்டியது. நல்ல வெற்றியான விளைவுக்காகவே செயல்படுவது தேவம். பின்விளைவு பற்றிய ஞானமே இல்லாமல் செயல்படுவது அசுரம். ராவணன் அன்று வாலியிடம் அகப்பட்டுக் கொண்ட போதும் அதுதான் நிலை. இன்று அனுமன் முன்னாலும்கூட அதே நிலைதான்.

"ஏய் திமிர்பிடித்த குரங்கே... வாலி பெயரைச் சொன்னால் நான் பயந்துவிடுவேன் என்பது உன் எண்ணமா? ஆமாம், எப்படி இருக்கிறான் அந்த வாலி?" என்று மென்று விழுங்கியபடி

வாலி பற்றி ராவணன் அறிய முயல, ராவணன் தடுமாறுவதை உணர்ந்தபடியே அனுமனும் அதற்கு பதில் கூறலானான்.

அதுவும் எப்படி? ராவணனுக்கு நேர் எதிரில் அவனுக்கு சமமான உயரத்தில் துளியும் அஞ்சாமல் நேருக்கு நேர் பார்த்து...

"லங்காதிபதியே...

என் அரசனின் அண்ணனாகிய வாலியும் உன்னைப் போலத்தான்! தம்பியின் மனைவியையே அபகரித்து தன்வசப் படுத்தப் பார்த்தவன். வரபலம் பெற்ற நிகரில்லாத ஒரு மத யானையாக திகழ்ந்த அவனை ஒரே பாணத்தால் வீழ்த்தியவர் மானுட விஷ்ணுவான எங்கள் ராமச்சந்திரமூர்த்தி. அதாவது, வெல்லவே முடியாதவன் என்று பெயர் பெற்ற வாலியையே வென்றுவிட்டார் எங்கள் அண்ணல்.

இன்று வாலி இல்லை... திரைகடலுக்கு அப்பாலே அவனால் விளைந்த அவஸ்தைகளும் இல்லை. கிஷ்கிந்தைக்கு இந்த நொடி சுக்ரீவரே மகாராஜா... அங்கதனே இளவரசன்! நான் அவர்களின் அமைச்சன்.

அவர்களுக்கு மட்டுமல்ல; இனி அனைவருக்கும் அங்கே ராமச்சந்திர பிரபுதான் காவல் தெய்வம். அவர் பெயரைச் சொல்லும்போதே நம்முள் உள்ள சப்தரூபம் சிலிர்ப்பதை உணரலாம்.

உடம்புக்கு நீரும் உணவும் ஆகாரமானதைப்போல உள்ளத்துக்கு 'ராம' என்னும் இரண்டெழுத்தே ஆகாரமாகி விட்டது. ஆதாரமும் ஆகிவிட்டது.

விளையாட்டாக சுற்றித்திரிந்த நானும்கூட என்னையும் என் சக்திகள் அவ்வளவையும் அறிந்தது அந்த நாமத்தால்தான். என்னுள் இந்த நொடிப்பொழுதில் நீ காணும் அவ்வளவு சக்தியும் அந்த நாமத்தின் பலத்தால் வந்ததே!" என்று அனுமன் கூற, ராவணனுக்குள் வாலி உயிரோடு இல்லை என்கிற தகவல் ஒரு பெரிய நிம்மதியை மூட்டியது.

"வாலியின் பிழை அவன் உயிரையே பறித்தது. இங்கே உன் பிழையும் அதுதானே? அங்கே நடைபெற்ற அசுரவதம் இங்கேயும் தொடர வேண்டுமா? நீ சிந்திக்க வேண்டும் என்பதனாலேயே இதைக் கூறுகிறேன்'' - அனுமனிடம்

கேள்விக்கணைகள் ஆரம்பமாயின...

"என்னை உன் வீரர்கள் கட்டி இழுத்து வந்து நிறுத்தி விட்டதாகவும், நானும் கட்டுப்பட்டு உன்முன் கைதியாகி விட்டதாகவும் நீ எண்ணிக்கொண்டிருக்கிறாய். உன்னை சந்திக்கவேண்டும்... உனக்கான நல்ல கருத்தை கூறிட வேண்டும் என்று நான் விரும்பியதாலேயே அவர்கள் இழுத்து வரும்போது பேசாமல் வந்தேன்.

தங்கம் போல உன் தேகம் தகதகத்து என்ன பயன்? மாதா சீதையை அபகரித்ததால் உன் புத்தி இருளடைந்து அல்லவா போய்விட்டது? அந்த இருளை என் புத்திமதி என்னும் ஒளியால் விரட்டவே இப்போது பேசிக் கொண்டிருக்கிறேன். நல்லவிதமாக சிந்தித்து மாதாவை திரும்ப ஒப்படைத்து விடு. அண்ணலும் உன்னை மன்னித்துவிடுவார். இல்லாவிட்டால் அவரும் சுக்ரீவன் படையும், இந்த இலங்கை மாநகரை பந்தாடி விடுவார்கள்.

**"மகாவீரரும், அரக்க குல திலகருமாகிய நீங்கள், தூது வந்த ஒரு குரங்கை கொன்றீர்கள் என்ற மகா பழிக்கா உள்ளாவது? அச்சமுள்ளவர்கள் செயலல்லவா இது?"**

அந்த கூட்டத்தில் நான்தான் மிக இளைத்தவன். என் சகாக்கள் என்னைவிட வலிதானவர்கள். வலியதுக் கெல்லாம் வலியது அண்ணலின் பாணம்.

நீ அழிந்து திருந்தப் போகிறாயா? இல்லை, என் பேச்சைப் புரிந்து திருந்தப் போகிறாயா?"

- அனுமனின் அழுத்தமான கேள்வி ராவணனுக்குள் அனல் மூட்டியது. அதைக் குறிப்பாலறிந்த அவனது அமைச்சன் பிரஹஸ்தன், ஏற்கனவே அனுமனால் தனது மகன் ஜம்புமாலியை இழந்தவன்... அனுமன் முன்னே ஆவேசத்துடன் எழுந்தான்.

"ஏய் குரங்கே... உபதேசமா செய்கிறாய்? யாருக்கு யார் அறிவுரை கூறுவது? நேருக்கு நேர் வந்திட துணிவில்லாமல் இரவில் வந்து உன் இனத்துக்கே உரிய சேட்டைகளால்



எங்களில் பலரையும் கொன்றுவிட்டு இப்பொழுது கைதியாக அகப்பட்டும் அடங்காமல் ஆர்ப்பரிக்கின்றாயா? எங்கள் தலைவர் ஒரு குரங்குக்கு சமமாக அதோடு வாதம் புரிந்தார் என்றால் அது எவ்வளவு பெரிய இழுக்கு?

நீ பேசி கேட்பதற்காக உன்னை இங்கு அழைத்து வரவில்லை. உன்னை தண்டிக்கவே இழுத்து வந்திருக்கிறார்கள்.

உன் திமிருக்கேற்ற சிரச்சேதம் எனும் தண்டனையால் நீ சவமாகப் போவதை இன்னும் சிறிது நேரத்தில் இந்த இலங்கை பார்க்கப் போகிறது. பிறகு, உன் உடலை அந்த சுக்ரீவன் முதல் சகலரும் பார்க்கப் போகிறார்கள். வாலிருக்கிறது என்று ஆசனம் போட்டமர்ந்து வாலாட்டிய உன்னை என்ன செய்கிறோம் என்று பார்...”

– பிரஹஸ்தன் கொந்தளித்து முடித்தான்.

“ஆம்! சிரச்சேதம்தான் சரியான தீர்ப்பு. அவ்வாறே ஆகட்டும்!” என்று ராவணனும் உத்தரவிட, அதுவரை நடப்பதை எல்லாம் கேட்டபடி மனம் ஒருநிலை கொள்ளாமல் தத்தளித்தபடி இருந்த விபீடணன் வேகமாக எழுந்தான்.

“அண்ணா, அவசரம் வேண்டாம்!” என்றான். மொத்த அவையே அதிர்ச்சியோடு விபீடணனைப் பார்த்தது.

ஏற்கனவே சீதை விஷயத்தில் ராவணனுக்கு நல்ல கருத்துக்கள் பல கூறி, அதனால் இருவருக்குமிடையில் ஒரு சிறிய இடைவெளி உருவாகி இருந்தது. அது அதிகரிப்பதுபோல விபீடணன் எழுந்து நின்று ‘அவசரம் வேண்டாம்’ என்று கூறவும், மொத்த சபையுடன் சேர்ந்து ராவணன் பார்வையும் விபீடணனை ஊடுருவியது.

“அண்ணா, வந்திருப்பவன் வாயுகுமாரன்! ராமதூதன்! தூது வந்திருப்பவர்கள் யாராயிருப்பினும் அவர்களைக் கொல்வது பழிக்கு உரிய செயல். இவன் வரம்புகள் மீறி நமது ஜம்புமாலியை, கிங்கரர்களை, பஞ்ச சேனாபதிகளை, அவ்வளவு ஏன்... அட்ச குமாரனையே கொன்றுவிட்டவன். இது ஒன்றும் தூதனின் செயல் அல்லதான்!

அதற்காக இவனைச் கொன்றுவிட்டால் கடலுக்கு அப்பால் உள்ள ராமச்சந்திரமூர்த்தி பயந்து இங்கே வராமல் போய் விடுவாரா? இன்னொன்றையும் மனதில் கொள்ளவேண்டும்.

இவனாக முன் வந்து நம்மில் ஒருவரையும் கொல்லவில்லை. இவனோடு மோதியவர்களைத்தான் இவன் அழித்தான்.

அம்மட்டில், தான் ஒரு வீரன் என்பதோடு கட்டுப்பட வேண்டிய வேளையில் கட்டுப்பட்டு, இங்கே "அவைக்கு வந்து தூதனுக்குரிய லட்சணங்களோடும், அதையும் கடந்து ஒரு குருவைப் போலவும் உங்களுக்கே புத்திமதிகள் கூறியுள்ளான். இவன், தான் யார் என்று காட்டிவிட்டான். நாம் பதிலுக்கு இவனை கொல்வது என்பது மிக எளிதாக இருக்கலாம். ஆனால், பயனென்ன?

இவனைத் தொடர்ந்து இன்னொருவன் இதே போல தூது வரலாம். அவனையும் கொல்வதே நமது செயலாக இருக்கும்.

இப்படி ஒவ்வொருவராகக் கொல்வதற்கு இவனிடமே நமது முடிவைக் கூறி அனுப்பிவைத்தால் ஒரே படையாக அவர்களும் திரண்டு வரக்கூடும். அப்படி வந்தாலும் கவலை என்ன?

இங்கே நம் வீராதி வீரர்கள்தான் லட்சோப லட்சமாக துடிப்புடன் இருக்கிறார்களே. அனைத்துக்கும் மேலாக தங்களின் பேராற்றலைத்தான் ஈரேமு உலகும் அறியுமே!

மகாவீரரும், அரக்க குல திலகருமாகிய நீங்கள், தூது வந்த ஒரு குரங்கை கொன்றீர்கள் என்ற மகா பழிக்கா உள்ளாவது? அச்சமுள்ளவர்கள் செயலல்லவா இது?"

- விபீடணன் நைச்சியமாக பேசி அடுக்கடுக்காக கேட்ட கேள்விகள் அவையோரையும் சிந்திக்க வைத்தன.

ராவணனும் புருவம் வளைத்து யோசித்தான். "அப்படியானால் இந்த குரங்கை விட்டுவிடச் சொல்கிறீர்களா?" என்று ஆக்ரோஷமாக ஒரு குரல், அவையில் உள்ள மகாபார்கவன் என்கிற அமைச்சனிடம் இருந்து ஒலித்தது.

'அதுதானே?' என்கிறாற் போல ஒவ்வொருவரும் பார்த்தனர். ஆனால், விபீடணன் மனதிலோ வேறு மாதிரியாக ஒரு கணக்கு. அது தர்மக்கணக்கு!

அசுரகுலத்தவன் ஆனாலும் அவன் போட்டது ஓர் அபூர்வக்கணக்கும் கூட!

தன் கணக்குப்படியே அடுத்தடுத்து எல்லாமும் நடக்கவேண்டுமே என்கிற கவலையும் அந்த விஷ்ணு பக்தனிடம் இருந்தது.

விபீடணன் கூறிய அறிவுரை ராவணன் வரையில் நன்றாகவே வேலை செய்தது. விபீடணனுக்கும் தான் போட்ட கணக்குப்படியே ராவணன் சிந்திக்கத் தொடங்கவும் ஒரு சிறு நம்பிக்கை.

அது ஒரு மாபெரும் அரக்க சபை! ஆனால், அங்கேயும் துளி இரக்க உணர்வு இருந்தது. அது தருணம் பார்த்து வேலை செய்தது.

அனுமனேகூட அதை எண்ணியும் அதன் பொருட்டு விபீடணனை பார்த்தும் ஆச்சரியப்பட்டான்.

அதேநேரம், ராவணன் எப்படிப்பட்ட கட்டளை இட்டாலும் அது குறித்து அனுமனுக்குக் கவலையே இல்லை. இதுவரை அவன் காட்டியதெல்லாம் காரண காரியம் கருதிய விளையாட்டான வீரச் செயல்களே!




ஆழ்மனதும் சேர்ந்து கொதித்து எழ, உயிரை எல்லாம் ஒன்று திரட்டிப் போராடும் ஒரு நிலை ஓர் அற்பப் புழுவுக்கு வந்தாலும் அதை எதிர்கொள்வதில் சிரமங்கள் உண்டு. அனுமனும் அப்படி ஒரு நிலைக்குத் தள்ளப்படும் பட்சத்தில், ராம - ராவண யுத்தத்துக்கே அவசியம் இல்லாதபடி ராவண ராஜ்யம் முழுவதையும் அனுமன் ஒருவனேகூட அழித்துவிடக்கூடும்.

அப்படி எல்லாம் ஆகிவிடலாம் என்று விபீடணன் முன்பே உணர்ந்தவன்போல்கூட அனுமனுக்குத் தோன்றியது. இல்லாவிட்டால் ராவணனின் கொலை வெறிக்கோலத்தையே திசை திருப்புவதுபோல தூதுவர்களுக்கான இலக்கணத்தைப் பற்றியெல்லாம் பேசி, ராவணனை மாற்ற முற்படுவானா என்ன?



ராவணனுக்கும் கொஞ்சம் நல்ல காலம் அவன் கணக்கில் இருந்தது. எனவேதான் விபீடணன் சொன்னதை கவனத்தில் கொண்டான்.

"தம்பி... நீ சொல்வதும் சரிதான். இந்தக் குரங்கைக் கொல்வது என் வீரத்துக்கு இழுக்கு. இவனை அவமானப் படுத்தித் திருப்பி அனுப்புவதே சரி. இவன் போய் நம் வீரம் பற்றிக் கூறட்டும். இவனுக்கு ஏற்பட்ட இழுக்கைப் பார்த்து அவர்களுக்கு அச்சம் ஏற்படும் இலங்கையை எண்ணினாலே கலங்கிட்போக வேண்டும். அப்படி ஒரு தண்டனையை இந்தக் குரங்குக்கு நாம் தரவேண்டும்" என்று கூறவும், ஆளுக்கு ஆள் 'இந்த குரங்குக்கு மொட்டையடிக்க வேண்டும், உடல் முழுக்க சூடு போட வேண்டும், தோல் உரியும் வண்ணம் கசையடி தந்து குற்றுயிரும் குலையுயிருமாக நாமே தோளில் தூக்கிச்சென்று விட்டெறிந்துவிட்டு வரவேண்டும்' என்று கூற ஆரம்பித்துவிட்டனர்.

ஒவ்வொருவர் குரலிலும் அரக்க சுபாவம் கொடிகட்டிப் பறந்தது. இங்கேயும் விபீடணன்தான் சற்று நேர்த்தியாகப் பேசி அவையோர் ஆவேசத்தை எல்லாம் தணித்தான்.

"அண்ணா... இவர்கள் கூறுவது



எல்லாம் சரிதான். மொட்டை அடிப்பது, கசையடி தருவது, சூடுபோடுவது, கைகளையோ அல்லது காலையோ வெட்டுவது, கண்களைக் குருடாக்குவது என்று இந்த குரங்கை நாம் தண்டிக்க பலவழிகள் இருந்தாலும் எனக்கென்னவோ இவை எல்லாம் வழக்கமான செயல்பாடுகளாகவே தெரிகின்றன. பெருந்தன்மையாக மன்னித்து, எச்சரிக்கை செய்து அனுப்புவதுகூட நம்வரையில் புதுமையானதாக இருக்கும்" என்று விபீடணன் கூற, அவையே அதற்கு எதிர்ப்பாக அமளிதுமளியாக குரல் கொடுத்தது. நீண்டு உயர்ந்த ராவணேஸ்வரனின் கரம் அந்தக் கூக்குரல்களை தடுத்திட, ராவணனே அனுமனுக்கு உரிய தண்டனையை வழங்கிடும் விதமாக வாய் திறந்தான்.

"விபீடணன் தப்பிப்போய் என் தம்பியாக பிறந்து விட்டவன். அவனை விட்டுத்தள்ளுங்கள். இந்தக் குரங்கு அசாதாரணமானது. அகங்காரம் கொண்டது. தாவித் திரியும் மந்திக்கு என்ன தெரியும்? இது புத்தியில்லாதது. இருந்தால் லங்காதிபதி ஆகிய என் எதிரிலேயே இப்படி வாலாசனம் போட்டு அமருமா?

எந்த வாலைக் கொண்டு ஆசனம் போட்டு அமர்ந்ததோ, அந்த வாலைத் தீயால் எரித்து சாம்பலாக்குங்கள். வெட்டினால்கூட இதற்கு உபாதை குறைவாகத்தான் இருக்கும். எனவே, இதன் வாலில் தீயிடுங்கள். அது எரிந்து சாம்பலாகட்டும்.

மீசையில்லாத ஆண்மகன்போல, மொட்டை வாலுடன் இந்த குரங்கு போய் ராம, லட்சுமண, வானரப் படை முன்பு நிற்கட்டும். இதைப் பார்த்து மற்ற வானரங்களும் அலற வேண்டும். தங்கள் வாலைக் காப்பாற்றிக்கொள்ள எண்ணி மருண்டு ஓடவேண்டும்" என்று பலவிதமான தாக்கங்களுடன் ராவணன் கட்டளையிட, அடுத்த நிமிடமே அனுமனின் வாலில் தீயிடும் சம்பவம் ஆரம்பமாகிவிட்டது.

அனுமன் மீண்டுமொருமுறை உறுதியான கயிறுகளால் கைகளைக் சேர்த்து கட்டப்பட்டான். நீண்டு வளர்ந்த வாலை ஒரு பாம்பைப் போல அவன் அசைக்க, அதை மொத்த அரக்கர் கூட்டமும் தேர்வடம் பிடிப்பது போல பிடித்துக்கொண்டு நின்றது.

அனுமனுக்குள் ஒருவிநாடி வேறு விதமான எண்ணம்... எந்த வாலைப் பிடித்து தீயிடத் துடிக்கிறார்களோ, அந்த வாலாலேயே

## அனுமன் துதி!

'அவன் மனது வான் போலப் பெரியது! குணமோ தேன் போல இனியது. அவன் ஊன் பசியாகிய காமத்தை தூஷித்தவன். நான் என்கிற கர்வம் இல்லாத நாவலன். ராம் என்றாலோ அவன் நமக்கு மிக ரம்யமானவன். இப்படிப் பட்ட பெருமானாகிய அனுமனை நாம் தொழுதால், நம்முடைய நலங்கள் எல்லாம் பெருகும்' எனும் பொருள்பட, பக்தர்கள் துதிக்கும் பாடல் ஒன்று உண்டு.

அதுவே இந்த தியான ஸ்லோகம்...

*'வான்'மன வானரன்*
*'தேன்'குண தாரணன்*
*'ஊன்'பசி தூஷிதன்*
*'நான்' விடு நாவலன்*
*'ராம்' எனில் ரம்மியன் 'பெரு*
*மான்' அவன் அனுமான் அடி*
*'நாம்' தொழ நலவயில் தழைக்குமே!'*

ஒவ்வொருவரையும் வளைத்துப் பிடித்து ஆகாசத்தில் வீசி எறிந்தால் என்ன என்று தோன்றியது. பிறகோ, வெறும் வாலால் அவர்களைப் பிடித்து வீசி எறிவதைவிட, தீயிட்ட வாலால் வளைத்துப் பிடிக்கும் போதுதான் அவர்களை சுட்டுக் கதற வைக்க முடியும் என்று எண்ணி, 'நடக்கட்டும் நடக்கட்டும்' என்பதுபோல வாலை அவர்கள் வசம் விட்டுவிட்டு நடப்பதை எல்லாம் துளியும் அச்சமின்றி பார்த்தபடி நின்றான்.

அரக்கசேனையை சேர்ந்த படைத் தலைவர்கள் தீயிடும் சம்பவத்தை ஊர் கூட்டி செய்ய எண்ணம் கொண்டு லங்கா நகர வீதிகளில் அனுமனை, கட்டிய உடலோடு தரதரவென இழுத்துச் செல்லத் தொடங்கினார்கள். 'எல்லோரும் என்னைப் பாருங்கள்... நானும் இந்த நகரம் எவ்வளவு பெரியது என்று பார்த்து வைத்துக் கொள்கிறேன்' என்கிற மாதிரி பார்வையை வீசிக்கொண்டு அனுமனும் நடந்தான். 'இனி உங்கள் வாழ்நாள் சம்போகமும் சௌபாக்யமுமாக ஒரு நாளும் இருக்கப் போவதில்லை. என் உருவில் அதற்கொரு எதிர்ப்பு வந்துவிட்டது' என்பதை மறைமுகமாக அனுமன் உணர்த்துவதுபோல் இருந்தது அவன் நடை.

பரந்தவெளி ஒன்று வந்தது. அங்கே அனுமனை நிறுத்தி வாலில் துணியைச் சுற்றி கட்ட ஆரம்பித்தது அரக்க கூட்டம். வண்டிகளில் குடம் குடமாக எண்ணெயும் வர ஆரம்பித்தது. ஜனக் கூட்டம் அலமலப்புடன் வேடிக்கை பார்த்தது. சிலர் தங்கள் வீட்டிலுள்ள பழந்துணிகளை எல்லாம் கொண்டு வந்து அனுமன் வாலில் கட்டினர். குடத்து எண்ணெயை சிலர் அந்தத் துணிகளின்மேல் விட்டபடியே சென்றனர். பந்தம் கொண்டு வந்து தீயிடவேண்டியதுதான் பாக்கி. அதன்பின் அனுமன் கைகள் கட்டப்பட்ட நிலையில் அரளுவான்; புரளுவான்; அந்தச் சப்தமும் ராவண அவை வரை கேட்கும் என்றுதான் எல்லோரும் நினைத்தனர். ஆனால், அனுமனோ மௌனமாக கண்களையும் இடுக்கிக்கொண்டு 'ஆகட்டும்' என்று அனுமதிக்கின்றவனாகவே நின்றான்.

"இந்தக் குரங்குக்கு ஆனாலும் தைரியம்தான். இவ்வளவு நடந்தும் ஒன்றும் நடக்காததுபோல அது பார்ப்பதைப் பார்..."

"பாவம் அது... வசமாக மாட்டிக்கொண்டதால் விழி பிதுங்கிப்போய் கிடக்கிறது..."

"எனக்கென்னவோ அது



விட்டுப் பிடிப்பது போலத்தான் தோன்றுகிறது...” – சூழ்ந்திருந்தவர்களிடம் இப்படி பலவிதமான உரையாடல்கள்.

இங்கே இப்படி ஓர் சூழல் இருக்க, அசோக வனத்தில் சீதையிடம் திரிஜடையும் இன்ன பிறரும் அனுமனுக்கு அளிக்கப்பட்ட தண்டனையைப் பற்றியும், அதை நிறைவேற்ற நடந்துகொண்டிருக்கும் ஏற்பாடுகள் பற்றியும் கூறியவண்ணம் இருந்தனர். சீதை அதைக் கேட்டு உணர்ச்சிமிகுதியால் கண்ணீர் வடித்தாள்.

‘தர்மத்தின் தூதுவனாக வந்தவன் அனுமன். அவனை தீயைக் கொண்டு துன்புறுத்துவதா? ராவணனின் மனத்தீக்குத்தான் தர்ம நியாயம் தெரியவில்லை... புறத்தில் பஞ்சபூதங்களில் ஒன்றாகத் திகழும் அக்னியாகிய தீக்குமா தர்ம நியாயம் தெரியவில்லை?



எல்லாவற்றையும் நெருப்பால் சாம்பலாக்கி விடலாம் என்றால் தர்மம் எப்படி வாழும்? தர்மம் வாழவேண்டும் என்றால், அக்னி விதிவிலக்கு உடையவனாக இருந்தே தீரவேண்டும். என் நாதரின்மேல் சத்தியமாக நான் இங்கே மனத்தால், வாக்கால், உடலால் தூய்மையாக இருப்பதும் உண்மை என்றால்... தூது வந்த அனுமனின் செயலும் அறநெறி சார்ந்ததுதான் என்றால் அவனை அக்னி ஏதும் செய்யக் கூடாது.

சத்திய நெருப்பே பெரிது. உலகில் கிடைக்கும் நெருப்பு அதற்குக் கட்டுப்பட்டதே என்பதைக் காலம் உணரவேண்டும். எனவே, அனுமனுக்குத் தீயால் துளியும் பாதிப்பு நேரக்கூடாது’ என்று ஒரு திவ்யமதுரப் பிரார்த்தனையை சீதை புரிய, அனுமனின் வாலில் பற்றி எரியத் தொடங்கிய அக்னியை அந்தப்

பிரார்த்தனை கூசச் செய்தது.

கிடைப்பதை எல்லாம் எரித்துச் சாம்பலாக்கும் அக்னி, தங்கத்தை மட்டுமே ஏதும் செய்ய இயலாதவன். தங்கம் மகாலக்ஷ்மியின் அம்சம். மாதா சீதையும் அவள் அம்சம்தானே? எனவே, அனுமனை... அவனது செய்கையை தங்கம் போல கருதிய அக்னி, தன் உக்ர குணத்தை அப்படியே கட்டுப்படுத்திக் கொண்டான். திகுதிகுவென்று எரிந்தது தீ! ஆனால், அனுமனை அதன் வெப்பம் துளியும் தாக்கவே இல்லை.

தந்தையாகிய வாயு, அனுமனுக்கு ஏற்பட்டுவிட்ட இடர் உணர்ந்து உதவிபுரிய வந்தாற்போல் இருந்தது. அதேசமயம், அனுமனின் முன் எண்ணப்படியே திகுதிகுவெனப் பற்றி எரியத் தொடங்கிய வாலானது தனது திருவிளையாடலைத் துவக்கியது. விஸ்வரூபம் எடுத்த நிலையில் ஒரே மூச்சில் உடம்பில் போடப் பட்ட கட்டுக்களை பட்பட்டென்று அறுத்து எறிந்த அனுமன், திரும்பவும் மூர்க்கம் ஆகத் தொடங்கினான்.

எரியும் வாலை வளைத்து நெளித்து அவன் சுழற்றி அடிக்க, தீக்குப் பயந்து சிதறி ஓடியது கூட்டம். அப்படியே அந்த வால் உயர்ந்து மாடி, மனைக்கெல்லாம் தீயிட ஆரம்பித்தது. திரைச் சீலை முதல் மரத் தூண்கள் வரை வேகமாகப் பற்றிக்கொள்ள ஆரம்பித்தன.

எரிக்கப்போகிறோம் என்று எண்ணியவர்கள் எரிந்து போகப் போவதை அப்பொழுதுதான் உணர்ந்தார்கள். வாலில் வைத்த தீ ஒவ்வொரு மனையாகப் பரவியது. அனுமனும் பார்த்துப் பார்த்து வாலை வளைத்து நெளித்து ஒரு திசையும் விடாதபடி தீயிட்டான். இந்திரலோகத்துக்கு இணையாகத் தனது நகரம் விளங்கவேண்டும் என்று பொறாமையோடு ராவணன் நிர்மாணித்த நகரம், அக்னிக்கான ஆகுதியாக மாறத் தொடங்கிவிட்டது.

இலங்கையே கதறியது. அத்தனை சந்தடியிலும் கவனமாக விபீடணன் மாளிகையை மட்டும் அனுமன் தவிர்த்தான்.

தலையில் விழ இருந்த வாளை, வாலுக்கான நெருப்பாக மாற்றிட பெரிதும் முயன்றவன் அல்லவா, விபீடணன்? ராவண சபையிலும் தர்ம நியாயம் குறித்து சிந்தித்ததோடு, அச்சமின்றி அதேசமயம் விவேகத்தோடு அதைப் பேசியவனும் விபீடணன் தானே? எனவே, நன்றி காட்டுவதுபோல் விபீடணன் மனையைத் தவிர்த்த அனுமன், இலங்கை மொத்தமும் தீ பரவி

அழியும்படி செய்துவிட்டு அப்படியே ஆகாயத்தில் தாவி ஏறினான்.

கீழே லங்கா நகரம் முழுக்கக் கூக்குரல்! ஒரு கணம் அனுமன் உள்ளமும் அதைக் கேட்டு கலங்கியது. 'ராவணனுக்கு புத்தி புகட்ட விரும்பி ஊருக்கு தீயிட்டுவிட்டோமே? ஒரு பாவமும் அறியாத ஆடுமாடுகளும் யானை, குதிரைகளும்கூட இதில் மாண்டு போகுமே... கோபம் வரும்போது புத்தி மழுங்கிப்போய், இப்படிப் பல விஷயங்களை மறைத்துவிடுகிறது. ஆனாலும், நமக்கு இந்தக் கோபம் ஆகாது...' என்று இரக்கனாக நின்று சிந்தித்தவன், அதற்குமேல் எரியும் வாலினைக் கொண்டு தீயிட விரும்பாதவன்போல திரிகூட மலைக்கருகில் உள்ள சமுத்திரம் அருகில் வாலினை கடலில் அமுக்கி, தீயையும் அணைத்தான். அப்படியே மலைமேல் நின்று இலங்கையைப் பார்த்தபோது, எங்கு பார்த்தாலும் தீ நாக்குகள்... அதன் காரணமாக இலங்கை வானமே கரிய புகையால் சூழப்பட்டு, முன்னர் ஜொலித்த ஜொலிப்பை எல்லாம் இழந்து தெரிந்தது.

அந்த நொடியில் ராவணனும் அவன் ஆசைக்குரியவர்களும் புஷ்பக விமானத்தில் ஏறி இலங்கைத்தீயில் இருந்து தப்ப முயற்சிப்பதும் தெரிந்தது.

கூடவே சீதையின் நினைப்பும் வந்திட, அனுமனின் உள்ளம் நடுங்க ஆரம்பித்துவிட்டது. 'ஐயோ... அன்னை அசோகவனத்தில் இருப்பதை மறந்து இப்படித் தீயிட்டுவிட்டோமே... முன்பே வனம் நாசமாகிவிட்டது! இதில் தீயும் சேர்ந்துகொண்டால் கரிக்கட்டைகூட மிஞ்சாதே! இதில் ஏதும் தீங்கு நேர்ந்து, அன்னையும் அழிந்திருப்பாளோ?

ச்சே! முனியாயிருந்தால் ஞானமிருந்திருக்கும். கனியைப் பறித்து தின்னும் குரங்காகி விட்டதால் கோபம், மூர்க்கம் என்று விவேகம் இல்லாமல் நடந்து கொண்டுவிட்டேனோ? தேடிவந்த நான் இப்படியா எல்லோரும் வாடிடும்படி நடந்துகொள்வேன்? அண்ணல் கேட்டால் என்ன பதில் சொல்வது?' – அனுமனின் மனது நடுங்க, அவன் கண்களில் சரசரவென்று கண்ணீர் பெருக்கெடுக்கத் தொடங்கியது.

அன்னை பிரார்த்தித்துக் கொண்டதால்தான் அக்னியே அடங்கினான். அனுமனையும் சுடாது விட்டான். அப்படிப்பட்ட அக்னி அன்னையையா சுட்டிருப்பான்?

சீதையைப் பற்றி எண்ணிய அந்த நொடியே, கவலைத் தீ அனுமனை பற்றிக்கொண்டு எரிக்க ஆரம்பித்துவிட்டது. அசலான அக்னியால் அவனை ஏதும் செய்ய முடியவில்லை. ஆனால், அச்சம் என்னும் உணர்வு தொற்றிக்கொள்ளவும், அது அசல் நெருப்பை விழுங்குவதுபோல பற்றி எரியத் தொடங்கியது. அப்போதுதான் அனுமனுக்கே உண்மையும் புரிந்தது.

பஞ்ச பூதங்களால் ஆன தேகத்திற்கு எப்படி பஞ்ச பூதங்களில் ஒன்றான அக்னியால் முடிவு ஏற்படுகிறதோ... அதேபோல சப்தங்களால் ஆன மனம் என்னும் சூட்சம உடம்புக்கு அச்சம், கவலை போன்ற துன்ப உணர்வுகள்தான் நெருப்பாக இருக்கின்றன. நெருப்பைக்கூட நீரூற்றி அணைத்து விடலாம். ஆனால், மனதில் பற்றி எரியும் கவலை நெருப்புக்கு நீர் எங்குள்ளது?

# அக்னிதேவன் தர்மம்!



கேள்விக்குள் புதைந்த அனுமனுக்கு விடையும் கிடைத்துவிட்டது.

ராமநாமத்தை விடவா கவலையை அணைக்கும் ஒரு மருந்து இருந்துவிட முடியும்? இதற்கு முன்பு இதேபோல மனதில் சலனமும் கவலையும் மூண்டபோது அந்த நாமம் தானே கை கொடுத்தது! கவலை என்பது எண்ணங்கள் என்னும் சப்தத்தால் ஆனது. ராம நாமமும் ஒரு சப்தம்தான். சப்தத்துக்கு சப்தமே மருந்து!

'அண்ணலே! சில நேரங்களில் என் மனம் காட்டுக் குதிரை போல திசை பாராது ஓடிவிடுகிறது. அதில் கோபம் என்கிற தீயும் சேர்ந்து எரிகிறபோது பகுத்தறிவு செயலிழந்து விடுகிறது.

ரிஷிகள் மகாபெரிய செயலாக தவத்தை ஏன் கருதுகிறார்கள்



என்பது இப்போதுதான் எனக்கும் விளங்குகிறது. இறைவனும் அந்த தவத்திற்கு மகிழ்ந்து வரங்களை வாரி வழங்குவதும் எதனால் என்பது புரிகிறது. அடங்குவது, அடக்குவது இரண்டுமே மனத்தைப் பொறுத்தவரை மிகப் பெரிய செயல். மகாவீரம் என்பது மனதை அடக்குவதுதான். நான் அடக்கத் தவறிவிட்டேன். அதனால் இலங்கை எரிந்தால் அது தவறில்லை. இலங்கைக்குள் தர்மதேவியாக என் தாய்… அதாவது உங்கள் அருமைப் பத்தினி இருப்பதை மறந்து போனேனே… நான் எப்பேர்ப்பட்ட பாவி?

காக்கவேண்டிய நான் அழிப்பவனாக, ஆகிவிட்டேனே… இவ்வேளையில் எனக்கு ஆறுதல் சொல்வார் யார்? தங்கள் நாமத்தால் நன்மை விளைந்தாலன்றி எனக்கு கதிமோட்சம் இல்லை. என் மனதிற்குள் பற்றி எரியும் நெருப்பை ஏதாவது ஒருவகையில் அணையுங்கள்…'

– அனுமன் மனம் நடுங்க, கண்கள் கலங்க அப்படியே கைகளைக் கூப்பி நின்றபோது வானவீதியில் உலா போன அஷ்டதிக் பாலகர்களின் பிரதிநிதிகள் இருவர் பேசிக்கொள்வது



அவன் காதில் விழுந்தது. அவர்கள் பேசிக்கொண்டதில் அனுமனுக்கு ஆறுதலான விடை இருந்தது.

"லங்காபுரியே பற்றி எரிகிறது. உண்மையில் அக்னி பகவானுக்கு இன்றுதான் கொண்டாட்டம். அதேசமயம், மாதா சீதாதேவி இருக்கும் இடமான அசோகவனத்தின் அந்த சிம்சுபா விருட்சத்தை மட்டும் தீ நாக்குகள் தீண்டாததை நீ கவனித்தாயா?"

"ஆஹா... அக்னி பகவான் தர்மப்படி நடப்பவர் என்பது இதனால் ருசுவாகிறதல்லவா?"

"உண்மைதான். தன் வசப்படும் அனைத்தையும் எரித்து அழிப்பதுதானே அவர் பணி. இருப்பினும் இப்படி இயல்பு மாறி அவர் நடந்து கொள்வது சரியா?"

"அவர் எங்கே இயல்பு மாறினார்? உலோகங்களில் அக்னிக்கு விஞ்சியதாக தங்கம் இருப்பதுபோல உயிர்களில் சத்தியமும், கற்பு நெறியும் இருக்கலாம். அவற்றை தீயால்கூட தீண்டி அழிக்கமுடியாது என்பதுதான் உண்மை. அதைத்தான் நாம் இங்கே பார்க்கிறோம்.."

– அவர்கள் பேசிக்கொண்டது காதில் விழுந்ததன் எதிரொலியாக, அனுமன் முகத்தில் திடீர் உற்சாகம். தனது வாலை ஏன் அக்னி எரிக்கவில்லை என்பதற்கான விடையையும்கூட அந்த தேவ பிரதிநிதிகளே கூறியதுபோல் இருந்தது.

அன்னையின் கற்பு நெறிக்கு உதவ வந்தவன் நான். அதனாலேயே அந்த அக்னி என்னையும் ஏதும் செய்திடவில்லை. என்னை மட்டுமல்ல... இனிவரும் நாட்களில் சத்திய தர்மப்படி நடப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களை அக்னி தேவன் ரட்சிப்பான் என்பதே செய்தி.

இது புரியவேண்டும் என்பதற்காகத்தான் என் மனதில் கவலைத் தீ பற்றியதோ? அதனால் என்ன... ராமநாமமாகிய மருந்துதான் கையிலேயே உள்ளதே... ஆஹா! எத்தனை அற்புதம் இது?

'ராம்... ராம்... ராம்... ராம்...' – அனுமன் அப்படியே ராமநாமத்தில் திளைக்கத் தொடங்கினான். அதே மகிழ்ச்சியோடு அன்னை சீதையின் முன்னும் போய் நின்றான்.

“தாயே... நலமாக இருக்கிறீர்களா? ராவணனால் உண்டான கோபம் என் கண்களை மறைத்து விட்டது. அதன் எதிரொலிதான் இந்த லங்கா தகனம். எங்கே இந்த நெருப்பு உங்களையும் தீண்டிவிடுமோ என்று சற்றுமுன் மனம் நடுங்கிப் போனேன். பிறகு, வானவீதியில் இரு தேவர்கள் பேசிக்கொண்டதை வைத்து தங்கள் நலத்தை அறிந்தேன். இப்போது உங்களை நேரில் காணும்போதுதான் பரிபூரணமான ஒரு நிறைவு எனக்கு ஏற்பட்டது” என்றபடியே சீதை முன் மண்டியிட்டான்.

“அனைத்தையும் நானும் அறிந்தேன்... நீ அவ்வாறு நடந்துகொண்டதில் துளியும் பிழையில்லை. ஆயினும், என் நாதரின் வீரத்துக்கு இங்கே இடமில்லாமல் போய் விடுமோ என்று ஒரு கணம் வருந்தவே செய்தேன். நல்லவேளை, ராவணனையும் அவன் வாரிசுகளையும் நீ ஏதும் செய்யவில்லை!” என்றாள் சீதை. அனுமன், சீதையை பதிலுக்கு ஆச்சரியத்தோடு பார்த்தான்.

‘இந்த நிலையிலும், தான் தப்பித்தால் போதும் என்று எண்ணாமல் தன் கணவரின் வீரம் விளங்கவேண்டும்... அதனால் மட்டுமே தனக்கு விடுதலை கிடைக்கவேண்டும் என்று எண்ணுகிறாளே இந்த மாதரசி...’ என்று எண்ணிய அனுமன், அப்படியே விழுந்து வணங்கிவிட்டு எழுந்தான்.

‘அம்மா... இனியும் நான் காலத்தை வீணாக்க விரும்பவில்லை. விடைபெறுகிறேன். நல்லதொரு ராம தூதனாக திரும்பிச் சென்று தங்களை தரிசனம் செய்த விபரங்களை கூறுவேன். அடுத்த நொடி அண்ணலோடு எங்கள் வானரப்படை இந்த இலங்கை நோக்கிப் புறப்பட்டுவிடும். அதன்பின், தர்மம் மட்டும்தான் இந்த மண்ணில் வாழும். அதர்மம் வீழ்ந்தே தீரும். அதன்பொருட்டு புறப்பட்டுவிட்ட என்னை மீண்டும் ஒருமுறை ஆசி கூறி அனுப்பிவையுங்கள்’ என்றபடியே சீதைமுன் மீண்டும் மண்டியிட்டான்.

சீதையும் கண்கள் பனிக்க கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தாள். முதல் முதலாக அனுமனைப் பார்த்தபோது ஒரு விலங்காகத் தெரிந்தவன் இந்த நொடியில் தேவர்களைவிடவும் மேலானவனாகத் தெரிந்தான். ‘செயலை வைத்துத்தான் யாரையும் எடையிடவேண்டும். உருவை வைத்து அல்ல...’ என்று அந்த நொடி சீதையே உணர்வதுபோல் இருந்தது.



"அஞ்சனா நந்தா!
நீ ஒரு ரட்சகன். அதுதான்
இப்படி கவலை கொள்கிறாய்.
ஆனாலும், ஒன்றை புரிந்துகொள்.
கானகத்தில் மான் ஒன்று புற்களை
சரித்து உண்டு, மகிழ்ந்து உடம்பையும்
வளர்க்கிறது. அதற்கு கவலையோ கஷ்டமோ
எதுவுமே கிடையாது. மனம் என்கிற ஒன்று
இருந்தாலல்லவா கவலைப் பட? மானோ
மிருகம்... அதற்கு அப்படி ஒன்று இருப்பதுகூட
தெரியாது. 'பிறந்துவிட்டோம். பசிக்கிறது.
உணவாக புல்லும் தண்ணீரும் கிட்டுகிறது..."





"அனுமந்தா.... பராக்கிரமத்தையும் பணிவையும் ஒரு சேர உன்னிடத்தில் பார்க்கிறேன். என்னுள் நம்பிக்கையை தோற்றுவித்துவிட்டாய். அதுவும் ஒரு விருட்சமாய் வளர ஆரம்பித்துவிட்டது. இனி ஒவ்வொரு நொடிப்பொழுதும் நான் உணர்ச்சிமயமான எதிர்பார்ப்பில் இருந்தே கழிப்பேன். இங்கிருந்து புறப்படும் உனக்கு இனியும் தடைகள் ஏதும் ஏற்படாவண்ணம் அது வெற்றிப் பயணமாகத் திகழட்டும்.

என் பொருட்டு உன்னை உவந்து அனுப்பிய உன் ராஜா சுக்ரீவனுக்கு, நான் இங்கேதான் இருக்கிறேன் என்பதை உனக்கு உணர்த்திய சம்பாதிக்கு, உனக்கு உற்ற வழிகாட்டியாக விளங்கும் ஜாம்பவான் முதலான உன் சேனையிலுள்ள அத்தனை பேரிடமும் என் அன்பையும் ஆசிகளையும் கூறு. என் பிராண நாதரிடமும் என் பிரிய மைத்துனரிடமும் என் விஞ்ஞாபனங்களைத் தெரிவி..."

– சீதை கண்ணீர் மல்க அனைவரையும் நினைவு கூர்ந்தாள், அனுமனும் அவளை வணங்கி அங்கிருந்து கிளம்பினாள்.

நாற்புறமும் கடல் நீரால் சூழப்பட்ட இலங்கையில் ஆங்காங்கே மலைகளுக்கு பஞ்சமில்லை. அவற்றில் ஒன்றான அநிஷ்ட மலை மீது ஏறினான். மேகங்கள் தங்கள் பொதிச் சுமையோடு அந்த மலை முகடுகளில் முட்டி மோதிக் கொண்டிருந்தன. இலங்கை நகரில் இன்னமும் எரிதல் தொடர்ந்து, புகைக் கோளங்கள் யானைகள் புரண்டெழுகிறாற் போல எழுந்தபடி இருந்தன.

ஆதித்தன் மேற்கில் நழுவிக்கொண்டிருந்தான். இன்னும் சொற்ப நாழிகைகளில் இருளடைந்துவிடும். அதற்குள் கடலைக் கடந்து விடுதல் நல்லது என்றெண்ணிய அனுமன், தன் சக்தியை ஒன்றுதிரட்டி ஆகாயத்தில் ஏறத் தயாரானான்.

அநிஷ்டமலையின் பருத்த பாறை மேல் நின்றவன், ஒரு எம்பு எம்பி வானம் எகிறவும் அந்த மலையே ஒரு அடி பூமிக்குள் அழுந்தினாற் போல புதைய... அந்த மலை மரத்து பறவைகளெல்லாம் என்னவோ, ஏதோவென்று சடசடவென்று சிறகுகளை விரித்தன.

ஒரு மானுடன் பறவையாக மாறினால் அவன் எப்படிப் பறப்பான் என்பதற்கு இலக்கணம் சொல்கிறார்போல வானவீதியில் பறந்தான் அனுமன்.

பரந்த வானுக்கு கீழே அலை கடல்! கண்ணுக்கு குளிர்ச்சியான நீல ஆழி. ஆழிக்குள் புதைந்துகிடப்பவை எவ்வளவோ? அதில் ஒன்றுதானே மைனாக பர்வதம்? அனுமன் முன்பு பறந்து வந்தபோதே களைப்பு நீங்கிச் செல்ல வேண்டி கேட்டுக் கொண்டது. அப்போது இலக்கே குறியாக இருந்ததால் அனுமனும் அதை லட்சியம் செய்யவில்லை. இப்போதும் அது வெளிப்பட்டது.

"ஏ அனுமந்தா... நீ பறந்து வரும் தோரணையில் இருந்தே நீ சென்ற ராமகாரியம் வெற்றி பெற்றுவிட்டதை என்னால் அறிய முடிகிறது. ஜெயவீரனே... போகும்போதுதான் என்மேல் அமர்ந்து இளைப்பாற மறுத்தாய். இப்பொழுது என்ன வந்தது? வெற்றி வீரனான உன் பாதங்கள் என்மேல் பட்டால் என்ன குறைந்து போகும்?" என்று அது கேட்கவும், அனுமனும் மெல்ல அதன்மேல் இறங்கி நின்றான்.

அப்படியே திரும்பிப் பார்த்தான். இலங்கை கண்ணுக்கு தெரியவில்லை. ஆனால், நகருக்கு மேல் திரண்டிருக்கும் புகைக் கொட்டாரம் அங்குதான் கீழே இலங்கை உள்ளது என்பதை ருசுப்பித்தபடி தெரிந்தது.

"அந்த நகரத்தை பார்த்துப் பார்த்து உருவாக்கினான் ராவணன். மண்ணும் மனைகளும் பஞ்சபூதங்களின் ஜட ரூபங்கள். அவை வலுவாச உள்ள இடத்தில் எல்லாமே வலுவோடு இருக்கும். இதுநாள் வரை ராவணன் வெற்றி வீரனாகத் திகழ, லங்கா நகரின் வாஸ்து பலமும் ஒரு காரணம். இன்று அது அவனாலேயே தீக்கிரையாகிவிட்டது. ஊரே எரிந்துபோனதில் அவன் வைராக்கிய மும் தவிடு பொடியாகி இருக்கும். 'என்னை வெல்ல யாரால் முடியும்?' என்று கொக்கரித்தவன் இந்த நொடி 'என்னை வெல்ல ஒருவன் வந்துவிட்டானே?' என்று அதிர்ச்சிக்கு மாறியிருப்பான்..." என்று மைனாக பர்வதம் பல புதிய செய்தி களைக் கூறவும் அனுமன் உள்ளம் களிப்பில் துள்ளியது.

"பர்வதமே! ராவணன் பாவி... அவனை அழிப்பது சரி. ஆனால், ஒரு பாவமும் அறியாத அவன் மக்கள், அவர்களது மாடு மனைகள், பிஞ்சு பிள்ளைகள் என்று பலரும் நான் இட்ட தீயால் அழிந்து போயினரே! இப்பொழுது நினைத்தாலும் என் நெஞ்சு படபடக்கிறது" என்ற அனுமன் தனக்குள் இருக்கும்

## மனநெருப்புக்கு மருந்து!

**இந்தத் தியான ஸ்லோகம் சீதை இலங்கையில் இருந்தபோது அவள் மனதில் பற்றி எரிந்த துயர நெருப்பை எதிரொலிப்பது! அந்த நெருப்புதான் அனுமன் வாலில் தொற்றிக்கொண்டு இலங்கையையும் எரிக்கக் காரணமானது.**

*'ஆஞ்ஜநேயம் அதி பாடலாநநம்*
*காஞ்சநாத்ரி - கமநீய - விக்ரஹம் I*
*பாரிஜாத - தரு - மூல - வாஸிநம்*
*பாவயாமி பவமான - நந்தநம் II'*

**- வால்மீகியின் இந்த ஸ்லோகம் எளிதில் மனனம் செய்யவல்லது. கவலைகளில் சிக்கி மனம் நெருப்பாய் சுடும்போது அனுமனை நினைத்து இந்த ஸ்லோகத்தை பதினொரு முறை கூறினால் போதுமானது. அவனது அருள் மழை பெய்து, அந்த மன நெருப்பு அடங்கிவிடக் காணலாம்.**

கலக்கத்தை மைனாக பர்வதத்திடம் கொட்டினான். பர்வதம் சிலிர்த்துப் போனது.

"அஞ்சனா நந்தா! நீ ஒரு ரட்சகன். அதுதான் இப்படி கவலை கொள்கிறாய். ஆனாலும், ஒன்றை புரிந்துகொள். கானகத்தில் மான் ஒன்று புற்களை சரித்து உண்டு, மகிழ்ந்து உடம்பையும் வளர்க்கிறது. அதற்கு கவலையோ கஷ்டமோ எதுவுமே கிடையாது. மனம் என்கிற ஒன்று இருந்தாலல்லவா கவலைப் பட? மானோ மிருகம்... அதற்கு அப்படி ஒன்று இருப்பதுகூட தெரியாது. 'பிறந்துவிட்டோம். பசிக்கிறது. உணவாக புல்லும் தண்ணீரும் கிட்டுகிறது. சாப்பிட்டு இளைப்பாறுவோம். இன உணர்வு இருப்பதால், இனத்தாரோடு கூடித் திரிவோம்' என்றே வாழ்க்கையை கடத்துகிறது. இருந்தும், ஒருநாள் அது சிங்கத்துக்கோ, புலிக்கோ இரையாகிறது. அப்பொழுது மட்டுமே அது துன்பம் என்றால் என்ன என்று அறிகிறது.

ராவணன் ஆட்சியில் வாழ்ந்த மக்கள்கூட மான்களைப் போலத்தான். தன் அரசன் நீதிமானா, நேர்மையானவனா என்றெல்லாம் அவர்கள் பார்க்கவில்லை. அவன் சொன்னபடி

கேட்டார்கள். அதன் பலனைத்தான் அவர்கள் இன்று உன் மூலம் அனுபவித்துள்ளனர்.

ஆனால், அங்கே ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. அது ஒரு நல்ல மாற்றம். காலம் உன்னைக் கொண்டு அதைச் செய்துள்ளது. எனவே, நீ கவலை கொள்ளாதே! அசாத்ய வீரனான நீ நல்ல மந்திரியாக, தூதுவனாக திகழ்ந்ததோடு, கருணை உள்ளமும் கொண்டிருக்கிறாய்! நீ வணக்கத்திற்கு உரியவன். உன் பாதம்பட்டதால் இந்த பர்வதம் புனிதம் அடைகிறது. அடுத்து ராம – லட்சுமணனோடு நீ வரவேண்டும். உடன் சீதா தேவியும் இருக்க வேண்டும். உங்கள் அத்தனை பேரின் திருப்பாதமும் பர்வதமாகிய என்மேல் பட்டு நான் மேலும் புனிதப்பட வேண்டும்" என்று மைனாக பர்வதம் அனுமன் உள்ளத்தைத் தேற்றுவது போல் பேசியது.

அனுமனும் பர்வதத்திடம் இருந்து விடை பெற்றான். பர்வதத்தின் பேச்சும், அதன்மேல் இளைப்பாறியதும் அனுமனுக்குள் புதிய தெம்பை உருவாக்கியிருந்தன. அப்படியே தன் இனத்தவ ரையும் ராம – லட்சுமணரையும் சந்திக்கப் போகும் குதூகலம் தொற்றிக்கொண்டது. அதன் எதிரொலியாக அதிவேகமாக பறக்கத் தொடங்கினான். பறந்தபடியே வெற்றி முழக்கமும் செய்யத் தொடங்கினான்.

"ஜெய் ராம்...ராஜா ராம்..." என்று ஆரம்பித்த அவன் முழக்கம் மகேந்திரமலையின் கீழே வட கடலோரமாக கூடி நிற்கும் வானரக் கூட்டத்திடம் எதிரொலிக்கத் தொடங்கிது.

'ராமப் பிரயாசைக்கு வெற்றி.. ராவணனுக்குள் பீதி.. லங்கையை அழித்தேன்... கண்டேன் சீதையை...' என்று அவன் வருமுன் அவன் முழக்கம் வந்து சேர்ந்தது. எல்லோரும் அதி உற்சாகத்தோடு கடல்மிசை வானம் பார்த்தனர்.

அனுமன் ஒரு கார்மேகம் போல வானத்தில் மிதந்தும் பறந்தும் வந்து மகேந்திர பர்வதத்தின் மேல் வெற்றி முழக்கத்தோடு இறங்கிய விதம் அங்கே காத்திருந்த வானர வீரர்களை எல்லாம் எகிறிக் குதிக்க வைத்தது.

என்ன ஆனதோ, ஏது ஆயிற்றோ என்கிற கேள்விகளில் சிக்கி கவலையோடு காத்திருந்தவர்களுக்கு, அனுமனின் உற்சாக வருகை ஓர் எதிர்பாராத பரிசு போலவும் தோன்றியது.

"வாயு புத்ரா!", "அஞ்சனா!", "ஹனூ!", "வானர தாசா!" என்று ஆளுக்கு ஆள் அனுமனோடு தங்களுக்குள்ள நட்புக்கும் இணக்கத்துக்கும் ஏற்ப குரல் கொடுத்துக்கொண்டு அவனை நெருங்கியபடி முண்டியடித்துச் சென்றனர்.




அனுமனுக்கும் தன் சகாக்களை கண்டதில் ஒரு பூரண நிறைவு. முகத்திலும் பிரகாசம். "நண்பர்களே! நலமாக இருக்கிறீர்களா? நான் போன காரியம் ஜெயமாக முடிந்தது. மாதா மைதிலியைக் கண்டேன்!" என்று அனுமன் பேசத் தொடங்க... கூட்டத்தினிடையே வழியை உருவாக்கிக்கொண்டு ஜாம்பவானும் அங்கதனும் முன்வந்தனர்.

ஜாம்பவானைப் பார்த்த நொடி ஓடிச்சென்று அவர் காலில் விழுந்து நமஸ்கரிக்க முயன்றான் அனுமன். அவனுக்குள் இருக்கும் ஆற்றலை உரக்கச் சொல்லி, அவனது விஸ்வ ரூபத்துக்கே காரணமானவராயிற்றே அவர்!

"அஞ்சனா நந்தா! வாழ்க, உன் கொற்றம். நீ பறந்துவந்த விதமே போன காரியம் ஜெயம் என்பதை எங்களுக்கு உணர்த்திவிட்டது. உன் வீரத்தின் மீதும், விவேகத்தின் மீதும்



நாங்கள் வைத்த நம்பிக்கை வீண்போகவில்லை!" என்ற ஜாம்பவானின் கண்கள் பிரகாசிக்கக் கண்ட அனுமன், "ஆம், குருவே! மாதாவைக் கண்டறிந்தேன். அயோத்தியின் பட்ட மகிஷியாக இருக்கவேண்டிய அன்னை, நைந்த புடவையும், சடைபிடித்த கூந்தலுமாக, கண்ணீர் விழிகளோடு அரக்கியர்களின் காவலுக்கு நடுவே இருக்கிற கொடுமையை எப்படிச் சொல்வேன்?" என்றான். தனது உரையை அனைவரும் அமர்ந்து கவனிக்க தோதாக ஒரு பெரிய விருட்சத்தை ஒட்டிய பாறையின்மேல் ஏறி நின்றான்.

அங்கதனும் ஜாம்பவானும் அவனை ஒட்டி நின்றுகொள்ள, அனுமன் கூறப்போவதை ஆர்வமாக கேட்க விரும்பிய வானரர்கள் வெகுவேகமாக பக்கத்து விருட்சங்களில் உள்ள கிளைகளில் ஏறி நெருக்கமாக அமர்ந்துகொண்டனர். சிலர் அனுமனிடம் வந்து தங்கள் கைவசமிருந்த பழங்களைத் தந்து, "முதலில் இந்த பழங்களைப் புசித்து இளைப்பாறு..." என்று பரிவு காட்டினர்.



"உங்களைப் பார்த்ததிலேயே என்

உங்கள் இஷ்டம்
போல வனத்தில்
நுழைந்து
இளைப்பாறுங்கள்
என்று
கூறிவிட்டான்.
வந்தது வினை!
அந்த வானர
சேனைக்கு
கண்மண்
தெரியவில்லை.
தித்திப்பான
தேனடையை
அப்படியே பிழிந்து
உண்டாலே
போதை தலைக்கு
ஏறும்... ஏறும்
என்ன...
ஏறியேவிட்டது!



பசியெல்லாம் பஞ்சாகப் பறந்து விட்டது. வரும் வழியில் மைனாக மலை இடைமறித்து கேட்டுக் கொண்டதால் அங்கே இளைப்பாறி விட்டுத்தான் வந்தேன்.

என் சகாக்களே, நடந்த அனைத்தையும் நீங்கள் அறிய வேண்டியது மிக முக்கியம். இனிதான் நமக்கு பெரிய அளவில் கடமை உள்ளது.

லங்காதிபதியான தசக்ரீவன்தான் அன்னை சீதையை கவர்ந்துசென்ற கயவன். மாதாவின் கற்பு நெருப்பும், ஒரு பெண் விரும்பாத நிலையில் அவளைத் தீண்டினால் ஆபத்து உண்டாகும் என்று தசக்ரீவன் பெற்றிருக்கும் சாபமும் மாதாவை அவன் தீண்டாதபடி காப்பாற்றிவிட்டது. ஆயினும், அகோர அரக்கியர்கள், மாதாவை அசோகவனத்து மரத்தடியில் சூழ்ந்துகொண்டு பலவாறு மிரட்டியும் உருட்டியும் வழிக்கு கொண்டுவர முயன்றபடி உள்ளனர். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியையே மாதா நினைத்துக்கொண்டு, ஒவ்வொரு நொடிப் பொழுதையும் யுகமாய் கருதிச் செலவிட்டபடி உள்ளார்கள்!" என்ற அனுமனை, அங்கதன் கட்டித்தழுவிக் கொண்டான்.

"அனுமந்தா! இலங்கை என்பது மகாநகரம் என கேள்விப் பட்டிருக்கிறேன். அதில் எப்படி மாதாவின் இருப்பிடத்தை அறிந்தாய்?" என்றான், ஆவல் தாளாமல்.

"அங்கதா! தொடக்கம் முதலே கூறிவிடுகிறேன். இங்கிருந்து கடல்மிசை நான் பறந்து சென்றபோது, நாகங்களின் தாயான சுரசை எனும் அரக்கியின் குறுக்கீடு நிகழ்ந்தது. அவள் என்னை விழுங்க முயன்றாள். அப்போது, ஓர் எண்ணம் தோன்றவே, என் உருவைப் பெரிதாக்கிக் கொண்டேன். அதற்கேற்ப அவளும் வாயை பெரிதாக்கிக்கொண்டே போனாள். சட்டென்று நான் சிறிய உருவுக்கு மாறி, அவள் வாயினுள் சென்று மீண்டும் வெளிவந்துவிட்டேன். பிறகுதான் தெரிந்தது, சுரசை என்னைப் பரீட்சை செய்திருக்கிறாள் என்பது.

'ராம கார்யம் என்பது சாதாரணமில்லை. அதிலும் ராவண ராஜ்யத்துக்கு ஒரு முடிவுரை எழுதப் போகின்ற ஒருவன் சாதாரணமானவனா' என அறிய தேவர்கள் பலர் எண்ணியதன் விளைவுதான் அந்தப் பரீட்சை. அதில் தேர்வுபெற்ற பிறகும் எனக்கு துன்பம் நீங்கவில்லை.

மீண்டும் கடலிடையே சிம்ஹிசை எனும் அரக்கி ஒருத்தி

> **“இவ்வளவு தொலைவு வந்துவிட்டு ராவணனை சந்திக்காமல் திரும்பிவிட எனக்கு விருப்பமில்லை. எனவே, அசோகவனத்தை பாழ்படுத்தி, அவனது படை பலத்தால் பிடிக்கப்பட்டு ராவணன் முன்னாலும் நிறுத்தப்பட்டேன்...”**

தோன்றினாள். இவள் என் நிழலைக் கொண்டே என்னை இழுத்தாள். அதிலேயே அவள் சக்தி தெரிந்து விட்டது. இவள் தேவர்களின் பேச்சைக் கேட்ட சுரசை போன்றவளல்ல என்பதும் புரிந்ததால், அவளைக் கொன்றுவிட்டு முன்னேற முடிவு செய்தேன். அதன்படி அவள் வாயில் புகுந்து, உயிர்நிலையைக் கிழித்தபடி வெளியேறி சம்ஹாரம் செய்தேன். இடர்ப்பாடுகள் இத்துடன் முடிந்தன.

அதன்பின் இலங்கைப் பட்டணமும் ஒரு ஒளிக்காடு போல என் கண்முன்னே தெரிந்தது. மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், சீரான வீதிகள், சிறப்பான மைதானங்கள் என்று ஒரு செல்வபுரியாக விளங்கியது இலங்கை. அங்கே நான் சென்ற போது நன்கு இருட்டிவிட்டது. இதில் எங்கென்று அன்னையை தேடுவேன்? ஆயினும், அண்ணலின் நாமத்தைக் கூறிக் கொண்டே வீதி வீதியாக நடந்தேன். ஒளிந்து ஒளிந்து தேடினேன்.

இலங்கையில் அந்த இரவில் என் காலடி படாத இடம் ஒன்று இருக்குமா என்று தெரியவில்லை. ராவண மஞ்சம், கும்பகர்ண மஞ்சம், மண்டோதரியின் அந்தப்புரம் என்று ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வோர் அனுபவம்.

ஒரு கட்டத்தில் ராவணன் பத்தினி மண்டோதரியை மாதா சீதை என்று எண்ணிவிட்டேன். அவளிடம் அப்படி ஒரு பவ்யம்! அப்படி ஒரு பத்தினி இருந்தும் ராவணனுக்கு நல்ல புத்தி இல்லை. மாதாவை அசோகவனத்தில் அரக்கியர்களுக்கு நடுவில் வைத்திருந்தான்.

மாதாவின் உருவமும் தோற்றமும் தான் நைந்து பொலிவிழந்து காணப்பட்டன. ஆனால், உள்ளம் உருக்கு போல இருக்கிறது. நான் மாதாவைக் கண்ணுற்ற போது ராவணனே வந்துவிட்டான். அவனை நிமிர்ந்து பார்க்கக்கூட மாதா தயாராக இல்லை. அவன் கெஞ்சினான், மன்றாடினான். இறுதியாக, காலக்கெடு விதித்துவிட்டு வெளியேறினான். மாதாவோ எதையும் லட்சியம் செய்யவில்லை.

சிறிது இடைவெளிக்குப் பிறகு மாதா எதிரில் நின்றேன். முதலில் என்னையும் மாதா, ராவணனின் மாய சொரூபமாக எண்ணிவிட்டார்கள். பிறகு கணையாழியைக் கொடுத்து ராமதூதன் என நிரூபித்தேன். அந்த நொடி மாதா சீதை அடைந்த பரவசத்திற்கு இணையே இல்லை. பின் மாதாவும் பதிலுக்குத் தனது சூளாமணி ஒன்றைத் தந்து அண்ணலிடம் சேர்ப்பிக்கச் சொன்னார். மாதாவுக்கு நானும் ஆறுதல் கூறி, 'வெகுவிரைவில் ஒரு பெரும்படையுடன் வந்து உங்களை அண்ணல் மீட்டுச் செல்வார்' என்று கூறிவிட்டு, அசோகவனம் விட்டு நீங்கினேன்.



இவ்வளவு தொலைவு வந்துவிட்டு ராவணனை சந்திக்காமல் திரும்பிவிட எனக்கு விருப்பமில்லை. எனவே, அசோகவனத்தை பாழ்படுத்தி, அவனது படை பலத்தால் பிடிக்கப்பட்டு ராவணன் முன்னாலும் நிறுத்தப்பட்டேன்..." – அனுமன் சொல்வதை வானரர்களும் அங்கதனும் கேட்டுக்கொண்டிருக்க... ஜாம்பவானின் பார்வையோ, அனுமன் உடலில் இருந்த காயங்களைப் பார்த்து வேறொரு கணக்கு போட்டபடி இருந்தது.

"அனுமந்தா... ராவணன் முன் நிறுத்தப்பட்ட நீ எப்படி அங்கிருந்து மீண்டு வந்தாய்?" என்று சுற்றிலும் இருந்து பல கேள்விகள்.

## அனுமன் கவசம்!

அனுமன் ஒருவகையில் உலக மனித உயிர்களுக்கெல்லாம் கவசமாகத் திகழ்பவன்தான். குறிப்பாக, பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு அனுமனின் தயை மிக மிகத் தேவைப்படுகிறது. நோய் அண்டாதிருக்க, படிப்பில் கவனம் கொள்ள, தேர்வில் வெற்றிகளைக் குவிக்க என்று பல விஷயங்களில் அனுமனே கவசமாக இருந்து காத்தருளுகிறான்.

அவனுக்கான மந்திரங்களில் 'அனுமன் கவசம்' தனி இடம் பெறுகிறது. இதைக் கூறுகிறவர்களைத் தேடி ஓடிவந்து 'கதை'யோடு நின்றுவிடுகிறானாம் வாயுகுமாரன். அனுமன் கவசம் கிட்டத்தட்ட 60 வரிகளை கொண்டது. தினமும் பாராயணம் செய்யச் செய்ய, நாளாவட்டத்தில் அவ்வளவு வரிகளும் மனதில் தங்கிவிடும். உச்சரிக்கும் விதமும் ஸ்பஷ்டமாக இருக்க வேண்டும்.

இங்கே அனுமன் கவசத்தில் இதயம் போன்ற நான்கு வரிகள் மட்டும் தியானிப்பதற்காகத் தரப்படுகின்றன.

'ஹனுமாந் பூர்வத; பாது
தஷிணே பவநாத்மஜ:
அதஸ்து விஷ்ணு பக்தஸ்து
பாது மத்யம் ச பாவநீ ||'

அனுமனும் தான் படை வீரர்களை அழித்ததையோ, பஞ்சசேனாதிபதிகளை கொன்றதோடு, ராவண புத்திரனான அட்சனை கொன்றதையோ கூறினால் அது, தனக்குத் தானே கர்வப்பட்டுக் கொண்டுவிட்டது போலாகும் என்று, "ராவண னுக்கு உரிய புத்திமதிகளைக் கூறினேன். எச்சரிக்கை செய்யவும் தயங்கவில்லை..." என்றான்.

ஜாம்பவானோ சிரித்தவராக, "உன் எச்சரிக்கைக்கு ராவணன் பதிலேதும் கூறவில்லையா?" என்று கேட்டார்.

"அவன் எங்கே, நான் சொன்ன நீதிமொழிகளை கேட்டான்? சபையிலிருந்த விபீடணன் என்கிற அவன் சகோதரன், 'தூதர்களைக் கொல்லக்கூடாது' என்று தர்மம் பேசியதால்

என்னை சிரச்சேதம் செய்கிற முடிவை மாற்றிக்கொண்டான். விபீடணன் ராவணனுக்குத் தம்பியாகப் பிறந்தது ஆச்சரியம்தான்!"

"அனுமந்தா... சுரசை, சிம்ஹிசை என்று அரக்கியர்களாலேயே உன்னை ஒன்றும் செய்ய இயலவில்லை. அப்படியிருக்க, ராவண வீரர்களால் மட்டும் உன்னை எப்படிப் பிடித்து இழுத்துச் செல்லமுடிந்தது?" என்று ஜாம்பவான் குறுக்கிட... அனுமனும், இந்திரஜித்தின் பிரம்மாஸ்திரம் தன்னைக் கட்டுப்படுத்தியதை வேறுவழியின்றி கூறி முடித்தான்.

"இறுதியாக என் வாலுக்குத் தீ வைக்கப்பட்டது. அது அவன் வாழ்வுக்கு வைத்த தீ என்பதைச் சிறிது நேரத்திலேயே உணர்த்திவிட்டேன். இலங்கை நகரையே தீக்கிரையாக்கி விட்டேன். நல்லவேளை... ஊரை எரித்த தீ மாதாவை மட்டும் தீண்டவில்லை. அன்னையின் பிரார்த்தனையால் எனக்கும் எந்த சேதமும் இல்லை. இந்த நொடி இலங்கையே எரிந்து சாம்பலாகிக் கிடக்கிறது. நாம் விரைவாகப் படை திரட்டிச் சென்றால் ராவண வதம் நிச்சயம். அன்னையும் மீட்கப்பட்டு, அண்ணலின் சோகமும் அகலும்!" –அனுமன் ஒருவழியாகக் கூறிமுடித்தான்.

அனுமனின் பேச்சு வானர வீரர்களை வெறிகொள்ள வைத்திருந்தது. "இப்பொழுதே இலங்கை நோக்கி புறப்படுவோம். மிச்சம் மீதி உள்ள அவ்வளவு பேரையும் பந்தாடிவிட்டு, இறுதியாக ராவணனையும் கொன்று சீதா மாதாவைக் கொண்டுவந்து அண்ணலிடம் சேர்ப்போம்... என்ன சொல்கிறீர்கள்?" என்று அங்கதனும் தொடை தட்டிக்கொண்டு எழுந்தான். அவனை அமைதிப்படுத்திய ஜாம்பவான், "அவசரம் கூடாது. ராகவன் சொன்னது சீதை இருக்கும் இடத்தைக் கண்டறிய மட்டும்தான். மற்றதை அவரது பாணம் பார்த்துக் கொள்ளும். நாம் துணைநின்றாலே போதுமானது. இப்பொழுதே சுக்ரீவன் இருக்குமிடத்தில் உள்ள ராம, லட்சுமணர்களைச் சென்று சந்திப்போம்..." என்றார். அதன் படியே அனைவரும் உற்சாக முழக்கங்களோடு அங்கிருந்து புறப்பட்டனர்.

கிஷ்கிந்தையை நெருங்கும்போது குறுக்கிட்டது – இந்திரன், சுக்ரீவனுக்குப் பரிசாக அளித்த மதுவனம்! அரிய பழ வகைகள்,

ஆயிரக்கணக்கான மலர்க் கூட்டங்கள், இவற்றினூடே மரத்துக்கு மரம் தேன்கூடுகளோடும் தடாகங்களில் நீரோடும் உள்ள அற்புத வனம் அது. உள்ளே ஒருவர் நுழைந்துவிட்டால் வெளியேறவே மனம் வராது. மோட்ச உலகில்கூட அவ்வளவு அமைதி கிட்டாது. அதனால், அதையொரு பொக்கிஷமாகக் கருதி சுக்ரீவனும் அதற்கு தனது மாமன் ததிமுகனை காவலுக்கு பணித்திருந்தான்.

அனுமன்... ஜாம்பவான், அங்கதன் உள்ளிட்ட வீரர்களோடு கிஷ்கிந்தை திரும்பும்போது உற்சாக மிகுதியாலும், நல்ல உணவு உண்டு நெடுநாட்களாகிவிட்டபடியாலும் மதுவனத்துக்குள் நுழைய அனைவரும் விரும்பினர். அங்கதனும் தடை சொல்லவில்லை. "உங்கள் இஷ்டம் போல வனத்தில் நுழைந்து இளைப்பாறுங்கள்" என்று கூறிவிட்டான். வந்தது வினை! அந்த வானர சேனைக்கு கண்மண் தெரியவில்லை. தித்திப்பான தேனடையை அப்படியே பிழிந்து உண்டாலே போதை தலைக்கு ஏறும்... ஏறும் என்ன... ஏறியேவிட்டது! அங்கதன் கூட அதற்கு விதிவிலக்கில்லை. ஆனால், காவல் காக்கும் ததிமுகனுக்கோ தாங்கமுடியாத கோபம். அங்கதன் முன் சென்று, "இது சரியா?" என்று கேட்கப் போக... அங்கதனும் பதிலுக்குக் கோபமாகப் பேச, ததிமுகன் ஆத்திரத்தில் பக்கத்தில் உள்ள ஒரு மரத்தை வேரோடு பிடுங்கிக்கொண்டு சண்டை போடத் தொடங்கி விட்டான்.

அங்கதனும் பதிலுக்குச் சண்டை போட, அனுமனும் ஜாம்பவானும் கட்டுப்பாடு இழந்தால் என்னவெல்லாம் நடக்கும் என்பதற்கு சாட்சியாக, நடந்ததைப் பார்த்தபடி இருந்தனர். இந்நிலையில் ததிமுகனால் அங்கதனின் தாக்கு தலைச் சமாளிக்க முடியவில்லை. அந்த மது வனமே வானர வீரர்களிடம் சிக்கித் துவம்சமாகிக் கொண்டிருந்தது. ராவணனுடன் நடத்தப் போகும் யுத்தத்துக்கு முன் ஒத்திகை ஒன்று அங்கு நடப்பதுபோலத் தோன்றியது. ததிமுகனும் அடிதாங்காமல் அலறலுடன் சுக்ரீவனைக் காண ஓடினான்.

'சுக்ரீவா... சுக்ரீவா...' – அவனிடம் அலறல்!

‘சுக்ரீவா... சுக்ரீவா’ என்ற அலறலோடு ரிஷ்யமுக பர்வதம் எங்கும் ஓடிக்கொண்டிருந்தான் ததிமுகன்.

அதேசமயம், சுக்ரீவனோ... பிரஸ்ரவண மலையில், ராம லட்சுமணர்களோடு ஒருவித அசூயையில் இருந்தான். நான்கு புறமும் அவனது வானரப்படை புறப்பட்டுச் சென்றும் ஒருவரிடமிருந்தும் ஒரு தகவலும் இல்லை.

இதனாலும், காலம் வீணாகிக் கொண்டிருக்கிறதே என்கிற கவலையாலும் ராமனின் உள்ளம் பலவாறு விசாரப்பட்டது. தான் இப்படி வானர சேனையை அனுப்பிவிட்டு பர்வதத்தில் காத்துக்கொண்டு இருப்பது தவறோ... லட்சுமணனுடன் இணைந்து சீதை இருக்குமிடம் தேடி புறப்படுவதுதான் சரியோ என்று ராமனுக்குள் பலவிதமான குழப்பங்கள்!

## இதயத்தில் உன்னை நிறுத்துகிறேன்!



சுக்ரீவன் ஆறுதல் சொன்னான்.

“நாற்புரம் சென்றவர்களில் ஜாம்பவானும் அங்கதனும் உள்ளிட்ட அனுமனின் கூட்டம் அசாதாரண மானது. அதிலும் அனுமன் நுண்ணறிவு படைத்தவன். உங்களை நான் சரியாக உணருமுன் தானுணர்ந்தவன் அனுமன். எனக்கும் உணர்த்தியவன். எனவே...” என்று ராமனுக்கு சுக்ரீவன் ஆறுதல் கூறிக்கொண்டிருக்கும் தருணத்தில்தான், ததிமுகனின் “சுக்ரீவா... சுக்ரீவா” என்கிற அலறல் அவன் காதுகளில் எதிரொலித்தது. ததிமுகன் மூச்சிறைக்க, ரத்தம் ஒழுக, யுத்தத்தில் அடிவாங்கியவன் போல சுக்ரீவன் எதிரில் வந்து நின்றான்.

“மாமா... என்ன இது அலங்கோலம்?”

“போதும் சுக்ரீவா... போதும். ஆளைவிடு! ‘ஈ, எறும்புகூட மதுவனத்துக்குள் புகக்கூடாது’ என்கிற உன் கட்டளை ஒருபுறம்.



மறுபுறத்தில் உன் பிள்ளையோ பெரும் கூட்டத்தோடு வந்து மதுவனத்தையே பாழ்படுத்திக்கொண்டு இருக்கிறான். தட்டிக் கேட்டேன். என்னையே எட்டி உதைத்து அனுப்பி விட்டான். எப்படி உதைவிட்டிருக்கிறான் என்பதை நீ என்னைப் பார்த்தே அறியலாம்."

"யாரைச் சொல்கிறீர்கள் மாமா... அங்கதனையா?"

"அவனேதான்!"

"ஆச்சரியமாயிருக்கிறதே...!"

"எனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. காவல் காக்கும் பணி எனக்கு. அதற்கு எதிரி, கள்ளர்களாக இருந்தாலும் பரவாயில்லை. உன் பிள்ளையே எனும்போதுதான் தாள முடியவில்லை. இந்த அடாத செயலுக்கு உன் அமைச்சன் அனுமனும் உடந்தை..."

– ததிமுகன் அனுமன் பெயரை குறிப்பிடவும், சுக்ரீவனுடன் ராமலட்சுமணர்களும் சேர்ந்தே விதிர்த்தனர். அந்த விதிர்ப்பைக் கூட்டுவதுபோல மதுவனத்துக்குள் வானரங்கள் போடும் அட்டகாசக் கூக்குரல் பர்வதத்தில் எதிரொலித்தது.

"இந்தக் கூச்சலில் நான் ஒருவித



## 'ஸ்ரீராமர் ஜாதகம்'

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரியன் புதன் | | கேது |
| | ராசி | | ல/ குரு சந்திரன் |
| செவ் | சக்கரம் | | |
| ராகு | | சனி | |

சுந்தரகாண்டத்தின் இந்த இறுதிப் பகுதியில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் ஜாதகமே நாம் காணவும், தியானிக்கவும் ஏற்றதாக இங்கே இடம்பெறுகிறது.

நமது மந்திர சாஸ்திரங்கள் 'யந்திர மந்திர தந்திரம்' என்று மூன்று கூறுகளில் அடங்கிவிடுகின்றன. இதில் யந்திரங்கள் பீஜாட்சர மந்திரங்களோடும் அதற்குரிய பிரத்யேக கோடுகளையும் கோணங்களையும் உடையவை. சுருக்கெழுத்தை விரிவுபடுத்தி வாசித்துக் கொள்வதுபோல யந்திரங்களை வாசிக்கப் புகுந்தால் பல மாற்றங்களை உணர்வு ரீதியாக அது நமக்கு நிகழ்த்தும். நமக்கு வாசிக்கத் தெரியாவிட்டாலும் யந்திரங்கள் கண்ணில் பட்டு நினைவில் பதியும்போது, ஒரு நோய்க்கான மாத்திரையில் என்ன உள்ளது என்பதை நாம் அறியா விட்டாலும் அது எப்படி நம் உடம்பில் நோயை எதிர்த்து அடக்குகிறதோ, அதுபோல இவை நம் உடம்பினுள் நம்மை இயக்கியபடி உள்ள கோள்களின் செயல்பாட்டில் சிடுக்குகள் இருந்தால் அவற்றை சீராக்குகின்றன.

இந்த யந்திரங்களோடு அவற்றிற்குரிய மந்திரங்களையும் சேர்த்து சில முத்திரைகளுடன் வணங்குவதுதான் தந்திரம்!

ராமர் ஜாதகம் கிட்டதட்ட ஒரு யந்திரம் போன்றதே!

வானிடை ஒரு விநாடிகூட ஓய்வின்றி சுழன்றபடி இருக்கும் ஒன்பது கோள்களின் ஒரு குறிப்பிட்ட கால இருப்பைக் காட்டுவதுதான் ஜாதகம். அகம் என்றால் 'வீடு' என்றும் 'உள்ளே' என்றும் பொருள். ஜாதகம் எனும்போது பூமிக்கு புறத்தில் சூனியமார்க்கத்தில் உள்ள நம்மை பாதிக்கும்

(அ) இயக்கும் கோள்களாகிய வீடுகளைக் குறிப்பதாகும்.

இந்தக் கோள்களின் அமைப்பை வைத்தே நமது குணம், இயல்பு மற்றும் நமக்கான நன்மை, தீமை என்று எல்லாமே முடிவாகிறது. ஸ்ரீராமபிரானின் ஜாதகத்தை இச்சிந்தனைகளோடு பார்க்கும்போது வியப்பு ஏற்படுகிறது. மனத்தால்தான் நாம் வாழ்கிறோம். இந்த மனதுக்கு அதிபதி சந்திரன். இந்த சந்திரன், லக்னத்தில் அதுவும் தன் வீடாகிய கடகத்தில் அமைந்திருப்பது ஒரு ஆச்சர்யம். இச்சந்திரனுடன் குருவும் கூடியிருக்கிறார். இது அபூர்வம்!

ஒன்பது கோள்களில் ஒருவருக்கு குரு மட்டும் நன்கு அமைந்துவிட்டால் போதும். மீதமுள்ள எட்டு கோள்களும் பலவீனப்பட்டிருந்தாலும் அந்த ஜாதகரை குரு காப்பாற்றிவிடுவார் என்பார்கள். அப்படிப்பட்ட குரு மனோகாரகன், சந்திரனுடன்... அதுவும் தலையாய லக்னத்தில்! இந்த குரு–சந்திரனை, செவ்வாய் பார்ப்பதால் வீரத்துக்குக் குறைவே இல்லை.

மேலும் களத்திரனான சுக்கிரன், மீனத்தில் உச்சம் பெறுகிறான். அதனாலேயே அழகிய கற்புள்ள மனைவி வாய்த்தாள். மேஷத்தில் சூரியன்! இது தொழில் ஸ்தானமாகிய பத்தாம் இடம். இதனால்தான் புகழுடன் நாட்டை நிர்வகிக்க ஸ்ரீராமனால் முடிந்தது. கூடவே புதன். திட்டமிட்டு கணக்கான செயலாற்ற புதனல்லவா காரணம்?

சாயா கிரகங்களான ராகு, கேதுக்கள் ஆறாம் இடத்திலும், பன்னிரண்டாம் இடத்திலும் மறைந்தது, அடுத்த பெரிய விசேஷமாகும். ரோக ஸ்தானம் ஆறில் பாபக்கிரகம் மறைந்ததால் நோயில்லை. மோட்ச ஸ்தானத்தில் கேது மறைந்ததால் மறுபிறப்பு இல்லை. வாழும்போதே அறநெறிச் செல்வராக்கிட இந்த கிரகங்கள் துணை செய்கின்றன.

அபூர்வமான கோள் அமைப்பு இது. இந்த ஜாதகத்தை அருள்மிகுந்த 'ஆகாய யந்திரம்' என்றும் கூறுவர். இப்படி ஒரு ஜாதகத்தை 'ஸ்ரீராம்' என்கிற பெயரால் தியானித்து வணங்க, நமது கோள்களின் சுழற்சி வினைகள் எப்படி இருப்பினும் நம் மனத்தில் நிம்மதி தோன்றக் காணலாம்.

*"ஆயிடைப் பருவம் வந்(து) அடைந்த எல்லையின்*
*மாயிரு புவிமகள் மகிழ்வின் ஓங்கிட*
*வேய் புனர்பூசமும், விண்ணுள்ளோர் புகழ்*
*தூய கர்க்கடகமும் எழுந்துள்ளவே"*

என்று கம்பனும் ராம ஜாதக அமைப்பை சிலாகிக்கிறான்.

சுந்தர காண்ட பட்டாபிஷேக வேளையில் ராமனுடன் இந்த ஜாதகத்தையும் சேர்த்தே வணங்கி தியானிப்போம்.


"கண்டேன்
சீதையை..!"

உற்சாகத்தைப் பார்க்கிறேன். அனுமனும் இதை ஊக்கப்படுத்துகிறான் என்றால் மகிழ்ச்சிக்குரிய ஒரு செயல் ஈடேறியிருக்க வேண்டும். இந்த நாளில் மகிழ்ச்சிக்குரிய ஒரே விஷயம், மாதா சீதா இருக்குமிடம் தெரிவது ஒன்றுதான்! அநேகமாக அது தெரிந்திருக்க வேண்டும். அதனால் உண்டான ஓர் ஆனந்தக் கூத்தாகத்தான் இது இருக்க வேண்டும்" என்று சுக்ரீவன் முகம் மலர்ந்து தன் நம்பிக்கையை வெளிப்படுத்தவும், லட்சுமணன் துள்ளி எழுந்தவனாக சுக்ரீவன் முன் நின்று ததிமுகனைக் காட்டியபடி கேட்டான்.

"சுக்ரீவா... யார் இந்த வானரன்?"

"லட்சுமணா... இவர் என் மாமன்! பெயர் ததிமுகன். மதுவனம் என்பது என் ராஜ்யத்தின் ஓர் அரிய பொக்கிஷம். தேவேந்திரன் பரிசாக தந்த அற்புதத் தோட்டம் அது. அதை காவல் காப்பது இவர் பணி. இவரையே தூக்கி எறியுமளவு ஓர் உற்சாகம் அங்கே கரை புரள்கிறது என்றால் அங்கதனும் ஜாம்பவானும் சென்ற படை நிச்சயம் அன்னையார் பற்றி அறிந்து கொண்டுவிட்டது என்பதுதான் உட்பொருள்" என்ற சுக்ரீவன்,

"மாமா... தயவுசெய்து இதை பெரிதுபடுத்தாதீர்கள். ஓர் அரிய விஷயம் நடந்து முடிந்திருக்கிறது என்று நம்புகிறேன். ஜாம்பவானும் அனுமனும் உள்ள இடத்தில் ரௌத்ரமான அட்டகாசங்கள் நடைபெறாது. அதுபோல உங்களுக்கு தெரிகிறது என்றால் அதன் பின்னால் நிச்சயம் வெற்றிச் செய்தி இருக்க வேண்டும்" என்று ததிமுகனைத் தேறுதல் செய்தான் சுக்ரீவன்.

அந்த நொடியே ராமனின் முகத்தில் ஒரு புத்தொளி! "மாமா... வேகமா சென்று, அவர்களின் வெற்றிச் செய்திக்காக இங்கே அயோத்தி வேந்தர்கள் காத்துக் கிடப்பதாக சொல்லுங்கள். உம் சீக்கிரம்..." என்று ததிமுகனை திருப்பியனுப்புவதில் குறியாக இருந்தான்.

ததிமுகனும் அவர்கள் எதிர்பார்ப்பு அறிந்து ராம லட்சுமணர்களை வணங்கி, மதுவனம் திரும்பினான்.

மதுவனத்திலிருந்து புறப்படும்போது இருந்த வருத்தம் இப்போது ததிமுகனிடம் துளியும் இல்லை. அவனிடம் பூரிப்பைப் பார்த்த அங்கதனும் என்ன நடந்திருக்கும் என்பதை யூகித்துவிட்டான்.

''மாமா, நான் அவசரப்பட்டுவிட்டேன். என்னை மன்னியுங்கள்!" என்று அங்கதன் முன்னோக்கி வர, ததிமுகனும் நடந்ததை மறந்து அவனை அணைத்துக் கொண்டு சுக்ரீவனின் விருப்பத்தை கூறி முடித்தான்.

அதன்பின் அங்கதனும் காலநேரத்தை மதுவனத்தில் செலவழிக்கத் தயாரில்லை. தனது படை வீரர்களுக்கு கட்டளையிட்டவனாக அனுமனுடனும் ஜாம்பவானுடனும் ரிஷ்யமுக பர்வதம் நோக்கி வேகமான ஒரு பயணத்துக்குத் தயாரானான்.

பர்வதத்தில் ராமலட்சுமணர்கள் பார்வையும் தென்திசை நோக்கியே இருந்தது. அவர்கள் பார்த்தபடி இருக்க, வானிடை அனுமனும் அங்கதனும் பறந்து வந்தபடி இருந்தனர். அவர்களை பின்தொடர்ந்தபடி வானர சேனை... ஒரே உற்சாகக் கூச்சல்!

சுக்ரீவன் விழிகளை அகற்றிக்கொண்டு ஏறிட, அவ்வளவு பேரும் வேகமாக வந்து சுக்ரீவனையும் ராமலட்சுமணர்களையும் தொழுதனர். "பிரபு! போன காரியம் ஜெயம் ஆயிற்று. அன்னையார் இருக்குமிடம் தெரிந்துவிட்டது. இனி கவலையில்லை. இலங்கையில்தான் பிராட்டியார் சிறைப்பட்டு உள்ளார்கள். நமது அனுமந்த மூர்த்தியார் அனைத்தையும் அறிந்து வந்துவிட்டார். அவரால் நமக்கெல்லாம் பெருமை! இனி படை திரட்டிச் செல்ல வேண்டியது ஒன்றே மீதமுள்ளது" என்று வானரப் படையினர் ஆர்வம் தாளாமல் ஒருவர் மாற்றி ஒருவர் விஷயத்தை பேசிக்கொண்டே சென்றனர்.

அனுமன் மட்டும் அடக்கமாக நின்று, ஏதும் பேசிடாமல் அமைதி காக்க... அவனை அழைத்து முன் நிறுத்திய ஜாம்பவானும், அங்கதனும், "பிரபோ! அனுமன் ஜெயவீரன். அவன் வாயாலேயே அனைத்தையும் அறிவதே உங்களுக்கு நிம்மதி தரும்" என்று கூறி அனுமனையும் தூண்டிவிட்டனர்.

"கண்டேன் சீதையை!" என்றபடி தன் திருவாய் மலரத் தொடங்கினான் அனுமன்.

''எங்கள் அன்னை, லங்காபுரியில் அசோகவனத்தில் அரக்கியர் காவலுக்கு நடுவில் ஒரு அகல்விளக்கு போல இருக்கிறார். மனம் இளைத்தாலும் மானம் இளைத்து விடாத உறுதியோடு, ஒவ்வொரு நொடியும் உங்கள் வருகையை எதிர்நோக்கியே காத்திருக்கிறார்.

அன்னையை அந்த ராவணன்தான் சிறையெடுத்துச் சென்று

வைத்துள்ளான். அவனால் சிறையெடுக்கத்தான் முடிந்தது. மாதாவின் நிழலைத் தீண்டக்கூட முடியவில்லை.

அன்னை மனம் மாறவேண்டும் என்பது அவன் விருப்பம். அதற்காக சாம, பேத, தான, தண்டம் என்று சகலவிதங்களிலும் அவன் முயன்றபடியே உள்ளான். இதனால் அன்னையின் உருவம் பொலிவிழந்துவிட்டது. அழுக்கடைந்த ஆடை, சடைபிடித்த கூந்தல், கண்ணீர் வழியும் கண்கள் என்றுதான் அன்னையும் என் கண்ணில் பட்டார். ஆனால், உள்ளத்தில் துளியும் உறுதி குலையவில்லை. நீங்கள் வருவீர்கள்; மீட்பீர்கள் என்கிற நம்பிக்கைதான் அன்னையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது" என்று அனுமன் கூறக்கூற, ராமனின் விழிகளில் கண்ணீர் பெருக்கெடுக்க ஆரம்பித்தது.

லட்சுமணனும் உள்ளம் கொதித்துப் போனான். அண்ணலின் தோளைப் பற்றி ஆறுதலாகப் பார்த்தான்.

அனுமன் தொடர்ந்தான்... "பிரபோ! கவலை வேண்டாம். 'எழுபதினாயிரம் வீரர்களோடு நாங்கள் வருவோம். ராவண ராஜ்யத்தையே நாசமாக்கி உங்களையும் மீட்டுச் செல்வோம்' என்கிற நம்பிக்கையை உங்கள் சார்பாக அன்னையிடம் வழங்கியுள்ளேன். அப்படியே தாங்கள் அளித்த கணையாழியையும் சேர்ப்பித்தேன். அதைக் கண்டநொடி தங்களையே நேரில் கண்டதுபோல அன்னையார் ஆனந்த கண்ணீரால் அந்த கணையாழியை அபிஷேகித்தார்கள்.

அந்த அரக்கக் கூட்டத்திலும் ராவணன் இளவல் விபீடணனும், அவன் மகள் திரிஜடையும் மாதாவுக்கு மறைமுக காவலாக உள்ளனர். அன்னையை வனத்திடை சந்தித்த நான் தங்களுக்கும் சுக்ரீவ ராஜாவுக்கும் ஏற்பட்ட நட்பைப் பற்றியும் கூறினேன். தொடக்கத்தில் என்னைச் சற்று சந்தேகித்தாலும், தங்கள் கணையாழியைக் கண்ட மாத்திரத்தில் மாதாவின் மனம் மாறிப்போனது. பிறகு, தம் நினைவாக தன் சிரத்திலிருந்த சூளாமணியைத் தந்து தங்களிடம் சேர்ப்பிக்கச் சொன்னார்.." என்று சீதை தந்த சூளாமணியை ராமன்முன் ஒரு பிரசாதம் தருவது போல நீட்டினான் அனுமன். அடக்கமாட்டாத அன்பு நெகிழ்வுடன் "சீதா..." என்று கதறியபடியே அதைக்கண்டு ராமன் கண்கலங்க... அதைப் பார்த்து லட்சுமணனும் கண்ணீர் உகுத்தான்.

அந்த சூளாமணி, யக்ஞம் ஒன்றின்போது ஜனகராஜனுக்கு

**சீதை தந்த சூளாமணியை ராமன்முன் ஒரு பிரசாதம் தருவது போல நீட்டினான் அனுமன். அடக்கமாட்டாத அன்பு நெகிழ்வுடன் "சீதா..." என்று கதறியபடியே அதைக்கண்டு ராமன் கண்கலங்க... அதைப் பார்த்து லட்சுமணனும் கண்ணீர் உகுத்தான்.**

தேவேந்திரன் சன்மானமாகக் கொடுத்தது. கழுத்திடை மாங்கல்யம்போல அந்த சூளாமணி ரத்தினமும் சீதையின் சிரசில் எப்பொழுதும் இருக்கத் தொடங்கியது. அதுதான் இப்பொழுது அனுமன் மூலம் திரும்பியுள்ளது. ராமனும் அந்த நினைவுகளில் மூழ்கி எழுந்தான்.

"பிரபோ! அன்னையார் இதை வெறுமனே ஞாபக நிமித்தம் மாத்திரம் அளிக்கவில்லை. 'இன்று முதல் நான் ஒரு மாதம் வரைதான் பிழைத்திருப்பேன். அதற்குள் தாங்கள் வந்து மீட்டுச் செல்லவேண்டும்' என்பதே அவர்களது பிரதிக்ஞை.எனவே.." என்று அனுமன் தொடரும்முன், "போதும் அனுமனே... சீதை ஒருமாதம் இருப்பேன் என்றதே அவளுக்கு தீர்க்காயுள் உள்ளதாகத்தான் பொருள். ஆனால், நான் இங்கே அவளின்றி ஒவ்வொரு நொடியும் இருந்தபடியே இறக்கிறேனே இதை அவளுக்கு உணர்த்தினாயா?" என்று கேட்டான்.

அனுமனும், "பிரபோ! உங்கள் ஒருவர் நிலையை ஒருவர் அறிய உங்களிடையே எவரும் தேவை இல்லை. இனி அது குறித்துப் பேசுவதை விடுத்து படை எடுக்க முற்படுவதே உத்தமமான செயல்..." என்று கூற, "ஆம் அண்ணா! அனுமனால் அனைத்தையும் அறிந்தோம். இனி ஒரு நொடியைக்கூட வீணாக்கக்கூடாது" என்று லட்சுமணனும் முன்வர, ராமனும் நிமிர்ந்து எழுந்தான்.

அப்படியே அங்கதன் உள்ளிட்ட அத்தனை வானர வீரர்களையும் ஒரு நன்றிப்பார்வை பார்த்தவன், "வீரர்களே... உங்களுக்கெல்லாம் என் வந்தனங்கள். என் பொருட்டு செயற்கரிய செயலைச் செய்துள்ளீர்கள். உங்களுக்கெல்லாம் வார்த்தைகளால் நன்றி கூறுவது என்பதுகூட அற்பமானது. உங்களுக்கான நன்றிக்கடனை நான் எப்படித் தீர்க்கப் போகிறேன்?" என்றபடியே அனுமனின் அருகே சென்றான்.

"வாயுகுமாரா! என்பொருட்டு நீ பட்ட பாட்டை என்னால் உணர முடிகிறது. நீ சீதைக்கு மட்டும் சாந்தி தரவில்லை. எனக்கும் என் குலத்துக்குமே தந்திருக்கிறாய். உனக்கு கைம்மாறு செய்ய தற்போது என்வசம் ஏதுமில்லை. என் இதயத்தில் உன்னை நிறுத்துகிறேன்...". என்று அனுமனை அப்படியே இழுத்து அணைத்துக் கொண்டான் ராமன்.

பரிசுகளில் எல்லாம் பெரிய பரிசு ஒருவர் தன்னையே தருவதுதான். அனுமன் பாக்கியசாலி. நல்லவேளை... அப்போது ராமனும் பொருளுடையவனாக இல்லை. இருந்திருந்தால் இப்படி ராமாலிங்கனமும் அதனால் உண்டான ஆத்மாவின் சிலிர்ப்பும் ஏற்பட்டிருக்குமா?

வானரனாகிய அனுமன், ராமன் மனத்தில் சுந்தரனாக இடம்பிடித்த இந்த தனிப்பெரும் செயல்களுடன் சுந்தர காண்டம் நிறைவுபெறுகிறது.

அதேசமயம், ராவணனை ராமன் வெற்றி கொண்டு சீதையோடு ஜெயராமனாக அயோத்தி திரும்பும்வரை, யுத்த காண்டத்திலும் அனுமனின் தனிப்பெரும் செயல்கள் புத்தெழுச்சியோடு தொடர்கிறது.

ராமபிரானுக்கு வசிஷ்டர் முடிசூட்டுகிறார். அதற்குமுன் ராமனுக்கு ஜீவநதிகளின் தீர்த்தங்களால் அபிஷேகம் நடைபெறுகிறது. ராமனை அபிஷேகித்த அவ்வளவு ஜலதாரைகளும் அனுமனையும் நனைக்கின்றன. அதற்கேற்ப ராமனின் திருவடிக்குக் கீழே பணிவாக அமர்ந்திருக்கிறான் அனுமன்.

முடிசூட்டும் நிகழ்வில் ராமன் தனக்கு உதவிய சகலருக்கும் பரிசுகள் தந்து நன்றியை சொல்லத் தயாராகிறான். சுக்ரீவனுக்கு ரத்னஹாரம், அங்கதனுக்கு வளை கழஞ்சு, விபீடணனுக்கு தனது ஆராதிப்புக்குரிய ரங்க விமானம் என்று அவனது பரிசுகள் தொடர்கின்றன.

இப்படி எல்லாருக்கும் தன் கரத்தால் வழங்கிய ராமன், இறுதியாக அனுமனிடம் வருகிறான். 'வடசரம்' என்னும் முத்துமாலையை எடுத்தவன் அதை சீதை வசம் தர, அவள் அந்த மாலையைப் பார்க்கிறாள்.

'ஸதா சர்வ காலமும் உன்மார்பை அணைத்தபடி இருக்கவே இதைத் தருகிறேன்' என்று அனுமனுக்கு ராமன் சொல்ல நினைக்கும் சூட்சமத்தை சீதையும் புரிந்து, அனுமனை அருகழைத்து அவனுக்குத் தருகிறாள். அனுமனின் கண்கள் குளம்போல கண்ணீரைத் தேக்குகின்றன.

பரந்தாமனையே ஒரு பரிசாக மார்பில் தாங்கி மகிழ்வதென்றால் எத்தனை பாக்கியம் செய்திருக்க வேண்டும்?

அனுமனுக்குள் ராமனே நிரம்பி வழிந்தான்.அதனாலேயே மார்பிலும் அந்த ராமச்சந்திரன், முத்து மாலையாக தவழ்ந்தான்.

நாம் அனுமனையும் ராமனையும் ஒருசேர தியானிப்போம். வெற்றிமாலைகள் நம் மார்பில் பரிசாக வந்து விழும்.

**ராம்... ராம்... ராம்! ஜெய்ராம்!**



Printed Books



## இந்திரா செளந்தர்ராஜன்

பன்முக எழுத்தாளரான இந்திரா செளந்தர்ராஜன் 500 சிறுகதைகள், 150-க்கும் மேற்பட்ட நாவல்கள் எழுதியிருக்கிறார். இவரது பட்டியலில் இந்த 'சுந்தர காண்டம்' ஒரு மாறுபட்ட ஆன்மிக முயற்சி.

ஆன்மிக மர்மங்களில் ஆவல் கொண்டு இவர் எழுதிய கோட்டைப்புரத்து வீடு, ரகசியமாக ஒரு ரகசியம், விடாது கருப்பு, ருத்ரவீணை போன்ற நாவல்கள் தொலைக்காட்சியிலும் மிகப் பிரபலம்.

கிருஷ்ணதாசி, என் பெயர் ரங்கநாயகி, ஆசை நெசவு போன்ற சமூக புதினங்களிலும் பெயர் பெற்ற இவர் இலக்கியச் சிந்தனை விருது மற்றும் தமிழக அரசின் பரிசையும் பெற்றவர்.

இப்போது மதுரையில் வசிக்கும் இவர் சேலத்தில் பிறந்து வளர்ந்தவர். டி.வி.எஸ். நிறுவனங்களில் ஒன்றான 'சுந்தரம் பாஸனர்ஸ்' நிறுவனத்தின் குடும்ப இதழுக்கு ஆசிரியராகவும் இருக்கும் இந்திரா செளந்தர்ராஜன் எழுதத் தொடங்கி 30 ஆண்டுகளாகிவிட்டது. இவரது வெள்ளிவிழா படைப்புகளில் ஒன்றுதான் இந்த சுந்தர காண்டம்!

034542

ISBN 81-89780-69-7

SUNDARA KAANDAM

₹ 130

விகடன் பிரசுரம்